**STUDY GUIDE**

# இந்திய வரலாறு 712 வரை

**PREPARED BY**

**Dr. C. AMOSE**

**Associate Professor of History**

**Head, Department of Public Administration,**

**Muslim Arts College**

**Thiruvithancode – 629174**

**Kanyakumari District.**

**HISTORY OF INDIA UPTO 712 A.D**

Objective: To create awareness and understanding of the rich Indian culture and heritage.

**Unit: 1**

**Pre-Historic Period:**

Physical features of India - Sources of Ancient Indian History - Literary Sources-Indigenous and Foreign Accounts Archaeological sources, Life of people in the Pre-historic Times: Paleolithic Age - Neolithic Age- The Age of Metals.

**Unit: II**

**From Harappan Culture to Aryanisation**:

Harappan culture: Indus Valley Civilization Centers of Civilization - Date - Town planning - Art and Architecture - Indus script - Social and Economic Life of the people - Religion. Fall of the Harappan culture. Vedic culture: Origin of Aryans - Early settlements and expansion - Rig Vedic society, polity and religion, Vedic literature. Later Vedic Age: Social, Economic and Religious life.

**Unit: III**

**North India from 600-325 BC:**

Mahajanapadas - Rise of kingdoms and Republics- Rise of Magatha and Nandas. Life of the people - Four Ashrams - Factors for the rise of new religions - Buddhism - Buddha's Teachings The four Buddhist Councils Schism in Buddhism: Mahayanism and Hinayanism Spread of Buddhism - Legacy of Buddhism. Jainism: Life of Mahavira - Teachings of Jainism-24 Jaina Thirthankaras - Jain Councils - Spread of Jainism - Schism in Jainism - Legacy of Jainism. Persian and Greek Invasions.

**Unit: IV**

**Rise of Empires- I Phase:**

Rise of Mauryan Empire: Sources - Chandragupta Maurya- Megasthenes - Ashoka - Kalinga war Asoka's Dharma - Ashokaand Buddhism - Ashoka's Edicts Fine Arts, Education, Literature under the Mauryas - Mauryan Administration. The Kushan Empire: Kanishka, His conquests and religion - Contact with outside world - Coinage - Architecture - The Gandhara School of Art, and Mathura School of Art.

(15L)

**Unit: V**

**Rise of Empires- II Phase:**

The Guptas: Sources - Chandra Gupta 1 - Samudra Gupta - Fa-hien and his Account of India - Chandra Gupta II - conquests - Gupta administration - Economic condition - Coinage of Guptas - Golden Age of the Guptas - Guptas in the field of Literature, Art and Architecture - Science Ajanta Paintings - Education and Educational Institutions HarshaVardhana: Hiuen Tsang's account of India. India on the eve of Muslim invasion - Arab conquest of Sindh and its effects.

**Text Books:**

1. Hans Raj :"History of Ancient India", Surjeet Publications, the Kholapur road, Kamla Nagar, Delhi -7.
2. Kundra D.N-History of India- Navdeep Publications.-3623,Chauri Bazaar,Delhi
3. Khurana History of India from the Earlies Times to 1206 A.D

**Books for reference:**

1. Agraval. D.P. and ChakrabartsD.K -Essays in Indian Proto History

2. Atlekar A.S - State and Government in Ancient India.
3. Basham A.L - The Wonder that was India.
4. Beni Prasad - Theory of Government in Ancient India.

# இந்திய வரலாறு 712 வரை

## அலகு - I

### இந்திய இயற்கை அமைப்பு

### வரலாற்றிற்கு முந்தைய காலம்

இந்திய புவியியல் அமைப்பு இயற்கை கொடுத்த இணையற்ற கொடையாகும். ஒரு நாட்டின் வரலாறும், மக்களின் நாகரிக நிலையும் புவியியலால் தீர்மானிக்கப்படுகிறது. மனிதனின் பரிணாம வளர்ச்சியே புவியியல் சூழ்நிலை மாற்றங்களால் தீர்மானிக்கப்பட்டது மனிதனின் வியத்தகு அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி இயற்கையின் ஆற்றல்களை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியுமேயன்றி புவியியல் அமைப்பை மாற்றியமைக்க முடியாது. எனவே எந்த அளவுக்கு புவியியல் அமைப்பை மனிதனால் மாற்றி அமைக்க முடியாதோ அந்த அளவுக்கு மனித நிகழ்வுகள் புவியியல் காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்தியா ஆசியாக் கண்டத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. பரப்பளவாலும், மக்கள் தொகையாலும் துணைக் கண்டமாகக் காட்சியளிக்கிறது. இந்தியாவின் மொத்த பரப்பளவு 32,87,263 சதுர கிலோமீட்டராகும். உலகின் 7வது மிகப் பெரிய நாடு இந்தியா. இந்தியா மலைகளாலும், கடல்களாலும் ஆசியாவிலிருந்து பிரிந்திருப்பதால் இதன் புவியியல் அமைப்பு தனித்தன்மையுடன் திகழ்கிறது. இந்தியாவின் நில எல்லை மட்டும் 15,200 கி.மீ. இதன் கடலெல்லையின் நீளம் 7,516 கி.மீ. இந்திய நிலப்பரப்பின் அதிக பட்ச நீளம் 3214 கி.மீ அகலம் 2933 கி.மீ. ஆகும். இந்தியாவின் புவியியல் பகுதிகளைக் கீழ்காணலாம்.

### இந்தியாவின் புவியியல் அமைப்பு

இந்தியப் புவியியல் அமைப்பை அதின் தன்மைக்கு எற்றபடி 6 பகுதிகளாகப் பிரிக்கலாம்:

1. இமயமலைத் தொடர்
2. சிந்து கங்கைச் சமவெளி
3. தார் பாலைவனப் பகுதி
4. தக்காணப் பீடபூமி
5. கிழக்குக் கடற்கரை சமவெளி
6. மேற்குக் கடற்கரைச் சமவெளி

**இமயமலைத் தொடர்:**

*இமயமலைப் பகுதி பாரசீகம், ஆப்கானிஸ்தானத்திலிருந்து பர்மா வரை நீண்டு சென்று வடமேற்கு எல்லைப்புற மாநிலம், காஷ்மீர், நேபாளம், சிக்கிம், பூட்டான், அசாம் பகுதிகளை உள்ளடக்கியது. இமயமலை மூன்றடுக்கு மலைத்தொடரின் நீளம் 2500 கி.மீ, அகலம் சுமார் 250 கி.மீ, மொத்த பரப்பு 5,00,000 கி.மீ உலகிலேயே உயரமான சுமார் 9000 கி.மீ உயரமுடைய எவரெஸ்டு சிகரம் இத்தொடரில் தான் உள்ளது. இதுவன்றி கஞ்சன் ஜங்கா, மகாலு, தவளகிரி, அன்னபூர்ணா, நந்தா தேவி, நங்க பர்வதம் ஆகிய சிகரங்களும் உள்ளன. வடமேற்கில் இந்துகுஷ், சுலைமான் மலைகளுக்கிடையே கைபர், போலன், குரம், கோமல் ஆகிய கணவாய்களும் அமைந்துள்ளன. இவையின்றி காஷ்மீர் பீடபூமி, நேபாள பீடபூமி, ஷில்லாங் பீடபூமி அகியவையும் இங்குள்ளன. யாவற்றுக்கும் மேலாக, சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆகிய மூன்று வற்றா உயிர் நதிகளின் பிறப்பிமும் இமயமலைத் தொடராகும். இயற்கைத் தாயின் தாராள உள்ளத்துக்கு இமயமலைத் தொடர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தொடர் இந்தியாவை வடக்குக் கடுங்குளிர் காற்றிலிருந்து காப்பாற்றுகிறது. அதுமட்டுமல்ல. பருவக் காற்றுக்களைச் சமனப்படுத்தி வடஇந்தியாவில் மழை பெய்யச் செய்கிறது. இமயமலைத் தொடர் இயற்கை அரணாக அமைந்து வெளிநாட்டவர் இந்தியா மீது எளிதில் நேரடியாகப் படையெடுத்துவர முடியாமல் தடுக்கிறது. இதேபோன்று இந்தியா சீனாவுடன் எளிதில் தொடர்புகொள்ள முடியாமல் செய்துவிடுகின்றது. இத்தொடரில் உற்பத்தியாகும் வற்றாத நதிகள் சிந்து-கங்கைச் சமவெளியைச் செழிப்பான பகுதியாக்க உதவுகின்றன. காஷ்மீர் நீங்கலாகப் பிற இமயமலைப் பகுதி நாடுகள் தனிமைப்படுத்தப்பட்ட, தேக்கமுற்ற, வளர்ச்சி குன்றிய பகுதிகளாகவே இருந்துள்ளன. காஷ்மீர் மட்டும் பண்டைய இந்திய கலாச்சார வளர்ச்சி மற்றும் அரசியல் வளர்ச்சியில் பங்களித்துள்ளன. இமய மலைத் தொடர் இந்தியாவின் சமூக, பொருளாதார சூழ்நிலைகளைப் பெரிதும் நிர்ணயிக்க கூடியதாக உள்ளது.*

**சிந்து-கங்கைச் சமவெளி**

*உலகம் முழுவதும் நாகரிகங்கள் நதிக்கரையில் தான் தோன்றியுள்ளன. இதற்கு இந்தியா விதிவிலக்கல்ல. முதன்முதலில் அரப்பா நாகரீகம் தோன்றியது சிந்து சமவெளிப் பகுதியில்தான். அதன்பின் ஆரியப் பண்பாடு இச்சமவெளியில்தான் வெளிப்பட்டது. மகதப் பேரசின் எழுச்சியும் பாடலிபுத்திரம், சாரநாத், அலகாபாத், காசி, கயா போன்ற நகரங்கள் இந்திய வரலாற்றின் அரசியல் மைல்கற்களாகவும், கலாச்சார கேந்திரங்களாகவும் காட்சியளித்துள்ளன. இச்செழிப்புமிக்க பகுதி*

மக்களுக்கு வளத்தையும், வளமான வாழ்க்கையையும், ஓய்வையும் கொடுத்தமையால்தான் அறிவுஜீவிகளால் மனித வாழ்க்கையில் பிரச்சனைகளைப் பற்றிச் சிந்திக்க முடிந்தது. செல்வமும் செல்வாக்குமிக்கப் பேரசுகளில்தான் பொற் காலங்கள் உருவாக முடியும். இத்தகைய பகுதியில் தான் அரசியல் ஒருமைப்பாட்டும், கலாச்சார ஒற்றுமையும் ஏற்பட வாய்ப்புண்டு. அப்படித்தான் இந்தோ-கங்கைச் சமவெளி இந்திய வரலாற்றில் பேரரசு மற்றும் அறிவு மையமாகத் திகழ்ந்துள்ளது. சிந்து இந்திய வரலாற்றில் பேரரசு மற்றும் அறிவு மையமாகத் திகழ்ந்துள்ளது. சிந்து என்ற சொல்லின்திரியே இந்தியாவாகும். வற்றாத ஆறுகள் புவியியல் அமைப்பை நிர்ணயிக்கிறது.

**தார் பாலைவனப் பகுதி**

சிந்து-கங்கை சமவெளிக்கு மேற்கே இருப்பது தார் பாலைவனப் பகுதியாகும். இப்பகுதி இரு வகைப்படும். 1. பெரிய பாலைவனப் பகுதி 2. சிறிய பாலைவனப் பகுதி. பெரிய பாலைவனப் பகுதி கச் ஓரத்திலிருந்து மேற்கே லூனி ஆறு வரை நீண்டுள்ளது. சிறிய பாலைவனப் பகுதி ஜெய் சல்மர்-ஜோத்பூர் இடையேயுள்ள லூனியிலிருந்து வடக்கேயுள்ள பாழ் நிலங்கள் வரை செல்கிறது. ராஜஸ்தானும், மத்திய பிரதேசத்தின் சில பகுதிகளும் தார் பாலைவனப் பிரதேசங்களைச் சேர்ந்தவையாகும். தார்ப் பாலைவனப் பிரதேசங்களைச் சேர்ந்தவையாகும். தார்ப் பாலைவனம் அராபியர் படையெடுப்புக்கு எதிரான பாலை அரணாகத் திகழ்ந்தது.

**தக்காண பீடபூமி**

வடநாட்டுக்கு சிந்து-கங்கை சமவெளி என்றால் தென்நாட்டுக்குத் தக்காண பீடபூமியாகும். விந்திய சாத்பூரா மலைத் தொடர் தக்காணத்தின் இமயமலைத் தொடர் போன்றது. இம்மலைத் தொடர் வட இந்தியாவைத் தென்னிந்தியாவிலிருந்து பிரிக்கிறது. இதன் விளைவாக இவ்விருபெரும் நிலவியல் அமைப்புகளுக்கிடையே நெருங்கிய தொடர்பில்லாமல் போய்விட்டது. வடஇந்தியப் பேரரசர் தென்னிந்தியா மீது படையெடுத்துச் செல்வதோ விதிவிலக்காகும். அதன் விளைவும் குறைவே. வட இந்தியாவில் வீசிய அரசியல் சூறாவளிகள் தென்னகத்தைப் பாதித்ததில்லை. இம்மலைத்தொடர் மாராத்தியரின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் சாதகமாக இருந்தது. ஆறுகள் தக்காணத்தின் தனித்தன்மைக்கான ஆணி வேர்கள். மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் கோதாவரி, கிருஷ்ணா, வடபெண்ணை, காவேரி, மகாநதி, தாமிரபரணி ஆறுகளும், வடகிழக்கு பகுதியில் உற்பத்தியாகும் நர்மதை, தபதி ஆறுகளும் தென்னிந்தியாவின் செழிப்புக்குக் காரணமாகும். தென்னாட்டின் வட பகுதியில் கிருஷ்ணா, கோதாவரி ஆறுகள் பாயும் பிரதேசத்தில்தான் விஜய நகர, பாமினிப்

பேரசுகள் தோன்றின. அதேபோன்று தென் பகுதியில் காவேரி, வைகை, தாமிரபரணி, வடபெண்ணை, தென்பண்ணை, பாலாறு பாயும் பகுதிகளில்தான் சேர, சோழ, பாண்டிய பேரசுகள் எழுந்தன. பல்லவர்கள் பேராதிக்கம் செய்த பகுதியும் இதுதான். தக்காண பீடபூமியின் தென் கோடியில் கிருஷ்ணா நதிக்குத் தெற்கேயிருந்த பகுதி திராவிடர்களின் தாயகமாகத் திகழ்ந்ததில் வியப்பில்லை. இவை புவியியல் அமைப்பின் ஓர் பகுதியாகும்.

### கிழக்குக் கடற்கரைச் சமவெளி

முக்கோண வடிவில் அமைந்துள்ள தக்காண பீடபூமியின் கிழக்கே கிழக்குத் தொடர்ச்சி மலைகளும், கடற்கரைச் சமவெளியும் அமைந்துள்ளன. மலை வளமும், கடற்கரை வசதியும் சோழர்கள் கடல் வாணிபத்தில் சிறப்படையவும், வெளிநாடகளுடன் தொடர்பு கொள்ளவும், அந்நாடகளில் தங்களது பண்பாட்டைப் பரப்பவும் வழி வகுத்தன.

### மேற்குக் கடற்கரைச் சமவெளி

தக்காண பீடபூமியின் மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலைகளும், மேற்குக் கடற்கரைச் சமவெளியும் அமைந்துள்ளன. இவ்விரு வளங்களையும் பயன்படுத்தி கிழக்கே சோழர்களைப் போன்று மேற்குப் பகுதியில் சேரர்கள் கடல் வாணிபத்திலும், வெளி நாட்டுத் தொடர்பிலும் சிறப்பற்று விளங்கினர். முன்னவருக்கு வங்கக்கடலும், பின்னவருக்கு அராபிக்கடலும் தொடர்பு ஊடகங்களாகப் பயன்பட்டன. சோழர்களும், சேரர்களும் பண்டைக் காலத்தில் கடலாதிக்க நாடுகளாகத் திகழ்ந்தன.

### வேற்றுமையில் ஒற்றுமை

பொதுவாக இந்தியாவைப் உயர் ஜாதியினருக்கும், இந்தியாவைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் அதன் வெளிப்படையான வேற்றுமைகள் தான் புலப்படுகின்றன. இத்தகைய வெளிப்படையான வேற்றுமைகள் பல. முதலாவது புவியியல் வேற்றுமை. இந்தியத் துணைக் கண்டம் புவியிலின் பாதிப்பின் நன்மைகளையும் தீமைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. எடுத்துக்காட்டாக சிந்து-கங்கை சமவெளி வளமான பகுதியாகவும், ராஜஸ்தானம் வறட்சியான பிரதேசமாகவும் உள்ளன. இதேபோன்று தட்ப வெட்ப நிலையிலும் அதிக வேறுபாடு நிலவுகிறது. இமயமலைப் பகுதிக் கடுங்குளிர் ஒரு பக்கம். ராஜஸ்தான் பாலைவனக் கொடும் வெப்பம் மறுபக்கம். சிரபுஞ்சி மழையில் ஒரு சிறு பகுதி கூட மேற்கு சிந்துவில் பெய்வதில்லை. பஞ்சாப்பில் கோதுமையும், அஸ்ஸாமில் தேயிலையம், வங்காளத்தில் சணலும்,

ஆந்திராவில் நெல்லும் சாகுபடியாவது போல் வேறெங்கும் ஆவதில்லை. மிருக வளமும் மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுகின்றது.

### இந்திய இனங்களின் தொடக்கம்

இந்தியா பல்வேறு இனங்களின் அருங்காட்சியகம் (Ethnological Museum) என்று வர்ணிக்கப்படுகிறது. இதுவே இந்தியாவின் பலமாகவும், பலவீனமாகவும் உள்ளது. இந்தியாவைப் பல இனங்களின் பூங்கா என்று அழைக்கலாம். இந்தியா பல இனங்களைக் கொண்ட கரடித் தோட்டம் (Bear garden) என்று கருதுவோரும் உள். இந்தியாவில் எத்தனை இனங்கள் மனித இன ஆய்வாளர்களின் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இந்தியாவில் 7 பிரதான இனங்கள் உள்ளனர் என தெரிய வருகிறது. அவை

1. இந்தோ- ஆசிரியர் (Indo –Aryan),
2. திராவிடர் (Dravidian),
3. மங்கோலியர் (Mangolian),
4. ஆரிய-திராவிடர் (Aryo- Dravidian),
5. மங்கோலிய –திராவிடர் (Mangolo – Dravidian),
6. சைத்தோ- திராவிடர் (Scytho- Dravidian),
7. துருக்கி இரானியர் (Turko- Iranian).

இவற்றுள் திராவிடர்களும், இந்தோ-ஆரியர்களும் வெவ்வேறு இனத்தவர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரு இனத்தவர்களுள் காலத்தால் மிகவும் பழமையானவர்கள் திராவிடர்களாவர். மத்திய ஆசியாவிலிருந்து மேய்ச்சல் நிலம் தேடி வடமேற்கு இந்தியாவுக்கு வந்த ஆரியரை எதிர் கொண்டவர்கள் திராவிடர்களே என்று கருதப்படுகிறது.

### இந்திய வரலாற்றுச் சான்றுகள்

பண்டைக்கால வரலாற்றை அறிந்து கொள்வதற்கு ஆதாரங்கள் இன்றியமையாதவை. ஆடையாளங்கள் மனிதன் வரலாற்று மணல் பரப்பில் விட்டுச்சென்ற சாதனைப் பதிவுகளாகும். இவை மனிதனின் கடந்தகால நிகழ்வுகளை நினைவூட்டும் சான்றுகளாகும். சோதிக்கப்பட்டு, திறனாய்வு செய்து மெய்ப்பிக்கப்பட்ட சான்றுகளே வரலாற்று சாட்சியங்களாக ஏற்றுக் கொள்ளப்படும். மாறாக, செவிவழிச் செய்திகளும், கற்பனைக் கூற்றுகளும், கற்பிக்கப்பட்ட நிகழ்வுகளும், உறுதிக் கூற்றுக்களும், நம்பிக்கைகளும், ஊடகங்களும், உணர்வுகளும், வாந்திகளும் வரலாற்றுச் சான்றுகளாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது உண்மை நிகழ்வுகளாக இருக்க வேண்டும்.

### ஆதாரங்கள்

வரலாற்றுச் சான்றுகள் முதல் நிலைச் சான்றுகளாகவோ, (Primary Sources) இரண்டாம் நிலைச் சான்றுகளாகவோ, (Secondary Sources) அல்லது மூன்றாம் நிலைச் சான்றுகளாகவோ (Tertiary Sources) இருக்கக்கூடும். இவற்றைப் பொருள் சார்ந்த சான்றுகள், பொருள் சாராச் சான்றுகள், எழுத்துச் சான்றுகள் என்று பிரிக்கலாம். தொல்பொருள் சான்றுகள், கல்வெட்டுச் சான்றுகள், நாணயச் சான்றுகள், இலக்கிய சான்றுகள், ஆவணச் சான்றுகள், சுயசரிதைகள் ஆகியவை பண்டைக்கால இந்திய வரலாற்றை அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. இவை யாவும் அகச்சான்றுகளாகும். இவையின்றி வெளிநாட்டு யாத்ரீகர்களும், எழுத்தாளர்களும் விட்டுச் சென்ற குறிப்புகளும், நூல்களும் புறச்சான்றுகளாக உள்ளன.

### தொல்பொருள் சான்றுகள்

வரலாற்றுச் சான்றுகள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒரு விதம். இவற்றுள் பண்டைக்கால இந்திய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு தொல்பொருள் சான்றுகள் அடிப்படை முக்கியத்துவமிக்கவை. இச்சான்றுகள் ஏழு வகைப்படும். அவை கீழ் வருவன

1. கல்வெட்டுகள்
2. நாணயங்கள்
3. கட்டடக்கலை
4. சிற்பக் கலை
5. ஓவியக்கலை
6. பழமைச் சின்னங்கள்
7. இலக்கியச் சான்றுகள்

### கல்வெட்டுகள்

பண்டைய இந்தியாவின் அரசியல், பொருளாதார, சமுதாய, சமய, கலாச்சார வரலாற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு கல்வெட்டுகள் மூலம் நேரடி ஆதாரங்களாக உள்ளன. இவை குன்றுகளிலும், குகைகளிலும், முத்திரைகளிலும், செப்பேடுகளிலும், இரும்புத் தூண்களிலும் காணப்படுகின்றன. பேரரசர் அசோகரே முதல் கல்வெட்டுக் கலைஞர் எனலாம். அசோகர் கல்வெட்டுகளே அவரது தர்மாட்சியின் அருமை பெருமைகளை அறிந்து கொள்வதற்கான அடிப்படைச் சான்றுகளாகும். இதேபோன்று அலகாபாத் தூண் கல்வெட்டு சமுத்திர குப்தரின் ஆட்சியின் மாட்சி பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றது. குவாலியர் கல்வெட்டு

போஜராஜரைப் பற்றியும், இரும்புத் தூண் கல்வெட்டு சந்திரா என்ற மன்னரைப் பற்றியும் தெரிந்து கொள்ளப் பயன்படுகின்றன.

**நாணயங்கள்**

நாணயவியல் கல்வெட்டுகளுக்கு உடனுதவிச் சான்றுகளாகப் பயன்படுகின்றன. இந்திய நாணயவியல் வெயிநாட்டவரின் நன்கொடையாகும். அசோகரின் மறைவுக்குப் பின் வந்த இந்தோ-கிரேக்கர்கள், இந்தோ-பார்த்தியர்கள், சாகர்கள், குஷாணர்கள், குப்தர்கள் நாணயங்களை வெளியிட்டுப் புகழ் பெற்றனர். கிரேக்க-இந்திய இருமொழி நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவை இந்தியக் கல்வெட்டுப் பூட்டைத் திறப்பதற்கான சாவியாகப் பயன்படுகின்றன. தமிழ்நாட்டில் பாண்டிச்சேரிக்கு அருகாமையில் உள்ள அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள்களும், புதுக்கோட்டை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தங்க ரோம நாணயங்களும் தமிழ்நாடு ரோமப் பேரரசுகள் கொண்டிருந்த வர்த்தகப் தொடர்பை உறுதி செய்கின்றன. இக்கண்டுபிடிப்புகள் தென்னிந்தியாவை வரலாற்றுக்காலத்துக்குக் கொண்டு செல்வதாக உள்ளன.

**நினைவுச் சின்னங்கள்**

கட்டிடக் கலை பண்டைக்கால மக்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான கல் ஆவணம் ஆகும். கட்டிடங்கள் வெறும் கல்லாலும் மண்ணாலும் எழுப்படும் கட்டுமானங்கள் மட்டுமன்று. இவை அக்கட்டிடங்களின் சமக்கால மக்களின் எண்ணங்களையும், மனப்பான்மையும், பொருளாதார நிலையையும், திட்டநுண்ணறிவையும் வெளிப்படுத்தும் சான்றுகளாகும். அதுமட்டுமன்று, ஒவ்வொரு கட்டிடமும் ஒரு நினைவுச் சின்னமாகும். இந்நினைவுச் சின்னங்கள் கட்டிடக் கலைப் பரிணாம வளர்ச்சியின் பரிணாமத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**கட்டிடக்கலை**

அரப்பா மற்றும் மொகஞ்சதாரோ மக்கள் கட்டிடக் கலையில் வியத்தகு வளர்ச்சி பெற்றிருந்தனர். அவர்கள் எழுப்பிய கட்டிடங்கள் அனைத்தும் அவர்கள் வாழ்ந்த சமயம்சாரா உலகியல் வாழ்க்கைக்கான அடையாளங்களாகும். ஆவர்களுக்குப் பின் வந்த ரிக்வேத ஆரியர்கள் கட்டிடக்கலையைப் பற்றி எதுவும் அறியாதவர்கள். பின்னர் அவர்கள் கட்டிடக் கலையைக் கற்றுக்கொண்டார்கள். பௌத்தர்கள் கட்டிய கட்டிடங்கள் மிகவும் அதிகம். அவையாவும் அவர்கள் சமயம் சார்ந்த கட்டிடங்களாகவே இருந்தன. அவையாவும் அவர்கள் சமயம் சார்ந்த கட்டிடங்களாகவே இருந்தன. அவர்கள் எழுப்பிய ஸ்தூபிகளும், சைத்தியங்களும், மண்டபங்களும் மிகவும் பழமையானவை, கட்டிடக்

கலைக்கு முன்னுதாரணங்கள். இவற்றின் கதவுகள் அனைத்து மக்களுக்கும் திறந்து வைக்கப்பட்டன. சமணர்களின் கட்டிடங்களும் இவ்வகையைச் சேர்ந்தவையே. குப்தர்கால கோயில்கள் கோயில் கட்டிடக்கலைக்கு புதிய அங்கீகாரத்தைக் கொடுத்தன. இக்கட்டிடங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் தன்மை இவற்றைக் கட்டிய கட்டிடக் கலைஞர்களின் திறமைகள், வடிவமைத்த பொறியாளர்களின் கற்பனை வளம் ஆகியவை வியப்புக்குரியவை. அக்காலப் பொருளாதார வளத்தின் வெளிப்பாடுகளே குப்தர்காலக் கட்டிடங்கள். சுருங்கக் கூறின் சிந்து சமவெளி நாகரீகத்துக்குப்பின் கட்டிடக் கலை சமயமயமாக்கப்பட்டது.

**சிற்பங்கள்**

சிற்பக்கலையின் முன்னோடிகள் சிந்து சமவெளி மக்களேயாவர். அவர்கள்தான் இந்தியச் சிற்பக்கலையின் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தவர்கள். அரப்பா கற்சிலைகள், குறிப்பாக நடனப் பெண்ணின் உருவச்சிலை, இன்னும் வியப்புடன் விவரிக்கப்படுகிறது. சிந்துசமவெளி நாகரீகம் அழிக்கப்பட்டு அடுத்த ஆயிரம் ஆண்டுகாலத்தில் சிற்பக்கலையில் எவ்வித வளர்ச்சியுமில்லை. கி.பி. முதல் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய காந்தாரக் கலை மனித உடல் அழகுக்குச் சிறப்பிடம் அளித்தது. இக்காலத்தில் உருவாக்கப்பட்ட மதுரா மற்றும் சாரநாத் புத்தர் சிலைகள் இவ்வகையான சலைகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

**ஓவியங்கள்**

கலைகளில் சிறப்பிடம் பெறுவது ஓவியக்கலையாகும். வாழ்க்கைக்குச் சிறப்பிடம் கொடுப்போர் ஓவியக்கலைக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டோர் இக்கலைக்குச் சிறம்பிடம் கொடுப்பர். ஓவியக்கலை என்றவுடன் நினைவுக்கு வருவது அஜந்தா ஓவியங்கள் தான். இவை அதிசயிக்கத்தக்கவை. இவ்வோவியங்களில் ஓவியக்கலை நுணுக்கங்கள் முழு நிறைவு பெற்றன. கி.மு. முதல் நூற்றாண்டில் சாதவாகனர்களின் பேராதரவுடன் வரையப்பட்ட குகை ஓவியங்கள் உலகிலேயே பண்டைக் கால ஓவியக்கலைக்கான உதாரணங்களாகும். அஜந்தா ஓவியங்கள் பௌத்தர்கள் இந்தியாவுக்கு விட்டுச் சென்ற நிரந்தர ஓவியக்கலை நன்கொடைகளாகும்.

**பழமைச் சின்னங்கள்**

பழமைச் சின்னங்கள் என்றால் நினைவுக்கு வருவது சிந்து சமவெளி நாகரிக முத்திரகள் தான். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட, பல வடிவங்களில் உள்ள இம்முத்திரைகளில் மனித அல்லது மிருக உருவப்படங்களோடு எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இவ்வெழுத்துக்கள் முழுமையாகப் படிக்கப்பட்டு புரிந்துகொள்ளப்பட்டால் பண்டைக்கால அகச்சான்றுகளின் ரகசியங்கள் வெளிப்படும்.

**இலக்கியச் சான்றுகள்**

பண்டைக்கால இந்தியாவைப் பற்றி அறிந்து கொள்வதற்கான இலக்கியச் சான்றுகள் ஏராளம். வேதங்களும், காப்பியங்களும், புராணங்களும், வாழ்க்கை வரலாறுகளும் தகவல் சுரங்கங்கள். இவற்றோடு பௌத்த, சமண இலக்கியங்களையும் சேர்த்துக் கொண்டால் தகவல்களுக்குப் பஞ்சமில்லை, எனினும் இத்தகவல் சுரங்கங்களைத் தோண்டத் தோண்ட வரலாற்றுத் தகவல்களைவிட கற்பனை மற்றும் கற்பிக்கப்பட்ட தகவல்கள் மிகவும் அதிகமாக உள்ளன. இவ்விலக்கியங்களில் வரலாற்று உண்மைகளைக் கண்டறிவது பெரிய வைக்கோல் போரில் குண்டூசிகளைத் தேடுவதற்கு ஒப்பாகும். ஆராய்ச்சியாளர்களின் மகத்தான முயற்சியால் வரலாற்றுக் குண்டூசிகளும் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**காப்பியங்கள்**

வேதங்கள் சமயம் சார்ந்தவையாகையால் இவற்றில் வரலாற்றுத் தகவல்கள் மிகவும் குறைவு. எனினும் இவை ஆசிரியர்களின் வாழ்வியலையும், அவர்களது அமைப்புகளையும், நடவடிக்கைகளையும் சிந்தனை ஓட்டங்களையும் பற்றி அறிந்து கொள்ள பயன்படுகின்றன. வேதங்களின்றி வேதகால வரலாற்றை வரைய முடியாது. பலராலும் எழுதப்பட்டு, பல இடைச் சேர்க்கைகளைக் கொண்ட மகாபாரதமும், ராமாயணமும் வரலாற்று காப்பியங்களல்ல. இவை வரலாற்றுத் தகவல்களைக் கொண்ட கற்பனைக் காப்பியங்கள். இவை இரண்டும் பண்டைக்கால குலமரபுக் குழுக்கைளப் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றன. குறிப்பாக ராமாயணம் இந்தியாவின் பண்டைய நிலையை படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. இவ்விரு இலக்கியங்களும் முறையே வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியலைப் பற்றித் தெரிந்துகொள்ளப் பெரிதும் பயன்படுகின்றன.

**இலக்கிய சான்றுகள்**

பண்டைய இந்தியாவில் ஆர்யபட்டா, பிரம்ம குப்தா, கனடா, வாகேஸ்பதி, சுஷ்ருதா, சாரதா, தன்வந்திரி, வியாசர், வால்மீகி, கௌடில்யர், காளிதாசர், கல்கணர், தொல்காப்பியர், சாத்தனார், திருவள்ளுவர் போன்றோர் இலக்கிய இமயங்களாக இருந்துள்ளனர். இவர்களுள் கௌடில்யர், கல்கணர், தொல்காப்பியர், திரவள்ளவர் தவிர பிற யாவரும் கற்பனைக் கடலில் உள்ளனர். பொதுவாகப் பண்டைக்கால

இலக்கியங்கள் வரலாற்று உண்மைகளை உறுதி செய்வதற்கோ, ஒப்பிட்டு பார்ப்பதற்கோ அல்லது ஒதுக்கித் தள்ளவோ பயன்படுகின்றன. இவற்றில் வரலாறு சாராத தகவல்கள் மண்டிக் கிடப்பதால் கிடைக்கும் அரிய தகவல்களைக் கொண்டு அரைகுறை வரலாறு எழுதப் பயன்படுகின்றது.

பண்டைய இலக்கியங்களில் கௌடில்யரின் அர்த்த சாத்திரமும், கல்கணரின் ராஜதரங்கிணியும், தொல்காப்பியரின் தொல்காப்பியமும், திருவள்ளுவரின் திருக்குறளும் விதிவிலக்குகளாகும். கௌடில்யரின் அர்த்த சாத்திரம் மௌரியப் அரசாங்கம், நிர்வாகம், வெளியுறவு பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ளப் பயன்படுகிறது. கல்கணரின் ராஜதரங்கிணி அவர்கால காஷ்மீரத்தை ஆட்சி செய்த அரசர்களையும், அவர்களது ஆட்சியைப் தொன்மையான இலக்கண நூலாயினும் இதன் பொருளதிகாரத்தில் அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள், மெய்ப்பாடு பற்றியெல்லாம் கூறப்பட்டுள்ளது. சங்கத் தமிழர்களின் வாழ்வியலைத் புரிந்துகொள்ள தொல்காப்பியம் பெரிதும் பயன்படுகிறது. இதேபோன்று திருக்குறள் இல்லறம், துறவறம், களவியல், கற்பியல், படைப்பியல், நட்பியல், குடியியல் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கிறது. இவையின்றி எட்டுத்தொகை, பதிற்றுப் பத்து, பத்துப்பாட்டு, பதிணெண் கீழ்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களிலும் அரிய வரலாற்றுத் தகவல்கள் விரவிக் கிடக்கின்றன. இவையாவும் சங்க கால வரலாற்றை அறிய உதவும் சான்றுகளாகும்.

பண்டைக்கால அறிவியல்கள் பற்றி அறிந்து கொள்வதற்கு சில நூல்கள் பயன்படுகின்றன. அவற்றுள் முக்கியமானது ஆர்யபட்டரின் ஆர்யபாட்டியா ஆகும். கி.பி. 499 இல் எழுதப்பட்ட இந்நூலில் கணிதம் மற்றும் வானவியல் பற்றிய தகவல்கள் உள்ளன. இதே போன்று இவரது சூரிய சித்தாந்தா என்ற நூல் பூமியின் சுழற்சி மற்றும் சூரிய, சந்திர கிரகணங்கள் பற்றி சரியான அறிவியல் விளக்கமளிக்கின்றது. வட்டத்தின் விட்டம் பற்றிய விகிதம் மிகச்சரியாகக் கணிக்கப்பட்டள்ளது.

**சமண இலக்கியங்கள்**

சமணர்களின் அங்கங்களும், துணை அங்கங்களும் மகாவீரரின் வாழ்க்கை, வாக்கு பற்றிக் கூறுகின்றன. சமணர்களின் மாபெரும் சிந்தனையாளராகவும், தத்தவ ஞானியாகவும், எழுத்தாளராகவும் கருதப்படுவர் ஹேமச்சந்திரா ஆவார். சோலங்கி மன்னர் ஜெயசிம்மாவின் முதலமைச்சராக இருந்த இவரது குமாரபால சரிதம் இவரை ஆதரித்த பரவலரைப் பற்றிக் கூறுகின்றது. இவரது யோக சாத்திரம் சமண தத்துவத்தை விளக்குகின்றது. ஹேமச்சந்திரரின் அபிதான சிந்தாமணி ஒரு பொருள் கொள்ளும் பல சொற்கள் அடங்கிய அகராதியாகும். இவர்

எழுத்து முறையிலும் ஒலி வடிவத்திலும் வேறொரு சொல்லோடு ஒத்துப் பொருள் மாறுபடும் சொற்களைத் தொகுத்துள்ளார். அதுமட்டுமல்ல. ஹேமசந்திரர் தாவரவியல் சொற்களையும் பட்டியலிட்டுள்ளார். குற்றவியல் சட்டங்களையும் இவர் எழுதியுள்ளார். நாட்டுப்புறப் பாடல்களிலும் வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டுகளாக பிரிகதா கதா, கதாசரித சாகரா ஆகியவற்றைக் கூறலாம். தமிழ்நாட்டு தேசிங்குராஜன் கதையையும் வரலாற்றுச் சான்றாக உள்ளன.

### வெளிநாட்டவர் குறிப்புகள்

கிரேக்கர்களும், ரோமானியர்களும், சீன யாத்ரீகர்களும், முஸ்லீம் எழுத்தாளர்களின் இந்தியா பற்றிய நூல்களும், குறிப்புகளும் பண்டைய இந்திய வரலாற்றை முறையாக எழுதப் பயன்படுகின்றன. கிரேக்க வரலாற்றுவியலின் தந்தையாகக் கருதப்படும் ஹெரோடோட்டசும் அலெக்சாந்தருக்குப் பின் வந்த வரலாற்றாளர்களும், இந்தியாவுக்கு வந்த மெகஸ்தனிஸ் போன்ற தூதுவர்களும், ஸ்ராபோ, டையோடோரஸ், பிளினி, டாலமி போன்ற ரோமானிய வரலாற்றாளர்களும் விட்டுச் சென்ற குறிப்புகள் சிறப்புமிக்க சான்றுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

### சீன பயணிகளின் குறிப்புகள்

அறிவு வெறியாலும் வேட்கையாலும், பௌத்தத் திருமறை நூல்களைக் கற்பதற்காக இந்தியாவுக்கு வந்த சீன அறிவுஜீவிகள் கிடைத்தற்கரிய வரலாற்றுச் சான்றுகளைக் கொடுத்துள்ளனர். ஓப்பயர்வற்ற சீன யாத்ரீகர்களான பாகியான், யுவான் சுவாங், இட்சிங் ஆகியோரின் பங்களிப்புகள் பெருமைக்கும் பாராட்டுக்குரியவை. பாகியானின் பயணக் குறிப்பகள் குப்தர்கள் கால நிர்வாகத்தைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றன. யவான் சுவாங்கின் குறிப்புகள் பேரரசர் ஹர்ஷவர்த்தனரைப் பற்றி அறிந்து கொள்ளவும். இந்திய வரலாற்றுப் புவியியலைப் புரிந்து கொள்ளவும் பயன்படுகின்றன. இட்சிங்கின் குறிப்பகள் அவர்கால சமய நிலையைப் படம் பிடித்துக் காட்டுவனவாக உள்ளன.

### மகாவம்சம் தீபவம்சம்

அல்பெரூனியின் நூல் இந்தியாவின் 10-11 ஆம் நூற்றாண்டு கால அரசியல் நிலை பற்றி அறிந்துகொள்வதற்கான சான்றாகும். அல்பெரூனி பல்கலை வித்தகர். இவர் அறிவியலாளர், சமஸ்கிருத மொழிமேதை, தத்தவஞானி, இவருக்கு வானவியல், கணிதம், இயற்பியல், வேதியியல், தாதுப்பொருளியில், புவியியல், குறிப்பாகக் கால வரைவியல் அகியவற்றில் இருந்த புலமை வியப்புக்குரியது. அல்பெரூனி இந்துக்களின் அருமை பெருமைகளைப் பற்றி மனதாரப் பாராட்டியுள்ளார். இவரது கிதப்-உல்-ஹிந்,

1030 என்ற நூல் பண்டைய இந்திய வரலாற்றையும், அதன் பண்பாட்டையும் பற்றி அறிந்து கொள்வதற்கான அரிய படைப்பாகும். இவரது படைப்பு பாரபட்சமற்றது. முஸ்லீம் இலக்கியத்தில் தனித்தன்மை பெற்றது. நியாயமாகவும், நடுநிலை தவறாமலும் எழுதப்பட்டுள்ளது. இலங்கை புத்த மதத்தின் புகலிடமாக இருந்தமையால் புத்தமத இலக்கியங்களாக மகாவம்சம், தீபவம்சம் ஆகியவை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான தொடர்புகளை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இதேபோன்று திபெத்தின் வரலாற்றாளரான தாரநாத்தின் புத்த சமய வரலாறு இந்தியாவுக்கும் திபெத்துக்குமிடையே நிலவிய தொடர்பை காட்டுகிறது.

**பழைய கற்காலம்**

பழைய கற்காலத்தில் சிக்கிமுக்கிக் கற்களைவிட வலிமையான, கதிரோட்டமுடைய பாறைக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. கிடைத்த கற்களில் சிறந்ததைத் தெரிந்தெடுக்கும் திறன் தொன்மைக் கால மனிதர்களுக்கு இருந்தது. இத்தகைய கற்கள் தஞ்சை, திருச்சி, மதுரை, வடஆற்காடு, செங்கல்பட்டு, பெல்லாரி, கடப்பா, குஜராத், ராஜபுதனம் ஆகிய இடங்களில் கிடைத்திருப்பதை புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கற்காலம் தமிழ்நாட்டில் தோன்றியதற்கான உண்மையை முதன்முதலில் ஆதாரங்களுடன் உலகறியச் செய்தவர் மண்ணியல் - மனிதவியல் மாமேதை ராபர்ட் புரூட்ஸ் புட் ஆவார். இவரது பல்லாவர –அத்திரம்- பாக்கம் தொல்பொருள் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் இதை உறுதிப்படுத்தின. பழைய கற்காலத் தமிழர்கள் கற்கருவிகளையும் ஆயுதங்களையும் கண்டுபிடித்ததோடு உணவுப் பொருட்களை சேகரித்தனர். நெருப்பைக் கண்டுபிடித்தனர். இவர்களே திராவிடர்களின் முன்னோர்.

**நெருப்பு கண்டுபிடித்தல்**

மனிதனின் மாபெரும் சாதனை நெருப்பைக் கண்டுபிடித்ததுதான். நெருப்பு கற்கால மனிதனை இருட்டு அச்சத்திலிருந்து விடுவித்தது. இரவில் விலங்குகளிலிருந்து காப்பாற்றியது. உணவை சமைக்கப் பயன்பட்டது. பின்னர் உலோகங்களை உருக்கத் தேவைப்பட்டது. பழைய கற்காலம் கி.மு. 35,000 லிருந்து கி.மு. 10,000 வரை நீடித்ததாகக் கருதப்படுகிறது. இக்காலத்தில்தான் மனிதன் கருத்தை உருவாக்கத் தெரிந்தவன் என்பதை வெளிப்படுத்தினான். அதுமட்டுமல்ல. விவசாயக் கண்டு பிடிப்புக்கான அடிப்படையையும் அமைத்தான். இக்காலகட்டத்தில்தான் மனிதன் உணவுப் பொருளை சேகரித்து, சேகரித்த பொருளை சமைக்கும் கலையைக் கற்றுக் கொண்டான்.

**புதிய கற்காலம்**

பழைய கற்காலத்துக்கும் புதிய கற்காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் மனிதன் எண்ணிலடங்கா சவால்களை எதிர்கொண்டு, வெற்றிகண்டு, தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் பாதுகாத்து முன்னேறினான். மனித முன்னேற்றத்தின் அடுத்த கட்டம்தான் புதிய கற்காலம். இக்கால மக்கள் பாறைக் கற்களைவிட சிறந்த கற்களை பயன்படுத்தினர். இவற்றைக் கொண்டு மேலும் சிறப்பான, கூர்மையான, உறுதியான கருவிகளும், ஆயுதங்களும் செய்யப்பட்டன.

**புதிய கற்கால தடயங்கள்**

புதிய கற்காலத்துக்கான தடயங்கள் தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, திருநெல்வேலி, தென்ஆர்க்காடு, வடஆற்காடு, மதுரை, சேலம், திருச்சி, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூரிலும், மதுரை மாவட்டம் பழனியிலும் சேலம் மாவட்டம் சேர்வராயன் மலைப் பகுதியிலும், புதுச்சேரி அரிக்கமேட்டிலும் கண்டெடுக்கப்பட்ட கருவிகளும், ஆயுதங்களும், பிற பொருட்களும் தமிழ்நாட்டில் புதிய கற்காலம் பரவியிருந்ததைப் பறை சாற்றுகின்றன. இத்தகைய பொருட்கள் கடப்பா, அனந்தப்பூர், பெல்லாரி, கர்னூல் மாவட்டங்களில், குஜராத், கத்தியவார் பகுதிகளிலும் கிடைத்துள்ளன. புதிய கற்காலத்தின் சொந்தக்காரர்கள் திராவிடர்கள்தான் என்பதை புரூஸ் புட்டின் புதைபொருள் ஆராய்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன. இந்த காலகட்டத்தில் (கி.மு. 10,000 –கி.மு. 5000) தான் திராவிடர்கள் இந்திய நாகரித்துக்கான அடித்தளத்தை அமைந்திருக்க வேண்டும்.

**உலோக காலம்**

வரலாற்றுக்காலத்துக்கு முற்பட்ட கால மக்களின் பரிணாம வளர்ச்சியின் அடுத்த முக்கிய கட்டம் உலோக காலமாகும். இக்கால மக்கள் கற்கருவிகள் மற்றும் ஆயுதங்களோடு உலோகத்தாலான பொருட்களையும் பயன்படுத்தக் கற்றுக் கொண்டனர். முதலில் அவர்கள் பயன்படுத்திய உலோகம் செம்பு அல்லது தாமிரம் ஆகும். எனவே இக்காலம் கல்-செம்புக் காலம் என்று அழைக்கப்பட்டது. இக்காலத்தைச் சேர்ந்ததுதான் சிந்து சமவெளி நாகரிகமாகும்.

**வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்கள்**

தென்னிந்தியா முழுவதிலும் பரவியிருந்த தமிழ்நாட்டு புதிய கற்கால மக்கள் உலோக காலத்துக்குள் காலடி பதித்தனர். வட இந்தியாவில் கல்-செப்புக் காலம் துவங்கியபோது தமிழ்நாட்டில் இரும்புக் காலம் துவங்கி

விட்டது. டாக்டர் ஜாகர் என்ற ஜெர்மானியர் 1876 ஆம் ஆண்டு திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூரில் புதைபொருள் ஆய்வை மேற்கொண்டார். அங்கு அவர் 50 வகையான நன்கு சுடப்பட்டுப் பக்குவப்படுத்தப்பட்ட மண்பாண்டங்கள், மனித மண்டை ஓடுகள், எலும்புகள், கத்திகள், வாள்கள், கூராயுதங்கள், வீட்டுக் கருவிகள் போன்றவற்றைக் கண்டுபிடித்தார். ஆயுதங்கள் இரும்பாலானவை. டாக்டர் ஜாகருக்குப் பிறகு அலெக்சாண்டர் ரே 1889லிருந்து 1905 வரை ஆதிச்சநல்லூர் அகழ்வராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தினார். ஆயிரக்கணக்கான புதைபொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இவர் அப்பொருட்களையெல்லாம் பட்டியலிட்டு ஆவணப்படுத்தி, கட்டுரையாக வெளியிட்டார். ஆதிச்சநல்லூர் இந்தியாவிலேயே மிகப் பெரிய, பரவலான, தொன்மைமிக்க வரலாற்றுக்கு முற்பட்ட ஆய்வுக்களம் என்று ரே வர்ணித்தார்.

## அகழாய்வு ஆதாரங்கள்

ஆதிச்சநல்லூர் அகழாய்வுக்குப் பல வரலாற்றுச் சிறப்புகள் உண்டு. இதன் மூலம் அந்த இடத்தின் காலம் கணக்கிடப்பட்டது. அக்கால மக்களின் வாழ்விடம் உறதி செய்யப்பட்டது. காலவரன்முறை கணிக்கப்பட்டது. அருகாமைக் குடியிருப்புகள் பற்றி அறிய முடிந்தது. யாவற்றுக்கும் மேலாக, உரோக்காலத் தமிழ்நாட்டு மக்களின் நாகரிகம், பண்பாடு பற்றித் தெரிந்து கொள்ள வழிவகுத்தது. அதுமட்டுமல்ல, அங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளின் உட்புறத்தில் காணப்பட்ட அரிய எழுத்து வடிவமாகும். இது தமிழ்-பிரம்மி எழுத்து வகையைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது. இவ்வெழுத்து கி.மு.5 ஆயிரம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்று தொல்லியல் நிபுனர்கள் கருதுகின்றனர். ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட தாழி ஒன்றில் காணப்படும் ஓவியம் அதிசயிக்கத்தக்கது. இங்கு காணப்பட்ட செம்பு மற்றும் இரும்புப் பொருட்கள் சுரங்கத் தொழிலும், உருக்குத் தொழிலும் சிறப்புற்று இருந்தன என்பதற்கான சான்றுகளாகும்.

## தொல்பொருள் ஆராய்சிகள்

மார்ட்டிமர் வீலர் 1940 களில் பாண்டிச்சேரிக்கு அருகாமையில் உள்ள அரிக்கமேட்டில் மேற்கொண்ட அகழாய்வு அப்பகுதி ரோமப் பேரரசுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்ததை உறுதிப்படுத்தியது. இங்கு கிடைத்த மையத் துளையுடைய உருள்மணிகள் இதற்கு சான்றாக உள்ளன. அரிக்கமேடு, காவிரிப்பட்டிணம், அலங்காகுளம், முசிறி, சுட்டுக்கேணி போன்ற நகர்களோடும் உள்நாட்டு வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தது. ஆதிச்சநல்லூர் மற்றும் அரிக்கமேட்டில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள்

ஆராய்ச்சிகள் தமிநாட்டுக்கும் சிந்து சமவெளி நாகரிகத்துக்குமிடையே இருந்த தொடர்பை சுட்டிக் காட்டுவதாக உள்ளது. இவ்விரண்டும் செம்புகால நாகரிகங்கள் என கரதலாம்.

## சிந்து சமவெளி நாகரீகம்

### நகர நாகரீகம்

*5000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்து நதிக் கரையில் ஒரு நன்கு வளர்ந்த நகர நாகரிகம் செல்வச் செழிப்போடு வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தது. என்ற வரலாற்று உண்மை 1920 களில் தான் தெரியவந்தது. அதுவரை மெசொபொடாமிய மற்றும் எகிப்து நாகரிகங்கள்தான் உலக நாகரிகங்களின் தொட்டில்கள் என்று மேலை நாட்டு வரலாற்றாளர்கள் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தனர். பஞ்சாப் மாண்ட்கோமரி மாவட்டம் அரப்பாவிலும், சிந்து லார்க்கானா மாவட்டம் மொகஞ்சதாரோவிலும் பிற இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சிகள் சிந்து நாகரிகமும் காலத்தாலும் வளர்ச்சியாலும் மொசொபொடாமிய, எகிப்து நாகரிகங்களுக்கு இணையானவை என்பதை மெய்ப்பித்தன. முதலில் இந்நாகரிகம் கல்-செம்பு நாகரிகம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் 'அரப்பா நாகரிகம்', 'சிந்து சமவெளி நாகரிகம்' என்றும் கூறப்பட்டன. கல், செம்பு கருவிகளைக் கருத்தில் கொண்டு 'கல்-செம்பு நாகரிகம்' என்று பெயரிடப்பட்டது. பின்னர் அரப்பாவும், மொகஞ்சதாரோவும் சிந்து சமவெளியில் இருந்தமையால் 'சிந்து சமவெளி நாகரிகம்' என்று அழைக்கப்பட்டது. பின்னர் மேற்கொண்ட ஆராய்ச்சிகளை வைத்துப் பார்க்கும்போது சிந்து நாகரிகம் என்று தெரிந்து கொள்ளலாம்.*

### மொகஞ்சதாரோ கண்டுபிடிக்கப்படல்

*ராகல்தாஸ் பந்யோபாத்யா இந்தியத் தொல்பொருள் அய்வு மேதை. இந்திய வரலாற்றாளர்களுக்கு முன் மாதிரியாகத் திரிந்தவர். சிறந்த வரலாற்று நூலாசிரியர். மாணவர்களுக்கு வரலாற்றோடு தொல்பொருளாய்வையும் குழைத்துக் கொடத்தவர். ஆர்.டி.பானர்ஜி என்று அனைவராலும் அழைக்கப்பட்டவர். பானர்ஜி 1885 எப்ரல் 12ஆம தேதி மூர்ஷிதாபாத்திலுள்ள பெர்காம்பூரில் பிறந்தார். கிருஷ்ணநாத் கல்லூரியில் பயின்று இளநிலைப் பட்டம் பெற்றார். பின்னர் கல்கத்தா மாநிலக் கல்லூாயில் சேர்ந்து வரலாற்றில் முதுநிலைப் துறையில் துணை மேலாளராகச் சேர்ந்து பின்னர் அத்துறையில் மேற்கு வட்டத்தின் தொல்பொருள் தலைமை மேலாளராகப் பதவி உயர்வு பெற்றார். அதன்பின் கிழக்கு வட்டத்தில் உழைப்பின் விளைவாக மொகஞ்சதாரோ*

கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்பு பற்றிப் பல கட்டுரைகளையும், நூல்களையும் எழுதினார்.

## தொல்பொருள் ஆய்வின் விரிவாக்கம்

*மார்ட்டிமல் வீலர் 20 ஆம் நூற்றாண்டில் இணையற்ற தொல்பொருள் ஆய்வாளர் ஆவார். தொல்பொருள் அறிவியலை உலகறியச் செய்த வீலரை உலகம் நன்கறிந்து கொண்டது. ஸ்காட்லாந்து கிளாஸ்கோவில் 1890 செப்டம்பர் 20 ஆம் தேதி பிறந்த மார்ட்டிமர் வீலர் பிராட்போர்டு இலக்கணப் பள்ளியிலும், லண்டன் பல்கலைக் கழகத்திலும் பயின்று முதுகலைப் பட்டம் பெற்றார். இவருக்குக் கிடைத்த உதவித் தொகையைக் கொண்டு தொல்பொருளியல் கற்றார். தொல்பொருளாய்வில் ஈடுபட்டிருந்த வீலர் முதல் உலகப் போரின் போது ராணவத்தில் சேர்ந்து பணியாற்றினார். போர் முடிந்தபின் வேல்ஸ் தேசிய அருங்காட்சியகத்தின் இயக்குநரானார். பின்னர் லண்டன் அருங்காட்சியகத்தில் பொறுப்பாளரானார். இரண்டாம் உலகப் போரில் மீண்டும் ராணுவத்தில் பணியாற்றினார். போர் முடியுமுன் இந்திய தொல்பொருள் துறையின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். மொகஞ்சதாரோவில் நடைபெற்றுக் கொண்டிருந்த தொல்பொருள் அகழ்வராய்ச்சியைப் புதிய உச்சத்துக்குக் கொண்டு சென்றார் மார்ட்டிமர் வீலர்.*

## புதிய தொல்பொருள் தொழில்நுட்பம்

*மார்ட்டிமர் வீலர் இந்திய தொல்பொருள் துறையின் இயக்குநராகப் பணியாற்றிய நான்காண்டு காலம் (கி.பி. 1944-48) சிந்துவெளி நாகரிகம் பற்றிய ஆராய்ச்சியில் பொற்காலம் ஆகும். இரவது ஆய்வு முடிவுகள் முதன் முறையாக சாதாரண மக்களும் அறிந்து கொள்ளுமாறு செய்த பெருமை வீலரைச் சேரும். வுானொலி, தொலைக்காட்சி, கட்டுரைகள், புத்தகங்கள், சொற்பொழிவுகள் மூலம் இவரது கண்டுபிடிப்புகளையும், இக்கண்டுபிடிப்புகளின் வரலாற்றுச் சிறப்பையும் அனைத்துத் தரப்பினரும் அறிந்து கொள்ளுமாறு செய்தார். அதுமட்டுமல்ல, தொல்பொருள் ஆய்வில் புதிய அறிவியல் தொழில்நுட்பமுறைகளைக் கையாண்டார்.*

## சிந்துவெளி நாகரீகத்தை உலகுக்கு அறிவித்தல்

*20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை சிந்து வெளி நாகரிகம் பற்றி எவருக்கும் தெரியாது. ஆங்கிலேயர் நிகழ்த்திய அகழாய்வு அதிசயங்களில் ஒன்று இந்நாகரிகத்தை உலகறியச் செய்ததாகும். இது ஒரு நாளில் நிகழ்த்த அற்புதமல்ல. பல அகழாய்வு ஆய்வாளர்கள் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் கூட்டுவிளைவே சிந்துவெளி நாகரிகத்தின்* கண்டுபிடிப்பாகும். சார்லஸ் மாசன் *1842* ஆம் ஆண்டு பலுசிஸ்தான்,

ஆப்கானிஸ்தான், பஞ்சாப் ஆகிய இடங்களில் அகழாய்வுப் பணயம் மேற்கொண்டபோது அங்கிருந்த மக்களோடு தொடா்பு கொண்டாா். அப்போதுதான் அவா் அப்பகுதி கிராம மக்கள் சுமாா் 13 மைல்கள் பரப்படைய ஒரு புராதன நகரம் இருப்பதைப் பற்றி அறிந்தாா். இத்தகவல் மாசானுக்கு ஆச்சா்யத்தை அளித்தது. எனினும் மாசனுக்கு அப்போதிருந்த வாய்ப்பு வசதிக்குறைவு அவரது ஆச்சா்யத்தை அகழாய்வு ஆராய்ச்சியாக மாற்ற முடியாமல் செய்து விட்டது. எனினும் அவரது பயணத்தைப் பற்றியும், அவா் அறிந்த செவி வழிச் செய்தி பற்றியும் விரிவாக எழுதி வெளியிட்டாா்.

## இந்திய தொல்பொருளியலின் தந்தை

மாசனின் முயற்சிக்குப்பின் 1856 இல் தளபதி அலெக்சாந்தா் கன்னிங்காம் அரப்பா என்ற இடத்துக்குச் செல்ல நேரிட்டது. அவா் அங்கு சென்றதற்கான காரணம் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி கராச்சிக்கும் லாகூருக்குமிடையே ரயில்பாதைப் பாலம் போடுவதை மேற்பாா்வை செய்வதற்காகவாகும். ஜான் மற்றும் வில்லியம் புருண்டன் ஆகிய இரு பிரிட்டிஷ் பொறியாளா்களும் அப்பணியில் ஈடுபட்டிருந்தனா். அப்பாலத்தைக் கட்டுவதற்காக உறுதியான கற்கள் தேவைப்பட்டன. கன்னிங்காமம், அப்பொறியாளா்களும் இதுபற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தபோது இங்கிருந்த சிலா் அருகாமையிலிருந்த ஒரு பாழடைந்த பண்டைக்கால கட்டிடத்தில் கடினமான கற்கள் கிடைப்பதாகக் கூறினா். அந்த இடத்தைப் பாா்வையிட்ட கன்னிங்காம் அங்கு குவிந்து கிடந்த பாரக்கற்களைக் கண்டு வியப்படைந்தாா். சில மாதங்களுக்குப் பிறகு பொறியியல் சகோதரா்களில் ஒருவரான வில்லியம் புருண்டன் மற்றொரு இடத்துக்குச் சென்றபோது அங்கிருந்த ஒரு பகுதியிலிருந்த கிராம மக்கள் பழைய செங்கற்களைப் பயன்படுத்துவதைப் பாா்த்தாா். அந்த இடம்தான் அரப்பா. அரப்பாவிலிருந்து எடுத்துவரப்பட்ட கற்கள் ரயில் பாலம் கட்டுவதற்குப் பிரம்பி எழுத்துக்களைக் கொண்ட முதல் அரப்பா முத்திரையை வெளியிட்டாா். அதன்பின் அடுத்த அரை நூற்றாண்டு காலத்துக்கு எவ்வித மன்னேற்றமுமில்லை கன்னிங்காம் இந்திய தொல்பொருளியலின் தந்தை என்ற அழைக்கப்படுகிறாா்.

## அரப்பா நகரம்

பிளீட் என்ற அகழாய்வாளா் 1912 ஆம் ஆண்டு மேலும் பல அரப்பா முத்திரைகளைக் கண்டுபிடித்தாா். இவரைத் தொடா்ந்து சா் ஜான் மாா்ஷல், ராய் பகதூா் தயாராம் சகானி, மாதவ் சாப் வாட்கன் ஆகியோா் 10 ஆண்டு முயற்சிக்குப் பின் அரப்பா நகரத்தைக் கண்டுபிடித்தனா். இவா்களது

இக்கண்டுபிடிப்பு இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சி வரலாற்றில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

**மொகஞ்சதாரோ சிறப்பு**

அரப்பா நகரம் 1921 இல் கண்டபிடிக்கப்பட்டது. அடுத்த ஆண்டே அகழ்வாராட்சி தொடங்கப்பட்டது. இதற்குக் காரணமாக இருந்தவர் ஆர்.டி. பானர்ஜி ஆவார். ஜான் மார்ஷல், மாக்கே போன்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் இதில் பங்கேற்றனர். எனினும் மார்ட்டிமாட வீலர் இந்தியத் தொல்பொருள் துறை இயக்குநரானபின்தான் இவ்வாராய்ச்சி நவீன மயமாக்கப்பட்டு, அதுவரை நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள் முறைப்படுத்தப்பட்டு, ஆவணப்பட்டு வெளி உலகுக்கு முறையாக அறிவிக்கப்பட்டது. சிந்துவெளி மொகஞ்சதாரோவின் தொன்மைச் சிறப்பை வெளிக்கொண்டு வந்த பெருமை வீலரையே சேரும்.

**பிற நகரங்கள் பற்றிய தகவல்கள்**

சிந்து வெளியிலும் வேறு சில பகுதிகளிலும் தொல்பொருள் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் விளைவாக மேலும் சில சிந்து வெளி நாகரிக நகரங்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தன.

1. சங்குதாரோ
2. காலிபங்கள்
3. ரோதால்
4. புானாவாலி
5. சூர்கோட்டதா
6. தோலாவிரா

சிந்து சமவெளி மட்டுமன்றி ராஜஸ்தான், அரியானா, பஞ்சாப், கஜராத், மக்ரான் கடற்பகுதி, பலுசிஸ்தான், அப்கானிஸ்தான், பாகிஸ்தான் அகிய பகுதிகளிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**அரப்பா நகர நாகரிகம்**

அரப்பா பஞ்சாப் மானட்கோமரி மாவட்டத்தில் உள்ளது. தற்போது இப்பகுதி பாகிஸ்தானில் மேற்கு பஞ்சாப் மாகாணத்தில் இருக்கிறது. முதலில் இஙகுதான் தொல்பொருள் ஆய்வின் மூலம் தயாராம் சகானி நகரம் இருந்ததைக் கண்டுபிடித்தார். அதன்பின் இங்கு மார்ஷல், டேல்ஸ், மார்ட்டிமர் வீலர் போன்றோர் அகழாய்வில் ஆய்வுகளை மேற்கொண்டனர். அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருள்களைப் பேசச் செய்தனர்.

**அரப்பா நாகரிகத்தின் வரலாற்றுச் சிறப்பு**

சட்லஜ் நதிக்கரையில் அமைந்துள்ள அரப்பாவில் முதன் முதலில் நாகரிக நகரம் கண்டுபிடிக்கப்பட்டதால் அரப்பா நாகரிகம் என்று அழைக்கப்பட்டது. இங்குள்ள கோட்டை அல்லது நகர அரண் களஞ்சியங்கள், வட்டமான கல் தளங்கள், ஓற்றை வீட்டுக் குடியிருப்புகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. நகர் அரண் மதிலால் சூழப்பட்டுள்ளது. இறந்தோர் பொருட்களுடன் புதைக்கப்பட்டனர். இந்நாகரிகம் செப்புக் காலத்தைச் சேர்ந்தது என தெரிகிறது.

**மொகஞ்சதாரோ நகர நாகரிகம்**

அரப்பா நகரம் அகழ்ந்தெடுக்கப்பட்ட பின் சிந்து மாகாணம் லர்க்காணா மாவட்டத்தில் சிந்து நதியின் வலது கரையில் அமைந்துள்ள மொகஞ்சதாரோ நகரம் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்புக்கு மூல காரணமாக இருந்தவர் அர்.டி. பானர்ஜி. இந்நகரமும் இன்றைய பாகிஸ்தானில் உள்ளது. இந்நகரம் இறந்தோர் மேடு என்று அழைக்கப்படுகிறது. மொகஞ்சதாரோ சிந்து நாகரிகத்தக்கு முன்மாதிரியாக, எடுத்துக்காட்டாக, தனித்துவமிக்கதாக உள்ளது. இதற்குக் காரணம் இந்நகரின் குளியல் குளமும் பெருங்களஞ்சியமும் ஆகும். மொகஞ்சதாரோ நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்ட கோட்டை நகரமாகும். சிந்து நாகரிகத்தின் மிகப்பெரிய நகரமும் இதுவேயாகும். அதிகபட்ச வளர்ச்சி அடைந்துள்ள நகரமும் இதுதான். மொகஞ்சதாரோ கட்டிடப் பொறியியலுக்கும் நகரத் திட்மிடலுக்குமான சிறந்த முன்னுதாரணமாகும்.

**நகரமைப்புத் திட்டம்**

மொகஞ்சதாரோவின் நகரமைப்புத் திட்டம் அதிசயிக்கத்தக்கது. இந்த நகரம் குறுக்குக் கோட்டுச் சட்ட முறையைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது இந்நகரின் தெருக்கள் அனைத்தும் ஒன்றையொன்று குறுக்காக வெட்டிச் சென்று சதுரங்களாக அமையும் நேர்கோடுகளின் ஒழுங்கமைவில் போடப்பட்டுள்ளன. மொகஞ்சதாரோ நகரம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.1. கோட்டைப் பகுதி 2. நகரப் பகுதி

கோட்டைப் பகுதியில் 12 மீட்டர் உயரமுள்ள அரணுக்குள் பொது குளியல் குளங்கள், இரு பெரும் மன்றக் கூடங்கள், ஆயிரக்கணக்கானோர் வாழ்ந்த குடியிருப்புகள் உள்ளன. இந்நகரில் மட்டும் 35,000 பேர் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அனைத்துக் கட்டடங்களும் நன்கு சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன.

**குடியிருப்புகள்**

மொகஞ்சதாரோவின் மையப் பகுதியில் உயரமான சுவற்றுடன்கூடிய அங்காடி உள்ளது. தனி வீடுகள் மற்றும் குடியிருப்புகள் காணப்படுகின்றன. இவைகளில் நீர்த்தேவைக்குக் கிணறுகள் உள்ளன. கழிவுநீர் செல்வதற்கு நன்கு மூடப்பட்ட அடிச்சாக்கடைகள் இருந்தன. வசதியானோர் வாழ்ந்த வீடுகளில் அறைகளும், குளியலறையும், நிலத்தடி அடுப்பும் இருந்தன. பல வீடுகளில் பின்கட்டுகள் காணப்படுகின்றன. இவற்றின் கதவுகள் பக்கவாட்டில் செல்வதற்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன. சில வீடுகள் இரு மாடிகளைக் கொண்டவையாக உள்ளது.

**களஞ்சியம் கண்டுபிடிப்பு**

மார்ட்டிமர் வீலர் 1950 ஆம் ஆண்டு மொகஞ்சதாரோவில் ஒரு பிரம்மாண்டமன களஞ்சியத்தைக் கண்டுபிடித்தார். பல அறைகளைக் கொண்ட இக்களஞ்சியத்தில் உணவு தானியங்கள் சேமிக்கப்பட்டன. வண்டிகளில் தானியங்களைக் கொண்டு வந்து சேமிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அதுமட்டுமல்ல. தானியங்களை உலர்த்துவதற்குமான வசதிகளும் இருந்தன.

**குளியல் குளம்**

களஞ்சியத்துக்கருகே பெரிய குளியல் குளம் ஒன்று இருந்தது. இக்குளத்தில் இறங்கிக் குளிக்கப் படிக்கட்டுகள் போடப்பட்டிருந்தன. நீர்ப்புகாதபடி நீலக்கீல் இணைப்புகள் இருந்தன. இக்குளியல் குளம் 12 மீட்டர் நீளமும், 7 மீட்டர் அகலமும், 2.4 மீட்டர் ஆழமும் கொண்டது. இக்குளியல் குளம் வேறு எந்த சமகால நாகரித்திலும் காணப்படாத ஒன்றாகும். குளியல் குளத்தருகே பெரிய கட்டிடங்கள் இருந்தன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை இரண்டு1. தூண் மன்றக்கூடம்: இங்கு மக்கள் மன்றக் கூட்டங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். 2. பொதுக்கூட்டம்: ∴இக்கூட்டத்தில் 78 அறைகள் இருந்தன. இக்கூட்டம் பிற நகரப் பிரதிநிதிகள் வந்து தங்குவதற்காகப் பயன்பட்டிருக்கலாம்.

மொகஞ்சதாரோ நகரம் உயரமான சுவர்களால் சூழப்பட்டிருந்தது. ஆங்காங்கே பாதுகாவல் கோபுரங்கள் கட்டப்பட்டிருந்தன. அரண் அமைப்போடு உருவாக்கப்பட்டிருந்த இந்நகரம் ஆட்சிமையமாகவும், என்று எண்ணுவதற்கு இடமுண்டு. சுருங்ககூறின் மொகஞ்சதாரோ சிந்து நாகரிகத்தின் அதிகாரக் குவியமாக இருந்தது.

**அரிய கலைப் பொருட்கள் கண்டுபிடிப்பு**

மொகஞ்சதாரோவில் பெரிய கட்டிடங்கள் மட்டுமின்றிப் பல அரிய கலைப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் உட்கார்ந்து கொண்டும் நிற்பது போன்றும் உள்ள உருவங்கள், செம்பாலும் கற்களாலும் செய்யப்பட்ட கருவிகள், நன்கு சித்திர வேலைப்பாட்டுடன் நுண்மையாக செதுக்கப்பட்ட முத்திரைகள், தராசுகள் மற்றும் எடைக்கற்கள், தங்க மற்றும் பல்வண்ண மாணிக்கக்கற்கள் பதிக்கப்பட்ட நகைகள், குழந்தைகளுக்கான விளையாட்டு சமான்கள் அடங்கும்.

**நாட்டியகாரி செப்புசிலை**

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட ஒரு நாட்டியக்காரியின் செப்புச் சிலை உலகக் கலை வல்லவர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. 1.8 செ.மீ உயரமுள்ள இச்சிலை 1926 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இச்சிலையில் தன் மனதைப் பறிகொடுத்த மார்ட்டிமர் வீலர் கூறினார்: இவளுக்கு எத்தகைய அழகானமுகம். இவளது உதட்டுப் பிதுக்கல். இவளது கண்களில் காணப்படும் கர்வப் பார்வை. இவளுக்குப் 15 வயது இருக்கக்கூடும். ஒரு கை நிறைய வளையல்கள். இந்த நிர்வாணப் பெண் எவ்வளவு தன்னம்பிக்கையோடு நிற்கிறாள். இவளுக்கு இணையாக உலகில் வேறு எவரும் இல்லை. இந்நாட்டிய நாரீமணி பற்றி ஜான்மார்ஷல் கூறியதாவது: இந்த இளம்பெண் ஒரு கையை இடுப்பில் வைத்துக்கொண்டு ஆணவத்துடன் நிற்கிறாள். இவளது கால்கள் கால இசையை வெற்றி கொள்வதாக இருக்கிறது. கிதிதரி பெசேல் என்ற மற்றொரு தொல்பொருள் ஆய்வாளர் இப்பெண் என்ன செய்கிறோம் என்பதை நன்கறிந்தே நன்றாகச் செய்துள்ளாள் என்று குறிப்பிட்டுள்ளார்.

**ஆண் உருவச்சிலை**

நாட்டியப் பெண்ணுக்கு அடுத்ததாக அனைவரது கவனத்தையும் கவர்ந்த உருவம் சவக்கார கல்லால் செய்யப்பட்ட உட்கார்ந்திருக்கும் ஆண் உருவச் சிலையாகும். இச்சிலை 17.5 செ.மீ உயரமுள்ளது. இவரது தலைப்பட்டி, கைப்பட்டை பின்பக்கமாக சரிந்துவிழும் வேலைப்பாடமைந்த மேலாடை, நன்கு வாரிவிடப்பட்ட முடி, காதணி ஓட்டை, கனவு காணும் கண்கள், நன்கு கூறுவதைப் போன்ற உதடுகள், மூடிய வாய்… இந்த ஆணழகன் சிலை பார்ப்போர் மனதைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

**முத்திரைகள்**

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான முத்திரைகளில் ஒன்றில் ஒருவர் கால்களை மடக்கிய நிலையில் விலங்குகள்

புடைசூழ உட்க்கார்ந்திருக்கிறார். இவர் இந்துக்களின் கண்களுக்கு யோகியாகவும், சிவனாகவும் காட்சியளிக்கிறார். சமணர்கள் இச்சிலையில் மகா வீரரைக் காண்கின்றனர். பௌத்தர்கள் புத்தரைப் பார்க்கின்றனர். தமிழர்கள் இச்சிலையில் திருவள்ளுவரை காணக்கூடும், பிறரக்கு இவர் துறவியாக காட்சியளிக்கலாம்.

# அலகு- II

## அரப்பா முதல் ஆரியர்காலம் வரை

### சிந்து சமவெளி நாகரிக வாழ்வியல்

### அரசியல் வாழ்க்கை முறை

### நகர நிர்வாகம்

சிந்து நாகரிகம் நகர நாகரிகம். அரப்பா, மொகஞ்சதாரோ, லோதால், தோலாவிரா, காலிபங்கன், சன்குதாரோ, பாள்வலி போன்ற பல நகரங்களை உள்ளடக்கியது. சிந்து நாகரிகமாகும். ஒவ்வொரு நகரமும் நன்கு நிர்வகிக்கப்பட்டது. பொதுவாக இந்நகரங்களின் வடிவமைப்பு ஒரு சீராகவே இருந்தது. இந்நகரங்கள் புவியியல் அமைப்பு, நதி வெள்ளப் போக்கு, சூழ்நிலை மாற்றம் ஆகியவற்றுக்கேற்ப சில மாற்றங்களைச் செய்து கொண்டன. இம்மாற்றங்களைப் பார்க்கும் போது நகர நிர்வாகம் தன்னாட்சி பெற்றுத் திகழ்ந்ததாக தெரிகிறது. இதன் மூலம் சிந்து நாகரிகத்தில் அதிகாரப் பரவல்முறை இருந்ததாக அறியமுடிகிறது. தன்னாட்சியுடன் செயல்பட்ட இந்நகர நிர்வாகங்கள் ஒரு நடுவண் அரசுக்குக் கட்டுப்பட்டிருந்தன.

### பொருளாதார அமைப்பு

சிந்து நாகரிகப் பொருளாதாரம் நன்கு திட்டமிடப்பட்ட பொருளாதாரமாகும். பல நகரங்களிலும், நகர்களிலும் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான விவசாயம்சாரா அரசாங்க அலுவலர்கள், தொழிலாளர்கள், கைவினைஞர்கள், பாதுகாவலர்கள், படைவீரர்கள் ஆகியோர் அனைவருக்கும் உணவுப் பொருட்களை வினியோகிக் வேண்டிய பொறுப்பு மைய அரசுக்கும், நகர அரசுகளுக்கும் இருந்தது. அதற்காக ஒவ்வொரு நகர தலைமையிடத்திலும், மொகஞ்சதாரோவிலும் பெரிய களஞ்சியங்கள் கட்டப்பட்டன. விவசாயிகளின் தேவைபோக உபரியாக இருந்த உணவுதானியங்கள் சேகரிக்கப்பட்டு இந்த களஞ்சியங்களில் சேமிகக்ப்பட்டன. இதைச் சேமிப்பதற்குப் பல அதிகாரிகள் இருந்திருக்க வேண்டும். போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். களஞ்சியங்களில் அன்றாடத் தேவைக்கும், நெருக்கடிக் காலத்தேவைக்கும் உணவுப் பொருட்கள் சேமிக்கப்பட்டன. பல இடங்களில் தானிய ஜாடிகள் காணப்பட்டமையால் தனியாரும் உணவுப் பொருட்களை சேமித்து வைத்திருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. விவசாய உபரி இருந்தால் மட்டுமே நகர நாகரிகம் நடைமுறை சாத்தியமாகும்.

**விவசாயம்**

சிந்துவெளிப் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாக கொண்டது. விவசாயம் வளமாக இருந்தது. மக்களின் தேவைபோக உபரி விளச்சலைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு விவசாயம் வளமாக இருந்தது. சிந்து நதிக்குப் பின்புறமிருந்த நிலப்பகுதிகளில் விவசாயம் செய்யப்பட்டது. கோதுமையும் பார்லியும் முக்கிய உணவுப் பொருட்களாக இருந்தன. இவற்றோடு நெல்லும், கரும்பும் பயிரிடப்பட்டன. உலகிலேயே முதன் முதலில் பருத்தியை பயிரிட்டவர்கள் சிந்து சமவெளி மக்கள் என்று கூறப்படுகிறது. கோதுமையையும், பார்லியையும் ரபி அல்லது குளிர்காலப் பயிர்களாகவும், பிறவற்றை கரிப் அல்லது கோடைப் பயிர்களாகவும் பயிரிட்டனர். நிலம் நன்றாக உழுது பயிரிடப்பட்டது. சிந்து நதி பொங்கி வரும் போது பயிரிட்டுப் பின் அறுவடை செய்தனர். நிலத்தை இருவழியாக உழுவதற்கான அடையாளங்கள் காலிபங்களில் காணப்படுகின்றன.

**விலங்குகளை பழக வைத்தல்**

சிந்து சமவெளி மக்கள் விவசாயத் தேவைகளுக்கேற்ப விலங்குகளைப் பழக்கினர். திமிலுடைய விலங்குகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாகக் காளைகளும் ஒட்டகங்களும் விவசாயத்துக்கு உதவியாக இருந்தன. எருமைகள் உபயோகத்திலிருந்தன. பாலுக்குப் பசுக்கள் பயன்பட்டன. மான்களும், ஆமைகளும் உணவுக்காக வேட்டையாடப்பட்டன. மக்கள் காண்டாமிருகங்களை அறிந்திருந்தனர். ஆடுகளும், நாய்களும், பன்றிகளும் கிராமங்களில் காணப்பட்டன.

**சிந்த சமவெளி தொழிலகள்**

சிந்து சமவெளியில் வேளாண்மையைப் போன்றே பல்வேறு தொழில்களும் சிறப்புற்றிருந்தன. கிராமங்களில் வேளாண்மை, நகரங்களிலும், நகர்களில் தொழில்கள் என்ற நிலை நிலவியது. தொழில்கள் பல வகை: செங்கல் தொழில், செம்புத் தொழில், தங்க ஆபரணத் தொழில், அரிய கல் செதுக்கும் தொழில், நெசவுத் தொழில் போன்றவை. பல்லாயிரக்கணக்கானோர் இத்தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். கல், செம்பு, வெண்கல ஆயதங்களும், பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

சிந்து மக்கள் பாசிமணிப் பித்தர்களாக இருந்தமையால் பாசிமணித் தொழில் சிறப்புற்றிருந்தது. இம்மக்கள் வெள்ளியைப் பயன்படுத்தியமையால் வெள்ளித் தொழிலும் சிறப்பிடம் பெற்றிருக்க வேண்டும். அதேபோன்று ஈயத் தொழில். சிந்து மக்கள் உலோக காலத்தில் வாழ்ந்தாலும் கற்கருவிகளையும், ஆயுதங்களையும் பாண்டங்களையும் மறந்தவிடவில்லை. எனவே இது சம்பந்தமான தொழில்களும் நீடித்தன. நகரங்களிலும்,

நகர்களில் தொழிலாளர்களுக்கெனத் தனிக் குடியிருப்புகள் இருந்தன. மணிகள் தயாரிப்போருக்கான பயிலரங்குகள் சங்கதாரோ, லோத்தால் ஆகிய நகரங்களில் காணப்பட்டன.

**உள்நாட்டு வியாபாரம்**

சிந்து மக்கள் உள்நாட்டு வியாபாரத்திலும், வெளிநாட்டு வர்த்தகத்திலும் சிறப்புற்றிருந்தனர். நகரங்களுக்கிடையேயான வியாபாரம் ராஜஸ்தான், சௌராஷ்டிரா, உத்திரப் பரதேசம், தென்னிந்தியா ஆகிய பகுதிகளுக்குப் பரவியிருந்தது. இப்பகுதிகளுக்கியேயான வர்த்தகப் வழியாகவும் நடைபெற்றது. வழக்கமாக எருது வண்டிகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வண்டிகளில் பயணம் செய்வோரின வசதியை முன்னிட்டு வண்டிக்கு மேல் மேற்கவிக்கை போடப்பட்டிருந்தது. நீண்ட வியாபாரப் பயணங்களுக்கு ஒட்டகங்கள் உபயோகப்படுத்தப்பட்டன.

மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், வீட்டுச் சாமான்கள், பலவகை மணிப்பொருட்கள், அணிகள், ஒப்பனைப் பொருட்கள், விளையாட்டுபொம்மைகள் விற்பனை செய்யப்பட்ன. வியாபாரம் பண்டமாற்று முறை மூலமாகவோ அல்லது முத்திரைகள் வழியாகவோ நடைபெற்றது. வியாபாரத்துக்கும், வர்த்தகத்துக்கும் ஒரே சீரான எடைகளும், அளவைகளும் பயன்படுத்தபட்டன. இவர்களது நிறுத்தலளவையும், முகத்தலளவையும் துல்லியமானவை. இவர்கள் தமசமுறையை நன்கறிந்திருந்தனர். நிலத்தை அளப்பதற்கு வெண்கல அளவுகோலைப் பயன்படுத்தினர்.

**வெளிநாட்டு வர்த்தகம்**

வெளிநாட்டு வர்த்தகம் சிந்து நாகரிகத்தின் சிறப்புக் கூறாகும். சிந்து நாகரிக நகரங்கள் தொழில்களின் கேந்திரங்களாக இருந்தமையால் ஏற்றுமதிக்கான பொருட்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன. தரமான, அழகான, உறுதியான சிந்து செய்பொருட்களுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பிருந்தது. குறிப்பாக கோதுமை, பார்லி, பல்வகைப் பயிறுகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற விவசாயப் பொருட்களும், பல வகையான துணிகள், அழகு பானைகள், மணிகள், கிளிஞ்சல்கள், எலம்புகள் பதிக்கப்பட்ட பொருட்கள், தந்தப் பொருட்கள், டெரகோட்டா பொம்மைகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆடம்பர மற்றும் அழகுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. குறிப்பாக தகரம், தாமிரம், விலையுயர்ந்த ரத்தினங்கள் பெறப்பட்டன.

அண்மையிலிருந்த ஆப்கானிஸ்தான், தொலைவிலிருந்த ஈரான் போன்ற வளைகுடா நாடுகள், மெபொடாமியா போன்ற நாடுகளுடன் வர்த்தகம் நடைபெற்றது. இந்நாடுகளில் சிந்து வர்த்தக மையங்கள்

செயல்பட்டன. பண்டமாற்றே பிரதான வர்த்தக முறையாக இருந்தது. முத்திரைகளும் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக சிந்து சமவெளிக்கும் சுமேரியாவுக்குமிடையே நெருங்கிய வர்த்தகத் தொடர்பு இருந்தது. கி.மு. 2400க்கும் கி.மு. 2150க்குமிடையே வெளிநாட்டு வர்த்தகம் உச்சகட்டத்தில் இருந்தது. லோதால் பிரதான வெளிநாட்டு வர்த்தக மையமாகச் செயல்பட்டது. லோதாலில் பாரசீக முத்திரைகளும், காலிபங்களில் மெசபொடாமிய முத்திரைகளும் கிடைத்துள்ளன. இதே போன்று சிலாம், மெசபொடாமியாவில் சிந்து முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**சமுதாய அமைப்பு**

விவசாயம், வியாபாரம், வர்த்தகம் அகியவற்றைப் பரதான தொழில்களாகக் கொண்டிருந்த சிந்து நாகரிக மக்கள் வாழ்க்கையைக் கலையாகக் கருதி வாழ்ந்தனர். சிந்து சமதாயம் தொழில்மயமான சமுதாயம். எனவே அம்மக்கள் இவ்வுலக வாழ்க்கையை முழுவதுமாக வாழ்ந்தனர். வாழ்வாங்கு வாழ்ந்தனர். புறத் தூய்மையும், அகத்தூய்மையும் சிந்து மக்கள் வாழ்வியலின் இரு கண்ணளைப் போன்றிருந்தன. சிந்து மக்கள் தொழிலால் வகுப்புகளாக வாழ்ந்தனரேயன்றி, பிறப்பால் பிரியவில்லை, பிரிக்கப்படவுமில்லை. பிறப்பால் அனைவரும் சமமாக வாழ்ந்தனர்.

**நகரவாசிகள்**

சிந்து நாகரிக மக்கள் நகரவாசிகள். அவர்கள் நகர வாழ்க்கையின் அனைத்து வசதிகளையும் கடைபிடித்தனர். செல்வந்தர் மாடி வீடுகளிலும், நடத்தர மக்கள் தனி வீடுகளிலும், பிறர் குடியிருப்புகளிலும் வாழ்ந்தனர். அவர்களுக்குக் கோதுமை, பார்லி, அரிசி, பால், காய்கறிகள், பழ வகைகள், மீன், முட்டை, இறைச்சி ஆகியவை பிரதான உணவுப் பொருட்களாக இருந்தன.

**ஆடை, ஆபரணம்**

சிந்து மக்கள் கோடையில் பருத்தி ஆடைகளையும், குளிர்காலத்தில் கம்பளி உடைகளையும் அணிந்திருந்தனர். ஆண், பெண் இரு சாராரும் ஆபரணங்கள் அணிந்து கொள்வதில் ஆவலுடையவர்களாக இருந்தனர். குறிப்பாகப் பெண்கள் கழுத்தணிகள், முக்குத்தி, அங்கி, மோதிரம், வளையல்கள் போன்றவற்றை அணிந்து மகிழ்ந்தனர். அவர்கள் வளையல்கள் மீது மையல் கொண்டிருந்தனர். அதுமட்டுமல்ல, வசதியான பெண்கள் ஒட்டியானங்கள், புல்லாக்குகள், வேலைபாடமைந்த காதணிகள், காலணிகள் ஆகியவற்றை விரும்பி அணிந்தனர். பெரும்பாலும் இந்த கவர்ச்சிமிக்க அணிகலன்கள் தங்கம், வெள்ளி, தாமிரம், தந்தம்

ஆகியவற்றால் செய்யப்பட்டவை. ஆடம்பர அணிகலன்களில் வைடூரியம், ரத்தினம், மாணிக்கம், பவளம், மத்து போன்றவை பதிக்கப்பட்டிருந்தன.

**வீட்டுப்பொருட்கள்**

சிந்து மக்கள் பல வகையான வீட்டுப் பொருட்களைப் பயன்படுத்தினர். தாமிர, வெண்கல, வெள்ளி, பீங்கான், சுட்டமண் பாண்டங்கள் வழக்கத்தில் இருந்தன. இவைகள் வண்ணச் சாயம் பூசப்பட்டிரந்தன. எலும்பு, தந்தங்களால் செய்யப்பட்ட ஊசிகளும், சீப்புகளும் பயன்படுத்தப்பட்டன. சுட்ட களிமண், பீங்கான், சிப்பிகளாலான கதிர்கள், நூல் சுற்றி வைப்பதற்கான கட்டைகள், வெண்கலக் கோடாரிகள், அரிவாள், கனவடிவ பட்டைக் கற்கள், பகடைக் காய்கள் வீட்டுப் பொருட்களாக இருந்தன.

**இயற்கை வழிபாடு**

இயற்கையின் மைந்தர்களான சிந்து மக்கள் இயற்கையை, இயற்கை ஆற்றல்களை, இயற்கைப் படைப்புகளை வழிபட்டனர். இவர்களது வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்த விலங்குகளுக்குச் சிறப்பிடமளித்தனர். இயற்கையின் படைப்பாற்றலின் பிரதிநிதியான பெண்ணைத் தெய்வமாக வழிபட்டனர். தாய்க் கடவுளாகக் கருதினர். பெண் தெய்வ வழிபாடு சிந்து மக்களின் சிறப்பாகக் கருதப்பட்டதில் வியப்பில்லை. பிறப்புக்குக் காரணமான ஆணையும் தெய்வமாக வழிபட்டனர். இதேபோன்று மரங்களும் வழிபாட்டுப் பொருளாயின. எனவே இயற்கை வழிபாடே சிந்து மக்களின் வழிபாடாக இருந்தது. இயற்கையின் படைப்புகளே வழிபாட்டுப் பொருட்களாக இருந்தன. அவற்றுக்கு சைவ, வைணவ, சமண, பௌத்த முலாம் பூசுவது பிற்கால மனிதர்களின் சார்புக் கற்பனையாகும். கற்பிக்கப்படும் சமயங்களை வரலாற்றாளர்கள் ஏற்றுக் கொள்ளவதில்லை.

தொல்பொருள் ஆய்வாளர்கள் கிடைத்திருக்கக்கூடிய சான்றுகளைக் கொண்டு சிந்து நாகரிகத்தை 1.அரப்பாவுக்கு முற்பட்ட, 2. ஆரம்ப அரப்பா, 3. முதிர்ந்த அரப்பா, 4. பிற்கால அரப்பா நாகரிகம் என்று பிரித்துள்ளனர். இப்பாகுபாட்டின்படி அரப்பாவுக்கு முற்பட்ட நாகரிகம் கி.மு. 5000த்தில் தோன்றியிருக்க வேண்டும் என்று கணித்துள்ளனர். இந்த கால கட்டத்தில் இந்தியா முழுவதும் பரவலாகக் காணப்பட்டவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். தற்போதைய ஆதாரங்களில் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டுள்ள தற்காலிகக் கணிப்பாகும். இனி கிடைக்கக் கூடிய சான்றுகள் இக்கருத்தை உறுதிப்படுத்தலாம். மாற்றி அமைக்கலாம் அல்லது பொய்ப்பிக்கலாம். இன்றைய நிலையில் சிந்து மக்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுகிறது.

**சிந்து சமவெளி மற்றும் நாகரீகங்கள்**

அத்திரப்பாக்கம், ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, அகழாய்வுக் கண்டுபிடிப்புகள் தமிழ்நாட்டுக்கும் சிந்தவெளிக்கும் கற்காலத்திலிருந்தே தொடர்பிருந்தது என்பதை உறுதி செய்கின்றன. ஆதிச்சநல்லூரில் கிடைத்த எலும்புக் கூடுகளும் சிந்துவெளியில் காணப்பட்ட எலும்புக்கூடுகளுக்கும் ஒரே மக்கள் இனத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. புதைக்கப்பட்ட தாழிகளின் அமைப்பு பொதுவாக தொழில்நுட்பமுறையில் இருக்கின்றன. பண்டைய தமிழ் மக்கள் பயன்படுத்திய செங்கற்களின் தன்மையும், நீளமும், அகலமும் சிந்து மக்கள் உபயோகித்த செங்கற்களும் ஒத்தவையாக உள்ளன. யாவற்றுக்கும் மேலாக மண்பாண்டங்களில் காணப்படும் பொறிப்பகளும், குறியீடுகளும் இரு நாகரிகங்களுக்கும் பொதுவாகவே அமைந்துள்ளன. சிந்துக் குறியீட்டு எழுத்துக்கள் முழுமையாகப் படிக்கப்படும்போது தமிழ்நாட்டு-சிந்துவெளித் தொடர்பும், இவை இரண்டும் ஓரின மக்களுக்குப் பொதுவானவை என்பதும் உறுதி செய்யப்படுவதற்கான வாய்ப்பகள் அதிகம் உள்ளன.

சிந்து நாகரிகத்தின் பின்வரும் சிறப்புக்கூறுகளைக் கொண்டு இந்நாகரிகம் ஆரிய நாகரிகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதென்ற முடிவுக்கு வருகின்றனர்.

நன்கு வளர்ந்த நகர நாகரிகம்

1. எழுத்து பொறிக்கப்பட்ட முத்திரைகள்
2. மீனுக்கு கொடுத்த முக்கியத்துவம்
3. விலங்குகள், பறவைகளுடான தொடர்பு
4. கலை வண்ணமிக்க களிமண் முத்திரைகள், வெண்கலச்சிலை
5. உருவ வழிபாடு
6. வர்தகத்துக்கும், வியாபாரத்துக்கும் கொடுத்த முன்னுரிமை
7. இவ்வுலக வாழ்வியல்
8. சிந்து சமவெளி மொழி வடிவத்துக்கும் பழந்தமிழர் வடிவத்துக்குமிடையேயான ஒற்றுமை
9. வெளிநாடுகளுடன் கொண்டிருந்த வர்த்தக தொடர்பு.

எனவே, தற்போதைய ஆய்வு நிலையில் சிந்து நாகரிகமும், திராவிட நாகரிகமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

## வேத காலம்

சிந்து நாகரிகத்திலிருந்து வேத காலத்துக்குச் செல்லும்போது ஒரு வரலாற்றுக் காலப் பகுதியிலிருந்து வேறொரு காலப் பகுதிக்குச் செல்கிறோம். ஒரு சகாப்தத்திலிருந்து மற்றொரு சகாப்தத்துக்கு மாறுகிறோம். இரு வரலாற்றுக் காலங்களும் இருவேறு துருவங்களாகக் காட்சியளிக்கின்றன. சிந்து நாகரிகம் நகர மக்களைப் பற்றியது. வேதகாலம் நாட்டுப்பற வாழ்க்கை பற்றியது. ஒன்று நிலைத்து நீடித்து நாகரிகத்தின் உச்சகட்டத்தை எட்டிய மக்களைப் பற்றியது. மற்றொன்று நிலையற்று ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் சென்று கொண்டிருந்த மேய்ப்போர் பற்றியது.

## நாகரிக நிலையிலிருந்து மேய்ச்சல் நிலைக்குச் செல்லுதல்

நாகரிகம் ‘நகரம்’ என்ற சொல்லிருந்து பிறந்தது. நாகரிகம் என்ற சொல் மரியாதையைக் குறிக்கும். நாகரிகமடைந்த சமுதாயம் என்பது பெரிதும் மேம்பட்ட பண்பாடும் வாழ்க்கை முறையையும் கொண்ட மக்கள் தொகுப்பாகும். இச்சமுதாயம் வாழ்வியலிலும், பண்பாட்டிலும், பழக்க வழக்கங்களிலும், மனிதத் தொடர்பினும் மேம்பட்ட நிலையை அடைந்திருக்கும். நகரங்களில் தான் செல்வம் சேர்கிறது. தொழில்கள் பெருகுகின்றன. தொழில் பெருக்கத்தால் வசதிகளும், வாய்ப்புகளும், ஓய்வும் அதிகரிக்கின்றன. வர்த்தகர்கள் பொருட்களோடு கருத்துக்களையும் பரிமாறிக் கொள்கின்றனர். புதிய எண்ணங்களும் கண்டுபிடிப்புகளும் சாத்தியமாகின்றன. சுருங்கக்கூறின் நகரமே கருத்துக் கருவறையாகும். இத்தகைய நகர வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் சிந்து சமவெளி மக்கள். சிந்து நாகரிகத்திலிருந்து வேத காலத்துக்கள் நுழையும்போது நாகரிகப் பரிணாம வளர்ச்சியின் கீழ்நிலையில் உள்ள மேய்ப்போரைச் சந்திக்கிறோம். அவர்கள் இந்தோ-ஆரியர் என்று அழைக்கப்படுகின்றனர். வேதகாலத்தில் இந்திய நாகரிகம் நாட்டுப்புற நாகரிகமாகக் காட்சி அளிக்கிறது.

## ஆரியர்களின் தாயகம்

இந்தோ- ஆரியரின் தாயகம் பற்றி ஆராய்ச்சியாளர்கள் அதிக அக்கறை காட்டியுள்ளனர். வழக்கம் போல் இவர்கள் வெவ்வேறு முடிவுகளுக்கு வருகின்றனர். ஆரியரின் தாயகம் ஐரோப்பாவா, வட துருவமா, ஆசியாவா, ஹங்கேரியா, ஜெர்மனியா, திபத்தா, அல்லது பஞ்சாபா இந்தோ- ஆரியரின் தாயகம் பற்றிய சர்ச்சை தொடர்ந்து கொண்டிருக்கிறது!. இது பற்றிக் கூறப்படும் கருத்துக்கள் கருதுகோளாகவோ அல்லது விளக்கமாகவோதான் இருக்கின்றன. முடிந்த முடிவாக எதுவுமில்லை. ஐரோப்பிய ஊகத்துக்கு அடிப்படையாக அமைந்திருப்பது

மொழி ஒற்றுமையாகும். வேத மொழியான சமஸ்கிருதத்துக்கும் ஐரோப்பிய மொழிகளான கிரேக்கம், லத்தின், ஜெர்மன், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே உள்ள ஒற்றமை இந்தோ-ஆரியர் ஐரோப்பிளரின் வழித்தோன்றல்கள் என்ற ஊகத்துக்கு வலு சேர்ப்பதாக உள்ளது.

ஆசியா ஊகம் மொழியை அடிப்படையாகக் கொண்டதுதான். வேத மொழிக்கும் ஈரானியரின் (பர்சியா) புனித நூலான அவெஸ்தா மொழிக்கும் வேறுபாடு அதிகமில்லை. அவெஸ்தா ஈரானியரது வேதமாகக் கருதப்படுகிறது. வேதத்தில் காணப்படும் ஒரு பக்கத்தை அவெஸ்தா மொழிக்கு மாற்றம் செய்தாலோ அதிக வேறுபாடு இருக்காது. எனவே மத்திய ஆசியா தான் இந்தோ-ஆரியரின் தாயகமாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல. ஈரானியர் ஐரோப்பிய ஆசிரியரின் ஒரு பிரிவினர் என்றும், அவர்கள் ஆசியா மைனரில் குடியேறி அதன்பின் இந்தியாவுக்கு வந்து குடியேறியதாகவும் கூறப்படுகிறது.

இந்தோ-ஆரியரின் தாயகம் பற்றிய மொழி வழி ஆராய்ச்சியின் விளைவாக ஒரு முடிவில் கருத்தொற்றுமை இருப்பதாகத் தெரிகிறது. அதாவது இந்தோ-ஐரோப்பியர் காஸ்பியன் கடல் மற்றும் தெற்கு ரஷ்ய பரந்துநின்ற புல்வெளிப் பகுதியிலிரந்து புறப்பட்டு, பல இனக் கழக்களாகப் பிரிந்து, மேய்ச்சல் நிலம் தேடி, கிரேக்கம், ஆசியா மைனர், ஈரான் வழியாக இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும். இந்தோ-ஐரோப்பியராகப் புறப்பட்டவர்கள் இந்தியா வரும் போது இந்தோ-ஆரியர்களாகி, இந்தியா வந்தபின் ஆரியர் என்று அறியப்பட்டனர். ஐரோப்பியரும், மத்திய ஆசிய (பர்சிய) ஆரியரம் ஒரே இனத்தைச் சேர்ந்த ஒரே மொழிக் குடும்பத்தினராவர். சுருங்கக்கூறின் ஆரியர் வெளியிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்கள்.

ஆரியர் படையெடுக்கும் நோக்கத்தோடு வராவிடினும் இந்தியாவுக்கு வந்தபின் அவர்களை எதிர்த்தவர்களைத் தங்கள் உடலில் கத்திய முள்ளாகக் கருதிப் போரிட்டு, வென்று அவர்களது நிலங்களை அபகரித்துக் கொண்டனர். நிலத்தை அபகரித்துக்கொண்டபின் அதில் குடியிறுப்புகளை அமைத்துக் கொண்டனர். நில உடைமையாளர்கள் நில அடிமைகளாயினர். முன்னாள் நிலச் சொந்தகாரர்களிடமிருந்து விவசாயத்தைக் கற்றுக் கொண்டு, நிலையாகத் தங்கி வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர். மாடுமேய்ப்பவர்களாக வந்த ஆரியர் விவசாயிகளாக மாறினர். பரம்பரையாக விவசாயம் செய்த மண்ணின் மைந்தர்கள் விவசாயக் கூலிகளாயினர். இக்கால கட்டத்தில்தான் ஆரியர் ரிக் வேத துதிப்பாடல்களைத் திரட்டி மனப்பாடம் செய்திருக்க வேண்டும். எனவே, ஆரியர் இந்தியாவின்மீது படையெடுத்தார்கள் என்று கூறுவதைவிட

மேய்ச்சல் நிலம் தேடி வந்து குடியேறி ஆக்கிரமித்தனர் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். சுருங்ககூறின் ஆரியர் இருந்த இடத்தைவிட்டு வெளியேறி புலம் பெயர்ந்து வந்து இந்தியாவில் குடியேறினர்.

**வேத இலக்கியங்கள்**

வேத இலக்கியம் என்பது நான்கு பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

1. நான்கு வேதங்கள்
2. பிராமணங்கள்
3. ஆரண்யங்கள்
4. உபநிடதங்கள்

இவற்றுள் முதல் இரண்டும் கர்ம காண்டம் என்றும் அடுத்த இரண்டும் ஞான காண்டம் என்றும் கூறப்படுகின்றன. இது ஒரே காலத்தில் ஒரே சமயத்தில் இயற்றப்பட்டவையல்ல. இவற்றுக்கென ஆசிரியர்களும் இல்லை. இவையாவும் ஆரியர் இந்தியாவுக்கு வந்தபின் புனையப்பட்டவை. ஆரியரின் செல்வாக்கு அதிகரித்தற்கேற்ப வேத இலக்கியமும் விரிவடைந்தது. புதிய பாடல்களும், பாடல்களுக்கு விளக்கங்களும் உரைகளும் எழுதப்பட்டன. இவையாவும் ஒவ்வொரு வேதத்திலும் சம்கிதா, பிரமணா, ஆரண்யகா, உபநிடதம் என்று சேர்க்கப்பட்டன. உதாரணமாக ரிக் வேதம் என்று எடுத்துக்கொண்டால் அதன் இணைப்புகளாக இவை நான்கும் இருக்கும். இவை அருளப்பட்ட இலக்கியம் என்று கருதப்பட்டது. நான்கு வேதங்களில்- ரிக், சாம, யஜுர், அதர்வ – கடைசி வேதமாக அதர்வ வேதம் மட்டுமே ரிக்வேதத்துக்கு முற்பட்ட காலத்தைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றது. அதை அகச்சான்றாகக் கருதலாம். நான்கு வேதங்களும் வேதகாலத்தின் வளர்ச்சி நிலைகளை அறிந்துகொள்ள உதவுகின்றன. ரிக் வேதகாலத்தின் வளர்ச்சி நிலைகளை அறிந்துகொள்ள உதவுகின்றன. ரிக் வேதகாலத்தை முற்கால வேதகாலம் என்றும், பிராமணங்கள் -உபநித காலத்தைப் பிற்கால வேதகாலம் என்றும் பிரிப்பது வரலாற்று மரபாக உள்ளது. வேத காலத்தில் வேதங்கள் மொழி வடிவம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**வேதங்கள்**

**ரிக்வேதம்**

வேதம் என்பது சமஸ்கிருதச் சொல். இச்சொல் வித் என்ற வேர்ச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். வித் என்றால் அறிதல் அல்லது அறிவு என்று பொருள். வேதங்கள் அறிவைப் பெறுவதற்கான வழிகளாகும். வேதங்களில் மூத்ததும், முதன்மையானதும் ரிக் வேதமாகும். ரிக் வேதம்

*10,600 அடிகளைக் கொண்ட 1,028 வேத சமஸ்கிருத துதிப்பாடல்களைக் கொண்ட 10 மண்டலங்களை உள்ளடக்கியது. இப்பாடல்கள் அனைத்தும் ரிக்வேதக் கடவுள்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டவை. ரிக் வேதப் பாடல்கள் பெயர் தெரியாத புரோகிதர்களால் புனையப்பட்டு பல ஆண்டுகளாக மனப்பாடம் செய்து சேர்த்து வைக்கப்பட்டவையாகும். ரிக்வேதப் பாடல்களில் உலக ஆசைகளான நீண்டநாள் வாழ்வது, செல்வம் சேர்ப்பது, பிள்ளைகளை பெற்றெடுப்பது போன்றவற்றைக் கொடுக்குமாறு கடவுளிடம் விண்ணப்பம் செய்வதாகவே உள்ளன. இப்பாடல்களில் தங்களை விரோதிகளிடமிருந்து கடவுள்கள் காப்பாற்ற வேண்டும் என்ற குரலும் உரக்கக் கேட்கிறது, இதற்குத் தங்களுக்குத் துணையாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. வரலாற்று ரீதியாக வேதங்களின் கால வரிசையைக் கணிக்க ரிக் வேதம் பயன்படுகிறது. ரிக் வேதத்தைப் பிற வேதங்கள் தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டன.*

### சாம வேதம்

*சாம வேதத்தில் மொத்தம் 1,549 செய்யுள் பத்திகள் உள்ளன. இவற்றுள் 78 பத்திகள் தவிர பிற பாடல்கள் அனைத்தும் ரிக் வேதத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும். சாம வேதப் பாடல்களைப் பிராமணப் புரோகிதர்கள் வேள்விகளின்போது பாடினர். இவற்றை வேள்விப் பாடல்கள் எனக் கூறலாம். இப்பாடல்களில் இலக்கிய நயமில்லாவிடினும், இசைப் பிரியர்களுக்கு இவை பயன்படக்கூடியவை.*

### யஜுர் வேதம்

*யஜுர் வேதத்திலும் பல ரிக்வேதப் பாடல்கள் காணப்படினும், பல புதிய பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வேதத்தில் 40 அத்தியாயங்கள் உள்ளன. இவற்றை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். 1. வெள்ளை யஜுர் வேதம், 2. கருப்பு யஜுர் வேதம். வெள்ளை யஜுர் வேதம் துதிப் பாடல்களைக் கொண்டது. கருப்பு யஜுர் வேதம் அப்பாடல்களுக்கான விளக்க உரையாகும். இந்த வேதத்தில் தான் பாடல்களும், உரைநடையும் காணப்படுகின்றன. சடங்குகளும் வேள்விகளும் மேலும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த வேதம் வேள்விப் பிரார்த்தனை புத்தகம் என்று அழைக்கப்படுகிறது.*

### அதர்வ வேதம்

*நான்கு வேதங்களில் கடைசி வேதம் அதர்வ வேதமாகும். இந்த வேதம் 20 பகுதிகளைக் கொண்ட 731 துதிப் பாடல்கள் அடங்கியது. இந்த வேதத்திலும் பல ரிக்வேதப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அதர்வ வேதத்தில் மூன்று முக்கிய விஷயங்கள் இடம்பெற்றுள்ளன.*

1. விரோதிகளை எப்படி வசியப்படுத்துவது
2. உலகில் வெற்றி பெறுவது
3. நண்பர்களைத் தேடிப் பெறுவது

வேதத்தில் மாய மந்திர வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதில் பல வழிபாட்டு மரபுகள், அர்த்தமற்ற சடங்குகள், மூடநம்பிக்கைகள் இடம் பெற்றுள்ளன. இதன் காரணமாகவே இந்த வேதம் நீண்ட காலமாக வேத இலக்கியத்தில் இடம் பெறாமல் இருந்தது.

### பிராமணங்கள்

பிராமணங்கள் என்பவை வேதங்களை எளிமையாகப் புரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட விளக்க உரைகளாகும். இவை பெரும்பாலும் உரைநடையில் உள்ளன. விளக்க உரையோடு சிலரது வாழ்க்கைக் குறிப்புகளும் காணப்படுகின்றன. புரோகிதர்களுக்காக எழுதப்பட்ட இவற்றில் வேள்விகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பது விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வேதத்துக்கும் தனிப்பட்ட பிராமணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக ரிக் வேதத்தில் இரண்டு பிராமணங்கள் இணைக்கப்பட்டுள்ளன.1. ஐத்ரேய பிராமாணம்: 40 அத்தியாயங்களைக் கொண்ட இப்பிரமாணத்தில் சோம வேள்வி எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதும், பலதரப்பட்ட சமயச் சடங்குகள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதும் விவரிக்கப்பட்ள்ளது. 2. சாங்கியான பிராமணம் : 20 அத்தியாயங்களைக் கொண்ட இதில் சோம வேள்வி மட்டுமின்று வேறு பல வேள்விகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

### ஆரண்யங்கள்

ஆரணண்யங்கள் என்றால் கானகக் கவிதைகள் என்று கூறலாம். இவை காட்டில் வசிக்கும் முனிவர்களுக்காக எழுதப்பட்டவை. இவற்றைப் பிராமணங்களின் தத்துவ விளக்கம் என்றும் கூறலாம். இவை வெறும் சடங்குகள், வேள்விகள் பற்றிக் கூறாமல் அவற்றின் அர்த்தத்தைப் பற்றி ஆராய்கிறது. அதாவது, மெய்யுணர்வு அல்லது இறையுணர்வு பற்றிப் பேசுகிறது. பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த கடவுள் பிரபஞ்சத்தின் தோற்றம், பிரபஞ்சத்தின் பகுதிகள், ஆன்மா பற்றியெல்லாம் ஆராயப்படுகிறது. இதை அனுமான அல்லது ஊகத் தத்துவம் என்று கூறலாம். சுருங்ககூறின், ஆரண்யங்கள் ஆன்மீகத்தைப் பற்றியது.

### உபநிடதங்கள்

உபநிடதங்கள் அரிய சிந்தனையின் உச்ச கட்டமாகும். இதற்கு உப (அருகே) நிஷத் (உட்கார்) என்று பொருள். அதாவது கருவுக்கு

அருகாமையில் அமர்ந்து வேத உண்மையை ரகசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது வேத அறிவு பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால்தான் குரு வேத அறிவை அவர் தேர்ந்தெடுத்த சில சிறந்த மாணவர்களை மட்டும் அருகே அமர்த்திக் கொண்டு காதோடு காதாக கற்பித்தார். உபநிடதங்கள் 108 என்றும், இவை கி.மு. 800க்கும் கி.மு.500க்கும் இடைப்பட்ட காலத்தில் உருவாக்கியிருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. உபநிடதங்களில் முக்கியமானவையாகக் கருதப்படுபவை இஷா, கேன, பிரசான, ஐத்ரேய, தைத்ரேய, சாந்தோக்கிய, கதோ உபநிடதங்களாகும். உபநிடதங்கள் கூறும் உண்மை சாந்தோக்கிய உபநிடதத்தின் மகா வாக்கியத்தில் உபநிடதங்களின் சாரம் வடித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தத்வம் அசி என்பதே அந்த உண்மையாகும். தத்வம் அசி என்றால் அதுவே நீயாவாய் என்று பொருள். அதாவது பிரம்மமும், பரபிரம்மமும், ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றுதான், வேறில்லை என்பதாகும். பிரம்மா, ஆத்மா ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய சிந்தனைச் செறிவமிக்க தத்தவ விசாரணையே உபநிடதங்களின் கருப்பொருளாகும். வேதங்களுக்கு அந்தமாக அல்லது இறுதியாக இருப்பதால் உபநிடதங்கள் வேதாந்தம் என்று அழைக்கப்படுகிறது. உபநிடத காலத்தில் யஜ்னவால்கியர், கார்கி, மைத்ரேயி போன்ற தத்துவ மாமேதைகள் இருந்துள்ளனர்.

**சுருதி, சுமிருதி**

நான்கு வேதங்கள், இவற்றின் சம்கிதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் ஆகியவை கொண்ட தொகுப்பு சுருதி எனப்படும். சுருதி என்றால் ஆண்டவனால் அனுப்பப்பட்டவை என்று பொருள். வேத இலக்கியத்தின் உள்ளீடு இதுதான். இவற்றின் பதிவுரைகளும், விளக்க உரைகளும் வேதமாகக் கருதப்படுவதில்லை. எனினும் இவை வேதாங்கங்கள் அல்லது வேதங்களின் அங்கங்கள் அல்லது உறுப்புகள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுக்கு சுமிருதி என்ற பெயரும் உண்டு. இவை யாவும் பல நூற்றாண்டுக்காலம் எழுதப்படாமல், மனப்பாடம் செய்யப்பட்டு, வாய்ப்பாடாக, வழிவழியாகச் சீடர்கள் வழி வந்தவை

வேதாங்கங்கள் ஆறு அவை கீழ் உள்ளன

1)சிகிட்சை அதாவது உச்சரிப்புக் கலை 2) கல்பம் அல்லது நடைமுறைச் சடங்ககள் 3) வியாகரணம் அல்லது இலக்கணம் 4) நிருத்தம் அல்லது சொல்லாராய்ச்சி 5) சந்தஸ் யாப்புப் பாக்கள் 6)ஜோதிடம் அல்லது வான ஆராய்ச்சி. இவற்றின் தெளிவான பொருளும், பொருள் விளக்கமும் பின்னர் எழுதப்பட்டன. இப்பிற்கால உரையாசிரியர்களில் குறிப்பிடத்தக்கோர்.

**வேதகால வாழ்வியல்**

***ரிக்வேத காலம்***

வேதகாலம் என்பது நான்கு வேதங்களும், பிராமணங்களும், ஆரண்யங்களும், உபநிடதங்களும் உருவாக்கப்பட்ட காலமாகும். வேத காலத்தை முற்கால வேதகாலம் (கி.மு. 1500-கி.மு.1000) என்றும், பிற்கால வேதகாலம் (கி.மு.1000-கி.மு.600) என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முந்தைய வேதகாலத்தில் ரிக்வேதப் பாடல்கள் தொகுப்பட்டன.

**ஆரியர் குடியேற்றம்**

சிந்துசமவெளி மக்களை போரில் வென்று வடமேற்கு இந்தியாவில் நிலையாகக் குடியேறிய ஆரியர் படிப்படியாகத் தங்களது ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர். தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அதிகமான நிலங்களை அபகரித்துக் கொண்டனர். மதிநுட்பமுடைய ஆரியர் அவர்கள் புதிதாகக் கண்ட நதிகள் மற்றும் நிலப்பரப்பு பற்றிய தகவல்களை ரிக் வேதத்தில் குறிப்பிட்டுள்ளனர். இத்தகவல்களைக் கொண்டு ரிக் வேதகால ஆரியரின் புவியியல் அறிவு பற்றியும், அவர்களது குடியிருப்புகள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. இக்குறிப்புகளைக் கொண்டு பார்க்கையில் ரிக்வேதகால ஆரியர் முதலில் ஏழு நதிகள் பாயும் சப்தசிந்தவாவில் குடியேறினர். குறிப்பாக அவர்கள் யமுனைக்கும் சட்லஜிக்குமிடையே குடியமர்ந்தனர். இமயமலை பற்றி அறிந்துள்ளனர். ஆனால் யமுனை நதிக்குத் தெற்கேயுள்ள விந்திய மலைகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை. சிந்து நதி பற்றி நன்கு அறிந்திருந்தனர். சிந்து நதியின் மேற்குக் கிளை நதிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எனவே ரிக்வேத கால ஆரியர் பெரிதும் பஞ்சாப், அரியானா, மேற்கு உத்திரப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் தங்கள் குடியிருப்புகள் அமைத்துக் கொண்டிருக்கலாம் என்று கொள்ளலாம்.

**வேதகால அரசியல்**

மேய்ச்சல் நிலம் தேடி வந்த ரிக்வேதகால ஆரியர் நாட்டுப்புற இடயர் வாழ்க்கை வாழ்ந்தனர். துவக்கத்தில் தந்தையைத் தலைவராகக் கொண்ட குடும்பம் இருந்தது. பல குடும்பங்கள் சேர்ந்த தொகுதிகள் கிராமம், விசு, ஜன எனப் பெயர் பெற்றன. கிராமத் தலைவன் கிராமணி என்றும், விசுவின் தலைவன் விசுபதி என்றும், ஜனத்தின் தலைவன் கோபன் என்றும் அழைக்கப்பட்டனர். இதே போன்று கண என்ற நிலப் பகுதியின் தலைவன் கணபதி என்றழைக்கப்பட்டான்.

**ராஜன் - தலைவன்**

ஏழு நதிகளுக்கு இடைப்பட்ட பகுதி பஞ்சனம் என்று அழைக்கப்பட்டது. இதன் தலைவன் ராஜன் என்று பெயர் பெற்றார். துவக்கத்தில் இவர் படைத் தலைவராக இருந்தார். மாடுகளைக் காப்பதும், கவர்வதும், இவற்றுக்காகப் போரிடுவதும் இவரது கடமைகளாக இருந்தது. எனவே அவர் பாதுகாப்பாளர் என்று அறியப்பட்டார். பின்னர் அவர் ஆரியருக்குலக் காப்பாளாரனார். ரிக் வேதகால இறுதியில் ராஜன் ராஷ்டிரபதி அதாவது ராஷ்டிரித்தின் தலைவர் ஆனார். போர்களில் வெற்றி பெற்ற ராஜனுக்கு வெற்றியில் பங்கும் வெகுமதிகளும் ஏராளமாகக் கிடைத்ததால் வைராஜ்யமாகி வைராஜ்யம் சாம்ராஜ்யமாக விரிவடைந்தது.

**சபா, சமிதி அமைப்புகள்**

ரிக்வேதகால ராஜனின் அதிகாரமும், ஆதிக்கமும் அதிகரித்த போதிலும் அவர் பல ஆரியர் குலங்களுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டியதாயிருந்தது. எனவே அவரது அதிகாரம் கட்டுக்குள் இருந்தது. ராஜன் ஆரியக் குலங்களின் மக்களது பிரதிநிதியாகவே செயல்பட்டார். அதனால் இவரது பதவி வாரிசுரிமை பற்றியதாக இல்லை. மக்களின் சம்மதமின்றி இவரால் பதவியில் நீடிக்க முடியாது. சபா, சமிதி என்ற இரு ஆரிய குல அமைப்புகள் ராஜனின் அதிகாரத்துக்கு கடிவாளங்களாக இருந்தன. சபா என்பது முதியோர் அவையாகும். சுமிதி என்பது பல குலங்களின் பொது அவையாகும். இவ்விரு அவைகளும் அரசியல் மற்றும் நீதி நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சபா, சமிதி பற்றிய தெளிவில்லை. சபா என்பது முதியோர் அடங்கிய அவை மட்டும்தானா அல்லது கிராமவாசிகய் அனைவரையும் கொண்ட கிராம சபையா என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. மேலும் சபா என்பது அவை கூடுமிடமென்றும், எனினும் சபா என்பது செல்வந்தரும், பதவியில் உயர்ந்தோரும் அடங்கிய அவை என்று ரிக் வேதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. முதியோரே இவ்வவையில் இடம்பெற்றிருந்ததாகவும் ரிக் வேதத்தில் குறிப்புள்ளது. சபைகளில் பெண்கள் இடம்பெறவில்லை . அரசனின் ஆட்சி எல்லையும் அதிகாரமும் அதிகரித்ததால் கிராம அவைகளின் முக்கியத்துவம் குறைந்தது.

**கிராம நிர்வாகம்**

ரிக்வேதகாலத் துவக்கத்தில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு மேய்ச்சல் நிலம் தேடிச் சென்று கொண்டிருந்ததால் ஆரியரால் ஓரிடத்தில் நிலையாகத் தங்க முடியவில்லை. கிராமங்களில் குடியேறி, விவசாயத்தை மேற்கொண்டு, நிலையாகத் தங்கியபின் கிராம சபைகள் உருவாக்கப்பட்டன.

கிராம நிர்வாகத்துக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. கரத் தலைவன் ஆள்நிலப் பகுதிக்கு அரசனானபின் ஆட்சியும், ஆட்சி நிர்வாகமும் விரிவடைந்தன.

**அதிகாரிகள்**

ரிக் வேதத்தில் சில அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களில் ஒருவர் சேனானி. இவர் படைத் தலைவராக இருந்திருக்க வேண்டும். மற்றொருவர் ரத ஓட்டி. ரிக்வேத காலத்தில் தேர்களும், குதிரைகளும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டமையால் தேரோட்டிக்கு முக்கியமளிக்கப்பட்டது. இக்காலத்தில் விரிவான அதிகார வர்க்கம் இருக்க வேண்டிய அவசியமில்லை. எனினும் சுதா, பாகதுதா, அக்ஷவபா, கசதா, சங்ரகிதா, கோவிக்ரதா, பலகலா ஆகிய பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. அதிகாரிகள் வரி வசூலிக்கவும், கணக்கு வைத்துக் கொள்ளவும் அரசவையையும் அரச குடும்பத்தைப் பராமரிக்கவும், கருவூலம் காக்கவும், கானகங்களைப் பாதுகாக்கவும் பயன்பட்டிருக்க வேண்டும். நூறு கிராமங்களின் தலைவன் பதி என்றும், எல்லைப் பகுதிகளைக் கவனித்துக் கொண்டவன் ஸ்தபதி என்றும் கருதப்பட்டனர். யாவற்றுக்கும் மேலாக விஸ்வாமித்திரர், வசிஷ்டர் போன்ற புரோகிதர்களுக்கு அரச நிர்வாகத்தில் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருந்தது.

**சட்டம் ஒழுங்கு நிலை**

ஆள்நிலைப் பகுதியில் சட்டம் ஒழங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு அரசனுக்கிருந்தது. தொன்று தொட்டு மரபுகள் சட்டங்களாகப் பின்பற்றப்பட்டன. தவறிழைத்தோர் தண்டிக்கப்பட்டனர். மனித இயல்பு உலகம் முழுவதும் ஒன்றாகவே உள்ளது. ரிக் வேத காலத்திலும் திருட்டு, கொள்ளை, கடத்தல், ஏமாற்றல், வழிப்பறி போன்ற குற்றங்கள் நிகழ்ந்தன. இரவில் மாடுகளைத் திருடிச் செல்வது வழக்கமாக இருந்தது. அதேபோன்று வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காமலிந்ததும் அதிகரித்தது. நெருப்பைக் கையிலேந்தல், நீரில் மூழ்கடித்தல் போன்ற கொடுந் தண்டனைகள் குற்றங்களின் தன்மைக்கேற்ப வழங்கப்பட்டன. கடனைத் திருப்பி தராதவர்களுக்கு அபராதமோ அல்லது குறிப்பிட்ட காலத்துக்கு அடிமை ஊழியம் செய்வதோ தண்டனையாகக் கொடுக்கப்பட்டது. ஆண் குழந்தை இல்லாதவர்கள் தத்தெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டதாக தெரிகிறது.

**வேதகால பொருளாதார நிலை**

ரிக்வேதகாலப் பொருளாதாரம் மேய்ச்சல் பொருளாதாரமாகும். ரிக்வேத காலத்தின் பெரும்பகுதில் மேய்ப்புத் தொழிலே பிரதானமாக

இருந்தது. இக்காலகட்டத்தில்தான் வேதகால ஆரியர் மேய்ச்சல் தொழிலிலிருந்து கிராம வாழ்க்கைக்கு மாறிக்கொண்டிரந்தனர். ரிக்வேதகால இறுதியில் அவர்கள் கிராமங்களில் தங்கி விவசாயத்தை மேற்கொண்டனர். மேய்ச்சல் பொருளாதாரம் விவசாயப் பொருளாதாரமாக உருமாற்றமடைந்தது. மேய்ச்சல் பொருளாதாரத்தில் கால்நடை பிரதான பங்கு வகித்தது. கால்நடையைக் கவர்வதற்காகப் போர்கள் நடைபெற்றன. அரசருக்கும், புரோகிதருக்கும் பசுக்கள் பரிசாக அளிக்கப்பட்டன. தேரும், வண்டியும் இழுப்பதற்கு எருதுவும், பாலுக்கு பசுவும் பயன்பட்டன. பசுக்கள் பண்ட மாற்றுப் பொருளாகவும் இருந்தன. போர்களில் கிடைத்த மற்றும் கவர்ந்து வரப்பட்ட கால்நடையும் சொத்ததாகக் கருதப்பட்டது. ரிக்வேதகால ஆரியருக்குக் கால்நடையே நாணயமாகப் பயன்பட்டது. சுருங்ககூறின் கால்நடையே ரிக்வேதகால பொருளாதாரத்தின் அடிப்படையாகவும், பொருளாதார வாழ்க்கையின் ஆதாரமாகவும், தனிமனிதனின் தனிவுடைமையாகவும், சமுதாயத்தின் பொதுவுடைமையாகவும் இருந்தது எனலாம். பண்டமாற்று முறையே நடைமுறையில் இருந்தது.

## கிராமப் பொருளாதாரம்

ரிக்வேத காலத்தின் இடைப்பகுதியில் ஆரியர் மேய்ச்சல் தொழிலிருந்து விலகி கிராமங்களில் தங்கி விவசாயத்தை மேற்கொண்டனர். இத்தொழிலை அவர்களால் வெற்றி கொள்ளப்பட்டோரிடமிருந்து கற்றுக் கொண்டு தங்களது அறிவையும் பயன்படுத்தி விவசாயத்தை வளமான தொழிலாகவும், வாழ்வாதாரமாகவும், பொருளாதார வளர்ச்சியின் படிக்கட்டாகவும் பயன்படுத்திக் கொண்டனர் ரிக்வேதகால ஆரியர். கால்நடைக்குத் தேவையான தீவனங்களைப் பயிரிட்டு கொண்டனர். காடுகளைத் திரத்தி விளை நிலங்களாக மாற்றினர். தங்களுக்குத் தேவையான கோதுமை, பார்லி போன்ற தானியங்களை விளைவித்துக் கொண்டனர். விளைச்சலின் உபரியைக் கொண்டு கிராமப் பொருளாதாரத்திலிருந்து ரிக்வேதகால ஆரியர்.

## தொழில்கள்

ரிக்வேதகால ஆரியருக்குத் துவக்கத்தில் மேய்ச்சல் சார்ந்த தொழில்களே பிரதானமாக இருந்தது. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு விரைந்து செல்வதற்காக எருதுகளால் இழுக்கப்பட்ட நான்கு சக்கர வண்டிகளையும், குதிரைகளால் இழுக்கப்பட்ட இரு சக்கர ரதங்களையும் பயன்படுத்தியமையால் தச்சுச் தொழில் சிறப்பிடம் பெற்றிருந்தது. மக்களுக்குத் தேவையான ஆடையைக் கொடுக்க வேண்டியிருந்ததால் நெசவுத் தொழிலும் முக்கியத்தவமடைந்தது. சமையலுக்கு வேண்டிய பாண்டங்கள் வேண்டியிருந்ததால் மண்பாண்டத்

தொழில் ஊக்குவிக்கப்பட்டது. ஆயுதங்கள் செய்வதற்குத் தேவையான உருக்குத் தொழிலும், கொல்லர் தொழிலும் பண்டங்களை மாற்றிக் கொண்டமையால் தனியே வியாபாரிகள் என்ற வகுப்பினர் இல்லை. இடைத் தரகர்களும் இல்லை ரிக்வேத காலத்தில் உள்நாட்டு வர்த்தகத்துக்குத் தேவை இருந்த அளவுக்கு வெளிநாட்டு வர்த்தகத்திற்கு வாய்ப்பில்லை.

**வேதகால சமுதாய நிலை**

**குடும்பம்**

ரிக்வேதகால சமுதாயம் தனிப்பட்ட சமுதாயமாக இருந்தது. குடும்பமே இச் சமதாயத்தின் ஆணிவேர். கிருகபதி என்று அழைக்கப்பட்ட குடும்பத் தலைவனின் முழுக்கட்டுப்பாட்டின்கீழ் குடும்பம் இருந்தது. வாரிசுரிமை தகப்பன் வழியாக வந்தது. பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளையே விரம்பினர். ஆண் குழந்தைகளுக்காகக் கடவுளை வேண்டிக்கொண்டனர். ஏனெனில் பெண் குழந்தைகள் பிறப்பதை மக்கள் விரும்பவில்லை. ரிக்வேத காலக் குடும்பம் கூட்டுக் குடும்பம். குடும்பத்தினரும் நெருங்கிய உறவினரும் கூடி வாழ்ந்தனர். குடும்பத்தில் ஒழுக்கமும், அறநெறியும், கட்டுப்பாடும் வலியுறுத்தப்பட்டன. ஒருதார மணம் வழக்கத்தில் இருந்தது. பலதார மணம் விதிவிலக்கு. முறையற்ற பாலுறவு அனுமதிக்கப்படவில்லை. பலதார மணம் பழக்கத்தில் இருந்தது. இக்கால கட்டத்தில் விதவை மறுமணம் அனுமதிக்கப்பட்டது. விதவை மாண்ட கணவனின் சகோதரனை மணந்து கொண்டாள். உடன்கட்டையெறும் வழக்கம் இல்லை. குடும்பத்தின் குறிக்கோள் ஆண் வாரிசைப் பெறுவதாகும். குடும்ப நெறியை மீறியோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ரிக் வேதகாலக் குடும்பங்கள் பிற மக்களுக்கிடையில் தனித் தீவுகளாக இயங்கி வந்தன.

**பெண்களின் நிலை**

ரிக்வேத காலத்தில் பெண்களின் நிலை பொறாமைப் படத்தக்கதாயில்லை. ஆணாதிக்கக் குடும்பத்தில் பெண்கள் ஆண்களைச் சார்ந்தே வாழவேண்டியிருந்தது. திருமணமாகுமுன் தந்தையைச் சார்ந்தும், திருமணத்திற்குப் பின் கணவனைச் சார்ந்தும், வயோதிக வயதில் மகன்களின் தயவிலும் வாழ்ந்தனர். பெண்களுக்கு வீடே உலகமாக இருந்தது. பெண் திருமணமானபின் ஆண் குழந்தையைப் பெற்றால் போற்றப்பட்டாள், பெண் குழந்தையைப் பெற்றால் தூற்றப்பட்டாள். விதவை மறுமணம் விதிவிலக்கு. அதேபோன்று பெண்கள் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும், தத்தவ விவாதங்களில் பங்கெற்பதும், லோபமுத்தா, விஸ்வவாரா, கோஸா, அபாலா போன்றோரும் விதிவிலக்குகளே. திருமணங்கள் வேத முறைப்படி நடத்தப்பட்டது. பெண்களுக்கு சொத்தரிமை

இல்லை. அவர்களின் வேள்விகளில் பங்கேற்க முடியாது. பெண்கள் தாஸ்யூ வர்ணத்தவருடன் திருமண உறவு வைத்துக் கொள்வது தடைசெய்யப்பட்டது. பெற்றோரின் அனுமதியின்றி பெண்கள் திருமணம் செய்துகொள்ள முடியாது. ரிக்வேத காலத்தில் குழந்தைத் திருமணம் நடந்ததாகத் தெரியவில்லை. சருங்கக்கூறின், ரிக்வேத காலத்தில் பெண்கள் வீட்டுப் பறவைகளாக, இல்லப் பராமரிப்பாளர்களாகவே இருந்தனர்.

**உணவு**

ரிக்வேதகால ஆரியருக்குப் பாலும் பால் சார்ந்த பொருட்களும் முக்கிய உணவாக இருந்தது. கோதுமையும், பார்லியும் முக்கிய உணவுப் பொருட்கள். காய்கறிகளும், பழங்களும் சிறப்பிடம் பெற்றிருந்தன. துவக்கத்தில் ஆரியருக்கு இறைச்சி உண்ணும் பழக்கம் இருந்தது. உணவுக்காக எருதுகள் கொல்லப்பட்டன. பொது விருந்தகளிலும் குடும்ப விசேஷங்களிலும் மாமிச உணவு சிறப்பிடம் பெற்றிருந்தது. ரிக்வேதகால ஆரியர் மதுபானப் பிரியர்களாக இருந்தனர். இமயமலையிலுள்ள முஜாவத் சிகரத்தில் வளரும் ஒரு வகைச் செடியிலிருந்து சோமசுரா என்ற எழுச்சியூட்டும் மதுபானத்தைத் தயாரித்து அருந்தினர். சமயச் சடங்குகளிலும் இது பயன்படுத்தப்பட்டது. வஜபேயம் போன்ற வேள்விச் சடங்குகளில் போதையூட்டும் சோம பானம் சிப்பிடம் பெற்றிருந்தது.

**ஆடை ஆபரணங்கள்**

ரிக் வேத காலத்தில் அண்களும், பெண்களும் ஆடை அணிகலன்களுக்குப் போதிய முக்கியத்தவமளித்தனர். இரு சாராரும் பருத்தி, கம்பளி, தோல் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட ஆடைகளை அணிந்தனர். இவர்களது ஆடை இரு பகுதிகளைக் கொண்டது. 1)வாசாங் என்ற கீழாடை 2)அதிவாஸ் என்ற மேலாடை. ஆண் பெண் ஆடைகளில் பெரிய வேறுபாடு எதுவுமில்லை. இருபாலரும் ஆபரணங்களை அணிந்திருந்த போதிலும் பெண்கள் அணிந்து கொண்ட ஆபரணங்கள் அதிகம். காதணி கர்னசோபனா என்று அழைப்பட்டது. குறிப்பாகப் பெண்கள் கைப்பட்டைகள் கணுக்காலணிகள், கழுத்தணிகள் அணிந்து கொண்டனர். பெண்கள் சிகையலங்காரம் செய்து கொண்டனர். ஆண்கள் தாடி வைத்துக் கொள்வதை விரும்பினர். ரிக்வேதகால ஆரியர் கேளிக்கைகளில் மிகுந்த அர்வம் கொண்டிருந்தனர். தேரோட்டப் பந்தயம் அவர்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது. வேட்டையாடுதல், சொக்கபட்டான் ஆட்டம், குத்துச் சண்டை ஆகியவை முக்கிய பொழுதுபோக்குகள். ரிக்வேதகால ஆரியர் ஆர்வமிக்க சூதாடிகள். இவர்கள் சூதாட்டத்தில் உடைமைகளைப் பணயம் வைத்து ஆடினர்.

## பொழுது போக்கு

ரிக்வேத காலத்தில் கலைகளுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. நடனமும், இசையும் மேலோங்கி நின்றன. குறிப்பாக மகளிர் இசையிலும், நடனத்திலும் தங்களது தனித் திறமைகளைக் காட்டினர். சூழலும் கைத்தாளமும் முழங்கப் பாடினர், ஆடினர். யாழிசையில் வல்லவர்களாக இருந்தனர். துதிப் பாடல்கள் பல சாகித்தியங்களைப் பாடியுள்ளனர். ரிக்வேதத் துதிப் பாடல்கள் இசையோடு பாடப்பட்டன.

## வேதகால சாதி முறை

ஆரியர் தென்மேற்கு இந்தியாவுக்கு வந்தபோது 'கருத்த தோலுடைய, தடித்த உதடடைய, சப்பமூக்குடைய' மக்களை எதிர்கொண்டனர். இவர்கள் தாசர்கள், தாஸ்யூக்கள், பானிகள் என்று வர்ணிக்கப்பட்டுள்ளனர். தாசர்களும், தாஸ்யூக்களும் கால்நடைச் செல்வந்தர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் கோட்டைகளில் வாழ்ந்தனர் என்றும் லிங்கத்தை வழிபட்டனர் என்றும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். பாணிகள் பணக்காரர்கள் என்றும் வேள்விகள் செய்வதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. தாஸ்யுஹத்யா என்ற சொல்லிருந்து தாஸ்யூக்கள் என்ற சொல் பெறப்பட்டது என்று தெரிய வருகிறது. எனவே ரிக்வேதகால ஆரியரும் தென்மேற்கு இந்தியாவில் வாழ்ந்தவர்களும் இனத்தாலும். மொழியாலும், நிறத்தாலும், வாழ்க்கை முறையாலும் முற்றிலும் மாறுபட்டிருந்தனர் என்பதும் தெளிவாகிறது.

## சாதி அமைப்பு

ரிக் வேதத்தில் காணப்படும் புருஷசுக்த்தம் என்ற பகுதியில் வர்ண அடிப்படையிலான சாதி அமைப்பு முறை தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. பிராமணர்கள் பிரம்மாவின் தலையிலிருந்தும், சத்திரியர்கள் அவரது கரங்களிலிருந்தும், வைசியர்கள் தொடைகளிலிருந்தும், சூத்திரர்கள் கால்களிலிருந்தும் தோன்றினர் என்று கூறப்பட்டுள்ளது. இது கற்பனை உருவகம் என்றாலும் யதார்த்த நிலையைப் படம் பிடித்துக் காட்டவதாக உள்ளது. துவக்கத்தில் இந்த வர்ண சாதி அடுக்குமுறை தலைமுறை தலைமுறையாக வந்த முறையாக இல்லை. கற்றறிந்த பிராமணர்களை முதலிடத்திலும், உடல் வலிமையுள்யோரை இரண்டாவது இடத்திலும், ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்த வைசியரை மூன்றாவது இடத்திலும், கல்வியறிவற்றோரை நான்காவது இடத்திலும் வைத்தனர். எனினும் இந்த சாதி அடுக்குமுறை அமைப்புக்கு அடிப்படை வர்ணம் அல்லது நிறம் என்பதில் ஐயமில்லை. ரிக்வேதகால ஆரியர் நிற

உணர்வுமிக்கவர்களாயிருந்தது. இயல்பானதேயாகும். இதில் வியப்பெதுவுமில்லை.

**தொடக்க கால சாதிமுறை**

வர்ணம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு நிறம் என்றுதான் பொருள். சாதியின் ரிக்வேதகாலம் முழுவதும் வலியுறுத்தப்பட்டது. இதுவே வடஇந்திய ஆரியப் பண்பாட்டின் ஆணிவேராகும். ஆரியர் இருமுறைப் தந்தைக்குப் பிறப்பது, இரண்டாவது சில-சடங்குகள் மூலம் உயர்சாதியில் வகுப்பினராகவும், புரோகித வகுப்பினராகவும், பண்டமாற்று வியாபார வகுப்பினராகவும் பிரிந்திருந்தனர். அதாவது பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று ஆரியப் பிரிவினரும் ஒரு நிறத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தாஸ்யுக்களை இந்த வகுப்பு வட்டத்துக்கள் சேர்க்க விரும்பாமல் அவர்களை சூத்திரர்களாக்கி நான்கடுக்கு வர்ண சாதி அமைப்பு முறையை அறிமுகப்படுத்தினர். எனவே துவக்கத்தில் சாதிப் பிரிவு வர்ணம் அல்லது நிறத்தை அடிப்டையாக் கொண்டே ஏற்படுத்தப்பட்டது.

**தொழில் சார்ந்த சாதி முறை**

நிற அடிப்படையில் உருவான பின்னர் தொழில் ரீதியாக விரிவடைந்தது. அதன்பின் வாழ்க்கை தர்மம் என்று இறுக்கமுற்றது. சாதி இந்து சமுதாயத்தின் ஆணி வேராகும். சாதிக்கேற்ப குடும்ப வாழ்க்கையும், சமுதாய அந்தஸ்தும் அமைந்தன. இந்தப்படிமுறை சாதி முறையில் ஒவ்வொரு சாதியைச் சேர்ந்தோர்க்கும் குடும்ப, சமுதாய, தொழில் பாதுகாப்பு அளிக்கப்ட்டது. எனினும் சாதிக் கலப்புக்கு இடமில்லாமல் போனதால் சாதிகள் பிரிவினை சக்திகளாக உருவெடுத்தன. ஜனநாயக, தேசிய, சமத்துவ உணர்வுகள் தலைதூக்க விடாமல் தடுத்துவிட்டன. சாதியை அடியோடு அழிக்காமல் சமுதாய், பொருளாதார சமத்துவ முறையை ஏற்படுத்த முடியாத நிலை உருவாகிவிட்டது.

**கல்வி நிலை**

ரிக்வேதக் கல்வி மனப்பாடக் கல்வியாகும். அக்கல்வி வாய்வழிக் கல்வியாகும். குரு மாணவர்களை அருகில் அமரச் செய்து ரகசியமாகக் கல்வி புகட்டினார். கல்வி தெய்வீகமாகக் கருதப்பட்டதால் அதை வேறு யாரும் கேட்டுவிடக்கூடாது என்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வேதத்தை எழுத்து வடிவமாக்குவது அதன் புனிதத் தன்மையை அவமதிப்பதாகும் என்று கருதப்பட்டது. எழுத்தைவிட ஒலி உயர்வாகக் கொள்ளப்பட்டது. எனவே ரிக்வேத காலத்தில் கல்வி வாய் வழியாக மட்டுமே கற்பிக்கப்பட்டது. ரிக்வேதக் கல்வியின் குறிக்கோள் இரண்டு: 1)தன்னைத் தானே அறிந்துகொள்ளல்.

அதாவது மனக் கட்டுப்பாட்டின் மூலம் அறியாமையிலிருந்து விடுபடுவது. ஆன்மிக அறிவின் மூலம் கல்வி அளிப்பதற்காக மாணவர்களுக்கு ஆசிரியர்களாக்குவதற்கான பயிற்சி அளிப்பது. எனவே, ரிக்வேதகால கல்வி என்பது சமயக் கல்வியாகும்.

ரிக் வேதக் கல்வி இரண்டு கட்டங்களாகக் கொடுக்கப்பட்டது: 1)உபநயனம். இது மாணவனைத் துவக்க கல்விக்கு அறிமுகப்படுத்தும் சடங்காகும். துவக்க நிலையில் மாணவன் குருவின் அருகே அமர்ந்து அவரது உதவியோடு வேதக் கல்வியைப் பெறுவதற்கான தகதியைப் பெற்றான். இது மாணவனின் தன்னம்பிக்கையை வளர்க்க உதவியது. 2)பிராமணர்களுக்கு மட்டுமே வேதக் கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதற்கு காரணம் பிராமணர்கள் மட்டுமே வேதக் கல்வி அளிப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். எனவே வேதக் கல்வி சத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும் அளிக்கப்படவில்லை மாறாக, சத்திரியர்களுக்கு போர்ப் பயிற்சியும், வைசியர்களுக்கு விவசாயம் மற்றும் வியாபாரக் கல்வியும் பயிற்சியும் கொடுக்கப்பட்டன. சூத்திரர்கள் முறையான கல்வியிலிருந்து ஒதக்கி வைக்கப்பட்டனர்.

**சமயம்**

ரிக்வேதகால சமுதாயம் சமயம் சார்ந்த சமுதாயமாகும். அச்சமுதாயம் சமயத்தைச் சுற்றியே சுழன்றது. சமயமே ரிக்வேதகால மக்களின் மூச்சாகவும், பேச்சாகவும் இருந்தது. மாடு மேய்ப்பாளர்களாக இந்தியாவுக்கு வந்த ஆரியர் இயற்கை அற்றல்களை வழிபட்டனர். பின்னர் அவற்றுக்குக் கடவுள் வடிவம் கொடுத்தனர். ரிக் வேதத்தில் 33 கடவுள்களின் பெயர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர்களுள் பூமிக் கடவுள்களான பிரித்வி, அக்னி, பிரிகஸ்பதி, சோமா, வளிமண்டலக் கடவுள்களான இந்திரன், ருத்ரன், மாருதி, வாயு, பர்ஜன்யா, விண்ணுலகக் கடவள்களான சூர்யா, உஷா, சாவித்திரி, விஷ்ணு, சந்திரன், வரணன் ஆகியோர் சிறப்பிடம் பெற்றுள்ளனர். உலகெங்கும் கடவுள்கள் கண்டுபிடிக்கப்படுவதில்லை, கற்பிக்கப்படுகிறார்கள். கடவுளர்களுள் ருத்ரன் கொடுங்குணம் கொண்டவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். புரந்ரா என்று அழைக்கப்படும் இக்கடவுள் தான் ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது இருந்த கோட்டைகளை அழித்தவர் என்று பெருமையுடன் பேசப்படுகிறார்.

**சமயத்தின் சிறப்பு**

ரிக்வேத சமயத்தின் சிறப்பக் கூறுகளாவன: 1)கடவுள்கள் மனிதத் தேவைகளுக்கேற்பப் படைக்கப்பட்டனர். 2)கடவுள்கள் உலக நன்மைகளைப் பெறுவதற்காக – செல்வம், அதிகாரம், வளம் - துதிக்கப்பட்டனர். 3)பெண்

தெய்வங்களைவிட ஆண் கடவுள்களே ஆதிக்கம் செலுத்தினர். 4)புரோகிதர்கள் சமயச் சடங்குகளுக்குப் பொறுப்பாக இருந்தனர். 5)கர்மா கோட்பாடுகளை விதை ஊன்றப்பட்டது. 6)எதிர்ப்பாளர்கள் அசுரர்கள் என்று நிந்திக்கப்பட்டனர். சுருங்கக்கூறின் வேதகால சமயம் ஊக அடிப்படையிலானது எனத் தெரிகிறது.

**கலைகள்**

ரிக்வேதகால மக்கள் கலைப் பிரியர்கள், கலா ரசிகர்கள், கலையுணர்வு மிக்கவர்கள். ரிக்வேதப் பாடல்களே கவிஞனின் உச்சகட்ட கற்பனையாகும் இப்புலவர்களின் கவி புனையும் ஆற்றல் அதிசயிக்கத்தக்கது. இதில் இவர்கள் ஈடுயிணையற்றவர்கள். ரிக்சம்ஹிதை என்ற செய்யுள் தொகுதியில் காணப்படும் 1017 பாக்களும் புரோகிதர்களால் இசையோடு பாடப்பட்டவை. இவர்கள் பாக்களிசைப்போர் என்று பாராட்டப்பட்டனர். இன்றைக்கும் இப்பாடல்கள் பாடப்படும்போது மொழி புரியாவிட்டாலும் இசை கேட்பதற்கு இதமாக இருக்கும். இப்பாக்கள் குடும்பச் சொத்தாகக் கருதப்பட்டது. இவை ரிஷிகளின் தனியுடைமையாக இருந்தன. விசுவாமித்திரர், வாமதேவர், பரத்வாஜர், வசிஷ்டர் ஆகியோர் முக்கிய ரிஷிகளாகக் கருதப்பட்டனர். சுருங்கூறின், ரிக் வேதம் இனிய இசைக் காவியக் கருவூலமாகும்.

ரிக்வேதகால மக்களின் மருத்துவ அறிவு ஆரம்ப கட்டத்தில் இருந்தது. அவர்கள் பேய், பிசாசுகளை ஓட்டுவதில் ஆர்வம் கொண்டிருந்தனர். மந்திரங்களின் உதவியால் பிணிகளைப் போக்க முடியும் என்று நம்பினர். நோய்களைப் போக்க மூலிகைகளையும், மருந்துகளையும் பயன்படுத்தினர். ராண சிகிட்சை மற்றும் வான்வெளி பற்றிய திறமையும், அறிவும் அவர்களுக்கு இருந்தன.

**பிற்கால வேதகாலம், கி.மு. 1000 –கி.மு. 600**

கி.மு. 1000 க்கும் கி.மு. 600 க்கும் இடைப்பட்ட காலம் பிற்கால அல்லது பிந்தய வேத காலம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலகட்டத்தில்தான் சாம வேதம், யஜூர் வேதம், அதர்வ வேதம், பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள் ஆகியவை இயற்றப்பட்டன. இப்பிறகால வேத இலக்கியத்திலிருந்து பஞ்சாப் பகுதியில் நிலையாகக் குடியேறியிருந்த ஆரியர் கிழக்கு நோக்கி விரிவடைந்தது. தெளிவாகத் தெரிய வருகிறது. இவர்களின் புவியியல் அறிவு அதிகரித்தது. இரு கடல்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பல இமயமலைச் சிகரங்களைப் பற்றிய தகவல்கள் உள்ளன. விந்திய மலைகளைப் பற்றி மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரியர் கங்கைச் சமவெளியில் நிலையாகக்

குடியேறிவிட்டனர். அதாவது வேதகால ஆரியரது ஆட்சியும், அதிகாரமும், ஆதிக்கமும் சிந்து சமவெளியிலிருந்து கங்கை சமவெளிவரைப் பரவியிருந்தது. இது பிற்கால வேதகால இலக்கியச் சான்றுகளிலிருந்து தெளிவாகின்றது. தொல்பொருள் ஆய்வுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன.

பிற்கால வேதகாலத்தில் அரியர் தங்களது அதிக்க குவிமையத்தை சிந்துவெளி பஞ்சாப் பகதியிலிருந்து கங்கை யமனை நதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதிக்கு மாற்றிக் கொண்டனர். இந்த இடைத்துறை நிலப்பகுதியின் ஓரத்திலிருந்து மேல் பகுதிக்கு நகர்ந்தனர். இப்பகுதியே குருஷேத்திரம் என்று அழைக்கப்படுகிறது. பின்னர் அவர்கள் டெல்லியைக் கைப்பற்றி தங்களது தலைநகரை மீரட் மாவட்டத்தில் உள்ள அஸ்தினாபுரத்தில் அமைத்தனர். பிற்கால வேதகால பிரதேசத்திலுள்ள கோசலத்தில் குடியமர்ந்தனர். வடக்கு பீகாரிலுள்ள விதேகாவும் அவர்கள் வசம் வந்தது. ஆரியரது கிழக்கு நோக்கிய விரிவாக்கத்தக்கு எதிர்ப்பு இருந்தது. அவர்களை எதிர்த்தவர்கள் கரப்புப் பயன்படுத்தியோராவர். இவர்கள் சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்தோரின் வழித் தோன்றல்கள் என்பதில் ஐயமில்லை. எனவே, பிற்கால வேத காலம் முடிவதற்குள் கங்கை சமவெளிப் பகுதி முழுவதும் ஆரியமாக்கப்பட்டது.

### நால்வகை வாழ்க்கை

பிற்கால வேதகாலத்தில் ஏற்படட்ட மற்றொரு குறிப்பிடத்தக்க சமுதாய மாற்றம் வாழ்கதை நிலைகளைப் பற்றியது. சமுதாய வாழ்க்கை நான்கு நிலைகளைக் கொண்டது என்று வரையறுத்தார் யஜ்னவால்கியர். 1)பிரம்மச்சரிய வாழ்க்கை. இது மாணவப் பருவத்தைக் குறிக்கும். 2)கிரகஸ்த வாழ்க்கை. இது குடும்ப வாழ்க்கை 3) வனப்பிரஸ்த வாழ்க்கை. குடும்பப்பற்றுகளிலிருந்து விடுபட்டுத் தாமரை இலைத் தண்ணீர் போல் இருக்கும் வாழ்க்கை. 4)சன்யாச வாழ்க்கை இல்லறத்தில் இருந்து கொண்டே மேற்கொள்ளும் துறவற வாழ்க்கை. இந்நான்கும் மேல்சாதி ஆண்களுக்கு மட்டும் கூறப்பட்டவையாகும்.

### கல்வி நிலையில் மாற்றம்

பிற்கால வேதகாலத்தில் சமய சமதாயச் சடங்குகள் சிறப்பிடம் பெற்றன. இச்சடங்குகளுக்குக்கேற்ப கல்வித்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. பிராமணங்களில் கூறப்பட்டவை மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டதால் இது பிராமணக் கல்வி என்று அழைக்கப்பட்டது. பிராமணக் இலக்கியம் கற்பிக்கப்ட்டது. கருங்ககூறின் வெதக் கல்வி பிராமணக் கல்வியாக உரமாற்றமடைந்தத. இப்புதுக் கல்வித் திட்டத்தில் சமயம் சாரா வாழ்வியல் அறிவும் அளிக்கப்பட்டது. தன்னம்பிக்கை, தனிமனித வளர்ச்சி,

சயக்கட்டுப்பாடு, சமுதாய அறிவு, உடற்பயிற்சி போன்றவையும் கற்பிக்கப்பட்டன. சமஸ்கிருதக் கல்வி வலியுறுத்தப்பட்டது. அறிவுக்கும் திறமைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. கல்வி வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடியதாக இருக்க வேண்டும் என்பது முக்கியத்துவமடைந்தது. பிரமாண சிறார்களுக்குக் குருகுலக் கல்வி ஆசிரமங்களில் கற்பிக்கப்பட்டது.

## இரு பெரும் காப்பியங்கள்

மகாபாரதமும், ராமாயணமும் பண்டைக்கால இந்தியாவின் இரு பெரும் காப்பியங்களாகும். இக்காப்பியங்கள் இயற்றப்பட்ட காலம் காப்பிய காலம் என்று அழைக்கப்படுகிறது. வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது காப்பியகாலம் என்ற சொற்றொடர் தவறான எண்ணத்தை ஏற்படுத்தக்கூடியதாகும். ஏனெனில் இவற்றை வரலாற்றுக் காப்பியங்கள் என்று திரித்து கற்பித்துக் கூறுவதற்கு வாய்ப்புண்டு.

### மகாபாரதம்

மகாபாரதம் ராமயணத்தைவிட காலத்தால் முற்பட்டது. இக்காப்பியத்தை எழுதியவர் வியசர் என்பது மரபு. முகாபாரதத்தை விரிவாக ஆய்ந்தபின் வியாசர் என்றால் சரிப்படுத்து அல்லது முறைப்படுத்துபவர் என்று பொருள் என்ற முடிவுக்கு வருகிறார் அராய்ச்சியாளர். இக்காப்பிய பாடல்களை நூற்றுக்கணக்கானோர் எழுதி ஆயிரக்கணக்கானோரால் பாடப்பட்டிருக்க வேண்டம். பின்னர் குப்தர் காலத்தில் மேலும் பல பாடல்கள் - கீதை உட்பட- சேர்க்கப்பட்டு, எழுத்து வடிவம் பெற்று தற்பொதைய வடிவத்தைப் பெற்றது. மகாபாரதம் கொளரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமிடையே குருஷேத்திரத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் போரைப் பற்றிய உலகிலேயே நீளமான காப்பியமாகும். இக்காப்பியம் 1,00,000 ஈரடிச் செய்யுள்களைக் கொண்ட 10 புத்தகங்களை உள்ளடக்கியது. பாரதப் போர் நில உரிமைகளுக்காகப் போடப்பட்ட போராகும். இந்த போர் சூதாட்டம், வன்முறை, உறவினர்களுக்கிடையேயான போர் ஆகியவை பற்றிய கதையாகும்.

மகாபாரதத்தின் இதயமாகத் துடிக்ககூடியது பகவத் கீதையாகும். கீதை வேதங்களுக்கு அடுத்தப்படியாகக் கருதப்படும் புனித நூலாகும். கீதைக்கு விளக்க உரை எழதியோர், எழுதிக்கொண்டிருப்போர் பலர். கீதையின் கரத்துக்கள் கவர்ச்சிகரமானவை. இவற்றைப் பழமைவாதிகளும் புதுமை வாதிகளும் தங்களது விருப்பங்களுக்கேற்ப விமரிசித்துக் கொள்ளலாம். கீதையின் ஆசிரியர், அதன் காலம் பற்றி எதுவும் தெரியாது. எனினும் கீதையைப் போன்ற அழகான, அற்புதமான, ஆழமான

சிந்தனைகளைக் கொண்ட ஒரு தத்துவக் கவிதை உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை என்று கருதப்படுகிறது.

**ராமாயணம்**

ராமாயணம் மகாபாரதத்தை விட காலத்தால் பிற்பட்டது. இக்காப்பியத்தை சமஸ்கிருதத்தில் எழுதியவர் வால்மிகி எள்பது மரபு. இக்காப்பியமும் பலரால் பல காலங்களில் எழுதப்பட்டு தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். வால்மிகிக்குப் பிறகு துளசிதாசா் இந்தியிலும், அவரைத் தொடர்ந்து பலா் பல இந்திய மொழிகளிலும் எழுதியுள்ளனா். துளசி ராமாயணம் 24,000 ஈரடிச் செய்யுள்களைக் கொண்டது. மகாபாரத்தைவிட ராமாயணத்தில் இடைச் சேர்க்கைகள் குறைவு. இக்காப்பியம் பிராந்தியங்களுக்கேற்ப எழுதப்பட்டாலும் கதைக் கரு ஒன்றுதான். இக்காப்பியமும் அயோத்தி ராமனுக்கும் இலங்கை ராவணனுக்கும் கடைபெற்றப் போரை பற்றிய கதைதான். 300க்கும் மேற்பட்ட மூலராமாயணங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. கம்ப ராமாயணம் பிராந்திய ராமாயணங்களின் பழமையானவற்றில் ஒன்றாகும். சுனண ராமாயணத்தில் சீதை ராவணனின் மகளாக சித்தரிக்கப்பட்டுள்ளாள். அதுமட்டுமல்ல, லட்சுமணன்தான் ராவணனைக் கொன்றதாகவும் கூறப்பட்டுள்ளது. ராமாயணம் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. பில் ராமாயணம் அதிவாசிகளுக்கான வடிவமாகும். காம்லெ பல்க் என்ற பெல்ஜியம் பாதிரியார் துளசி ராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

## அலகு III

## வட இந்தியா (*600-325* BC)

### கி.மு ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவின் நிலை

கி.மு 6-ஆம் நூற்றாண்டின் காலத்தில் இந்தியாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. முக்கியமாக வெளிநாட்டு படையெடுப்பு, புத்த, பௌத்த மதங்களின் எழச்சி ஏற்பட்டது.

அலெக்சாந்தரின் படையெடுப்பின்போது வடமேற்கு இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவில் பல சிறிய, பெரிய குடியரசுகளும், முடியரசுகளும் இருந்தன. குடியரசுகளுக்குள் ஓரளவுக்குக் கூட்டாட்சி அமைப்பு இருந்தது. எனினும் இவை மூர்க்கத்தனமான சுதந்திர உணர்வுமிக்கவையாக இருந்தன. இவை கூட்டாட்சி அமைப்பில் இருந்தாலும் தங்களது சுயாட்சியை இழக்கத் தயாராகயில்லை. எனினும் இவைகளுக்கிடையே இணக்கமான அரசியல் சூழ்நிலை நிலவியது.

கிரேக்க வரலாற்று வித்தகர் ஹெரடோட்டஸ் வழியாக இந்தியாவின் நம்பமுடியாத செல்வத்தைப் பற்றி அறிந்த அலெக்சாந்தர் அச்செல்வத்தைக் கொண்டு அவர் கனவு கண்ட உலகப் பேரசை உருவாக்கத் திட்டமிட்டார்.

பாரசீகப் பேரரசை வெற்றி கொண்டு பணிய வைத்த அலெக்சாந்தர் அப்பேரரசின் பகுதியாக இருந்த வடமேற்கு இந்தியாவையும் அதோடு இணைக்கத் திட்டமிட்டார். அத்திட்டத்தின்படி அவர் பர்சியாவும் இந்தியாவுக்கும் இடைப்பகுதிகளை வென்று, தெற்கு அப்கானிஸ்தானை அடி பணிய வைத்து அங்கு அலெக்சாந்திரியா என்ற நகரை தீர்மானிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இத்திட்டதின் நோக்கங்கள் இரண்டு 1. ராணுவ முக்கியத்துவமிக்க புறக் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 2. பாரசீகத்துக்கும் வடமேற்கு இந்தியாவுக்குமிடையே தங்கு தடையற்ற செய்தித் தொடர்புக்கு வசதி உருவாக்கப்பட்டது. புத்த மதம் மற்றும் பௌத்த மதங்கள் உருவாவதற்கு ஏற்ற சூழ்நிலைகள், அரசியல்,சமூக, பொருளாதார, சமய சூழ்நிலைகள் உருவாகின. அரசுகளுக்கிடையில் சரியான ஒற்றுமையின்மை, அரசுகளுக்கிடையே போர்கள், சமூகபிரிவினைகள் முதலானவைகள் வட இந்தியாவில் நிலவின.

#### முடியாட்சிகள் உருவாதல்

#### மகாஜனபதங்கள்

சத்திரியக் குடியரசுகளின் விரிவாக்கமே மகாஜனபதாக்களாகும். இவை நன்கு வளர்ச்சியடைந்த ஆட்சிப் பகுதிகள். ஒவ்வொரு மகாஜனபதாவும் பல

விவசாய குடியிருப்புகளைக் கொண்டது. பதினாறு மகாஜணபதர்கள் இருந்ததாக புத்த பாலி கட்டளைக் கோட்பாடு பட்டியலிட்டுள்ளது. இப்பட்டியலில் சிறிய, பெரிய நாடுகள் உள்ளன. அதேபோன்று குடியரசுகளும் இடம்பெற்றுள்ளன மகாஜனபதங்கள் கீழ் வருவன

அரசியல் அதிகாரப் போட்டியில் வல்லவையே வெற்றிபெறும். மட்சய நியாயப்படி பெரிய மீன் சிறிய மீன்களை விழுங்கி வாழ்க்கையில் வெல்லும். இதேபோன்று அரசியல் ஆதிக்கப் போட்டியில், 4 மகாஜனபதாக் குதிரைகள் முன் வரிசையில் நின்றன. அவையாவன வத்சா, அவந்தி, கோசலம், மகதம்

**வத்சா**

யமுனைக் கரையில் கௌசாம்பியைத் தலைநகராகக் கொண்ட வத்சா நாடு (தற்போதைய அலகாபாத்துக்கு அருகே) ஆற்றல்மிக்க அரசாகத் திகழ்ந்தது. அதன் அரசன் உதயணன் அங்கம், அவந்தி, மகத அரச குடும்பங்களுடன் மண உறவு கொண்டு தன் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். மணஉறவு அரசதந்திரத்தின் மூலம் வெற்றிகண்ட முதல் வரலாற்று மன்னன் இவர்தான்.

**அவந்தி**

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வலிமைமிக்க முடியரசாகத் திகழ்ந்தது அவந்தி. அதன் தலைநகர் உஜ்ஜயினி வெட்ராவதி ஆறு அவந்தியை வடக்கு தெற்காகப் பிரித்தது. பரப்பளவில் பெரிய ஆட்சிப் பகுதியை கொண்டிருந்த நாடு அவந்தி. அவந்தி மன்னன் மகள் பிரத்யோதா வத்சாவின் மன்னன் உதயணனின் மகள் வாசவத்ததையை மணந்து கொண்டதன் மூலம் அதிகாரமிக்க அரசரானார். இவரது இந்த எழுச்சி அண்டை அரசுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது.

அவந்தி அரசன் சந்த பிரத்யோதா புத்தரின் சமகாலத்தவர். புத்த மதப் புரவலரான இரவது ஆட்சிக் காலத்தில் தலைநகர் உஜ்ஜயினி புத்த சமயத்தின் குவிமையமாகத் திகழ்ந்தது. பல்வேறு புத்த மார்க்க மக்கள் நல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வாரிசுரிமை ஆட்சியில் ஆற்றல்மிக்க மன்னனுக்குத் திறமையான வாரிசு கிடைப்பது அரிது. திறமைமிக்க அவந்தி மன்னனின் வாரிசுகள் ஆற்றலற்றவர்களாக இருந்தமையால் அவர்களும் அவர்கள் கால நிகழ்வுகளும் பதிவு செய்யப்படவில்லை.

**கோசலம்**

கோசலத்தின் தலைநகர் அயோத்தி. ராமாயணக் கதாநாயகன் ராமன் அயோத்தி மைந்தனாகச் சித்தரிக்கப்பட்டதால் கோசல மன்னன் பிரசேன்ஜித் ஆட்சியின் கீழ் இந்நாடு வரலாற்றுப் புகழ் பெற்றது. கோசல நாட்டின் மேற்கே கோமதி ஆறும், தெற்கே சாய் என்ற சார்பிகாவும், மேற்கே சதாளிராவும், வடக்கே நேப்பாள மலைகளும் எல்லைகளாக இருந்தன. சதாதினா ஆறு கோசலத்தை விதேகத்திலிருந்து பிரித்தது. சரயு நதிக்கரையில் அமைந்திருந்த தலைநகர் அயோத்தி கோசல நாட்டின் அதிகார மையமாகத் திகழ்ந்தது. சகேடா, சிரவஸ்தி, பாரைச் ஆகியவை கோசலத்தில் பிற பிரதான நகரங்களாகும்.

கோசல மன்னன் பிரசேன்ஜித் புத்தரின் சமகாலத்தவர். தச்சசீலப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். மகதத்துடன் மண உறவு கொண்டு தன் அதிகாரத்தையும், மதிப்பையும் உயர்த்திக் கொண்டவர். அதுமட்டுமல்ல. தனது சகோதரியை மகத மன்னன் பிம்பிசாரருக்குக் காசியை சீதனமாகக் கொடுத்து மணமுடித்து வைத்துத் தனது மேலாதிக்கத்தை பெருக்கிக் கொண்டவர். பிரசேன்ஜித்தின் வாரிசான விதுதபாவின் ஆட்சிக் காலத்திலிருந்து கோசல அரசு சரிவுப் பாதையில் சென்றது.

**மகதம்**

கி.மு ஆறாம் நூற்றாண்டுக்கும் கி.மு. நான்காம் நூற்றாண்டுக்குமிடையே வத்சா, அவந்தி, கோசலம், மகதம் ஆகிய நான்கு பெரிய அரசுகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் மகதம் வென்றது. அங்கத்துக்கும் வத்சாவுக்கும் இடைப்பட்ட நாடு மகதம். மகதத்தின் வடக்கேயும், மேற்கேயும் கங்கை மற்றும் சோன் ஆறுகள், தெற்கே விந்திய மலை, கிழக்கே சாம்பா ஆறு எல்லைகளாக இருந்தன. மகதம் புத்தர்கள் போற்றும் இடமாகத் திகழ்ந்தது. மகத மக்கள் வேத மதத்தையும், வேள்விகளையும், சமயச் சடங்குகளையும், பிராமணப் புரோகிதர்களின் ஆதிக்கத்தையும் வெறுத்து ஒதுக்கினர். வர்ண சாதிமுறையை நிராகரித்தனர். இதன் காரணமாக பிரமாண இலக்கியங்களில் மகதத்தைப் பற்றி இழுக்காக எழுதி சிறுமைப்படுத்தப்பட்டுள்ளது.

**மகத மன்னர்கள்**

**மூன்று வம்சங்கள்**

மகதத்ததை மூன்று வம்சங்களை சேர்ந்த மன்னாகள் ஆட்சி செய்தனர். 1.அரியங்க வம்சம் 2.சிசுநாக வம்சம் 3.நந்த வம்சம்.

## அரியங்க வம்ச அரசர்கள்

**பிம்பிசாரர் - கி.மு 525-கி.மு. 500**

பண்டைக்கால இந்திய வரலாற்றில் பிம்பிசாரர் முதல் முழு வரலாற்று மாமன்னராக காட்சியளிக்கிறார். இவரிடம் மகதத்தைப் பற்றிய தொலைநோக்குப் பார்வை இருந்தது. மகதத்தின் இயற்கை மற்றும் மனித வளங்களைக் கொண்டு அந்நாட்டில் மகத்தான முடியாட்சியை நிலைநாட்ட முடிவு செய்தார் அதற்கான அறிவாற்றலும், ஆளுமை ஆற்றலும் அவரிடம் நிரம்பி இருந்தன. அண்டை நாடுகளுடன் தொடர்புகொண்டு மகதத்தை வலிமைமிக்க முடியாட்சியாக்கினார் பிம்பிசாரர்.

**மணஉறவு**

பிம்பிசாரர் பிற அரச குடும்பங்களோடு மண உறவுகொண்டு தன் அதிகாரத்தையும், மகதத்தின் செல்வாக்கையும் வெகுவாக உயர்த்தினார். பிப்பிசாரரருக்கு மூன்று மனைவியர். முதல் மனைவி கோசலா தேவி. இவர் கோசல மன்னன் மகா கோசலாவின் மகள். பிரசேன்ஜித்தின் சகோதரர் பிம்பிசாரர் கோசலா தேவியை மணந்துகொண்டதன் மூலம் வர்தகம் முக்கியத்துவம் வாய்ந்த காசியை சீதனமாகப் பெற்றார்.

பிம்பிசாரரின் மூன்றாவது மனைவி சேமா. இவர் பஞ்சாபின் மத்ரா அரச வம்சத்தைச் சேர்ந்தவர். அங்க நாடு மட்டும் பிம்பிசாராரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. எனவே பிம்பிசாரர் அங்க மன்னர் பிரம்மதத்தரைப் போரில் வென்று அந்நாட்டை மகத்துடன் இணைத்துவிட்டார்.

**ராஜகிரகம்**

பிம்பிசாரர் ராஜகிரகத்தை பலமிக்க நகரமாக்கினார். இந்த மன்னர் மனை கிரிவிரஜத்துக்கு வடக்கே மலையடிவாரத்தில் எழுப்பப்பட்டது. இந்நகரம்தான் தற்போது பாட்னா மாவட்டத்தில் உள்ள ராஜ்கீர் என்று கூறப்படுகிறது.

**திறமையான நிர்வாகி பிம்பிசாரர்**

பிம்பிசாரர் சிறந்த அரசதந்திரி. படைத்தளபதி மட்டுமின்றி ஆற்றல்மிக்க நிர்வாகியாகவும் இருந்தார். திறமையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட அவரது பிரதம அதிகாரிகள் பிம்பிசாரருக்கு விசுவாசமாக இருந்ததோடு மட்டுமின்றி அவர்களது கடமைகளையும், பொறுப்புகளையும் செவ்வனே நிறைவேற்றினர்.

***அஜாதசத்ரு, கி.மு. 500-கி.மு 475***

பிம்பிசாரருக்குப்பின் அவரது மகன் அஜாதசத்ரு மகத மன்னரானார். இவர் தனது தந்தையின் ஆட்சியின்போது அங்க நாட்டின் ஆளுநராக இருந்து ஆட்சி செய்து அனுபவம் பெற்றவர். இவர் தன் தந்தையை முன்னுதாரணமாகக் கொண்டு மகத அரசை வல்லரசாக்கும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டார். அஜாதசத்ரு அரசதந்திரத்துக்கு பதில் போர் மூலம் மகத நாட்டின் விரிவாக்கத்துக்குப் பாடுபட்டாா.

**கோசலத்துடன் மோதல்**

அஜாதசத்ரு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் கோசல நாட்டுடன் மோத வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. பிம்பிசாரர் இறந்தவுடன் அவரது கோசல மனைவி கோசலாதேவியும் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தார். எனவே கோசல மன்னன் பிரசேனஜித் பிம்பிசாரருக்கு சீதனமாக காசியைத் திரும்பப்பெறத் தீர்மானித்தார். ஆனால் அஜாதசத்ரு வர்த்தக முக்கியத்துவமிக்க காசியை இழக்க தயாராயில்லை. எனவே அஜாதசத்ருவுக்கும் பிரசேனஜித்துக்குமிடையே போர் மூண்டது. பலமுறை போரிட்டனர். இறுதியில் அஜாதசத்ரு வெற்றிபெற்று கோசல நாட்டை மகதத்துடன் இணைத்து விட்டார். இதன் விளைவாக அஜாதசத்ருவின் புகழும் மகதத்தின் பெருமையும் பலமும் பன்மடங்கு உயர்ந்தது.

**லிச்சாவிகளை வெற்றிகொள்ளல்**

கோசலத்தை மகதத்துடன் இணைத்த அஜாதசத்ரு வஜ்ஜிக்களின் கூட்டாட்சி எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. சுதந்திர குடியாட்சி மரபில் வந்த இவர்கள் வைசாலியைத் தலைநகராகக் கொண்ட லிச்சவி அரசர்களின் தலைமையில் அஜாதசத்ருவின் ஆதிக்கத்தை எதிர்த்தனர். இக்குடியாட்சிக் கூட்டாட்சியுடன் எதிர்ப்பு அஜாதசத்ருவுக்குப் பெரிய சவாலாக இருந்தது. இக்கூட்டாட்சிக் கூட்டணியை வெற்றி கொள்வது எளிதாயில்லை. இச்சாதனையை செய்ய 16 ஆண்டுகள் தேவைப்பட்டது. அஜாதசத்ரு தன்னிகரற்ற மகத மாமன்னராக திகழ்ந்தார்.

**பாடலிபுத்திரம்**

அஜாதசத்ரு போர்களுக்கிடையே பாடலிகிராமத்தின் ராணுவ முக்கியத்தவத்தை அறிந்து அதில் வலிமைமிக்க கோட்டையை கட்டி அதை ஒரு நகரமாக்கினார். இக்கோட்டை நகரம் கங்கை, சோன், காந்தக் ஆகிய மூன்று நதிகளும் சங்கமிக்கும் இடத்தில் உருவாக்கப்பட்டது. கிராமம் கோட்டையாயிற்று. விரோதிகளால் வீழ்த்த முடியாத கற்கோட்டையைக்

கொண்ட பாடலிபுத்திரம் மகதத் தலைநகராயிற்று. இச்செயல் அஜாதசத்ரவின் சாதனைச் சிகரமாகக் கருதப்படுகிறது.

### வாரிசு ஆட்சி

அஜாதசத்ருவின் 25 ஆண்டுகால ஆட்சியின்போது வடநாட்டில் மகதநாடு மட்டும்தான் வலிமைமிக்கப் பேரரசாகத்திகழ்ந்தது. மகதத்தின் பகழும், பெருமையும், பலமும் உச்சகட்டத்தை எட்டின. அஜாதசத்ருவுக்குப்பின் மகதநாடு சரிவுப் பாதையில் பயணித்தது. இவரது வாரிசகளான தர்சகா (கி.மு. 475- கி.மு 450)வும், அவருக்குப்பின் அரசரான உதயினும் (கி.மு. 450-கி.மு 425) மகதப் பேரரசின் பாரத்தை தாங்கக்கூடியவர்களாயில்லை. மகதத்தின் பெருமையும் புகழும் குறையாவிட்டாலும் அதன் பலம் குறைந்து விட்டது. உதயினுக்குப் பிறகு மகதத்தின் ஆட்சி விரந்து சரியத் தொடங்கியது. இந்நிலையில் சிசுநாக வம்சத்தைச் ஆட்சி விரைந்து சரியத் தொடங்கியது. இந்நிலையில் சிசுநாக வம்சத்தைச் சேர்ந்த பெனாரசின் ஆளுநராயிருந்த சிசுநாகர் மகத மன்னரானார். மகதத்தின் ஆட்சி அரியங்க வம்சத்திலிருந்து சிசுநாக வம்சத்துக்கு கை மாறியது.

### சிசுநாகவம்ச அரசர்கள், கி.மு 425- கி.மு 395

சிசுநாகர் சிசுநாக வம்சத்தின் தலைமகன். இவர் வைசாலியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த லிச்சாவி மன்னரின் மகன் என்று கூறப்படுகிறது. உழைப்பால் உயர்ந்த சிசுநாக அரசாங்க அதிகாரியாக இருந்து நாகதசகாவின் ஆட்சியில் வாரணாசியின் ஆளநராக நியமிக்கப்பட்டார். நாகதகா அரியங்கவம்சத்தின் கடைசி அரசர் என்று அறியப்படுகிறது. சிசுநாகர் குடியாட்சிப் பாரம்பரியத்திலிருந்து வந்த போதிலும் முடிமன்னரானபின் அதிகாரப் பெருக்கத்திலும், அரசு விரிவாக்கத்திலும் முனைப்புடன் செயல்பட்டார். வைசாலி இவரது அரண்மனை நகரமாவும். ராஜகிரகம் தலைநகராகவும் இருந்தன. பின்னர் சிசுநாகர் தலைநகரை வைசாலிக்கே மாற்றி விட்டதாகக் கூறப்படுகிறது.

### நந்த மன்னர்கள்

நந்த மன்னர்கள் 9 பேர் என்பதில் கருத்தொற்றுமை உள்ளது. புராணங்களும், மகாவம்சரும் ஒன்பது நந்தர்கள் இருந்ததாக கூறுகின்றன. பின்னர் கிடைத்த ஆறாம் விக்ரமாதித்ய சாளுக்கிய மன்னனின் (கி.பி. 1076 – கி.பி. 1127) கல்வெட்டொன்று நந்த சாப்தம் பற்றிக் குறிப்பிடகிறது. சங்க இலக்கியத்தில் நந்தர்களைப் பற்றிய தகவல்கள் உள்ளன. கிரேக்க எழத்தாளர்கள் நந்தர்களைப் பற்றிக் குறிப்பட்டள்ளனர். அலெக்சாந்தருக்கு

நந்த வலிமைமிக்க ராணுவத்தைப் பற்றி தெரிந்திருந்தது. எனினும், நவநந்தர்களைப் பற்றிய தகவல்களோ, காலவரன்மறையோ தெளிவாகயில்லை.

**மகாபத்மநந்தன் கி.மு 375- கி.மு 350**

ஒன்பது நந்த மன்னர்களில் மகாபத்மநந்தன், தனநந்தன் ஆகிய இருவரைப் பற்றிய தகவல்களைக் கொண்டு இவர்களது ஆட்சியைப் பற்றி ஓரளவு தெரிந்துகொள்கிறோம். முகாபத்மநந்தன் நந்த வம்சத்தைத் தோற்றுவித்தவர். இவர் ஒரு ஆற்றல்மிக்க அரசர். மகதத்தின் தோற்ற, வளர்ச்சியைப் பற்றி நன்கறிந்த மகாபத்மநந்தர் இவருக்கு முன்பிருந்த மன்னர்களைப் போன்றே மகதத்தை மேலும் பலமுடைய பேரரசாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முனைப்புடன் செயல்பட்டார். வட இந்தியாவில் சத்ரிய பகுதிகளைக் கைப்பற்றினார். அப்பகுதிகளை இவரது பேரரசுடன் இணைத்தார். இவர் கலிங்கத்திலிருந்து மகாவீரர் சிலையை மீட்டு வந்தார்.

**தனநந்தன்**

மகாபத்மநந்தருக்கு 8 மகன்கள் இருந்ததாக கூறப்படுகிறது. இவர்களுள் தனநந்தரைப் பற்றிய தகவல்கள் சில உள்ளன. இவர் பெயருக்கேற்ற செல்வச் சீமானாகத் திகழ்ந்தவர். இவர் செல்வத்தைச் சேர்ப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தியதாகவும், சேர்த்த செல்வத்தை பாதுகாப்பாக வைத்திருந்தாகவும் கூறப்படுகிறது. செல்வத்தால் அறியப்பட்ட இவரது புகழ் இந்தியா முழுவதும் குறிப்பாக தமிழ்நாடு வரை பரவியிருந்தது. தனநந்தன் கங்கைச் சமவெளியில் சோன் அற்றங்கரையில்

பொன் மலிந்த பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தார்.

**மகதத்தின் மாண்பு**

16 மகாஜனபதாக்களில் மகதம் மட்டும் முதல் நிலைக்கு வரக் காரணம் என்ன? மகதம் பரப்பளவில் விரிவடைந்தது. மகத்தான முடியாட்சியில் இருப்பிடமாகிப் பேரரசின் பிறப்பிடமாயிற்று. இதற்குப் பல காரணங்கள் இருந்தன.

1. பிம்பிசாரர், அஜாதசத்ரு, சிசுநாதர், மகாபத்தநந்தர் போன்ற தொலை நோக்குடைய மன்னர்களின் பங்களிப்பு
2. மகதத்தின் மலைகளும், ஆறுகளும், காடுகளும், கனிமவளமும் மகதத்தின் மேன்மைக்கு புவியியல் அடிப்படையாக அமைந்திருந்தன.

3. பகைவர்களால் எளிதில் நுழைய முடியாத சகல வசதிகளையும் உள்ளடக்கிய வலிமைமிக்க கோட்டைத் தலைநகர் ராஜகிரகம்
4. மகதத்தின் வளமிக்க வேளாண்மை, தொழில், வாணிபம்
5. நில வரி வருவாய்
6. ஆற்றல்மிக்க ஆளுகை, திறமைமிக்க நிர்வாகம்
7. சட்டம், ஒழுங்கு, நீதி நிர்வாகம்
8. வேத ஆரிய ஆதிக்கத்தை எதிர்த்து, வேதகாலப் பிற்போக்கு அமைப்புகளை புறக்கணித்தது. மன உறவுகள் மூலம் முடியாட்சியைப் பலப்படுத்தியது. சூத்திர வம்சத்தைச் சேர்த்து நாட்டை வளப்படுத்தினர்.
9. பிரிந்துகிடந்த பல பகுதிகளை ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்தியது.
10. யாவற்றுக்கும் மேலாக பலமிக்க போர்ப்படையை உருவாக்கியது. இந்திய வரலாற்றில் மௌரியர் பலதுறைகளில் சிறந்து விளங்கியமைக்கு காரணம் சிசுநாக நந்தர் காலமேயாகும்

**புத்தரும் புத்தரின் கொள்கைகளும்**

சித்தார்த்தர் என்ற புத்தர் கி.மு. 567 ஆம் அண்டு நேப்பாளத்தைச் சேர்ந்த பஜ்தி மாவட்டத்திலுள்ள கபில வஸ்துவிற்கு அருகிலுள்ள லும்பினி கிராமத்தில் சாக்கிய சத்திரிய குலத்தில் பிறந்தார். சித்தார்த்தனின் தந்தை சுத்தோதனர் கபிலவஸ்து குடியரசுத் தலைவன், செல்வந்தன். சுத்தோனனின் மனைவி மாயா தேவி தேவதகம் என்ற சிற்றரசின் இளவரசி. இவர் கரவுற்றிருந்த போது குழந்தைச் சுடரொளியை அகல் விளக்கு எண்ணெயாயிருந்து காத்தகாகக் கூறப்படுகிறது. சித்தார்தரின் தந்தை சுத்தோதனர் தன் ஆண் வாரிசைக் கண்ணின் இமைபோல் வளர்த்தார். சிறுவன் சித்தார்தனுக்குக் கொடுக்க வேண்டிய சத்திரியக் குல கல்வியையும், பயிற்சியையும் பழுதின்றிக் கொடுத்தார். சித்தார்த்தன் போர்க்கலை பயிற்சியும், தத்துவக் கல்வியும் பெற்றான். இன்பத்தைத் தவிர வேறொன்றும் அறியாத அளவுக்கு சித்தார்த்தன் வளர்க்கப்பட்டான். சிறு வயதிலேயே தாயை இழந்த சித்தார்த்தன் சிற்றன்னை கௌதமியின் அன்பான அரவணைப்பில் வளர்த்தான். சித்தார்த்தனுக்கும் யசோதாவுக்கும் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இவர்களுக்கு ராகுலன் என்ற மகன் பிறந்தான். மகன் ராகுலன் பிறந்தபின் தந்தை சித்தார்த்தர் பிறப்பு பற்றி சிந்திக்கலானார். பிறப்பின் நோக்கம் பிறந்தவன் ஏன் இறக்க வேண்டும், பிறப்புக்கும் இறப்புக்குமிடையே மனிதன் ஏன் இன்பத்தைவிட துன்பத்தைச் சுமக்க வேண்டும்? மனிதனுக்கு மூப்பும் மரணமும் அவசியமா? மனிதனால் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ முடியாதா? இதுபோன்ற சிந்தனைகளால் சித்தார்தர் இன்பம், அமைதி, நிம்மதி ஆகிய அனைத்தையும் இழந்தார்.

சித்தார்த்தருக்கு எழுந்த வினாக்களுக்கு விடை காண்பதற்காக வீட்டைவிட்டு வெளியேறினார்.

வீட்டை விட்டு வெளியேறிய சித்தார்த்தர் உருவேலா என்ற அழகிய கானகப் பகுதிக்குச் சென்றார். அக்கால வழக்கப்படி சித்தார்த்தர் அக்காட்டில் 6 ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். யோகியாக வாழ்ந்தார். ஊன் உறக்கமின்றி உடல் மெலிந்தார் சித்தார்த்தர். வயதான மெலிந்த மரம்போல் காட்சியளித்தார். உடலை வருத்திக் கொள்வதால் மனிதனின் துன்பத்துக்குத் தீர்வுகாண முடியாது என்ற முடிவுக்கு வந்தார்.

### புத்தர் அறிவொளி பெறுதல்

சிந்தனைத் தெளிவு பெற்ற சித்தார்த்தர் உருவோலவைவிட்டு வெளியேறி தற்போதைய புத்த-கயா என்ற இடத்துக்குச் சென்று ஏழாண்டுகள் அரசமரத்தடியில் அமர்ந்து மேலும் சிந்தித்தார். அறிவொளி பெற்றார். சித்தார்த்தர் புத்தரானார். புத்தர் என்றால் அறிவொளி பெற்றவர் என்று பொருள். புத்தர் உண்மையை அறிந்தவர் என்றும் சாக்கிய முனி என்றும் அழைக்கப்பட்டார். அறிவொளி பெற்ற புத்தர் அவர் பெற்ற ஒளியை வையகம் பெற வேண்டும் என்று தீர்மானித்தார். அறிவொளி அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் புத்தர் வாரணாசிக்கு அருகாமையில் சாரநாத் என்ற இடத்திலிருந்து மான்பூங்காவில் தான் பெற்ற அறிவின்பத்தை மக்களோடு பகிர்ந்து கொண்டார். அக்கால வேத வித்தகர்களில் எவரும் எண்ணிக்கூடப் பார்க்காத புரட்சிச் செயல் புத்தரின் மான்பூங்காப் போதனை. அங்கிருந்து அவர் அயோத்தி, பீகார் போன்ற இடங்களுக்குச் சென்று மக்களையும், மன்னர்களையும் சந்தித்து தான் கண்ட பேருண்மையைப் பகிர்ந்து கொண்டார். அறிவு பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும் என்ற உண்மையை உலகறியச் செய்தார் புத்தர்.

### புத்தர் அறிவொளியை பரப்புதல்

புத்தர் ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்தார். ஊரார் கொடுத்த உணவை உண்டு பிரச்சாரத்தைத் தொடர்ந்தார். அவர் உணவில் சாதி பார்க்கவில்லை. பிராமணன் கொடுத்தாலும், சூத்திரன் கொடுத்தாலும், பாமரன் கொடுத்தாலும், பரந்தையர் கொடுத்தாலும் உணவை உணவாக ஏற்றுக் கொண்டார் புத்தர். புத்தரின் புரட்சிக் கருத்துக்களால் கோபமுற்றோரும் இருந்தனர். அவர்கள் புத்தரை எள்ளி நகையாடி, ஏளனம் பேசி அவமதித்தனர். அவமதித்த அவர்களையும் புத்தர் மதித்தார். அவர்களிடமும் அன்போடு பழகினார்.

புத்தர் தனது கருத்துக்களை மக்கள் பேசிய மொழியில் கூறினார். மக்களிடம் உரையாடினார். நிறைய கேள்விகளைக் கேட்டார். மக்களைக்

கேள்வி கேட்க ஊக்குவித்தார். புத்தரது பிரச்சாரத்துக்குக் கேள்வி-பதில் முறையைப் பிரதானமாகப் பயன்படுத்தினார். பல நீதிக் கதைகளைக் கூறினார். மக்கள் எளிதில் மனதில் வைத்துக்கொள்வதற்கு வசதியாகப் புத்தர் தனது தத்துவங்களை சிறுசிறு சூத்திரங்களாகக் கொடுத்தார். அத்தகைய சூத்திரங்களில் ஒன்றுதான் புத்தர் கூறிய நான்கு நேர்மையான உண்மைகள் ஆகும்.

### நான்கு பேருண்மைகள்

புத்தர் தனது பிரச்சாரப் பயணத்தின்போது பெனாரஸ் (வாரணாசி) சென்று அவரது முதல் போதனையைக் கூறினார். இப்போதனை சட்டச் சக்கரம் என்று அழைக்கப்படுகிறது. இதுவே நான்கு பேருண்மைகள் அல்லது நான்கு அரிய உண்மைகள் என்றும் கூறப்படுகிறது. இவையே புத்த மதத்தின் சாரமாகும்.

1) **துன்பம் அல்லது துக்கம்.** மனித வாழ்க்கையில் இன்பத்தை விட துன்பமே மேலோங்கி நிற்கிறது. மனிதன் சிந்திய கண்ணீர் நான்கு கடல்களின் நீரைவிட அதிகம் என்றார் புத்தர். இன்பம் சிறிது-சிற்றின்பம், துன்பம் பெரிது, பெருந்துன்பம். அச்சம், துயர், அதிருப்தி, மன அமைதியின்மை போன்ற காரணங்களால் துன்பம் நேர்கிறது. இத்துன்பம் உடல் சார்ந்ததாகவோ அல்லது மனம் சார்ந்தாகவோ இருக்கலாம். மனிதன் முதுமை பற்றியும் இறப்பு பற்றியும் கவலைப்படுகிறான். இக்கவலையே துன்பமாகிறது. மனிதன் நிலையற்ற பொருட்களைப் பற்றி கவலைப்படுகிறான். இக்கவலையே அச்சமாகிறது. வாழ்வின் நிகழ்வுகள் அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன. இந்நிலையில்லா மாற்றங்களைப் பற்றியும் மனிதன் கவலைப்படுகின்றான். இத்தவிர்க்கக்கூடிய கவலைகளில் கூட்டு விளைவே துக்கமாகும்.
2) **துன்பத்தின் தோற்றம் :** துன்பத்தின் தன்மை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் அதன் தோற்றத்தைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். மனிதன் தேவைக்கும் விருப்பத்துக்கும் வேறுபாடு தெரியாமல் விருப்பம் என்ற மாயமானைத் தேடி ஓடுகிறான், அலைகிறான். அறியாமையே இதற்குக் காரணம் என்பதை அவன் அறிவதில்லை.
3) **துன்பம் துடைத்தல்**. துன்பம் தற்காலிகமானது. மனிதன் தனக்குத் தானே தேடிக்கொள்வது துன்பம். தரையில் பட்ட கறையைத் துடைப்பதுபோல் மனிதனுக்கு ஏற்படும் துன்பத்தையும் போக்கிக் கொள்ள முடியும். துன்பத்தைத் துடைக்கும் ஆற்றல் மனிதனிடமே

உள்ளது. செயல்களின் உண்மையான தன்மையைப் புரிந்துகொண்டால் துன்பத்தைத் தவிர்த்தல் எளிது.

4) **துன்பத்தைத் துடைக்கும் வழி**. துன்பத்தைத் துடைக்க முடியும். ஒழிக்க முடியும். இதற்கு வழி உள்ளது. இவ்வழி எளிமையானது. எளிதில் பின்பற்றக்கூடியது. இதுவே எண்வகை வழியாகும்.

### நேர்மையான எண்முக வழிகள்

துக்கத்தைப் போக்க புத்தர் 8 வழிகளைக் காண்பித்தார். இந்த எட்டு வழிகள் அல்லது முறைகளும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. இவை துன்பத்தைத் துடைப்பதற்கான இன்றியமையா முன்தேவைகளாகும். இவற்றை ஒருங்கே கடைபிடிக்க வேண்டும். புத்தர் காட்டிய எட்டு வழிகளாவன:

1. நன்கு புரிந்துகொள்ளல்
2. நல்ல எண்ணம்
3. நல்ல பேச்சு
4. நல்ல செயல்
5. நல்ல வாழ்க்கை
6. நல்ல முயற்சி
7. நல்ல உள்ளம்
8. நல்ல மன ஒருமைப்பாடு

புத்தர் காட்டிய எட்டு வழிகளும் சங்கிலி இணைப்புபோல் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவை நான்கு பேருண்மைகளை அடைவதற்கான மார்க்கங்களாகும். சரியான மார்க்கத்தின் மூலமாக மட்டுமே சரியான முடிவை அல்லது நோக்கத்தை அடைய முடியும். இவை எட்டு நிலைகளல்ல. மாறாக இவை மனித நடத்தையின் எண்ணம், சொல், செயல் மூலம் வெளிப்படுகிறது. இவை மூன்றும் ஒரே நேர்கோட்டில் இருக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை வளம் பெறுகிறது.

### ஐந்து வழிகள்

வாழ்வாங்கு வாழ்தல் என்றால் என்ன? சீடர்கள் இவ்வினாவுக்கான விடையைப் புத்தரிடம் கேட்டனர். ஐந்து எளிய, சுருக்கமான, தெளிவான ஒழுக்க விதிகள் மூலம் சீடர்கள் கேட்ட வினாவுக்கு விடையளித்தார் புத்தர்.

1. எந்த உயிருள்ள பொருளையும் கொல்லாதே
2. கொடுக்கப்படாததை எடுக்காதே
3. பொய் பேசாதே
4. மது அருந்தாதே

5. ஒழுக்க நெறி தவறாதே

இவை ஐந்தும் எதிர்மறை விவேக வாக்குகளாகும்

### நடு வழி

எட்டு நேர்மையான வழிகளின் மூலம் நான்கு பேருண்மைகளைக் காணலாம், கடைபிடிக்கலாம் என்றார் புத்தர். இந்த எட்டு வழிகளில் பயணிக்கும் போது நிதானமாகச் செல்ல வேண்டும். மிகுவேகமோ ஆமை வேகமோ இலக்கை எட்ட உதவாது. எனவே மிதமிஞ்சிய செயல்களைத் தவிர்க்க வேண்டும். எதிலும் எல்லை மீறக் கூடாது. நிதானம் தேவை. மனிதன் சுய முயற்சியால் வாழ்வாங்கு வாழ முடியும். முடிவு அவன் கையில்தான் உள்ளது. இதற்குத் தெளிவான அறிவும், தூய உள்ளமும் அவசியம், வேள்விகளோ, சடங்குகளோ, உயிர்பலியோ தேவையில்லை. உடலின்பம், உடலை வருத்திக்கொள்ளல் என்ற இரண்டு எல்லை மீறல்களையும் மிதமிஞ்சிய செயல்களையும் தவிர்ப்பதே புத்தர் காட்டிய நடுவழியாகும். உடலை வருத்திக் கொள்வதாலோ, கடும் தவம் புரிவதாலோ, துறவு மேற்கொள்வதாலோ எந்த பயனுமில்லை என்பதை புத்தர் தன் வாழ்க்கை அனுபவத்தால் அறிந்து கொண்டார். மிதமான வாழ்க்கையே மேன்மையான வாழ்க்கை என்பதை புரிந்து கொண்டார். எனவே நடுவழியே நல்ல வழி என்ற முடிவுக்கு வந்தார். இந்த வழி தங்க நடுவழி என்றும் அறியப்படுகிறது.

### நிதானங்கள்

நிலையின்மை, துன்பம், தற்செறுக்கு ஆகிய மூன்றும் வாழ்க்கையில் நிலையாக உள்ளன. இவற்றை அகற்றுவதற்கு 12 நிதானங்கள் வேவை. ஆந்த நிதானங்கள் அனைத்தும் காரண காரியங்களோடு இணைக்கப்பட்டு சக்கரம் போால சுழன்று கொண்டிருக்கின்றன. 12 நிதானங்களாவன:

1. ஆன்மீக அறியாமை. அதாவது உண்மையின் தன்மை பற்றிய தெளிவின்மை
2. கர்மா என்று கூறப்படும் குடும்ப பாசபந்தம்
3. எதிலம் வேற்றுமை காண்பது.
4. உடலும் மனமும்
5. கண், காது, மூக்கு, நாக்கு, உடல் ஆகிய ஐம்புலன்
6. தூண்டுதலால் ஏற்படும் தொடர்பு
7. சிற்றின்பம்
8. ஏக்கத் தேடல்
9. ஒன்றையே உறுதியாகப் பற்றிக்கொள்ளல்
10. சும்மாயிருத்தல்

11. பிறத்தல்
12. முதுமை

இப்பன்னிரண்டு நிதானங்களும் சம்சாரம் என்று அழைக்கப்படுகிறது. இம்சம்சார சாகரத்திலிருந்து விடுபடுவதற்காக புத்தர் காட்டிய மார்க்கமே நிர்வாண நெறியாகும்.

**நிர்வாண நெறி**

நிர்வாண அல்லது நில்பானா என்ற சமஸ்கிருத /பாலி சொல்லக்குப் பல்வேறு தத்துவார்த்தங்களும், விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விளக்கங்கள் உலகியல் சார்ந்தாதகவும், சாராததாகவும் உள்ளன. இவ்வேறுபட்ட விளக்கங்களால் புத்தர் சாதாரண மக்களுக்குக் கூறிய நிர்வாண நெறி மிகுந்த சிக்கல்மிக்க தத்துவ விளக்கமாக உருமாறிவிட்டது. அதிகம் புழங்கிய கைமாறிய நாணயம் போலாகிவிட்டது. மூல எழுத்துக்கள் சரியாகப் புரியவில்லை.

புத்தர் மக்களுக்குக் கூறிய நிர்வாண நெறி என்ன? நிர்வாண நெறி என்பது நடைமுறை வாழ்க்கை அனுபவமாகும். புத்தர் பிரபங்சத்தின் தோற்றம், உலகின் ஆதியும் அந்தமுமற்ற தன்மை, இறந்த பின்னரும் உயிர் வாழ்தல், ஆத்மா, கடவுள் பற்றிய விவாதங்களைத் தவிர்த்தார். இத்தகைய வெற்று விவாதங்களால் மக்களுக்கு எந்த பயனுமில்லை என்று கருதினார் புத்தர். அவர் ஆன்மீகத்தின் நோக்கம் மக்களின் துயர் துடைப்பதாகும் என்று கூறினார். மனிதனுக்கு வேண்டியது மன அமைதி. துன்பம் நீங்கி மன நிறைவு பெற நான்கு வழிகளே உள்ளன.

1. ஆத்மா, சடங்குகள் ஆகியவற்றை நம்பாமை
2. காமத்தையும், வெறுப்பையும் வெற்றி கொள்ளல்
3. வெற்றி கொண்ட இவற்றை மீண்டும்
4. அநீத ஆசை, தற்செறுக்கு போன்ற வாய்மையற்ற அசுத்தங்களை அகற்றல். இவையே நிர்வாண நெறிக் கூறுகளாகும்.

**புத்தமதம் உருவாதல்**

புத்தர் சிந்தனையாளர், சமயவாதியல்லர். அவர் இவ்வுலக வாழ்க்கையில் அக்கறை கொண்டவர். மறுவுலக வாழ்க்கை பற்றிக் கவலைப்படாதவர். புத்தர் புலன்களுக்குட்பட்ட அறிவைப் பற்றி அக்கறை கொண்டாரேயன்றி, புலன்களுக்கு அப்பாற்பட்டவை பற்றி ஆர்வம் காட்டாதவர். அவருக்கு வழிபாட்டிலோ, சடங்குளிலோ நம்பிக்கையில்லை. மாறாக புத்தர் நன்னடத்தை, நல்லொழுக்கம் பற்றிப் பேசினார். கங்கையில்

குளிப்பதால் துன்பத்திலிருந்து விடுபட முடியாது, அனைத்து நீரும் கங்கை நீரே என்று கூறினார்.

கடவுள் இருக்கிறாரா இல்லையா? காலத்துக்கு துவக்கமும் முடிவும் உண்டா? உயிர் அழியக்கூடியதா அழிவற்றதா? போன்ற விவாதங்களில் பங்கேற்க மறுத்துவிட்டார் புத்தர். இவையாவும் தத்தவஞானிகளின் கற்பனை வாதங்கள் என்ற கருதினார். அணுவால் பிரபஞ்சத்தைப் புரிந்து கொள்ள முடியுமா? புத்தர் வானவியலோடு புராணத்தைக் கலக்க விரும்பவில்லை. அதேபோன்று அவர் ஆத்மாவும் உடலும் ஒன்றா? வெவ்வேறா? ஆத்மாவுக்கு அழிவுண்டா இல்லையா, என்ற விவாதமும் பொருளற்றதாகக் கருதினார். இவை பற்றிய சர்ச்சை பொம்மலாட்டம் போன்றது என்றார். இவையாவும் வெறும் ஊகங்களே என்பது அவரது கருத்தாகும். இவ்ஊகப் பாலைவனத்துக்குள் புத்தர் நுழைய விரும்பவில்லை. அவை பற்றிய விவாதம் மனிதனின் துன்பத்தை அதிகரிக்கும் என்றார். புனிதம் என்பது பிரபஞ்சம் அல்லது கடவுள் பற்றிய அறிவியல் இல்லை. மாறாக இது தன்னலமற்ற பிறருக்குப் பணி புரிந்து வாழ்வதில்தான் இருக்கிறது என்பது புத்தரின் போதனையாகும்.

**புத்தரின் வாழ்வியல் கொள்கை**

வாழ்க்கை துன்பமின்றி வாழ்வதற்கே என்பது புத்தரின் வாழ்வியல் கொள்கையாகும். மனிதனுக்கு வரும் பிணி, மூப்பு போன்றவற்றின் காரணங்களை அறிந்து மனிதனே தீர்வு காணலாம். பாரம்பரியம், பழக்கம், சூழ்நிலை, மக்கள் தொடர்பு ஆகியவை மனித வாழ்வை பாதிக்கின்றன. எனவே இவற்றைப் பற்றி நன்கறிந்து அதற்கேற்ப வாழ்க்கையை நெறிப்படுத்திக் தற்செறுக்கும், உண்மையறியா தப்பெண்ணமும் இத்தொடர்பைக் களங்கப்படுத்திவிடுகின்றன. அறிவைவிட உணர்ச்சியே மனிதனை சமநிலை இழக்கச் செய்கின்றது. உணர்ச்சி அறிவுக்கு அடங்கும் போது வாழ்க்கை அர்த்தமுள்ளதாகின்றது. மாற்றம் இயற்கையின் நியதி என்பதைப் புரிந்து கொண்டால் மனித வாழ்க்கை மேன்மையடைகிறது. தூய்மையான எண்ணங்களும், நல்ல நினைவுகளும் கண்டுணர்தலும் சரியாக இருந்தால் வாழ்க்கையும் சரியாக இருக்கும். பிறப்பும் இறப்பும் அனைவருக்கும் பொது. எனவே மனிதன் நான்கு பேருண்மைகளைப் புரிந்துகொண்டு எண்முக வழி சென்றால் வாழ்க்கையின் பயனைப் பெறலாம்.

**புத்தரின் கர்மாக் கோட்பாடு**

புத்தர் காலத்தில் கர்மா பற்றிய கருத்து காற்றைப்போல் அனைவராலும் சுவாசிக்கப்பட்டது. கர்மா பற்றிய நம்பிக்கை அனைவரது

குருதியிலும் கலந்துவிட்டிருந்தது. கர்மாக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட புத்தர் அதற்குப் புது விளக்கம் கொடுத்தார். மனிதனின் முற்பிறவி வினைகளுக்கேற்ப சாரமாகும். அதாவது முற்பிறவியில் விதைத்த வினைகளை இப்பிறவியில் அறுவடை செய்கிறோம். தீவினைகளுக்குப் பதில் நல்வினைகளைச் செய்வதன் மூலம் இக்கர்மா விஷ வட்டத்திலிருந்து விடுபட முடியும். மரணமிலாப் பெரு வாழ்வு வாழ முடியும் என்றார் புத்தர். நிர்வாண நெறியின் மூலம் அதைச் சாதிக்க முடியும் என்றார். இதுவே மனிதனின் இறுதிப் பேரின்பமாகும். புத்தர் தனது வாழ்நாளிலேயே தனது தர்மத்தை பரப்புவதற்காக சங்கத்தைத் தோற்றுவித்தார். இதற்கு அவரது ஐந்து பிரதம சீடர்களும் உறுதுணையாக இருந்தனர். சங்கத்தின் நடைமுறை விதிகள் (327) வகுக்கப்பட்டன. இவை யாவும் அன்றாட நடவடிக்கைகள், கட்டுப்பாடு, உணவு, உடை, மருந்து போன்றவை பற்றியவை. இவ்விதிகளை மீறுவோருக்குத் தண்டனைகளும் விதிக்கப்பட்டன. புத்தர் சங்கத்தின் மேலாண்மையில் சிறப்புக் கவனம் செலுத்தினார். இதை அவர் புத்த மார்ககப் பிரச்சாரக் கருவியாக உருவாக்கினார். அதற்காக வலுவான அடிப்படையை அமைத்துக் கொடுத்தார்.

**இருவகை உறுப்பினர்கள்**

புத்த சங்கத்தில் இரு வகையான உறுப்பினர்கள் இருந்தனர்:

1. பிக்குகள். இவர்கள் சீடர்கள், துறவிகள். இவர்கள் சங்க விதிகளையும் கட்டுப்பாடுகளையும் வழுவின்றிப் பின்பற்ற வேண்டும்.
2. புத்த மார்க்கத்தில் நம்பிக்கையுடைய மக்கள் பக்தர்கள் இவர்களுக்குச் சங்க கட்டளைகள் பொருந்தா

**புத்த பிக்குகள்**

யார் விரும்பினாலும் எவ்வித வேறுபாடுமின்றி புத்த சங்கத்தில் சேரலாம். புனித பிக்குவாக வேண்டுமெனில்

1. தலையை மழித்துக் கொள்ள வேண்டும்.
2. மஞ்சள் நிற ஆடை அணிய வேண்டும்
3. சங்கத்துக்கு விசுவாசமாக இருப்பதாக சபதம் எடுக்க வேண்டும்.

இச்சபதம் 3 ரத்தினங்கள் ஆகும். 1.தர்மம், 2)சங்கம் அதாவது புத்த மார்க்கத்தைப் பின்பற்றி புத்த தர்மத்தைக் காப்பாற்றி, புத்த சங்கத்தில் சேர்ந்து புத்த நெறியைப் பரப்புவதாகும்.

புத்த சபதத்தைக் காப்பாற்றுவதற்காக பிக்குகள் 10 கட்டளைகளை கடைபிடிக்க வேண்டும். 1) கொல்லாமை 2)திருடாமை 3) கற்பு காத்தல்

4)பொய் பேசாமை 5)மது அருந்தாமை 6)காலம் கடந்து உண்ணாமை 7)கேளிக்கைகளில் ஈடுபடாமை 8) மாலை, ஆபரணம், வாசைன திரவியம் தவிர்த்தல் 9) மிருதுவான படுக்கையில் உறங்காமை 10) பிரம்மச்சரியம் கடைபிடித்தல்.

**புத்த பிக்குனிகள்**

புத்த சங்கத்தின் பெண் துறவிகள் பிக்குனிகள் என்று அழைக்கப்பட்டனர். பிக்குகளுக்குள்ள கட்டுப்பாடுகள் இவர்களுக்கும் உண்டு. துவக்கத்தில் பெண்களை சங்கத்தில் சேர்ப்பதில் புத்தருக்குத் தயக்கம் இருந்தது. புத்தர் என்றைக்குமே பெண்களின் அறிவாற்றல், ஒழுக்க கட்டுப்பாடு, ஆன்மீக ஆர்வம் ஆகியவற்றை குறைந்து மதிப்பிட்டதில்லை. எனினும் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து துறவறம் பூண்டு சங்கத்தில் சேர்ந்தால் அவர்களது கை ஓங்கிவிடும் என்பதால் தயங்கினார். இதுபற்றி புத்தர் அவரது பிரதம சீடரான ஆனந்தாவிடம் விவாதித்தார். சங்கத்தில் சேர்ந்த பெண்கள் திறமைசாலிகள் என்பதை விரைவிலேயே நிரூபித்தனர். புத்தரால் சங்க சமத்துவம் பெற்ற பிக்குனிகள் சிறந்த தொண்டாற்றினர். 73 பிக்குனிகள் இயற்றிய பாடல்களிலிருந்து வருகின்றன. புத்தர் காலத்தில் மோ, உபாலவனா, பதாசரா, குந்தலகேசா சீசகோத்தமி, தம்மதினா, விசாகா ஆகிய 7 பிக்குனிகள் பெரும் புகழ்பெற்றுத் திகழ்ந்தனர்.

**புத்தமத வீழ்ச்சி**

விரைவாக வளர்ச்சியடைந்த புத்த மார்க்கம் புத்தருக்குப்பின் தளர்ச்சியடைந்தது. அதற்கான காரணங்களாவன:

1) வேத ஆதிக்கத்துக்கு எதிராக புத்தர் துவக்கிய மறுப்பியக்கமும் மாற்றியக்கமும் வேத மார்க்கத்தினரை சிந்திக்க வைத்தது. புத்தர் இயக்கம் வேதகால வேள்விமுறையில் விழுந்த இடியாகும். இந்த இடி இந்து மதம் தன்னைத் திருத்திக் கொள்வதற்கான எச்சரிக்கையாக அமைந்தது. பின்னர் வந்த சுங்க, கன்வ, குப்த மன்னர்கள் இந்து சமயத்துக்கும், சமஸ்கிருத மொழிக்கும் புத்துயிர் கொடுத்தனர். திருந்திய இந்து மதம் செல்வாக்கு பெற்றதால் புத்த சமயமாக்கப்பட்ட புத்த மார்க்கம் செல்வாக்கிழந்தது.
2) புத்த மார்க்கம் தளர்ச்சியடைவதற்கும் புறக் காரணத்தைவிட அகக் காரணமே முக்கியமாகும். துவக்கத்தில் கட்டுப்பாட்டுடன் புத்தர் காட்டிய பாதையில் பயணித்த பிக்குகளும், பிக்குனிகளும் அப்பாதையிலிருந்து வெகுதூரம் விலகிப் போய் பல்வேறு தீமைகளுக்கு அடிமையாயினர். புத்த மார்க்கம் வீரியமும் விவேகமும்

வேகமுமற்ற சனாதன சமயமாயிற்று. கடவுளைப் பற்றி கவலைப்படாத புத்தரையே கடவுளாக்கிவிட்டனர். சிலை வழிபாடும், வெற்றுச் சடங்குகளும், ஆடம்பர சோம்பல் வாழ்க்கையும் புத்த மார்க்கத்தை அர்த்தமற்றதாக்கிவிட்டன.

3) புத்த மார்க்கத்தினர் சமயவாதிகளானபின் அம்மார்க்கம் மகாபானம் ஹீனயானம் என்று இரண்டாகப் பிளவுபட்டது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் தானே? வழிபாட்டை எதிர்த்த புத்தரே வழிபாட்டுப் பொருளானார். புத்தர் சிலைகள் பூஜிக்கப்பட்டன. புத்த மார்க்கத்துக்கும் இந்து சமயத்துக்கும் வேறுபாடு இல்லாமல் போயிற்று. இந்து மதத்தின்கை மேலோங்கியது. புத்த மதம் பின்னுக்குத் தள்ளப்பட்டது.
4) புத்த மார்க்கம் வளர்ச்சிப் பாதையில் பயணித்தபோது அதற்கு அதிக எதிர்ப்பில்லை. பின்னர் இம்மார்க்கம் ஆக்க ஆற்றல் இழந்து, பிளவுபட்டு, பலவீனமானபோது சைவ சமயம், வைணவ சமயம் ஆகியவை புத்த சமயத்துக்குச் சவால் சமயங்களாயின. இச்சமயங்களின் தலைவர்கள் புத்த சமயத்துக்கெதிரான பிரச்சாரத்தைப் பலப்படுத்தினர். புத்த சமயத்தாரைப் பழிதீர்த்துக் கொண்டனர். புத்த மார்க்கம் பிறந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டது. இந்தியாவிலிருந்து விரட்டப்பட்ட புத்தமார்க்கம் அண்டை நாடுகளில் அடைக்கலம் புக வேண்டியதாயிற்று.
5) வெளிநாட்டவர் படையெடுப்புகளால் புத்த மார்க்கத்தக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. புத்த மார்க்கத்தில் நம்பிக்கையில்லாத ஹுணர்களும், துருக்கியரும் புத்த மடங்களைத் தரைமட்டமாக்கினர். புத்த இலக்கியங்களைத் தீக்கிரையாக்கினர். புத்தர் சிலைகளை சேதப்படுத்தினர். அகிம்சை வழி சென்ற புத்தமதத்தினரால் வன்முறை ஆக்கிரமிப்பாளர்களை எதிர்கொள்ள முடியவில்லை.
6) புத்தருக்குப்பின் புத்த மார்க்கத்துக்குத் தலைமையேற்று நடத்தக்கூடிய, பிறரை ஆட்படுத்தும் ஆளுமை ஆற்றலுடைய தலைவர் எவரும் தோன்றவில்லை. இத்தலைமைக் குறைபாட்டால் புத்தமார்க்கம் தளர்ச்சியடைந்தது. புத்த மார்க்கம் தளர்ச்சியடைந்ததேயன்றி அழியவில்லை. இந்தியாவில் அதன் செல்வாக்கை இழந்தாலும் உலகளவில் அதன் பெருமையை நிலைப்பெறச் செய்தது.

புத்த இலக்கியங்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1)வினய பிதகம். இந்நூலில் புத்த சங்கத்தின் ஆண், பெண் துறவிகள் கடைபிடிக்க வேண்டிய விதிகளும், வழிமுறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. 2)சுத்த பிதகம். இது 5 நிகாயாக்களாகத் தொகுக்கப்பட்ட புத்தரின் நெறிமுறைப் பேருரைகளாகும். 3)அபிதம்ம பிதகம். இந்நூலில் புத்தரின் விரிவான விளக்கங்கள் உள்ளன.

4)ஜதகங்கள். 500 கதைகளில் புத்தரின் முற்காலப் பிறப்புகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவையன்றி மிலின்தாபான்ஹோ என்பது கிரேக்க மன்னன் மினாண்டருக்கும் புத்த துறவி நாகசேனருக்கு மிடையே நடைபெற்ற உரையாடலாகும். பிற்கால புத்த இலக்கியங்களில் புத்தர், புத்தமதம், அதன் வளர்ச்சி பற்றிய தகவல்கள் உள்ளன.

**சமண மதம்**

கி.மு. ஆறாம் நூற்றாண்டு வட இந்திய வாலாற்றில் பெரும் திருப்பமுனையை எற்படுத்திய காலகட்டமாகும். இந்நூற்றாண்டில் அங்கு அசாதாரணமான அறிவுத் தேடல் காணப்பட்டது. சமயத்துறையில் ஆதிக்கம் செலுத்தி வந்த வேத மதம் கேள்விக்குறியாயிற்று. வேதங்கள் கடவுளால் அருளப்பட்டவை. வேதங்களில் கூறப்பட்டவை, இறுதியானவை, மாற்ற முடியாதவை, பிராமணப் புரோகிதர்களே கடவுள்களுக்கும் மக்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தக்கூடியவர்கள். அவர்களுடைய வாக்கே தெய்வத்தின் குரல், வேள்விகளும், உயிர்பலியும், சமயச் சடங்குகளும் தவிர்க்கமுடியாதவை வர்ண சாதி அடுக்கு முறை இயல்பான சமுதாய அமைப்புதான் போன்ற வேத மதத்தின் அடிப்படை நம்பிக்கைகள் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டன. பல சுய சிந்தனையாளர்கள் வேத மதத்துக்கு மாற்று மார்க்கங்களைத் தோற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பிரபஞ்சம், உலகம், மனிதனின் வாழ்வியல் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. சுய சிந்தனையாளர்களுள் சித்தார்த்த புத்தரும், வர்த்தமான மகாவீரரும் ஒட்டிப் பிறவாத இரட்டையர்களாகத் தன்னிகரற்றுத் திகழ்ந்தனர். இவ்விருவரும் ஒரே நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தமையால் சமகாலத்தவராகக் கருதப்படுகின்றனர். இவ்விருவருக்குள் ஒற்றுமைகள் காணப்படினும் அடிப்படை வேறுபாடுகள் இருந்தன.

**வர்த்தமானின் வாழ்க்கை, கி.மு. 539- கி.மு 467**

கி.மு ஆறாம் நூற்றாண்டில் வடபீகாரில் 8 குடியரசுகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவற்றுள் ஒன்று வைசாலியைத் தலைநகராகக் கொண்ட வைஜி நாடாகும். இக்குடியரசில் வைசாலிக்கு அருகாமையில் இருந்தது குண்ட கிராமம். வைஜி நாட்டை ஆண்ட வந்தார் சித்தார்த்தர். சுத்ரிய குலத்தைச் சேர்ந்த இவர் லிச்சாவிக் கடியருசுத் தலைவரின் மகள் திரிசாலாவை மணந்து கொண்டார். அவர்களுக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் வர்த்தமானர் (கி.மு. 539) வளமான அரண்மனைச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட சித்தார்த்தரின் மகன் வர்த்தமானர் சத்திரியக் கல்வியிலும், கலைகளிலும் தேர்ச்சி பெற்றார். இளைஞன் வர்த்தமானருக்கு யசோதரா என்ற பெண்ணை மணமுடித்து வைத்தனர். இத்தம்பதியருக்கு அனோஜா என்ற பெண்குழந்தை பிறந்தது. வர்த்தமானருக்கு ஆடம்பரமான அரண்மனை

வாழ்க்கை, அழகான மனைவி, அருமையான மகள், ஆனந்தமான குடும்பம். வர்த்தமானருக்கு 30 வயதாக இருந்த போது அவரது பெற்றோர் அக்கால வழக்கப்படி உண்ணா நோன்பிருந்து இறந்தனர். பெற்றோரின் இழப்பைத் தாங்கமுடியாத வர்த்தமானர் இல்லற வாழ்க்கையைத் தறந்து துறவற வாழ்க்கையை மேற்கொண்டார்.

அரண்மனையைவிட்டு வெளியேறிய வர்த்தமானர் இரண்டாண்டுகள் பார்சவ நாதர் தோற்றுவித்த சமயத்தில் சேர்ந்தார். இச்சமயத்தில் சலிப்புற்ற வர்த்தமானர் அடுத்த பத்தாண்டுகள் துறவியாக திரிந்தார். இப்பத்தாண்டுகளில் முதல் ஆறாண்டுகள் அஜிவிகா அமைப்பைத் தோற்றுவித்த கோசலாவின் சீடராக இருந்து, அவர் சென்றவிடமெல்லாம் அவருடன் சென்று உலகறிவு பெற்றார். அதன்பின் தனது 42வது வயதில் கிழக்கிந்தியாவில் ஜிரிம்பிகா கிராமத்தில் பவா என்ற இடத்தில் சால மரத்தடியில் அமர்ந்து அறிவொளி பெற்றார் வர்த்தமானர். துறவியானார். அடுத்த பத்தாண்டுகள் தான்பெற்ற அறிவொளியைப் பரப்பும் பிரச்சாரப் பணியை மேற்கொண்டார்.

இப்பணியைத் தொடர்வதாக சங்கம் அமைத்தார் சித்தார்த்தர். இவரது கொள்கையில் நம்பிக்கையுள்ளோரை சங்க உறுப்பினர்களாகச் சேர்த்தார். இவர்கள் நிர்கிரந்தர்கள் என்று அழைக்கப்பட்டனர். நிர்கிரந்தர்கள் என்றால் தளைகளிலிருந்து விடுபட்டோர் என்று பொருள். வர்த்தமானின் சீடர்கள் இவரை ஜைனர் அல்லது ஞானம் பெற்றவர் என்றும் மகாவீரர் அல்லது மரணத்தை வெற்றிகொண்டவர் என்றும் அழைத்தனர். வர்த்தமானரும் அவரது சீடர்களும் நிர்கிராந்தர்களும் ஜைனர்கள் அல்லது சமணர்கள் என்று அறியப்பட்டனர். வர்த்தமான மகாவீரர் மகத மன்னர்கள் பிம்பிசாரர், அஜாதசத்கு ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்ற கூறப்படுகிறது. மகாவீரரின் வாழ்நாள் இறுதியில் அவரது சங்கத்துக்குள்ளேயே எதிர்ப்பு இருந்தது. அதுமட்டுமல்ல. அவர் புத்த மதத்தினரோடும் மோத வேண்டியிருந்தது. இந்த அக-புற எதிர்ப்புகளுக்கிடையே வர்த்தமான மகாவீரர் ராஜகிரகத்துக்கு அருகாமையில் அறிவொளி பெற்ற பவா என்ற இடத்தில் தனது 72வது வயதில் உண்ணா நோன்பிருந்து அமரரானார். (கி.மு. 467)

**வர்த்தமானரின் வாக்கு**

வர்த்தமானார் மகாவீரர் எந்த சமயத்தையும் தோற்றுவிக்கவில்லை மாறாக அவர் வேத மதத்தை மறுத்து மாற்று மார்க்கத்தைக் காட்டினார். இந்த மாற்றுமார்க்கத்தைப் பற்றி அறிந்துகொள்ளுமுன் அவருக்கு பார்சவநாதரது மார்க்கத்துக்குமிடையேயான தொடர்பைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. சமண மார்க்க மரப்புப்படி

தீர்த்தங்கரர்கள் இருந்தனர். இவர்களில் வரலாற்று வெளிச்சத்தக்கு வந்த பார்சவ நாதர் 23வது தீர்த்தங்கரர். தீர்த்தங்கரர் என்றால் வாழ்வென்னும் ஆற்றைக் கடக்கப் பாலமாக பயன்படுபவர் என்று பொருள். வாரணாசியின் அறப்புதல்வராய்த் திகழ்ந்த பார்வச நாதர் 1)தீங்கிழைக்காமை 2)வாய்மை 3)பற்றின்மை 4)திருடாமை ஆகிய நான்கு விரதங்களை போதித்தார். இந்த நான்கு விரதங்களையும் உள்வாங்கிக் கொண்ட மகாவீரர் பிரம்மச்சரியம் என்ற ஐந்தாவது விரதத்தையும் சேர்த்து ஐந்து விரதங்களாக்கினார். அதுமட்டுமல்ல. மகாவீரர் மேலும் சென்று பிரம்ச்சாரிகளுக்கு ஆடையே ஒரு ஆசையும் பாரமும் எனக்கூறி ஆடையையும் நீக்கிவிட்டார். புறப்பொருட்கள் அனைத்தையும் துறந்தவர்கள் தான் சுதந்திர துறவியாகமுடியும் என்றார் மகாவீரர். முற்றும் துறந்தவர்களுக்கு ஆடை எதற்கு? ஆசை எதற்கு? இந்த நிலைப்பாட்டின் விளைவே முப்பெரும் மார்க்கங்களாகும்.

**மூன்று மார்க்கங்கள்**

மனிதன் பிறப்பு-இறப்புச் சுழற்ச்சியிலிருந்து விடுபடுவதற்காக மூன்று மார்க்கங்களைக் காட்டினார். இவை மூன்று மாணிக்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன. 1.தன்னம்பின்னை 2.நல்லறிவு 3.நன்னடத்தை

1. **நன்னம்பிக்கை/ நற்பார்வை**

நன்னம்பிக்கை என்பது சரியான பார்வையைக் குறிக்கிறது. சரியான பார்வை என்பது அறிவுப் பார்வையாகும். அதாவது அறிவை அளவுகோலாகக் கொண்டு மனித வாழ்க்கையை ஆராய வேண்டும். இது சமண மார்க்கத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகவும் தொலைப் பார்வைத் திட்ட அறிக்கையாகவும் கருதப்படுகிறது. உலகப் பொருட்களை இரு வகையாகப் பிரிக்கலாம். 1.உயிர் வாழ்வன 2.உயிரற்றவை. வாழ்க்கை என்பது இவ்விரண்டுக்குமிடையேயான தொடர்பு பற்றிது. இவ்விரண்டுக்குமிடையே தொடர்பு ஏற்படும்போது உரசல்களும், பிரச்சனைகளும் தோன்றுகின்றன. இவற்றைக் கண்டறிந்து நீக்கினால் சரியான முடிவுகளை எடுத்து வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கலாம். பிறப்பு-இறப்பு சுழலிலிருந்தும் விடுபடலாம்.

இந்த வாழ்வியல் பார்வையை மேலும் கூர்மையாக்க வேண்டுமெனின் 9 அடிப்படைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். 1.உயிர் வாழும் ஜீவன் 2.உயிரற்ற ஜீவன் 3.நல்வினை/நல்ல நடவடிக்கை 4.தீவினை/கெட்ட நடவடிக்கை 5.கருமங்கள் அல்லது காரியங்களின் குவிப்பு 6.பந்தங்கள் 7.கருமங்களின் குவிப்பைக் களைதல் 8.பந்தங்களை ஒழித்தல் 9.பிறவியிலிருந்து விடுபடல். இதுதான் மகாவீரரின் பகுத்தறிவு பூர்வமான வாழ்வியல்

விளக்கமாகும். இதுவே நன்னம்பிக்கை என்று அறியப்படுகிறது. இதுவே சமண சமயத்தில் தத்துவார்த்தனம் சம்யுக்த தரிசனம் என்று கூறப்படுகிறது.

### 2. நல்லறிவு

மனிதனின் அறிவு இரண்டு வழிகளில் பெறப்படுகிறது. 1. புலன்களின் வாயிலாகப் பெறப்படும் அறிவு 2.புத்தகங்களின் வழியாகப் பெறப்படும் அறிவு. இந்த அறிவை மனிதன் வண்ணக் கண்ணாடி அணிந்து கொண்டு பெறுவதால் உண்மையின் உண்மைத்தன்மை தெரிவதில்லை. இருட்டில் பொருட்களைத் தேடுவதுபோலத் தான் இதுவும் பகுத்தறிவு என்ற வெளிச்சத்தைக் கொண்டு பார்த்தால் உண்மை செயற்கைளான நிறங்கள் இல்லாமல் இயற்கை எழிலோடு தெரியும். நுற்பார்வையும் நல்லறிவும் ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டும். முடவன் குருடனின் தோள்மீது எறிக்கொண்டால் போக வேண்டிய இடத்தை எளிதில் அடைந்து விடலாமல்லவா? மேலும் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்தால் தான் உண்மையான அறிவைப் பெற முடியும். அப்போதுதான் பலதரப்பட்ட மாறுபட்ட கருத்துக்களையும் புரிந்து கொள்ள முடியும். இதன் விளைவாக தப்பெண்ணங்கள் நீங்கி மாறுபட்ட கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்கவம் வரும். நுல்லறிவே உண்மையை அறிவதற்கான படிக்கல்லாகும். சுருங்ககூறின் ஒரு உண்மையைப் பல கோணங்களிலிருந்து பார்ப்பதே நல்லறிவாகும். இது அறிவியல் நோக்காகும்.

மகாவீரர் இந்த பகுத்தறிவு அளவுகோலைக் கொண்டு கடவுளுக்கு விளக்கம் கொடுத்தார். உலகத்தை எவரும் தோற்றுவிக்கவில்லை. அது இயற்கையாகவே இருக்கிறது. அதை யாராவது தோற்றுவித்தால் தோன்றுவித்தவரைத் தோற்றுவித்தவர் ஒருவர் இருக்க வேண்டுமல்லவா? அதாவது கடவுள் உலகத்தைத் தோற்றுவித்தார் என்றால் கடவுளைத் தோன்றுவித்தவர் யார்? எனவே இவ்வுலகம் கடவுளின்றி இயற்கையாகவே இயங்கி வருகிறது என்பது மகாவீரரின் வாதம். எனவே இவர் நாத்திகர் என்று கூறப்படுகிறார்.

### 3. நன்னடத்தை

நல்லறிவு நன்னடத்தைக்கு ஊன்றுகோலாகவும், வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். நல்லறிவின்றி நன்னடத்தையில்லை. நல்லறிவையும் சரியாகப் பயன்படுத்தினால்தான் நடத்தை நேர்மையாக இருக்கும். நடத்தை நேர்மையாக இருக்கவேண்டுமாயின் ஒவ்வொருவரும் சில சூளுரைகளை/விரதங்களை/சத்தியங்களைக் கடைபிடிக்க வேண்டும். அவையாவன:1.இன்முறை 2.வாய்மை 3.திருடாமை 4.புலனடக்கம்

5.பொருள்பற்றின்மை. இந்த ஐந்து சூளுரைகளும் சமணத் தறவிகள் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.

### இல்லற விரதங்கள்

இல்லறத்தில் இருப்போர் மேற்கண்ட விரதங்களை முடிந்தவரை பின்பற்றலாம். இல்லறத்தில் கடைபிடிக்க வேண்டிய விரதங்கள் ஏழு: 1.முடிந்தவரை நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்ளல். அப்போது உறவு உரசல்களும் வன்முறையும் குறையும். 2. நுகர்பொருட்களின் அளவைக் கட்டுக்குள் வைத்தல். 3. நோக்கமற்ற நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ளல். 4.ஒவ்வொரு நாளும் குறைந்த அளவேனும் தியானம் செய்தல் 5.முடிந்த வரை துறவு வாழ்க்கை. 6.அன்றாட நடவடிக்கைகளில் கட்டுப்பாடு. 7.முடிந்த அளவுக்குப் பிறருக்கு உதவுதல். இந்த ஏழு விரதங்களும் சாதி, மத, நிற வகுப்பு பேதமின்றி அனைவரும் கடைபிடிக்க வேண்டும்.

### சமணக் கோட்பாடுகள்

மனிதன் நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கு சில கோட்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டும். அவையாவன:

1. பன்முக உண்மை. முதலில் உண்மையின் பன்மையை புரிந்து கொள்ள வேண்டும்.
2. நிபந்தனைக்குட்பட்டது. எந்த உண்மையையும் உறுதியாகக் கூறக்கூடாது. இருக்கலாம், இருக்ககூடும் போன்ற முற்சேர்க்கையோடு கூறவேண்டும். இது சியாத்வாதம் எனப்படுகிறது.
3. காட்சிக்கோணம். எந்த உண்மையும் ஒரு சார்புடையதால் ஒவ்வொருவரது காட்சிக்கோணமும் ஒவ்வொரு விதமாக இருக்கக்கூடும். எனவே, உண்மையை அனுமானமாகத் தான் கூற இயலும். இது நயவாதம் எனப்படுகிறது.
4. கர்மாக் கோட்பாடு கர்மாவும் ஆன்மாவும் சேர்த்தே பேசப்படுகிறது. இது பற்றிய மகாவீரரின் விளக்கம் வருமாறு: தங்கக் கனி வெட்டி எடுக்கப்படும் போது தூய்மையற்றிருக்கிறது. அதே போன்று ஆன்மாவும் கர்மாவால் தூய்மை கெட்டிருக்கிறது. ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் முறையைத் தெரிந்து கொண்டால் தூய்மையான ஆன்மாவை அடையலாம். எனவே நடத்தையில் நேர்மை, வாக்கில் வாய்மை, உலகறிவு இருந்தால் ஆன்மாவும் தூய்மையாக இருக்கும். சுருங்கக்கூறின் தூய ஆன்மா தூய கர்மாவின் வெளிப்படாகும்.
5. பிரபஞ்ச கோட்பாடு மகாவீரரின் பிரபஞ்சக் கோட்பாடு அறிவியல்பூர்வமானது. பிரபஞ்சத்தை யாரும் தோற்றுவிக்கவில்லை. பிரபஞ்சமும் அதன் பகுதிகளும் இயக்கமும் இயற்கையாகவே

உள்ளன. இடமும் காலமும் ஆதியும் அந்தமுமற்றது என்பது மகாவீரரின் அனுமானம்.

**தீர்த்தங்கரர்கள்**

சமண மரபுப்படி ரிஷபதேவரிலிருந்து மகாவீரர் வரை 24 தீர்த்தங்கர்கள் இருந்துள்ளனர். இவர்களுள் முதல் 22 தீர்த்தங்கர்களின் பெயர்கள் தெரிந்த அளவுக்கு இவர்களைப்பற்றிய வரலாற்று விவரங்கள் தெரியவில்லை. 23வது தீர்த்தங்கரரைப் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் உள்ளன. இவரது மார்க்கத்தில் சென்றவர்தான் வர்த்தமானர் மகாவீரர். தீர்த்தங்கரர் என்றால் மனிதன் அறிவொளி பெற்று பிறப்பு-இறப்பு வட்டத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு உதவுபவர் என்ற பொருள். இவர்கள் மக்களுக்கு முன்மாதிரியாக இருந்து வழிப்படுத்தும் ஆன்மிக வழிகாட்டிகள். இவர்கள்தான் ஆண்-பெண் துறவிகள், இருபால் மக்கள் துறவிகள் ஆகியோரைக் கொண்ட சமண சங்கத்தை நிறுவியவர்கள்.

வர்த்தமான மகாவீரரைப் பற்றிய சமக்காலச் சான்றுகள் கிடைக்கவில்லை. இவரைப் பற்றிய இலக்கியம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பாடலிபுத்திரத்தில் கூடிய சமண மன்றத்தில் தொகுக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டது. பூர்வாங்கங்கள் என்றழைக்கப்படும் இச்சமண இலக்கியம் 12 பகுதிகளைக் கொண்ட 14 நூல்களாகும். இவ்விலக்கியத்தின் 12 அங்கங்கள் கால ஓட்டத்தில் பல காணாமல் போய்விட்டன. எனவே கி.பி. அறாம் நூற்றாண்டில் வல்லபியில் கூடிய சமண மன்றத்தில் எஞ்சியிருந்த அங்கங்கள் மறுசீரமைக்கப்பட்டன. சமண இலக்கியம் மக்கள் மொழியான பிரகிருதத்தில் எழுதப்பட்டுள்ளது. எனவே கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாவீரரைப் பற்றி கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வடிவமைக்கப்பட்ட இலக்கியத்தைச் சான்றாகக் கொண்டு தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. மகாவீரரைப் பற்றிய காலவரன்முறை உத்தேசமான ஒன்றுதான்.

**பாரசீகப் படையெடுப்பு**

பாரசீகத்துக்கும் (ஈரான்) இந்தியாவுக்கும் இடையேயான தொடர்பு தொன்மையானது. தொடர்ச்சியானது. பாரசீகர்களும் இந்தோ-இரேனியரும் (அரியர்) ஓரினத்தைச் சேர்ந்த இரண்டு பிரிவினர். இந்தோ-இரேனியர் பாரசீகத்தை விட்டுப் புலம் பெயர்ந்து, சிறிய ஆசியாவை அடைந்து, அங்கிருந்து கைபர் கணவாய் வழியாக வந்து வடமேற்கு இந்தியாவில் குடியேறினர். பாரசீகத்தவரும் இந்திய ஆரியருக்குமிடையேயான கலாச்சார ஒற்றுமை நெருக்கமானது. எனவே வடமேற்கு இந்தியா பாரசீகக் கலாச்சார விரிவாக்கமாகவே இருந்தது.

**மகாசைரஸ்**

பர்சியாவின் மகாசைரஸ் (கி.மு. 558- கி.மு. 530) அகமேனியன் பேரசைத் தோற்றுவித்து லிடியர்களைத் தோற்கடித்து, பாபிலோனியாவை ஆக்கிரமித்து சிறிய ஆசியாவிலிருந்து கிரேக்க நகரங்களைக் கைப்பற்றி, கிழக்கு நோக்கி திரும்பி இந்தியாவின் வடமேற்கு எல்லைவரை விரிவுபடுத்தினர். இப்பேரரசு பண்டைய உலகின் பலமிக்க பேரரசுகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. சைரஸ் ஆற்றல்மிக்க விரிவாக்கவாதி. அவர் வடமேற்கு இந்தியாவைத் தனக்குச் சொந்தமானது என்று கருதினார். எனவே பர்சியாவின் இயற்கை வளங்களை, குறிப்பாகக் கனிம வளங்களைப் பயன்படுத்தி வலிமைமிக்கப் போர்ப்படையை உருவாக்கினார். பிற பகுதிகளை வென்ற சைரஸ் இந்திய இரேனிய எல்லைப் பகுதிகளைக் கைப்பற்றினார். காபூல் சமவெளியைக் கையகப்படுத்திக் கொண்டார். அதன்பின் வடமேற்கு இந்தியாவில் பல சிறிய ஆட்சியாளர்களுக்கிடையே நிலவிய ஒற்றுமையின்மையைப் பயன்படுத்திக்கொண்டு ஜீலம் நதிக்கு வடக்கே இருந்த காந்தாரத்தை (இன்றைய பெஷாவர், ராவல்பிண்டி, காபூல் பகுதிகள்) தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தார். காந்தாரம் சைரசின் அகேமேனியன் பேரரசின் மகாணங்களில் ஒன்றாக்கப்பட்டது.

பொதுவாக சைரஸ் மகாணங்களையும், மக்களையும் மதிக்கத் தெரிந்தவர். இம்மாகாணங்களிலிருந்து சைரஸ் எதிர்ப்பார்த்தவை மூன்று 1.அவரது மேலாண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும் 2.மாநில அளுநர்களுக்குக் கீழ்ப்பணிந்திருக்க வேண்டும் 3. தவறாது திறை செலுத்த வேண்டும். இம்மூன்று நிபந்தனைகளுக்குட்பட்டு அகேமேனிய மகாணங்கள் சுயேட்சையாகச் செயல்படலாம்.

**முதலாம் டேரியஸ்**

சைரசின் வாரிசான காம்பிசஸ் (கி.மு 530-கி.மு 522) பார்சியப் பேரரசைப் பாதுகாப்பதிலும், எகிப்தை ஆக்கிரமிப்பதிலும் தீவிரமாக இருந்தமையால் இந்தியாவின்மீது அவரது கவனம் திரும்பவில்லை. அவருக்குப்பின் பர்சிய மன்னரான முதலாம் டேரியஸ் (கி.மு. 522 –கி.மு. 486) மகா சைரஸ் விட்டுச்சென்ற பேரரசு விரிவாக்கத்தைத் தொடர்ந்தார். இவர் தன்னை மன்னர்களின் மன்னர் என்று கல்வெட்டில் பதிவு செய்தார். டேரியஸ் பர்சியப் பேரரசை மேற்கே மாசிடோனியா வரைக்கும், கிழக்கே சிந்து சமவெளி வரையும் விரிவுபடுத்தினார்.

டேரியஸ் அறிவுபூர்வமாக செயல்பட யதார்த்தவாதி. எண்ணித் துணிந்தவர். எனவே சிந்து சமவெளியைக் கைப்பற்றுவதற்கு முன்பாக ஸ்கைலாக்ஸ் என்பவரின் தலைமையின் கீழ் ஒரு படையை அனுப்பி சிந்து

சமவெளி பற்றிய தகவல்களை சேகரிக்கச் செய்தார். வந்தவர் சிந்து நதியைக் கடந்து சென்று சிந்து சமவெளி பற்றிய அனைத்துத் தகவல்களையும் திரட்டினார். இவர் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் டேரியஸ் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து சிந்து வெளியையும், பஞ்சாப்பையும் கைப்பற்றிப் பர்சியப் பேரரசுடன் இணைத்தார். சிந்து-பஞ்சாப் பகுதி இப்பேரரசின் 20வது மாகாணமாயிற்று. எனவே பர்சியப் பேரரசின் இந்தியப் பகுதி சிந்து, வடமேற்கு எல்லை மாகாணத்தின் ஒரு பகுதி, பஞ்சாப்பின் பெரும் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.

டேரியஸ் திறமைமிக்க ஆக்கிரமிப்பாளர், ஆளுமைத்திறன்மிக்க டேரியஸ் பர்சியப் பேரரசை விரிவுபடுத்திதோடு, அதை ஒருங்கிணைத்து வலிமைப்படுத்தினாார். இவர் அரசாங்க அதிகாரத்தை 20 மாகாணங்களுக்கும் பகிர்ந்தளித்தார். அதிகாரப் பரவல் முறைக்கு டேரியசாஸ் அமைப்பு வடிவம் கொடுக்கப்பட்டது.

ஒவ்வொரு மாகாணமும் இளவரசர் அல்லது அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அரச ஆய்வாளர்கள் இவர்களது செயல்பாடுகளை மேற்பார்வை செய்தனர். அரச செயலகம் மகாணங்களுக்கிடையேயான செய்தித் தொடர்பைக் கவனித்துக் கொண்டது.

அராமிக் மொழி நிர்வாக மொழியாக்கப்பட்டது. இம்மொழி நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக இருந்தது. மாகாணங்களை இணைப்பதற்காக நெடுஞ்சாலைகள் போடப்பட்டன. விரைவான செய்திப் போக்குவரத்து பேரரசின் பகுதிகளை ஒருங்கிணைக்கும் கருவியாகப் பயன்பட்டது.

முதலாம் டேரியஸ் பெர்சிபொலிசைத் தலைநகராகக் கொண்டு பர்சிய பேரரசை திறமையாக மேலாண்மை செய்தார். அன்றைய சிந்து செல்வச் செழிப்போடு இருந்தது. இந்த மகாணம் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் திறை செலுத்தியது. அதுமட்டுமல்ல. கிரேக்கர் பாரசீகத்தின்மீது படையெடுத்தபோது (கி.மு 480) இந்தியப் படை கிரேக்கர்களுக்கு எதிராகப் போரிட்டது.

**செர்க்சஸ்**

முதலாம் டேரியசுக்குப்பின் பர்சியப் பேரசானவர் செர்க்சஸ் (கி.மு 486-கி.மு 465) ஆவார். இந்திய மகாணங்களை மரபுரிமையாகப் பெற்ற செர்க்சஸ் அவற்றின் வளங்களை பர்சியப் பேரரசுப் பெருக்கத்துக்குப் பயன்படுத்திக்கொண்டார். இம்மாகாணங்கள் அசேமேனியன் பேரரசின் மிக்க வளமுள்ள பகுதியாக இருந்தது. செர்க்ஸ் கிரேக்கத்துக்கு எதிராகப் போர் தொடுத்தபோது இந்தியப் படை வீரர்களைப் பயன்படுத்தி கொண்டார்.

எனினும் பிளாடாயே (கி.மு 479) வில் நடைபெற்ற போரில் செர்க்சின் படை படுதோல்வி கண்டது.

மகா சைரசால் தோற்றுவிக்கப்பட்டு, முதலாம் டேரியசால் விரிவாக்கப்பட்ட பர்ச்சியப் பேரரசு அழிவுப் பாதையில் பயணிக்கத் தொடங்கியது. கிரேக்கத் தோல்விக்குப்பின் பர்சியப் பேரசர்களால் இந்திய மாகாணங்களின்மீது போதிய கவனம் செலுத்த முடியவில்லை. மூன்றாவது டேரியஸ் (கி.மு. 330) ஆட்சியின்போது இம்மாகாணங்களின் மீதான பர்சியப் பிடி தளர்ந்து போயிற்று. அலெக்சாந்தர் வடமேற்கு இந்தியாவின்மீது படையெடுத்தபோது அவரை எதிர்கொள்ள பர்சியப் படை எதுவும் அங்கில்லை.

**பர்சியப் படையெடப்பின் விளைவுகள்**

பாரசீகப் படையெடுப்புகளின் நேரடி மற்றும் மறைமுக விளைவுகள் வருமாறு:

1. பாரசீகத் தலைநகர் பெர்சிபொலிசில் இருந்து கொண்டு ஒரு பேரசை எவ்வாறு உருவாக்கி நிர்வகிக்க வேண்டும் என்பதற்குப் பர்சியர்கள் முன்னுதாரணமாக இருந்தனர்.
2. ஒரு மாகாணம் எவ்வாறு அறிவுபூர்வமாக, முறையாக, ஒழுங்காக நிர்வகிக்கப்படல் வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தது. பர்சியரின் அதிகாரவர்க்க ஆட்சி முறை அதிசயிக்கத்தக்கது.
3. அரசவை நடத்தை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இந்தியர் அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.
4. இந்தியாவுக்கும் பாரசீகத்துக்குமிடையே வாணிபத் தொடர்பு பலப்பட்டது.
5. முதன்முறையாக இந்தியாவில் கரோஸ்தி எழுத்துமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.
6. இரு நாடுகளின் பரஸ்பர மக்கள் தொடர்பால் கருத்துப் பரிமாற்றமும், கலாச்சாரக் கலப்பும் ஏற்பட்டன. தத்தவ ஞானிகளும், அறிவுஜீவிகளும் தங்களுடைய தத்துவங்களையும், கொள்கைகளையும் பகிர்ந்து கொண்டனர்.
7. இந்திய-பாரசீகத் தொடர்பால் இந்திய அரசியல், சமுதாய, பொருளாதார, கலாச்சார வரலாற்றை வரைய பெரிதும் உதவியது.
8. இரு நாட்டு மக்கள் தொடர்பால் வடமேற்கு இந்தியாவில் கலப்புத் திருமணங்கள் அதிகரித்தன.
9. காந்தாராத்தில் வேத, பர்சிய சமயங்கள் சங்கமித்தன. இரண்டும் ஆரிய சமயங்கள்.
10. அசோகரது கல்வெட்டுகள் பாரசீகத் தாக்கத்தின் விளைவேயாகும்.

**இந்தியாவின் நிலை**

அலெக்சாந்தரின் படையெடுப்பின்போது வடமேற்கு இந்தியாவின் நிலை என்ன? வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவில் பல சிறிய, பெரிய குடியரசுகளும், முடியரசுகளும் இருந்தன. குடியரசுகளுக்குள் ஓரளவுக்குக் கூட்டாட்சி அமைப்பு இருந்தது. எனினும் இவை மூர்க்கத்தனமான சுதந்திர உணர்வுமிக்கவையாக இருந்தன. இவை கூட்டாட்சி அமைப்பில் இருந்தாலும் தங்களது சுயாட்சியை இழக்கத் தயாராகயில்லை. எனினும் இவைகளுக்கிடையே இணக்கமான அரசியல் சூழ்நிலை நிலவியது.

அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுக்கக் காரணங்கள்

1. தந்தை இரண்டாம் பிலிப்பின் பேரரசுப் பெருக்கக் கொள்கையைப் பின்பற்றி, அவரது ஆசிய ஆக்கிரமிப்புகனவை நனவாக்கல்
2. பாரசீகத்தக்குத் தக்க பாடம் கற்பித்தல்
3. பாரசீகப் பேரரசின் பகுதியான மேற்கு இந்தியாவை கைப்பற்றல்
4. அலெக்சாந்தரின் புவியியல் ஆர்வம்
5. இந்தியாவில் அதிசயிக்கத்தக்க தத்துவ ஞானிகளும், பேரறிஞர்களும் இருப்பதாக கேள்விப்பட்ட அலெக்சாந்தர் அவர்களை சந்தித்து உரையாட விரும்பினார்.
6. கிரேக்க வரலாற்று வித்தகர் ஹெரடோட்டஸ் வழியாக இந்தியாவின் நம்பமுடியாத செல்வத்தைப் பற்றி அறிந்த அலெக்சாந்தர் அச்செல்வத்தைக் கொண்டு அவர் கனவு கண்ட உலகப் பேரசை உருவாக்கத் திட்டமிட்டார்.

பாரசீகப் பேரரசை வெற்றி கொண்டு பணிய வைத்த அலெக்சாந்தர் அப்பேரரசின் பகுதியாக இருந்த வடமேற்கு இந்தியாவையும் அதோடு இணைக்கத் திட்டமிட்டார். அத்திட்டத்தின்படி அவர் பர்சியாவும் இந்தியாவுக்கும் இடைப்பகுதிகளை வென்று, தெற்கு அப்கானிஸ்தானை அடி பணிய வைத்து அங்கு அலெக்சாந்திரியா என்ற நகரை தீர்மானிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இத்திட்டதின் நோக்கங்கள் இரண்டு

1. ராணுவ முக்கியத்துவமிக்க புறக் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.
2. பாரசீகத்துக்கும் வடமேற்கு இந்தியாவுக்குமிடையே தங்கு தடையற்ற செய்தித் தொடர்புக்கு வசதி உருவாக்கப்பட்டது.

**படையெடுப்பு, கி.மு.327**

அலெக்சாந்தர் கி.மு 327 ஆம் ஆண்டு மே மாதம் இந்துகுஷ் மலைத்தொடரைப் பத்து நாட்களில் கடந்து வந்து அங்கிருந்த மலைவாழ் மக்களை அவரது கட்டுப் பாட்டின்கீழ்க் கொண்டு வந்தார். அதன்பின் அவரது படையை இரண்டாகப் பிரிந்து ஒரு பிரிவினரை சிந்து நதிக்கு அனுப்பி அந்நதியைக் கடக்கப் பாலம் அமைக்கச் செய்தார். அலெக்சாந்தர் சிந்து நதியைக் கடந்த வந்த போது தட்சசீலத்தை அடைந்தபோது அந்நாட்டு மன்னராயிருந்தவர் அம்பி. அண்டை நாட்டு அரசரான போரசின் எதிரியான அம்பி அலெக்சாந்தரின் ஆதரவைப் பெறுவதற்காக அரச மரியாதையுடன் வரவேற்பளித்தார். அம்பியின் அரண்மனையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அலெக்சாந்தர் அண்டை நாட்டு மன்னன் போரசுக்குத் தூது அனுப்பி திறை செலுத்திப் பணிந்து போகுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் சுயமரியாதையும் தன்மானமுமிக்க போரஸ் அலெக்சாந்தரின் வேண்டுகோளை நிராகரித்துப் போரில் சந்திப்பதாகப் பதில் அனுப்பினார். அலெக்சாந்தர் அந்த சவாலை ஏற்றுப் போருக்குத் தயாரானார். அவரது படை ஜீலம் நதிக்கரையை அடைந்தது. அந்நதியின் எதிர்கரையில் பேரரசின் பிரமாண்டமான படை அடைந்தது. அந்நதியின் எதிர்கரையில் பேரரசின் பிரமாண்டமான படை போருக்குத் தயாராயிருந்தது. புயற்காற்றுடன் கூடிய பேய் மழை. ஜீலம் நதியைக் கடப்பதைப் பற்றி எவராலும் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத சூழ்நிலை.

அலெக்சாந்தரின் தலைமையிலான படை அந்நதியைக்கடந்து சென்றது. பேரரசின் படையை ஹுடாபஸ் என்ற இடத்தில் இடியெனத் தாக்கியது. பேரரசின் படை நிலைகுலைந்தது. குன்றுகள் போல் நின்ற யானைகளும், ரதங்களும் சேற்றில் சிக்கிக் கொண்டன. வில்லாளிகளால் குறி வைத்து அம்புகளைத் தொடுக்க முடியவில்லை. யானைகளை போரசுக்கு எதிரிகளாயின. போரசின் படை வீரர்கள் சிதறியோடினர். ஹுடாபஸ் போரில் (கி.மு. 326 ஜீலை) போரஸ் மட்டும் யானைமீதமர்ந்து விழுப்புண்களோடு இறுதி வரைப் போரிட்டார் போரசின் வீரத்தை வியந்து பாராட்டிய அலெக்சாந்தர் வென்ற நாட்டைத் திருப்பிக் கொடுத்தார். போரசின் நட்பைப் பெற்றார். அலெக்சாந்தரின் பரம எதிரியாயிருந்த போரஸ் என்ற புருஷோத்தமன் அவரது ஆதரவாளரானார்.

# அலகு IV

## பேரரசுகள் உருவாகுதல் - I

## மௌரியர் பேரரசு (கி.மு. 300-200)

மௌரிய வம்சம் இந்தயாவின் முதல் வரலாற்று வம்சமாகக் கருதப்படுகிறது. மௌரிய வம்சம் இந்திய வரலாற்றை இருளிலிருந்து வெளிச்சத்தக்குக் கொண்டு வந்தது என்று கூறுவதை விட வெளிச்சத்திலிருந்து அதிக வெளிச்சத்துக்குக் கொண்டு சென்றது என்ற கூறுவதே பொருத்தமாக இருக்கும். இதற்கு காரணம் நமக்குக் கிடைக்கக்கூடிய சமகாலச் சான்றுகளாகும். புராணங்களும், மகாவம்சமம் நந்த வம்சத்தைத் தொடர்ந்து மௌரிய வம்சம் வந்ததைப் பற்றி அறிய உதவுகின்றன. இதை சமணச் சான்றுகள் உறுதி செய்கின்றன. அர்த்த சாத்திரம், முத்ரராட்சசம் போன்ற அகச் சான்றுகள் வரலாற்றாளரின் வழிகாட்டியாக உள்ளன. இன்டிகாவும், பிற கிரேக்கப் புறச்சான்றுகளும் வரலாற்று இடைவெளிகளை நிரப்ப பயன்படுகின்றன.

### அரசு பற்றி அறிவதற்கு சான்றுகள்

அர்த்த சாத்திரத்தின் ஆசிரியர் கௌடில்யர்: இவர் விஷ்ணுகுப்தர் சாணக்கியர், வாத்சயாயனர், திரமிடாச்சார்யா ஆகிய பெயர்களாலும் அறியப்படுகிறார். அர்த்த சாத்திரம் என்ற சொல்லுக்கு மூன்று பொருள்கள் உண்டு

1. நிலத்தை எவ்வாறு கைப்பற்றி பாதுகாப்பது
2. செங்கோலோச்சுவது அல்லது ஆட்சி செய்வது. இதனால் இந்நூல் தண்டநிதி என்றும் அழைக்கப்படுகிறது.
3. பொருள் அல்லது பொருளாதாரத்தைப் பற்றியது. அர்த்த சாத்திரம் சூத்திரம் மற்றும் உரை வடிவத்தில் எழுதப்பட்டுள்ளது.

அர்த்தசாத்திரம் 1905 ஆம் அண்டு கண்டபிடிக்கப்பட்டது. இந்நூல் 50 அத்தியாயங்களை கொண்ட 15 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று முக்கிய பொருட்கள் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

1. அரசன், அமைச்சரவை, அரசாங்கத்துறைகள்
2. சிவில், குற்றவியல் சட்டங்கள்
3. நாடுகளுக்கிடையேயான உறவு, அரச தந்திரம், போர்முறை

### எட்டு அங்கங்கள்

நாட்டின் அங்கங்கள் எட்டு:

1. அரசன்
2. அமைச்சர்
3. நாடு
4. கருவூலம்
5. கோட்டை
6. ராணுவம்
7. நண்பர்கள்
8. விரோதிகள்

ஒரு மன்னனுக்கு இருக்க வேண்டிய குணங்கள்: சுய கட்டுப்பாடு, மூத்தோருடன் தொடர்புகொண்டு பண்படுத்திக் கொள்ளும் அறிவு, ஒற்றர்கள் 5லம் விழிப்புடன் இருத்தல், மக்களின் நலனையும் பாதகாப்பையும் எப்போதும் உறுதி செய்தல், அதிகாரிகள் முன்னுதாரணத்தின் மூலம் மக்கள் தங்களது கடமைகளைக் கடைபிடிக்கின்றார்களா என்பதை கவனித்தல். புலத் துறைகளைப் பற்றிய அறிவை விரிவாக்கிக் கொள்ளல். அன்பையும் ஆதரவையும் பெறல்.

**அமைச்சர்கள், அதிகாரிகள்**

அரசன் தன் அமைச்சர்கள் மிகுந்த அக்கறையுடன் தெரிவு செய்ய வேண்டும். ஏனெனில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் இயல்பு ஊழல் நிர்வாகத்தை தங்களுக்காக சாதகமாக பயன்படுத்தி கொள்வதுதான். இவர்கள் கடல்வாழ் மீன்களைப் போன்றவர்கள். கௌடில்யர் இரண்டு கருத்துக்களை கூறுகிறார்.

1. அமைச்சர்களின் நோக்கங்களையும், நடவடிக்கைகளையும் அன்றாடம் கவனிக்க வேண்டும். ஒரே நேரத்தில் இரண்டு அமைச்சர்களுக்குமேல் ஆலோசனை நடத்தக் கூடாது. அமைச்சர்கள் திறமை, ஒழுக்கம், விசுவாசம் அகியவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படல் வேண்டம்
2. அதே போன்ற நேர்மையான அமைச்சர்களைத் தக்கவாறு வெகுமதிகள் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

அதிகாரங்களின் குவிமையமாக இருக்க வேண்டிய மைய அரசாங்கம் சட்டங்களை உறுதியாக கடைபிடிக்க வேண்டும். சட்டங்கள் மரபையொட்டி இருக்க வேண்டும். மன்னன் மரபுகளை மதித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும். புத்த சமண சங்கங்களின் சட்டங்களையும் மதிக்க வேண்டியது அவசியம்.

**இந்திய மாக்கியவல்லி**

எந்த நாடும் தனித்தீவுபோல் இருக்க முடியாது. ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுடன் போட்டிபோடுவது இயல்பு. எனவே நாட்டின் நிலைத்தன்மை வெளிநாட்டு உறவைப் பொறுத்தே உள்ளது. வெளிநாட்டு உறவுகளை உதாசினப்படுத்தினால் நாடு பிற அரசர்களின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகிவிடும். நாடுகள் காட்டு விலங்குகள் போன்றவை. இதில் வலிமைமிக்க சிங்கமே வெற்றிபெறும். முடிவு நல்லதாயின் எந்த மார்க்த்தை வேண்டுமானாலும் பின்பற்றலாம். ஏனெனில் நாட்டுநலனே முக்கியத்துவம் வாய்ந்தது. இக்கொள்கைக்காகக் கௌடில்யர் இந்திய மாக்கியவல்லி என்று அழைக்கப்படுகிறார்.

**முத்ரராட்சசம்**

முத்ரராட்சசம் காதல் காட்சிகளற்ற முழு நீள அரசியல் நாடகம். இதன் ஆசிரியர் விசாகதத்தர். இவர் கி.பி 5ஆம் நூற்றாண்டில் குப்த பேரரசின் துவக்ககாலத்தில் வாழ்ந்தவர். இந்நாடகம் சந்திரகுப்தர் சாணக்கியருடன் இணைந்து நிகழ்த்திய மௌரிய புரட்சி பற்றியது. சந்திர குப்தன், சாணக்கியன், ராட்சசன் ஆகியோர் இந்த நாடகத்தின் முக்கிய கதாபாத்திரங்கள். சந்திரகுப்தமோரியரின் வெளியார் உதவியுடனும் முனையுடனும் எவ்வாறு நந்தர்களை நீக்கிவிட்டு ஆட்சியைப் பிடித்தார், அதன்பின் சந்திரகுப்தனுக்கு ஏற்பட்ட தொல்லைகள், அரசாங்கம், நிர்வாகம் பற்றிய தகவல்கள் இந்நாடகத்தில் இடம்பெற்றுள்ளன.

**புறச்சான்றுகள்**

**கிரேக்க கடிதங்கள்**

சந்திரகுப்தகுக்கும் அன்ரோகோட்டாசுக்குமிடையே நடைபெற்ற கடித பரிமாற்றம் மௌரியருக்கும் அலெக்சாந்தருக்குமிடையேயான தொடர்பைப் பற்றி அறிந்துகொள்ளப் பயன்படுகிறது. இக்கடிதத்திலிருந்து சந்திரகுப்தனும் அலெக்சாந்தரும் சமகாலத்தவர் என்றும் இவர்கள் இருவரும் சந்தித்துள்ளனர் என்பதும் தெரிய வருகின்றது.

**இன்டிகா**

இன்டிகாவின் ஆசிரியர் மெகஸ்தனிஸ். இவர் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் சந்திரகுப்த மௌரியரின் அரசவைக்கு வந்த கிரேக்க நாட்டு தூதுவர். செலுகஸ் நிகேடர் என்ற இந்திய கிரேக்க நாட்டு சத்ரப்பின் ஆளுநராக இருந்தவர். மெகஸ்தனிஸ் சில ஆண்டுகள் மௌரியத் தலைநகர்

பாடலிபுத்திரத்தில் தங்கியிருந்த அனுபவத்தின் அடிப்படையில் இண்டிகா என்ற சிறப்பு நூலை எழுதினார்.

### பிறச்சான்றுகள்

அசோகரின் கல்வெட்டுகள், புத்த மரபுகள், சமண மரபுகள், மௌரியர் காலத்து ஸ்தூபிகள், மண்டபங்கள், குகைகள் போன்றவை அக்காலத்து ஆளுகை, கட்டிடக்கலை, கவின் கலைகள், பேரரசின் பரப்பு பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ளப் பயன்படுகின்றன.

### மௌரியப் பேரரசர்கள்

### *சந்திரகுப்தர், கி.மு 325-கி.மு 301*

புராணங்கள் சந்திரகுப்த மௌரியனைப் பிராமணன் என்று கூறுகின்றனர். புத்த சான்றுகள் இவரை சத்ரியன் என்று அழைக்கின்றன. கிரேக்கர் சந்திரகுப்தன் மூரையஸ் குலத்தைச் சேர்ந்தவர் எனக் கூறுவர். ஜஸ்டின் புளூடார்க் போன்ற ஆசிரியர்கள் இதுவரை இழிகுலத்தவன் என்று குறிப்பிட்டுள்ளனர். கர்ணபரம்பரைச் செய்திகள் சந்திரகுப்தன் மயில்களைப் பழக்கும் நாடோடிகள் கூட்டத்தில் வளர்ந்தவன் என்று தெரிவிக்கின்றன.

### இளமைப்பருவம்

மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் சந்திரகுப்த மௌரியரின் இளமைக் காலத்தைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றன. சந்திரகுப்தனின் தாய் மௌரிய நகரத்து மன்னனின் மனைவி. அந்த நகரம் பகைவர்களால் படையெடுக்கப்பட்ட போது மோரிய நகர மன்னன் மடிந்துவிட்ட அரசி விதவையானாள். விதவையின் சகோதரர்கள் அவளை புருஷபுரத்துக்கு அழைத்துவந்தனர். அங்கு அவள் பெற்றெடுத்த குழந்தையை ஒரு கூடையில் வைத்து விட்டுச் சென்றுவிட்டாள். அக்குழந்தையை சந்திரா என்ற பிஷபன் காப்பாற்றினான். எனவே அக்குழந்தை இளைஞனாகி நண்பர்களோடு அரசனாக நடித்து விளையாடிக்கொண்டிருந்தான். அதைப்பார்த்த சாணக்கியர் அவ்விளைஞனின் தலைமைத் திறனை பார்த்து வியந்து அந்த வேடுவனிடமிருந்து விலைக்கு வாங்கி விட்டார். விலைக்கு வாங்கிய அந்த இளைஞனை சாணக்கியர் தட்சசீலத்துக்குக் கொண்டு வந்து எட்டாண்டுகள் பல்வகைக் கல்வியும் பயிற்சியும் கொடுத்து வளர்த்தார். சந்திரகுப்தன் தட்சசீலத்தில் தங்கியிருந்தபோதுதான் அலெக்சாந்தரை சந்தித்தான். சந்திரகுப்தனை விலைக்கு வாங்கி வளர்த்த சாணக்கியர் நந்த மன்னன் தனநந்தரிடம் அமைச்சராக இருந்தவர்.

**மகதப் பேரரசு**

*சந்திரகுப்த மௌரியர் மகத அரசைப் பேரரசாக விரிவுபடுத்தினர். இந்தியாவை ஒரு குடையின்கீழ் கொண்டுவருவதே அவரது குறிக்கோளாக இருந்தது. மாளவமும் (அவந்தி) கத்தியவாரும் இவரது ஆட்சிக்குட்பட்டிருந்தன. சந்திரகுப்தரின் ஆட்சி மாளவத்துக்கு மேற்கே சௌராஷ்டிரம் வரையிலும் பரவியிருந்தது. மௌரியரின் வடமேற்கு இந்திய வெற்றிக்குப் பின் சந்திரகுப்தர் தன்னாணத்தின் சில பகுதிகளைத் தன் வயமாக்கிக் கொண்டு ஆந்திரதேசம் வரை அவராதிக்கத்தை விரிவுபடுத்தினனர். பின்னர் துனுநாட்டையாண்ட கோசர்களின் துணையுடன் மோரியர் படை தமிழ்நாட்டுக்கள் நுழைய முற்பட்டது.*

*கோசர்-மோரியர் பெரும்படை மலைகளை வெட்டிப் பாதைகள் அமைத்து மோதரைத் தாக்கி இடைகழி வழிகாக எழில்மலை நாட்டின் தலைநகரான பாழியைத் தாக்கி வெற்றி கண்டது. அந்த நிலையில் சோழ மன்னன் குறுக்கிட்டு அப்படையை முறியடித்தான். தமிழில் உள்ள பரம்பரைச் செய்திகளின்படி மௌரியர் தெற்கில் திருநெல்வேலி மாவட்டம் வரையிலும் பரவியிருந்தனர். நந்த மன்னர்களுடன் நட்பு பாராட்டிய தமிழ்நாட்டு மக்கள் தமிழ்நாட்டக்கள் ஊடுறுவிய மோரியரை 'வம்ப மௌரியர்' என்று நிந்தித்தனர்.*

*சந்திரகுப்த மௌரியர் சமண மதத்தைச் சேர்ந்தவர். அவர் மகத மன்னரானவுடன் சமண சமயத்தின் ஆதரவாளரானார் புரவலராக இருந்து அச்சமயத்தைப் பாதுகாத்ததோடு சமணத் தறவிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். அவர் செலுகஸ் நிகேடரைத் தோற்கடித்து, வட, மத்திய கிழக்கிந்தியாவில் தன் அதிக்கத்தை விரிவு படுத்தியபின் சந்திரகுப்த மௌரியருக்கு மனமாற்றம் ஏற்பட்டது. அதற்கு வட இந்தியாவில் நிலவிய பஞ்சமும் ஒரு காரணமாக இருக்ககூடும். மணிமுடி துறக்க முடிவு செய்தார் சந்திரகப்தர்.*

*பெருமதிப்புக்குரிய பத்ரபாகு என்ற சமணத் துறவியும் தென்னிந்தியா செல்லத் தீர்மானிததார். சமண மரபுப்படி பத்ரபாகு 12,000 சமணர்களுடன் தென்னிந்தியா நோக்கிப் புறப்பட்டபோது பேரரசர் பதவியைத் துறந்த சந்திர குப்தரும் உடன் சென்றார். பத்ரபாகுவும், சந்திரகுப்தரும் ஆயிரக்கணக்கான சமணர்களும் கர்னாடக மாகாணம் மைசூரிரில் உள்ள சரவண பெல்கோலாவில் குடியமர்ந்தனர். குடியமர்ந்த சில ஆண்டுகளில் பத்ரபாகு இயற்கை எய்தினார். அவரைத் தொடர்ந்து சந்திரகுப்த மௌரியரும் தனது 45வது வயதில் சமண சம்பிரதாயப்படி உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தார்.*

### சுற்றுப் பணயம்

சந்திர குப்த மௌரியரின் தலைநகர் பாடலிபுத்திரத்திற்கு வந்த மெகஸ்தனிஸ் இந்தியாவை சுற்றிப் பார்த்தார், இந்தியாவை சுற்றிப் பார்த்த முதல் சுற்றுலா பயணி இவர்தான். அவர் கண்ட இந்திய புவியியல் கூறுகள் ஆட்சிப்பகுதிகள், மக்களின் பழக்க வழக்கங்கள், செவிவழிச் செய்திகள் விரிவாக எழுதியுள்ளார். மெகஸ்தனிசின் சுற்றுப் பயணத்தின்போது தமிழ்நாட்டுக்கு வந்த அவர் பாண்டியர் தலைநகர் மதுரையைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

### பாடலிபுத்திரம்

மெகஸ்தனிஸ் தலைநகர் பாடலிபுத்திரத்தைப் பற்றி விவரித்துள்ளார். சந்திரகுப்த மௌரியரின் தலைசகரமான பாடலிபுத்திரம் கங்கை மற்றும் நதிகள் சந்திக்கும் இடத்தில் கட்டப்பட்டிருந்தது. அது 60 அடி ஆழமும் 600 அடி அகலமும் கொண்ட அகழியால் சூழப்பட்டிருந்தது. இத் தலைநகரைச் சுற்றி 64 நழைவுவாயில்கள் இருந்தன. 570 கோட்டைக் கோபுரங்கள் கட்டப்பட்டிருந்தன. பாடலிபுத்திரத்தை 30 பேர் கொண்ட மன்றம் நிர்வகித்தது. இம்மன்றம் துறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

1. தொழில்கள் துறை
2. மக்கள் கணக்கீட்டுத் துறை
3. வாணிபம் மற்றும் வியாபாரத் துறை
4. உற்பத்திப் பொருட்கள் துறை
5. வரிகள் துறை
6. வெளியறவுத் தறை, தலைநகர் மன்றம் ராணுவ கடற்படை, செயற் பொறுப்பளிப்பு ஆகியவற்றையும் கவனித்துக் கொண்டது.

### பெண் படையினர்

மகதப் பேரரசர் சந்திரகுப்த மௌரியரை ஆயுதம் தாங்கிய பெண்கள் பாதுகாத்தனர். பேரரசர் வேட்டைக்குச் செல்லும்போது இம்மெய்க் காவற்படையினரும் உடன் சென்றனர். பேரரசரை சூழ்ச்சிகளிலிருந்தும் சதித் திட்டங்களிலிருந்தும், கொலை முயற்சிகளிலிருந்தும் காப்பாற்றுவதற்காக அவரது படுக்கையறை அடிக்கடி மாற்றப்பட்டது.

### அரசனின் அதிகாரங்கள்

அரசனின் அதிகாரங்கள் அளவு கடந்தவை. மக்கள் நலனை மையமாகக் கொண்டே மன்னன் அதிகாரங்களைப் பயன்படுத்தினார். நிர்வாக வசதிக்காகக் பேரரசு பல மாகாணங்களாகவும், மாவட்டங்களாகவும்

பிரிக்கப்பட்டது. நில வரி, விற்பனை வரி, போக்குவரத்து வரி, அபராதம் ஆகியவை முக்கிய வரிகளாகும். பாதைகள் நன்கு பராமரிக்கப்பட்டு பயணிகள் பாதுகாப்புடன் இருந்தனர். வழிப்பறி மிகக் குறைவு. பாதைகளின் இருமருங்கிலும் நிழல்தரும் மரங்கள் இருந்தன. மன்னனே உச்ச நீதிபதி. அவர் தீர்ப்பே இறுதியானது. தண்டனைகள் மிகவும் கடுமையாக இருந்தன. உள்நாட்டு வர்த்தகமும், வெளிநாட்டு வாணிபமும் சிறப்புற்றிருந்தது. மக்கள் மகிழ்ச்சியோடு இருந்தனர்.

**மக்கள் நிலை**

சந்திர குப்த மௌரியரின் ஆட்சிக் காலத்தில் மக்களிடையே ஒழுக்கமும், ஒழுங்கும், கட்டுப்பாடும் காணப்பட்டது. அவர்கள் வாய்மையை விரும்பினர். பொய்யை வெறுத்தனர். ஒருவரையொருவர் நம்பினர். திருடும், கொள்ளையும், கொலையும் அரிதாகவே காணப்பட்டன. மக்கள் தங்கள் வீடுகளைப் பூட்டுவதில்லை, மக்கள் தோற்றத்திலும், ஆரோக்கியத்திலும், மதிப்பிலும் உயர்ந்திருந்தனர். அவர்கள் எளிய உணவையே உண்டனர். இவர்கள் விழாக்காலங்கள் தவிர பிற நேரங்களில் மது அருந்துவதில்லை. மக்கள் விலை உயர்ந்த ஆடைகளையும், ஆபரணங்களையும் விரும்பினர். பெண்கள் பூவேலை செய்யப்பட்ட ஆடைகளை அணிந்தனர். பெண்களின் சமுதாயம் செல்வாக்கு உயர்ந்திருந்தது. பலதார முறை பணக்காரரிடையே காணப்பட்டது. மக்களிடையே முகத்தை மறைத்து கொள்ளும் பர்தா முறையும், உடன்கட்டையேறும் வழக்கமும் காணப்படவில்லை.

**சமுதாய அமைப்பு**

சாதி அமைப்பு பற்றிய மெகஸ்தனிசின் கூற்று வித்தியாசமானது. இவரின் கூற்றுப்படி சமுதாயம் 7 பிரிவகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

1. தத்துவர்கள் இவர்களின் எண்ணிக்கை குறைவு. ஆனால் செல்வாக்கு அதிகம். இவர்களது வாக்கு பொய்த்தால் கண்டிக்கப்பட்டனர். அதன்பின் வாய் திறக்காமல் மௌனமாக இருக்க வேண்டியதுதான்.
2. வேளாண் மக்கள் இவர்களது எண்ணிக்கை அதிகம். இவர்கள் தங்கள் வாழ்நாளை விவசாயம் செய்வதில் கழித்தனர். விரோதிகள் கூட இவர்களுக்கு ஊறுவிளைவிப்பதில்லை. இவர்கள் பொதுப்பணியாற்றுபவர்களாகக் கருதப்பட்டு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு பாதுகாக்கப்பட்டனர்.
3. ஆயர் இவர்கள் ஆடு, மாடு மேய்ப்போர். இவர்கள் ஓரிடத்தில் தங்குவதில்லை.
4. கைவினைஞர்கள் இவர்கள் போர்த் செய்வதற்குத் தக்கவாறு ஆயுதங்களுடன் தயார் நிலையில் இருந்தனர். காலாட் படையினர்,

போர்த் தளவாடங்களையும் மக்களுக்குத் தேவையான கருவிகளையும் தயாரித்தனர். இவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. அரசாங்க மானியமும் வழங்கப்பட்டது.

5. படைவீரர்கள் இவர்கள் போர் செய்வதற்கு தக்கவாறு ஆயுதங்களுடன் தயார் நிலையில் இருந்தனர். காலாட் படையினர், போர்க் குதிரைகள், போர் யானைகள் ஆகியவற்றுக்கான செலவு முழுவதையும் அரசாங்கமே செய்தது. போரில்லாத போது வீரர்கள் சோம்பேறிகளாகக் கேளிக்கைகளில் ஈடுபட்டனர்.
6. கண்காணிகள் இவர்கள் இந்தியாவின் நிலைப்பற்றி கவனமாக கண்காணித்து, மேற்பார்வையிட்டு, மன்னருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். மன்னர் இல்லாதபோது நீதிபதிகளிடம் சமர்பிக்க வேண்டும்.
7. மதிப்பீட்டாளர்கள் இவர்கள் வாய்மைக்கும், விவேகத்துக்கும், ஒழுக்கத்துக்கும் பெயர் பெற்றவர்கள்.

## மௌரிய பேரரசு பற்றி கௌடில்யர்

### முடியாட்சிப் பேரரசு

மௌரியப் பேரரசு அமைக்கப்படுவதற்கு சந்திரகுப்தருக்கு உறுதுணையாகவும், ஊன்றுகோலாகவும் இருந்தவர் கௌடில்ய சாணக்கியர். இருவரும் வெவ்வேறு காரணங்களுக்காக நந்தர்களின் ஆட்சிகளை முடிவுக்கு கொண்டுவர முடிவு செய்தனர். அவர்கள் வெற்றிபெற சூழ்நிலை சாதகமாக இருந்தது. தனநந்தருக்குப்பின் மகதத்தின் ஆட்சி சீர்கெட்டிருந்தது. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இருவரும் ஆட்சிளைக் கைப்பற்றினர். ஆட்சி மாறியதேயன்றி அரசு பலமாக இருந்தது. இந்திய வரலாற்றில் முதன்முறையாக சந்திரகுப்த மௌரியரின் தலைமையில் மிகப்பெரிய முடியாட்சிப் பேரரசு ஏற்படுத்தப்பட்டது.

மகதத்தின் மௌரிய முடிமன்னர் சந்திரகுப்தர் சர்வாதிகாரியல்லர். சர்வ அதிகாரங்களும் அவரிடமிருந்தும் அவர் அமைச்சர்களின் ஆலோசனையைக் கேட்டே ஆட்சியை நடத்தினார். மன்னர் அமைச்சர்களின் கருத்துகளுக்குக் செவிமடுக்க வேண்டும் என்று கூறுகிறார் கௌடில்யர். எப்படி மாணவர்கள் ஆசிரியர் சொல் கேட்கிறானோ, மகன் தந்தை சொல்படி நடக்கிறானோ அதேபோல் அரசன் அமைச்சரின் சொல் கேட்க வேண்டும் என்று கூறுகிறாார். இதையொரு முடியாட்சி-குடியாட்சி என்று கூறலாம். சுருங்க கூறின், பேரரசன் சந்திரகுப்த மௌரியர் மக்களின் தர்மகர்த்தாவாகவும் பாதுகாவலனாகவும் விளங்கினார்.

## பேரரசின் பொறுப்பு

### அரசியல் ஒழுக்கம்

கௌடில்யர் பேரரசின் அதிகாரத்துக்கும் அரசியல் ஒழுக்கத்துக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். சந்திரகுப்த மௌரியர் அணிந்தது முட்கிரீடமாயினும் அதைப் பொறுப்பின் பாரமாகக் கருதினார். அவரது அன்றாடப் பொறுப்பு அட்டவணை அவர் மேற்கொண்ட பொறுப்பிற்கேற்பப் பலமிக்கதாக இருந்தது. பேரரசர் இப்பொதுப் பொறுப்பை மந்திரி-பரிசத்துடன் பகிர்ந்து கொண்டார்.

### அதிகார வர்க்க ஆட்சி

சந்திரகுப்த மௌரியரின் ஆட்சி அதிகாரவர்க்கத்தின் ஆட்சி அதிகாரவர்க்கத்தின் ஆட்சியாகும். பிரதான அமைச்சரும், புரோகிதரும், இளவரசரும், தளபதியும் அதிகாரவர்க்க உள்வட்டத்தில் இருந்தனர். இவர்கள் முக்கிய பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டனர். கடமையில் கண்ணாயிருந்தனர். இவர்களுக்கடுத்து இவ்வதிகாரவர்க்க வளையத்துக்குள் இருந்த அதிகாரிகள் நிதி, பொதுப்பணி, அரசர், அஞ்சல், வாணிபம், வியாபாரம், வேளாண்மை, அளவைகள் சுங்கம் நகராட்சி, கசாப்புக் கடைகள், பரத்தையர், சட்டம் ஒழுங்கு, வேவு பார்த்தல், வெளியுறவு போன்ற அரசாங்கத் துறைகளுக்குப் பொறுப்பேற்று நிர்வகித்தனர்.

### பேரரசின் ஆளுகை

சந்திரகுப்த மௌரியரின் ஆளுகை வரலாற்றுச் சிறப்புமிக்கது. அனைவராலும் பாராட்டப்பட்டது. அதற்கு காரணம் சட்டம் ஒழுங்கு மிகுந்த கண்டிப்புடன் கடைபிடிக்கப்பட்டதுதான். சமுதாயக் கட்டுப்பாடின்றி எந்த பேரரசும் நிலைத்திருக்க முடியாது. மக்களிடம் சுயக்கட்டுபாடு மிகவும் குறைவு. அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் பேரரசின் குடிமக்களாக இருப்பர். இந்த அரசியல் யதார்த்தத்தை நன்கறிந்த சந்திரகுப்த மௌரியர் குற்றச்சட்டத்தை மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்தினார். கொலை, கொள்ளை, திருட்டு, கைவினைஞர்களைக் காயப்படுத்தல். அணையை உடைத்தல், அரசியல் சதி போன்றவை கடுஞ்குற்றங்களாக கருதப்பட்டன. மனிதர்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுயாளர்கள் இரக்கமின்றி தண்டிக்கப்பட்டனர். சன்னியாசிகள் கூட குற்றச் சட்டத்திலிருந்து தப்பவில்லை.

**கண்காணிப்பு**

பொதுவாக மக்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட அனைவரும் சுயநலவாதிகள் என்று கூறுகிறாா் கௌடில்யா்.

அதிகாரிகள் கடல் மீன்கள் போன்று கையூட்டிலும், ஊழலிலும் ஈடுபடுவா். எனவே இவா்கள் பேரரசால் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டனா்.

**நான்கு அங்கங்கள்**

சந்திரகுப்த மௌரியப் பேரரசு நான்கு நீா்வளப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

1. பாடலிபுத்திரத்திலிருந்து நிா்வகிக்கப்பட்ட மத்திய தேசம்
2. வடமேற்கு தட்சசீலம்
3. உஜ்ஜயினைத் தலமையகமாகக் கொண்ட மேற்கிந்தியா
4. கிா்னாரைத் தலைமையிடமாகக் கொண்ட குஜராத்தியவாா். அரச குடும்பத்தை சோ்ந்தோா் இப்பகுதிகளின் ஆட்சித் தலைவா்களாக இருந்தனா். எடுத்துக்காட்டாக புஷ்யகுப்தா் குஜராத்கத்தியவாா் மாகாணத்தின் ஆட்சியராக இருந்தாா்.

**உள்ளாட்சி நிா்வாகம்**

நகரங்களை நகரகா்கள் என்போா் நிா்வகித்தனா். அவருக்குத் துணையாக கீழ்ப்பணியாளா்கள் இருந்தனா். கிராமணி கிராமத் தலைமை நிா்வாகி. கிராம நிா்வாகத்தின் முழுப்பொறுப்பும் இவரிடம் இருந்தது. கிராமப் பஞ்சாயத்தின் ஆலோசனையைக் கேட்டு இவா் தன் பொறுப்புகளை நிறைவேற்றினாா். கோபா என்ற அதிகாரி 5 லிருந்து 10 கிராமங்கள் வரை கவனித்துக் கொண்டாா். அவருக்கு மேல் ஸ்தனிகா் என்ற அதிகாரி அதிக நிலப்பரப்புக்குப் பொறுப்பாக இருந்தாா். அவருக்குமேல் மாவட்ட அதிகாரிகளும், மாகாண ஆளுநா்களும் இருந்தனா்.

**மக்கள்தொகைக் கணக்கெடுப்பு**

பேரரசின் பலம் அதன் மனித வளத்தைப் பொறுத்துள்ளது. மனித வளத்தின் முக்கியத்துவத்தை நன்கறிந்த சந்திரகுப்த மோரியா் மக்கள் தொகைக்கணக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்தாா். இக்கணக்கெடுப்பு கிராமங்கள் மற்றும் நகரங்கள் வாாியாக நடைபெற்றது. கிராம அதிகாரிகள் கிராமங்களில் உள்ள மக்கள் எண்ணிக்கை, அவா்கள் தொழில், அடிமைகள், ஆண்கள், பெண்கள், இளைஞா், முதியோா், வருமானம், செலவு ஒவ்வொரு வீட்டிலும் இருந்த விலங்ககளின் எண்ணிக்கை போன்ற தகவல்கள்

சேகரித்தனர். மக்கள்தொகை கணக்கெடுப்புக்கென நிரந்தர தனித்துறை இருந்தது.

மக்கள்தொகை கணக்கெடுப்பால் சந்திரகுப்த மௌரியப் பேரரசுக்கு கிடைத்த நன்மைகள்

1. மக்கள் தொகை துல்லியமாக தெரிந்தது
2. மக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது
3. குடிமக்கள் யார், அயலார் யார் என்பதை வேறுபடுத்த முடிந்தது.
4. பேரரசின் நிலையுறுதி நிலைநாட்டப்பட்டது.
5. இயற்கை மற்றும் செயற்கை வளங்களை அறிந்து அவற்றின் பயன் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.
6. யாவற்றுக்கும் மேலாக பேரரசுப் படைக்குத் தேவையான மனித வளத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடிந்தது.

**படைப்பிரிவுகள்**

சந்திரகுப்த மௌரியரின் பேரரசின் நிலையறுதி அதன் ராணுவத்தைப் பொறுத்திருந்தது. அமைதியை பற்றி பேசினாலும் போர்ப்படை தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பது பேரரசரின் நிலை. எனவே சந்திரகுப்த மௌரியரின் ராணுவம் வலிமைமிக்கதாய் இருந்தது. பேரரசின் படை ஆறு அங்கங்களை கொண்டிருந்தது.

1. காலாட் படை
2. யானைப் படை
3. ரதப் படை
4. குதிரைப் படை
5. கப்பல் படை
6. தளவாட மற்றும் போக்குவரத்துத் துறை

**போர் அறம்**

போர்களத்தில் போர்அறம் பின்பற்றபட்டது. காயமுற்றோரும், நிராயுதபாணிகளும் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட்டனர். சரணடைந்தோர் கொல்லப்படவில்லை. விவசாயிகளும், பொதுமக்களும் துன்புறுத்தப்படவில்லை. விரோதியை வீழ்த்த அனைத்து முறைகளும் கையாளப்பட்டன. இதில் மார்க்கத்தை விட முடிவே முக்கியம் என்ற விதி பின்பற்றப்பட்டது. விரோத நாட்களைப் பொறுத்தவரை தர்ம-அதர்மத்துக்கிடமில்லை.

**ஆளுகைச் சிறப்பு**

மௌரியப் பேரரசு ஆளுகை மற்றும் நிர்வாக மேலாண்மையில் பல சிறப்புகள் காணப்பட்டன.

1. முதன்முறையாக வலிமையான நிலைப்படை / அறிவியல் ரீதியாக உருவாக்கப்பட்டது.
2. சிவில், ராணுவத் துறைகள் வேறுபடுத்தப்பட்டன.
3. அனைத்துத் துறைகளும் முறையான அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டன.
4. திறமையான ஆளுகையால் பலதரப்பட்ட மக்களைக் கொண்ட பெரிய பேரரசைக் கட்டிக்காக்க முடியும் என்று நிரூபிக்கப்பட்டது.
5. பாடலிபுத்திரத்திலிருந்து கொண்டு மக்களிடையே அமைதி, கட்டுப்பாடு, முன்னேற்றம் ஆகியவை உறுதி செய்யப்பட்டன.

**பிந்துசாரர், கி.மு 301-கி.மு 273**

பிந்துசாரர் சந்திரகுப்த மௌரியருக்கும் தர்தராவுக்கும் பிறந்தவர். பிறக்கும்போதே தங்கக் கரண்டியுடன் பிறந்த இவர் இவரது தந்தையால் உருவாக்கப்பட்ட மாபெரும் பேரரசை சுவீகரித்தார். அப்போது அவருக்கு வயது 22. கௌடில்யர் தொடர்ந்து பிந்துசாரரின் அமைச்சராகவும் ஆலோசகராகவும் நீடித்தார்.

பிந்துசாரரும் தந்தையைப் போன்றே பேரரசு விரிவாக்கவாதி. இவரது 28 ஆண்டு ஆட்சிக் காலத்தில் பிந்துசாரர் அரேபியன் கடலுக்கும் வங்கக் கடலுக்கும் இடைப்பட்ட 16 நாடுகளை வென்று மோரியப் பேரரசுடன் இணைத்ததாக கூறப்படுகிறது. பிந்துசாரரின் ஆட்சி காலத்தில் இளவரசன் அசோகன் உஜ்ஜயினின் ஆளுநராக இருந்தார். போர்களால் பெரும்பகுதிகளை வென்ற பிந்துசாரரைக் கிரேக்கர் விரோதிகளை வீழ்த்தியவர் என்று கூறி பாராட்டினர்.

பிந்துசாரர் வெளிநாடுகளுடன் வாணிப, அரசதந்திர, கலாச்சார நட்புறவு கொண்டிருந்தார். தந்தை போட்டுத் தந்த வெளியுறவுப் பாதையில் வேகமாக ஓடினாார். பிந்துசாரர் வெளிநாட்டவருடன் அமைதியான, ஆக்கப்பூர்வமான, நட்புறவும், நல்லுறவும் கொண்டிருந்தார்.

பிந்துசாரரரின் ஆட்சிக்கால இறுதியில் தட்சசீலத்தில் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டது. இதற்கு காரணம் அமைச்சர்களும், அதிகாரிகளும் முறைகேடாக நடந்துகொண்டதேயாகும். இக்கிளர்ச்சி மன்னருக்கு எதிராகவே அல்லது இளவரசரக்கு எதிராகவோ ஏற்பட்ட கிளர்ச்சியல்ல. உஜ்ஜயினி ஆளுநராக இருந்த இளவரசர் அசோகர் இக்கிளர்ச்சியை அடக்க அனுப்பி

வைக்கப்பட்டார். தட்சசீலம் சென்ற அசோகர் கிளர்ச்சியை அடக்கி நல்லாட்சியை ஏற்படுத்தினாார். பிந்துசாரர் தந்தை சந்திரகுப்த மோரியரைப் போலன்றி அஜ்விகா சமயத்தைச் சேர்ந்தவர். இஜ்விகாக்கள் மகாவீரரின் எதிரியான கோசாலா ஏற்படுத்திய சமயத்தைப் பின்பற்றியவர்கள். அஜாதசத்ருவும், உதயினும் இச்சமயத்தை ஆதரித்தவர்கள். அவர்கள் சென்ற பாதையைப் புதுப்பித்து அதில் பயணித்தார் பிந்துசாரர்.

### அசோகர் கி.மு. 273-கி.மு 232

சந்திரகுப்த மௌரியன் பேரனும், பிந்துசாரரின் மகனுமான அசோகர் என்றழைக்கப்படும் அசோகவர்த்தனமோரியர் பண்டைய இந்தியாவில் ஈடிணையற்ற மகத மாமன்னராக, மோரியப் பேரரசாகத் திகழ்ந்தார். தனித்துவமிக்க இவ்வரலாற்று மேதை இந்திய வரலாற்றில் அறிவொளி மிக்க அரசராக ஆட்சி செய்தார். மாபெரும் பேரசை வாரிசாகப் பெற்ற அசோகர் அதை புத்த தர்மத்தின் தலைமையகமாக மாற்றினார். அசோகர் காலத்தை முந்திய வரலாற்று மாமனிதர்.

### வரலாற்றுச் சான்றுகள்

### கல்வெட்டுகள்

அசோகரைப் பற்றி அறிந்து கொள்வதற்கான சமகாலச் சான்றுகள் பல உள்ளன. அவற்றுள் முதன்மையானது அவரது கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டுகள் பாலி மொழியில் பிரம்மி எழுத்து வடிவத்தில் உள்ளன. இவை அசோகரின் ஆணையின்படி பொறிக்கப்பட்டவை. இவற்றின் எண்ணிக்கையும், வகைகளும் தேதிகளுடன்கூடிய இக்கல்வெட்டுகள் அசோகரின் ஆளுமை, ஆளுகை அருமையைப்பற்றி அறிந்துகொள்வதற்கான கல்லாவணங்களாகும். வரலாற்றாளரின் வரபிரசாதமாகும். தனித்தன்மையுடைய இக்கல்வெட்டுகள் அசோகரின் பெருமையையும், பெருந்தன்மையையும் பறைசாற்றுவனவாக உள்ளன.

### கல்லாணைகள்

### சிறிய கல்லாணைகள்

கல்லாணைகள் இருவகைப்படும்

1. சிறிய கல்லாணைகள்
2. கல்தூண் ஆணைகள்

இந்த ஆணைகள் அனைத்தும் அசோகர் பிறப்பித்த உத்தரவுகள். சிறிய கல்லாணைகள் 14: 1,2) மனிதர்களும், மிருகங்களும் துயரற்றிருப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் பற்றியவை 3)புத்த தர்மத்தை போதிப்பதற்காக அதிகாரிகளை இடமாற்றம் செய்தல். 4) அசோகரின் அகிம்சை கோட்பாட்டில் ஏற்பட்ட முன்னேற்றம். 5)தர்மமகாமத்ரர்களின் பொறுப்புகள். 6)மக்கள் நலனில் அசோகருக்குள்ள அக்கறையும் அதுபற்றிய அவரது உத்தரவுகளும். 7,8) சுயக்கட்டுப்பாடு, மனத்தூய்மை, அசோகரின் புனிதப் பயணம் பற்றியவை. 9)மக்கள், குறிப்பாக பெண்கள், கொண்டாடும் பல விழாக்கள் பயனற்றவை. இவற்றைவிட ஒழுக்க கடமைகள் உயர்வானவை. 10,11) தர்மமே ஒப்புயர்வற்றது. 12)சமயப் பொறையுடைமை. 13) கலிங்கப் போரின் பேரழிவு அதன்பின் அவர் இந்தியாவின் பல பல பகுதிகளுக்கும் கிரேக்கத்துக்கும் மேற்கொண்ட ஆன்மீகப் பயணங்கள். 14) கல்லாணைகளுக்குமான பின்குறிப்பு.

**கல்தூண் ஆணைகள்**

கல்லாணைகளைப் போன்றே கல் தூண் ஆணைகளும் புத்த தர்மத்தை பற்றியவை. இவை மாகாண ஆளுநர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அகிம்சையைப் பரப்புவதற்காக பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், ஆண்டுதோறும் விடுவிக்கப்பட்ட கைதிகள், அசோகர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் தர்மத்தைப் பரப்புவதற்காக மேற்கொண்ட முயற்சிகள், சங்கத்துக்கு எதிராகச் செயல்பட்டோருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை, அசோகர் பிறந்த இடத்துக்கு சென்றது. சங்கம் ஒற்றுமையுடன் நீண்டகாலம் தொண்டாற்ற வேண்டும் என்ற அசோகரின் ஆசை முதல் மற்றும் மூன்றாவது கல்தூண் ஆணைகளில் வெளிப்படுகிறது.

அசோகரது ஆணைகள் வரலாற்றுச் சிறப்பமிக்கவை. இவை அவரைப்பற்றியும் அரவது ஆளுகை குறித்தும் அறிந்து கொள்ளத் தோன்றாத் துணையாயுள்ளன. ஒரு இடத்தைத் தவிர பிற இடங்களில் தன்னை இறைவனின் பாசத்துக்குரியவன் பரிவுள்ள அரசன் என்றே கூறிக்கொள்கிறார். கலிங்க வெற்றியைக் குறிப்படாதது அசோகரின் பெருந்தன்மையை காட்டுவதாக உள்ளது. இவ்வாணைகள் அனைத்தும் அசோகரின் தன்னலம் கருதாமை, பொதுநலன் போற்றியமை, பரந்த மனப்பான்மை, வியத்தகு சமயப் பொறையுடைமை, அடக்கமுடைமை, அருளுடைமை, அன்புடைமை, ஆள்விளையுடைமை, இன்னா செய்யாமை அகியவற்றுக்குச் சாட்சியங்களாக உள்ளன.

பிந்துசாரரின் பிள்ளைகளில் ஒருவரான அசோகர் இளமையிலேயே திறமையுடைவராக திகழ்ந்தார். இவருக்கு முறைப்படி, கல்வியும், பயிற்சியும் அளிக்கப்பட்டன. சகோதரர்களுக்குள் அசோகர் வீரமும், விவேகமும்,

அறிவாற்றலும் மிக்கவராக இருந்தமையால் பிந்துசாரர் காலத்திலேயே வாரிசு இளவரசரானார். அதுமட்டுமல்ல தட்சசீலத்தின் ஆளுநராகவும் அதன் ஆட்சிப் பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிந்துசாரார் கி.மு. 273 ஆம் ஆண்டு இறந்தபின் அசோகர் ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆனால் பிந்துசாரரின் மூத்த மகன் சுசிமா வாரிசுரிமை கோரியமையால் இருவருக்குமிடையே வாரிசுரிமை தகராறு ஏற்பட்டது. இவ்வாரிசுரிமைப் போட்டியில் வெற்றிபெற்ற அசோகருக்கு கி.மு. 269 இல் முறைப்படி முடிசூட்டுவிழா நடத்தப்பட்டது.

**கலிங்கப் போர்**

கலிங்கம் தற்போதுள்ள ஒரிசா வங்கக் கடற்கரையில் மகாநதிக்கும் கோதாவரிக்கும் இடையில் அமைந்துள்ளது நந்தர்கள் காலத்தில் கலிங்கம் மகதப் பேரரசின் பகுதியாக இருந்தது. நந்த மன்னர்களின் வீழ்ச்சிக்குப்பின் கலிங்கம் தன்னை மகதப் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு தனி நாடாயிற்று. கலிங்கத்தை மீண்டும் மகதப் பேரரசுடன் இணைப்பதற்காக பிந்துசாரர் மேற்கொண்ட முயற்சி வெற்றிபெறவில்லை. எனவே, அசோகர் ஒரிசாவை வெற்றி கொள்ளத் தீர்மானித்தார். அதன் விளைவே கலிங்கப் போர். கலிங்கப் போர் வெற்றி அசோகரின் வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. அது அவரது மனமாற்றமாகும். கலிங்கப் போர்களத்தில் நிகழ்ந்த பேரழிவைக் கண்ட அசோகரின் நெஞ்சம் நெகிழ்ந்தது. பலரைக் கொன்று ஒருவர் வெற்றிபெற வேண்டுமா என்ற வினா அவரது உள்ளத்தில் கூர்வாளாகப் பாய்ந்தது. போரைக் கைவிட்டு அமைதியைக் கைப்பிடிக்கத் தீர்மானித்தார். அசோகரின் கவனம் அகிம்சைப் பேரரசர் புத்தர் பக்கம் திரும்பியது. அசோகர் புத்த மதம் என்ற இரக்க சாகரத்தில் இறங்கிவிட்டார். மக்களிடையே புத்த தர்மத்தைப் போதிப்பதையே தன் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டார் அசோகர். எனவே கலிங்கப்போர் அசோகரது வாழ்க்கையிலும், வாக்கிலும், போக்கிலும், உள்நாட்டு வெளிநாட்டு கொள்கையிலும் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த மாற்றம் இந்திய வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.

பொது மக்கள் புத்த நெறியைப் பின்பற்றுவதற்காகப் பல நல நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மனிதர்களும் விலங்குகளும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற கருத்து பிரச்சாரம் செய்யப்பட்டது. மக்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவ மனைகள் கட்டப்பட்டன. பறவைகளையும், விலங்குகளையும் கொல்லக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. சில நாட்களில் மீன்களைப் பிடிப்பதோ, விற்பதோ தடை செய்யப்பட்டது. அதேபோன்று மிருகங்களுக்குச் சூடுபோடுவதோ, அவற்றை

முடமாக்குவதோ நிறுத்தப்பட்டது. தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய கிணறுகள் தோண்டப்பட்டன.. தண்ணீர்ப் பந்தல்கள் போடப்பட்டன.

## அசோகரின் சேவைகள்

அசோகர் இந்தியாவிலும், இந்தியாவுக்கப்பாலும் புத்த மார்க்கம் பரவுவதற்காக செய்த சேவைகள்

1. புத்த நெறியை மதமாக மாற்றாமல் அசோக தர்மமாக எளிமைப்படுத்தி, வாழ்வியல் வழியாக மக்களுக்குக் கொண்டு சேர்த்தார்.
2. அசோகரும் அரவது மகனும் மகளும் புனித பயணங்களை மேற்கொண்டனர்.
3. புத்த தர்மத்தின் அடிப்படையில் அமைந்த வாழ்க்கை வழிகாட்டு விதிகளை நடைமுறைப்படுத்தவதற்காக பிரச்சாரங்களையும், அதிகாரிகளையும், தணிக்கையாளர்களையும் நியமித்தார்.
4. மனிதர்கள் மற்றும் விலங்குகளின் வசதிக்காக நிழல்தரும் ஆல மரங்கள், நீர்த்தொட்டிகள், ஓய்வு விடுதிகள், கிணறுகள் போன்ற பொதுப் பயன்பாட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.
5. அரசாங்கத் திட்டங்கள் அனைத்தும் மக்களை மையமாக வைத்துத் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன.
6. யாவற்றுக்கும் மேலாக வர்ணசாதி அமைப்பு முறையைப் புறம்தள்ளிவிட்டு சமய சார்பற்ற ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பாடலிபுத்திரத்தில் கூட்டப்பட்ட மூன்றாவது புத்தமத மாநாடு புத்தத் துறவிகளிடையே கட்டுப்பாடு சீர்கெட்டிருந்ததைத் தெளிவாக வெளிப்படுத்தியது. புத்த மார்க்கம் புத்த மதமாக மாற்றப்பட்டு, புத்தரின் 4 பேருண்மைகள், சமூக மார்க்கத்திலிருந்து வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டது. இதை நன்கறிந்த அசோகர் புத்தரின் போதனைகளின் சாரத்தை உள்வாங்கிக் கொண்டு தன்வயப்படுத்தி, மக்கள் எளிதில் புரிந்து கொண்டு பின்பற்றக்கூடியதான தர்மத்தை வெளியிட்டார். இதுவே அசோக தர்மம் என்றழைக்கப்படுகிறது.

## மௌரியப் பேரரசின் சரிவும் அழிவும்

பண்டைய இந்திய வரலாற்றில் மகதத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் மகத்தானது, வியப்புக்குரியது. இந்த எழுச்சிக்கும் வளர்ச்சிக்கு பிம்பிசாரர், அஜாதசத்ரு, சிசுநாகர், மகாபத்ம நாந்த், தனநந்தர் ஆகியோரின் பங்களிப்பு பெருமைக்குரியது. இவர்கள் போட்ட அடித்தளத்தின்மீது சந்திரகுப்தர்,

பிந்துசாரார், அசோகர் ஆகிய மௌரிய மன்னர்கள் இந்தியா தழுவிய பிரமாண்ட பேரரசு மாளிகையை எழுப்பினார். இதற்காக இம்மூவரும் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலத்தைச் செலவிட்டனர். அசோகருக்குப்பின் வந்த அவரது வாரிசுகள் அரை நூற்றாண்டு காலத்தில் மௌரியப் பேரரசின் அழிவுக்கு வழி வகுத்துவிட்டனர்.

**சங்கர்கள்**

தென்னிந்தியாவில் சேர, சோழ, பாண்டியர் ஆட்சியர்கீழ் சங்ககாலம் செழிப்புற்றிருந்தது. ஆனால் வடஇந்தியாவில் அசோகருக்குப்பின் மௌரிய பேரரசு மலையில் மோதிய கப்பலைப் போன்று சிதறுண்டு போயிற்று வடஇந்தியா அரசியல் வெற்றிடமாயிற்று. கலிங்கம் மௌரியப் பேரரசிலிருந்து விடுபட்டுத் தனிநாடாயிற்று. வட மேற்கு இந்தியா கிரேக்கர்கள், சிந்தியர்கள், குஷாணர்கள் போன்றோரின் படையெடுப்புகளுக்கு ஆளாகி அன்னிய நிர்வாகமும், மக்கள் விசுவாசமும் இன்மையால் அசோகரது தர்மம் அரசியல் அத்மமாக உருமாற்றமடைந்தது.

**வரலாற்றுச் சான்றுகள்**

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் இந்திய வரலாற்றை வரைவதற்கான சான்றுகள்

1) புராணங்கள்
2) மனுசுமிருதி உள்ளிட்ட தர்மசாத்திரங்கள்
3) கார்சி சம்கிதா
4) பதஞ்சலியின் மகாபாஷ்யம்
5) பௌத்த ஜகதக் கதைகள், திவ்யவதனா, மகாவஸ்து
6) சமஸ்கிருத மிலிந்த பிரஷ்னா
7) காளிதாசரின் மாளவிகாமித்ரா
8) பாணரின் ஹர்ஷசரிதம்
9) ரோம நாணயங்கள்
10) பெரிப்ளசின் கடல்

**இந்திய கிரேக்க ஆட்சியின் வரலாற்றுச் சிறப்பு**

இநதியாவுக்கும் கிரேக்கத்துக்குமிடையே தொடர்பு மிகவும் தொன்மையானது. தமிழர்கள் கிரேக்கர்களை யவனர் என்றழைத்தனர். அலெக்சாந்தரின் படையெடுப்புக்குப்பின் இந்தியாவுக்கும் கிரேக்கத்துக்குமிடையே நேரடித் தொடர்பு ஏற்பட்டது. இவரது படையெடுப்பை விளைவுகளற்ற வெற்றி, கோப்பையில் வீசிய புயற்காற்று என்று ஒதுக்கிவிட உள்ளங்களில் நிலையான இடத்தைப் பிடித்தது. இந்தியா-பாரசீகம்-கிரேக்கம் வழியாக ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கிடையே தொடர்பு

ஏற்பட்டது. அலெக்சாந்தருக்குப்பின் செலியுகஸ் இந்திய-கிரேக்க உறவைப் பலப்படுத்தினார். செலியுகசின் தூதுவர் மெகஸ்தனிஸ் கிரேக்க-மோரிய உறவுக்கு பாலமாக இருந்தார். பின்னர் வந்த பாக்டிரியக் கிரேக்கர்கள் இந்த உறவையும், தொடர்பையும் புதுப்பித்து, பலப்படுத்தி, விரிவுபடுத்தினர். மெனான்டரின் ஆட்சிக் காலத்தில் இந்திய-கிரேக்கத் தொடர்பு அதன் உச்ச கட்டத்தை எட்டியது.

### கிரேக்க இந்திய ஆட்சியின் விளைவுகள்

கிரேக்கர்கள் இந்தியப் பகுதிகளை 150 ஆண்டுகாலம் ஆட்சி செய்தனர். இந்த ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் கிரேக்க-இந்தியத் தொடர்பால் பல விளைவுகள் ஏற்பட்டன.

1. இந்தியாவுக்கும் ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கியேயான வர்த்தகத் தொடர்பு அதிகரித்தது. எடுத்துக்காட்டாக கிரேக்கர்கள் இந்தியாவிலிருந்து தந்தப் பொருட்கள், வாசனைத் திரவியப் பொருட்கள் போன்றவற்றைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். கருத்துப் பரிமாற்றமும் ஏற்பட்டது.
2. இந்திய கிரேக்கத் தூதுவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். இதனால் இரு நாடுகளுக்கிடையையான அரசதந்திர உறவுகள் பலப்படுத்தப்பட்டன.
3. புஷ்கலாவதி, பூசிபாலா, டெமிட்ரியோ போன்ற கிரேக்க நகரங்கள் முன்மாதிரி நகரங்களாக இருந்தன.
4. கிரேக்கரது ஆட்சிமுறை அமைப்பு, ஒழுங்கு, கட்டுப்பாடு பாரம்பரிய இந்திய நிர்வாகத்தின் கீழ் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.
5. மொழி மக்களின் உள்ளங்களை இணைக்கும் ஆற்றல் பெற்றது. கிரேக்க மொழியிலிருந்து சமஸ்கிருதமும், சமஸ்கிருதத்திலிருந்து கிரேக்க மொழியும் பயன்பெற்றன. எடுத்துக்காட்டாக புஸ்தகா என்ற சமஸ்கிருதச் சொல் கிரேக்கச் சொல்லிருந்து, கலாமா (பேனா) கலாமோஸ் என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டவையாகும்.
6. இந்தியக் காசியில் வரலாற்றில் கிரேக்க காசுகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. (கிரேக்கம், கரோஸ்பதி) இந்திய- கிரேக்கர்களின் அரசியல், பொருளாதார கிரேக்கர்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார அம்சங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளப் பயன்படுகின்றன. பெரும்பான்மையான காசுகள் வட்டவடிவில் உள்ளன. இரு பக்கங்களிலும் தலைகளும், தகவல்களும் இருக்கின்றன. இவை வெள்ளி, பித்தளை, செம்பு ஆகிய உலோகங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. டெமிட்ரியஸ் , யுக்ரடிடஸ் அப்பலோடோடஸ், மெனான்டர் ஆகியோர் வெளியிட்ட காசுகள்

இந்திய கிரேக்க கலாச்சாரக் கலப்பு பற்றியும் அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்படுகின்றன. இந்தியர் நவீன காசுக்கலையைக் கிரேக்கர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள் என்று கூறுவதில் தவறில்லை.

7. இந்திய கிரேக்க கட்டக்கலை, சிற்பம், ஓவியம் ஆகியவற்றிலும் புதிய பாணியைக் கையாண்டு சிறப்பித்தனர். ஒரு வகையில் கிரேக்கர்கள் இந்தியக் கலையின் சிறப்புக் கூறுகளைக் கிரேக்கக் கலையுடன் குழைத்துக் கொடுத்தார்கள் எனலாம். கிரேக்கத் தூதர் ஹெலியோடோரஸ் பெஸ்நகரில் விஷ்ணுவை சிறப்பித்துத் தூண் ஒன்றை எழுப்பினார். இதற்கு மதம் குறுக்கே நிற்கவில்லை. கிரேக்கரின் கலாச்சாரப் பரிசோதனையின் கூட்டு விளைவே பின்னர் பிரசித்திபெற்ற காந்தாரக் கலையாகும். விலங்குகளின் தலைகளைச் சிற்பமாக செதுக்குவது. தூண்களை அலங்கரிப்பது. நுழைவு வாயில்களை அலங்கரிப்பது போன்ற கலை வடிவங்களை அந்தியக் கலைஞர்கள் பின்பற்றினார்.
8. இந்திய இலக்கிய வளர்ச்சியில் கிரேக்க இலக்கியச் செல்வாக்கு கணிசமானது. கிரேக்க காப்பியங்கள் பிரமிக்கத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின. மிலிந்தபன்ஹோ சிறந்த இலக்கிய பாணியாகும். குறிப்பாக கிரேக்கர் இந்திய சோதிடக் கலைக்கு மிகவும் கடன்பட்டிருந்தனர். கிரேக்க இந்திய தத்துவப் பரிவர்த்தனை குறிப்பிடத்தக்கது.
9. யாவற்றுக்கும் மேலாக டெமிட்ரியஸ் அறிமுகப்படுத்திய ஆண்டுக்குறிப்பேடு வராலாற்றுச் சிறப்பமிக்கது. இதேபோன்று செலுசிட் சகாப்பதம் பின்வந்தோராலும் பின்பற்றப்பட்டது.

## இந்திய–பார்த்தியர்கள்

இந்திய பார்த்தியர்கள் என்றழைக்கப்படும் பஹ்லவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்து இந்தியாவில் குடியறியவர்கள் (கி.மு 130). அயலவர்கள் வடமேற்கு இந்தியாவைத் தங்களது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்தனர். இவர்களைப் பற்றிய வம்சங்களைச் சேர்ந்தவர்கள். ஒரு வம்சம் வோநோரெஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

## கொண்டோபர்னஸ் (கி பி. 19 – கி.பி 45)

கொண்டோபர்னஸ் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தற்கு காரணம் அவர் இந்திய முறைகளைப் பின்பற்றியதேயாகும். இவர் புனித தாமஸ் என்ற புகழ் பெற்ற, கிறிஸ்தவ துறவியுடன் நெருங்கிய நட்பு தொடர்பு கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. அவருக்குப்பின் வந்தோர்.

தங்களுக்குள் சண்டையிட்டு கொண்டிருந்தனர். இவர்களது ஒற்றுமையின்மையைப் பன்படுத்தி யூச்சி என்ற சீன எல்லைப்புற நாடோடி வகுப்பினர் பார்த்தியர் என்ற பஹ்லவர்களைத் தாக்கி வெற்றி பெற்றனர். இவர்களே குஷாணர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். குஷாணர்களின் வடஇந்தியாவில் பேராதிக்கம் செலுத்தினர்.

**குஷாணர்கள்**

யவனர்கள் என்ற கிரேக்கர்கள், சாகர்கள் என்ற சித்தியர்கள் பஹ்லவர்கள் என்ற பார்த்தியர்களைப் போன்று கஷாணர்களும் வெளியிலிருந்து இந்தியாவுக்கு வந்து, குடியேறி, ஆட்சி அமைத்தவர்களேயாவர். இவர்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கான வரலாற்றுச் சான்றுகள்

1. குஷாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்
2. நாகார்ஜுனர் எழுதிய புத்தசரிதம், சௌராநந்த காவியம், சாரிபுத்ர பிராகரனா
3. கல்கணரின் ராஜதரங்கிணி
4. யுவான் சவாங்கின் பயணக் குறிப்புகள்
5. யாவற்றுக்கும் மேலாக கனிஷ்னரின் ரபாதக் கல்வெட்டுகள்.

**குஷான் பேரரசு- தோற்றம்,**

**சாதனைகள் & கனிஷ்கரின் விதி**

குஷாணகள் அல்லது குய் - ஷாங் ஐந்து பெரிய யூசி (பழங்குடியினர்) அதிபர்களில் ஒருவர் கி.பி 1 ஆம் நூற்றாண்டில், குஜுலா காட்பிசஸ் (கேட்பிசஸ்) இந்த சமஸ்தானங்களை ஒன்றிணைத்து குஷான் பேரரசை நிறுவினார். இந்தியாவில் குஷான்கள் இயக்கம் முதல் நூற்றாண்டு கி.பி முதல் கட்ஃபிசஸ் காலத்தின் போது அறியப்படுகிறது.

**குஷான் பேரரசு- தோற்றம்**

சீன எல்லையில் அல்லது மத்திய ஆசியாவில் வாழ்ந்த யுஜி பழங்குடியினரின் ஐந்து கிளைகளில் குஷானாக்கள் ஒன்றாகக் கருதப்படுகிறார்கள். அவை சீன மூலங்களில் Guishuang என்று அழைக்கப்படுகின்றன. அவர்கள் இறுதியில் மற்ற யூஜி பழங்குடியினர் மீது ஆதிக்கம் செலுத்தினர். கி.பி 1 ஆம் நூற்றாண்டில் பார்த்தியர்களையும் சாகாக்களையும் தோற்கடித்து அவர்கள் கிழக்கு நோக்கி இந்தியாவை நோக்கி நகர்ந்தனர்.

**குஜூலா காட்பிசஸ் அல்லது காட்்.பிசஸ் I (கி.பி.30 –கி.பி.80)**

இந்தியாவில் குஷானா சாம்ரமஜ்யத்திற்கு அடித்தளமிட்ட முதல் யுவேசி தலைவர் குஜூலா காட்பிசஸ் ஆவார். அவர் காபூல் காந்தகார் மற்றும் ஆப்கானிஸ்தான் மீது தனது மேலாதிக்கத்தை நிறுவினார். அவருக்குப் பிறகு அவரது மகன் விமா தக்டு அல்லது சதாஷ்கானா (கி.பி.80 –கி.பி.95) வடமேற்கு இந்தியாவில் பேரரசை விரிவுபடுத்தினார்.

**விமா காட்பிசஸ் (கி.பி.95 –கி.பி.127)**

ஆப்கானிஸ்தானில் உள்ள ரபடாக்கில் கிடைத்த கல்வெட்டு, இவர் வீமுர் தக்துவின் மகன் என்றும் கனிஷ்கரின் தந்தை என்றும் குறிப்பிடுகிறது. இவர் ஏராளமான தங்க நாணயங்களை வெளியிட்டுள்ளார். அவர் ஒரு சிவ பக்தர் என்பது அவர் வெளியிட்ட நாணயங்களில் இருந்து தெளிவாகிறது. இந்த காலத்தில் இருந்து கிடைத்த ஏராளமான ரோமானிய தங்க நாணயங்கள் அந்த நேரத்தில் இந்தியாவின் செழிப்பு மற்றும் ரோமானியர்களுடன் வளர்ந்து வரும் வர்த்தகத்தை சுட்டிக்காட்டுகின்றன.

**கனிஷ்கர் (*127* AD -150 AD)**

மிகப் பெரிய குஷாண அரசராகவும், பண்டைய இந்தியாவின் சிறந்த அரசராகவும் கருதப்படுகிறார். இவர் விமா காட்பீஸீன் மகன் ஆவார். ஆப்கானிஸ்தான், சிந்துவின் சில பகுதிகள், பார்த்தியாவின் சில பகுதிகள், பஞ்சாப், காஷ்மீர் மகதாவின் பகுதிகள் (பாடலிபுத்ரா உட்பட) மால்வா பெனாரஸ் ஒருவேளை வங்களாத்தின் சில பகுதிகள் கோட்டான் காஷ்கர், யார்க்கண்ட (நவீன சீனாவின் கடைசி மூன்று) ஆகியவை அவரது ராஜ்யத்தில் அடங்கும். அவரது பேரரசு காந்தாரா பெஷாவர் அவுத் பாடலிபுத்ரா காஷ்மீர மற்றும் மதுராவை உள்ளடக்கியது. அவரது ராஜ்யம் உஸ்பெகிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தானின் பகுதிகளையும் உள்ளடக்கியது. அவரது முக்கிய தலைநகரம் பெஷாவர் அப்போது புருஷ்புரா என்று அழைக்கப்பட்டது. பாடலிபுத்திரம் கைப்பற்றப்பட்ட பிறகு அவர் புத்த துறவி அஸ்வகோஷாவை தன்னுடன் பெஷாவருக்கு அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கனிஷ்கர் காலத்தில் பார்சுவா அஸ்வகோஷா வசுமித்ரா நாகார்ஜுனன் சரகா மற்றும் மாதாரா ஆகியோர் அவரது அரசவையில் அறிஞர்களாக இருந்தனர். ஆவர் கிரேக்க பொறியியலாளர் அகேசிலாஸையும் ஆதரித்தார். கனிஷ்கர் நான்காவது பௌத்த சபையை காஷ்மீரில் உள்ள குண்டல்வானாவில் கூட்டினார். அவர் தனது மதக் கருத்துக்களில் மிகவும் சகிப்புத்தன்மை கொண்டவராக இருந்தாலும் பௌத்தத்தை ஆதரித்தார். அவரது நாணயங்களில் இந்திய கிரேக்க மற்றும் ஜோராஸ்ட்ரிய தெய்வங்களின் கலவை உள்ளது.

அவர் கலை மற்றும் கட்டிடக்கலையின் புரவலராகவும் இருந்தார். காந்தாரக் கலைப்பள்ளி இவரின் கீழ் வளர்ந்தது. அவர் பௌத்தின் மகாயான வடிவத்தையும் பிரச்சாரம் செய்தார் மற்றும் சீனாவில் அதை பரப்புவதற்கு அவர் பெரும்பாலும் காரணமாக இருந்தார். அவர் எப்படி இறந்தார் என்பது தெரியவில்லை.

**குஷான்களின் சாதனைகள்**

சமஸ்கிருத இலக்கியம் இக்காலத்தில் வளரத் தொடங்கியது. நான்காவது பௌத்த சபை சமஸ்கிருதத்தில் நடைபெற்றது. அஸ்வோகோஷா முதல் சமஸ்கிருத நாடக ஆசிரியராகக் கருதப்படுகிறார். இந்த நேரத்தில் மூன்று தனித்துவமான கலைப் பள்ளிகள் வளர்ந்தன. வடமேற்கு இந்தியாவில் காந்தாரா பள்ளி, ஆந்திராவில் அமாராவதி பள்ளி மற்றும் கங்கை பள்ளத்தாக்கில் உள்ள மதுரா பள்ளி. இந்தியாவிற்கும் சீனாவிற்கும், இந்தியாவிற்கும் ரோமானியப் பேரரசிற்கும் இடையே வர்த்தகம் செழித்தது.

சீனாவில் பௌத்தம் பரவ வழிவகுத்த பட்டுப் பாதையின் பெரும் பகுதிகளை குஷான்கள் கட்டுப்படுத்தினர். இந்த நேரத்தில்தான் பௌத்தம் கொரியா மற்றும் ஜப்பானுக்கும் பரவத் தொடங்கியது. குஷாண மன்னர்களின் ஆதரவில் பல கோபுரங்கள், சைத்தியங்கள், நகரங்கள் மற்றும் அழகான சிற்பங்கள் கட்டப்பட்டன. குஷான்கள் வெளிநாட்டு படையெடுப்பாளர்களாக இருந்தனர். ஆனால் அவர்கள் வழிகளிலும் கலாச்சாரத்திலும் முற்றிலும் இந்தியமயமாக்கப்பட்டனர். இந்திய வரலாற்றில் *குஷானர்களின் காலம் குப்தர்களின் பொற்காலத்திற்கு சரியான முன்னோடி என்று கூறப்படுகிறது.*

**குஷாண பேரரசின் வீழ்ச்சி**

கனிஷ்கருக்குப் பிறகு அவரது மகன் வசிஷ்கர் ஆட்சிக்கு வந்தார். வசிஷ்காவைத தொடர்ந்து ஹுவிஷ்கா மற்றும் கனிஷ்கா II (வசிஷ்காவின் மகன்) ஆகியோர் வந்தனர். கனிஷ்கர் II ஐத் தொடர்ந்து முதலாம் வாசுதேவர். முதலாம் வாசுதேவன் குஷாணர்களின் கடைசி பெரிய அரசன். அவரது மரணத்திற்குப் பிறகு பேரரசு சிதறியது. அவர் *கி.பி 232 இல் இறந்திருக்கலாம்.*

**துக்ளக் வம்சம்**

**கியாசுதீக் துக்ளக் (1320-1325)**

கியாசுதீன் துக்ளக் பிரபுக்கள் வகுப்பினருடன் சமரக் கொள்கையைப் பின்பற்றினார். அவரது ஐத்தாவது ஆட்சி ஆண்டில் (1325) கியாசுதின் இறந்தார். மூன்று நாள்கள் கழித்து ஜானாகான் என்ற இயற்பெயர் கொண்ட அவரது மகன் ஆட்சிக் கட்டில் ஏறியதோடு முகமது- பின்-துக்ளக் எனும் பட்டத்தை சூட்டிக்கொண்டார்.

**முகமது- பின்-துக்ளக் (1325-1351)**

முகமது- பின்-துக்ளக் கற்றவர் நற்பண்பு நிறைந்தவர் திறமை வாய்ந்த அரசர் என்ற போதிலும் இரக்கமற்றவர் கொடுரமானவர் நியாமற்றவர் என்றும் பெயர் பெற்றிருந்தார். தில்லிக்கு அருகே மீரட் வரையிலும் அணிவகுத்து வந்த மயங்கோலியப் படையை முகமது பின் துக்ளக் திறமையாகப் பின்வாங்கச் செய்தர். ஆனால் அலாவுதீன் போல் தமது திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் மனவுறுதி முகமதுக்கு இல்லை.

**தலைநகர் மாற்றம்**

தில்லியிலிருந்து தென்னிந்தியாவை ஆள்வது கடினம் என்று முகமது- பின்துக்ளக் கருதினார். எனவே தலைநகரை தௌலதாபாத்துக்கு மாற்றும் துணிவான முயற்சியை மேற்கொண்டார். மகாராட்டிரத்திலுள்ள தேவகிரிக்கு முகமது-பிக்-துக்ளக் சூட்டிய மறுபெயரே தௌலதாபாத் இந்தியாவின் நடுவில் அமைத்திருக்கிறதேவரிக்குப் பாறைப்பாங்கான மலையின் உச்சியில் ஒரு வலுவான கோட்டையைக் கொண்டிருக்கிற சாதகமான அம்சமும் இருந்தது. இராணுவ அரசியல் சாதனங்களை மனத்தில் கொண்டு ஃமக்கியமான அதிகாரிகளையும் சூஃபி துறவிகள் உள்பட பல முன்னணிப் பிரமுகர்களையும் தேவகிரிக்கு இடம் மாறுமாறு சுல்தான் ஆணையிட்டார். ஆயினும் இந்தத் திட்டம் தோல்வியைத் தழுவியது. தௌலதாபாதிலிருந்து வட இந்தியாவை ஆள்வது கடினம் என்று முகமது-பின்-துக்ளக் விரைவிலேயே உணர்ந்தார். எனவே மீண்டும் தலைநகரை தில்லிக்கு மாற்ற உத்தரவிட்டார்.

**அடையாள நாணயங்கள்**

முகமது- பின்-துக்ளக் மேற்கொண்ட அடுத்த முக்கியமான பரிசோதனை அடையாள நாணயங்களை அறிமுகப்படுத்தியதாகும்.இந்த நாணய முறை ஏற்கெனவே சீனாவிலும் ஈரானிலும் நடைமுறையிலிருந்தது. இந்தியாவில் நாணயங்களின் மதிப்பு அதிலிருந்த வெள்ளி உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால் துக்ளக்கின் முயற்சி காலத்திற்கு முன் எடுத்த முயற்சியாகி விட்டது. வெண்கல நாணயங்களைப் போலியாக அடிப்பது எளிதாயிருந்தது. அரசாங்கம் அதைத் தடுக்க முடியவில்லை . வெண்கல நாணயங்களைத் திரும்பப் பெற வேண்டிய அளவுக்குப் புதிய நாணயங்களை அரசாங்கம் வெளியிட்டு அதை ஈடுசெய்ய வேண்டியதாயிற்று.

**சுல்தான் மேற்கொண்ட புதுமை நடவடிக்கைககள்**

வேளாண்மையை விரிவாக்குகிற முகமது- பின்-துக்ளக்கின் திட்டம் புதுமையானது அதுவும் துயரகரமாகத் துக்கக்கின் திட்டம் புதுமையானது என்றாலும் அதுவும் துயரகரமாகத் தோற்றது. தோவாப் சமவெளிப் பகுதியில் ஒரு நீண்டகாலக் கடும் பஞ்சம் ஏற்பட்டிருந்த நேரத்தில் இம்முயற்சி

எடுக்கப்பட்டடு. எதிர்ப்பு தெரிவித்த விவசாயிகள் கடுமையாக நடத்தப்பட்டனர். கொடுரமாகத் தண்டிக்கப்பட்டனர். இந்தப் பஞ்சம் தாங்கமுடியாத முறையற்ற நில வரி வசூலுடன் இனங்காணப்பட்டது. வேளாண்மையைத் கவனித்துக் கொள்ள ஒரு தனித் துறையை (திவான்-இ-அமிர்கோஹி) சுல்தான் ஏற்படுத்தினார். கால்நடைகளையும் விதைகளையும் வாங்க கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்குக் கடன் தரப்பட்டது என்றாலும் இது பயன் தரவில்லை. பயிர்களைக் கண்காணிக்கப் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் திறம்படச் செயல்படவில்லை. பிரபுக்களும் முக்கியமான அலுவலர்களும் வெவ்வேறு பின்னணி கொண்டவர்கள். சுல்தானின் எதேச்சதிகாரப் போக்கு அவருக்கு நிறைய எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுத்தது.

தொலைவிலுள்ள பகுதிகளை பயனளிக்கும் வகையில் நிர்வகிக்க இயலாது என்பதை நன்கறிந்த அலாவுதீன் அவற்றை இணைத்துக் கொள்ளவில்லை. அவற்றின் மீது தமது மேலாண்மையை நிறுவுவதயே அவர் விரும்பினார். ஆனால் முகமது பின் துக்ளக் தான் வென்ற அனைத்து பகுதிகளையும் இணைத்துக்கொண்டார். எனவே அவரது இறுதி காலத்தில் அடுத்தடுத்து கிளர்ச்சிகளை சந்தித்தார். அவரது ஒடுக்குதல் நடவடிக்கைகள் மக்களை மேலும் அவரிடமிருந்து அந்நியப்படுத்தின. வங்கம் மதுரை வாரங்கல் ஆவாத் குஜராத் சிந்து ஆகிய தொலைதூரப் பகுதிகள் ஒன்றுக்கு பின் ஒன்றாக கிளர்த்தெழுந்தன. கிளர்ச்சியானர்களுடன் சண்டையிடுவதிலேயே முகமது தமது கடைசி நாட்களைக் கழித்தார். குஜராத்தில் ஒரு கிளர்ச்சித் தலைவரை விரட்டிச் செல்வதில் ஈடுபட்டிருந்தபோது உடல் நலம் கெட்டு தனது 26 வது ஆட்சியாண்டின் (1351) முடிவில் முகமது பின் துக்ளக் இறந்தார்.

### ∴பெரோஸ் ஷா துக்ளக் (1351-1388)

∴பெரோஸின் தந்தை ரஜப் *கியாசுதீன் துக்ளகின் தம்பி ஆவார். இருவருமே அலாவுதீன் கில்ஜியின்* ஆட்சிக்காலத்தில் குரசனிலிருந்து வந்தவர்கள் ரஜப் *ஒரு ஜாட் இளவரசியை மணந்திருந்தார்.* ∴பெரோஸுக்கு ஏழு வயதான போது அவர் இறந்துவிட்டார். கியாசுதீன் ஆட்சிக்கு வந்த போது ∴பெரோஸை 12,000 குதிரை வீரர்களைக் கொண்ட சிரப்புப் படைக்குத் தளபதியாக்கினார். பின்னர் சுல்தானியத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்றின் பொறுப்பு ∴பெரோஸிடம் கொடுக்கப்பட்டது. முகமது- பின்-துக்ளக் தனது வாரிசை அறிவிக்காமலேயே இறந்திருந்தார். முகமதுவின் சகோதரி தனது மகனுக்கு ஆட்சி உரிமை கோரியதைப் பிரபுக்கள் ஆதரிவிக்கவில்லை. முகமதுவின் வாழ்நாள் நண்பர் கான்-இ-ஜஹன் பரிந்துரைத்த முகமதுவின் மகன் ஒரு குழந்தையாக இருந்தார் எனவே ∴பெரோஸ் ஆட்சியில் அமர்ந்தார்.

**பிரபுக்களுடன் சமரசக் கொள்கை**

பிரபுக்கள் வகுப்பினரிடமும் மதத் தலைவர்களிடமும் ∴பெரோஸ் துக்ளக் சமரசக் கொள்கையைக் கடைபித்தார். அவாவுதீன் ஆட்சியில் பறிக்கப்பட்ட சொத்துக்கள் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. அலாவுதீன் ஆதரிக்காத ஒரு நடைமுறையான அலுவலர்களைப் பரம்பரையாகப் பணியமர்த்துகிற முறையை ∴பெரோஸ் மீண்டும் அறிமுகப்படுத்தினார். அரசாங்க அலவலர்களின் ஊதியத்தை அதிகப்படுத்தினார். வருவாய் நிர்வாகத்தை ஒழுங்கு செய்கிற போது பல வரிகளைக் குறைத்தார். அதே நேரத்தில் அரசு நிதி வீணாகச் செலவழிக்கப்படவில்லை என்பதையும் உருதி செய்துகொண்டார். அவருக்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர் செயல்படுத்திய பல்வேறு சித்திலவதை முறைகளை ஒழித்தார். அடிமைகள் குறித்து ∴பெரோஸுக்கு ஒரு மெய்யான அக்கறை இருந்தது. அவர்களது நலன்களைக் கவனிப்பதற்காகத் தனியே ஓர் அரசுத்துறையை ஏற்படுத்தினார்.

1,80,000 அடிமைககளின் நல்வாழ்க்கையில் அடிமைகள் நலத்துறை அக்கறை செலுத்தியது. கைவினைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டடு அரசாங்கத்தின் தொழில் கூடங்களில் அவர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

**∴பெரோஸின் கொள்கை**

∴பெரோஸ் துக்ளக் போர்கள் எதுவும் தொடுக்கவில்லை இருப்பினும் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அவரத வங்கப் படையெடுப்பு ஒரு விதிவிலக்காகும். அவரது படைவ ங்கத்திலிருந்து திரும்புகிற வழியில் திடீரென்று ஒரிசாவுக்குள் நுழைந்தது. திறை செலுத்த ஒப்புக்கொள்ளும் வாக்குறுதியை அப்பகுதி அரசரிடமிருந்து பெறுவதற்கு இது உதவியது. அவரது காலத்தில் இரண்டு மங்கோலிய தாக்குததற்கு இது உதவியது. அவரது காலத்தில் இரண்டு மங்கோலிய தாக்குதல்களே நிகழ்ந்தன. அவ்விரண்டுமே வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன. அவரது காலத்திய ஒரே பெரிய இராணுவப் படையெடப்பு சிந்துவின் மீது தொடுக்கப்பட்டதாகும் (1362). ஏதிரிகளை வழியிலேயே நிலை குலைய வைத்து ∴பெரோஸ் வெற்றி பெற்றார். எனினும் அவரது எதிரிகளும் அப்போது ஏற்பட்ட ஒரு பஞ்சமும் சுல்தானுக்கும் அவரது படைக்கு ஒரு கடுமையான சோதனையை ஏற்படுத்தின. இருப்பினும் ∴பெரோஸின் இராணுவம் சமாளித்து சிந்துவை அடைந்தது. சிந்துவின் அரசர் சுல்தானிடம் சரணடையவும் திறை செலுத்தவும் இணங்கினார்.

**மதக்கொள்கை**

வைதீக இஸ்ஸாமை ∴பெரோஸ் ஆதரித்தார். மதத் தலைவர்களை மன நிறைவுறச் செய்வதற்காக தமது அரசை இஸ்ஸாமிய அரசாக அறிவித்தார். மதவிரோதிகள் கொடுமை செய்யப்பட்டனர். மேலும் இஸ்ஸாமிய விரோத நடைமுறைகள் என கருதப்பட்டவை தடை செய்யப்பட்டன. இஸ்ஸாமிய

அல்லாதவருக்கு 'ஜஸியா' எனும் வரியை விதித்தார். பிராமணர்களும் அதைச் செலுத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். இருப்பினும் புதிய இந்துக் கோவில்கள் கட்டுவதை ∴பெரோஸ் தடை செய்யவில்லை. அவரது பண்பாட்டு ஆர்வம், மதம் மருத்துவம் இசை தொடர்பான பல சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்ப்பதற்கு வித்திட்டது. பல்வகைப் பண்புகள் நிறைந்த ஓர் அறிஞரான ∴பெரோஸ் இஸ்ஸாமியர்.

அல்லாதார் உள்படக் கற்றிந்தவர்களை மனத்தடையின்றி ஆதரித்தார். இசையில் விருப்பம் கொண்டிருந்தார். பல கல்வி நிறுவனங்களையும் மசூதிகளையும் அரண்மனைகளையம் கோட்டைகளையும் நிறுவினார்.

**பொதுப் பணிகள்**

பல பாசனத் திட்டங்களை ∴பெரோஸ் மேற்கொண்டார். சுட்லெஜ் நதியிலிருந்து ஹன்ஸிக்கு வெட்டிய கால்வாயும் யமுனையில் வெட்டிய மற்றொரு கால்வாயும் அவரது வலுவான பொதுப்பணி வளர்ச்சிக் கொள்கையைச் சுட்டிகின்றன. தனது மகன் பதே கானையும் பேரன் கியாசுதீனையும் தில்லி சுல்தானியத்தின் இணை ஆட்சியாளர்களாக ஆக்கிய பிறகு 1388 இல் ∴பெரோஸ் இறந்தார்.

பிரபுக்கள் வகுப்பினருக்கு அனுமதிக்கப்பட்டிருந்த பரம்பரை உரிமை இராணுவத்திலும் செயல்படுத்தப்பட்டது. இது தில்லி சுல்தானியத்தை வலுவிழக்கச் செய்தது. அதிகாரத்தை மீண்டும் பெற்ற பிரபுக்களின் அரசியல் தலையீடுகள் அரசு நிலைகுலையும் அளவுக்கு இட்டுச் சென்றது. ∴பெரோஸ் துக்ளக் இறந்த ஆறு ஆண்டுகளுக்குள் அவரைத் தொடர்ந்து நால்வர் ஆட்சி புரிந்தனர்.

**தைமூரின் படையெடுப்பு**

கடைசி துக்ளக் அரசர் நசுருதீன் முகமது (1394-1412) இவரத ஆட்சியின் போதுதான் மத்திய ஆநஸ்ரீசியாவிலிருந்து தைமூரின் படையெடுப்பு நிகழ்ந்தது. தைமூர் பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் மங்கோலிய அரசர் செங்கிஸ்கானுடன் இரத்த உறவு இருப்பதாகக் கூறத்தக்க துருக்கியர். ஊள்ளபடியே எந்த எதிர்ப்புமின்றித் தைமூர் தில்லியைச் சூறையாடினார். தைமூர் வந்து சேர்ந்த செய்தியைக் கேட்ட சுல்தான் நசுருதீன் தில்லியை விட்டுத் தப்பி ஓடிவிட்டார். கொல்லர் கல்தச்சர் போன்ற இந்திய கைவினைஞர்களைச் சிறைபிடித்து சென்ற தைமூர் தனது தலைநகர் சாமர்கண்டில் கட்டிடங்களை எழுப்புவதில் அவர்களை ஈடுபடுத்தினார். நசுருதீன் 1412 வரையிலம் சமாளித்து ஆட்சி செய்ய முடிந்தது பிறகு வீழ்ந்துகொண்டிருந்த பேராசை சையது லோடி வம்சங்கள் 1526 வரையிலும் தில்லியிருந்து ஆண்டனர்.ஷ

# அலகு – V

## பேரரசுகள் உருவாகுதல் -II

## குப்தர் காலம்

கி.பி நான்காம் நூற்றாண்டிலிருந்து ஆறாம் நூற்றாண்டு வரை குப்தர் காலம் என்றழைக்கப்படுகிறது. அதற்குக் காரணம் மௌரியர் பேரரசுக்குப்பின் வலிமைமிக்க மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இநதியாவின் பெரும்பகுதி ஒரு ஆட்சியின்கீழ் இல்லை. மௌரியரின் வீழ்ச்சியின் விளைவாக இந்தியா பல பகுதிகளாகச் சிதறுண்டு போயிற்று சுங்கர்கள், கன்வர்கள், சதாவாகனர்கள், குஷாணர்கள் என்று பிராந்திய அரசுகள் சுதந்திரமாகச் செயல்பட்டன. பேரரசு பலவீனப்பட்டாலோ அல்லது வீழ்ச்சியடைந்தாலோ பிராந்திய அரசுகள் தலைநிமிர்ந்து நிற்கின்றன. அரசியல் நிலையின்மையும், தெளிவின்மையும், ஒற்றுமையின்மையும் இந்தியாவைப் பலமிழக்கச் செய்கின்றன. இந்நிலையில் குப்தர்களின் எழுச்சியம், அவர்களின் பேரரசின் மாட்சியும் இந்தியாவை ஒற்றுமையின்மை என்ற இருட்டிலிருந்து ஒற்றுமை என்ற வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. மௌரிய பேரரசு வீழ்ந்தாலும் பேரரசைப் புதுப்பித்து மீண்டும் இந்தியாவை ஒரு குடையின்கீழ் கொண்டு வர வேண்டும் என்ற ஆதிக்க ஆசை மட்டும் இந்தியாவில் இருந்து கொண்டே இருந்தது. அந்த ஆசையின் விளைவே குப்த பேரரசின் எழுச்சியாகும்.

### குப்தர் காலத்தையறிய சான்றுகள்

#### புராணங்கள்

குப்தர்கள் குப்த மன்னர்கள், மற்றும் குப்தர்கால வாழ்வியல் பற்றி அறிந்துகொள்வதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. புராணங்கள் குப்தர்களைப் பற்றி அறிந்தகொள்வதற்கான அறிகுறிகளை, அடையாளங்களை, தடயங்களைத் தருகின்றன. வாயு, மத்சய, விஷ்ணு, பாகவத, ஸ்கந்த, பிரம்மண, மார்க்கண்டேய புராணங்கள் குப்த ஆட்சியாளர்களைப் பற்றி ஒருசில வரிகளில் கூறுகின்றன. இவர்கள் ஆட்சி செய்த பகுதிகளைப் பற்றிய குறிப்பகளும் உள்ளன. கலியுக ராஜ விரித்தனா குப்த வம்சத்தைப் பற்றி அறிந்துகொள்ள ஓரளவு உதவுகின்றது.

#### கல்வெட்டுகள்

கல்வெட்டுகள் சமகாலச் சான்றுகள், சாட்சிகள். இவை முதல் நிலைச் சான்றுகள். குப்தர் கால கல்வெட்டுச் சான்றுகள் நான்கு வகைப்படும்

1. தனியார் கல்வெட்டுகள். இவை தனி நபர்கள் அளித்த நன்கொடைகள் பற்றிவை. இவற்றில் குப்த மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இதுவரை கிடைத்துள்ள மொத்தம் 42 கல்வெட்டுகளில் 23 தனியார் கல்வெட்டுகளாகும்.
2. அரசாங்க கல்வெட்டுகள். இவை அரசாங்கத்தின் சார்பாக வெளியிட்ட பட்டயங்கள். இச்செப்புப் பட்டையங்கள் நிலக் கொடைகள் பற்றியவை. அவற்றிலிருந்து கொடையாளர், கொடையைப் பெற்றுக் கொண்டவர். அக்கால பொருளாதார நிலை, அரசியல் நிகழ்வுகள் பற்றித் தெரிந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக இரண்டாம் சந்திரகுப்தர், புத்தகுப்தர் பற்றிய தகவல்களை அரசாங்க கல்வெட்டுகளில் உள்ளன.
3. கல்வெட்டாணைகள். இவற்றில் அரசாங்க ஆணைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து சமுத்திர குப்தர் ஸ்கந்த குப்தர், இரண்டாவது சந்திர குப்தர் பிறப்பித்த ஆணைகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.
4. செப்பேடுகள் இவற்றில் பிராமணர்களும், கோயில்களுக்கும் கொடுக்கப்பட்ட அறக்கொடைகள் பற்றி அறிந்த கொள்ளமுடிகின்றது. எடுத்துக்காட்டாக கடம்பர்கள் கல்வெட்டுகள், ராஷ்டிரகூடர் செப்பேடுகள், சாரநாத், நாளந்தா கல்வெட்டுகள் குப்த மன்னர்களைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன.

**நாணயங்கள்**

கல்வெட்டுகளைப் போன்றே நாணயங்களும் சமகால உள்சான்றுகளாகும். முதலாம் குமார குப்தர், முதலாம் சந்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர் வெளியிட்ட நாணயங்கள் பிறச் சான்றுகளில் காணப்படாத நிகழ்வுகளைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. உதாரணமாக இவற்றிலிருந்து அசவதேயாகம், அரசரின் சமயக் சார்புடைமை, ராணுவ நடவடிக்கைகள், அரசியல், பொருளாதார, கலாச்சார நிலை பற்றித் தெரிந்து கொள்ள முடிகின்றது. நாணயங்கள் போன்றே குப்தர்கால முத்திரைகள் அதிகாரிகள் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றன.

**இலக்கிய சான்றுகள்**

குப்தர் கால இலக்கியச் சான்றுகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். 1. சட்ட இலக்கியம். முதலாம் சந்திரகுப்தர் ஆட்சிக் காலத்தில் காமந்தகர் எழுதிய நீதிசாரம் என்ற நூல் கௌடில்யர் எழுதிய அர்த்தசாத்திரத்தைப் போன்றது. இந்நூல் குப்தப் பேரரசின் ஆட்சி மற்றும் நிர்வாகம் பற்றிக் கூறுகிறது. நூரத சுமிரிதியும், பிரிகஸ்பதி ஸ்மிரிதியும் குப்த மன்னர்களின் நீதி நிர்வாகத்துக்கு வழிகாட்டி நூல்களாகப்

பயன்படுத்தப்பட்டன. 2. காளிதாசரின் படைப்புகள். சாகுந்தலம், மேகதூதம், ராகுவம்சம், மாளவிகாக் நிமித்ரம், ரிதுசம்காரம், குமார சம்பவம் அகியவை காளிதாசரின் இறவா இலக்கியப் படைப்புகளாகும். இவை காதல், இயற்கை, சமுதாயம், சமயம், அரசியல் பற்றிய தகவல்கள் நிறைய உள்ளன. 3) அரசியல் நாடகங்கள். விசாகதத்தரின் தேவிசந்திரகுப்தம், ஷாஜிகாவின் காமுடிம்கோத்சவம், சூத்ரகாவின் மிரிச்சகடிகா ஆகிய அரசியல் நாடகங்கள் ராமகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர் அவரது முடிசூட்டுவிழா, அரவது சகோதரன் விதவை மனைவியை மணந்து கொண்டது. குப்தர்கால நிலையற்ற அரசியல் நிலை பற்றியெல்லாம் குறிப்படுகின்றன. 4) சமஸ்கிரத காவியங்கள், ராமதேவரின் கதாசரிதசாகரம், பாஷரின் சுவப்னவாச வதத்தா, சந்திர குப்த பாரிபிரிச்சா, சேது பண்டிதா, 5)யாவற்றுக்கும் மேலாக பிரயாகை மேதை ஹரிசேனரின் கவிதைகள் சமத்திர குப்தர் கால நிகழ்வகளைப் பற்றிய அரிய ஆவணமாகும்.

## குப்தர் பேரரசர்கள்

ஸ்ரீகுப்தர், கடோத்கஜர், சந்திரகுப்தர் ஆகியோர் முதல் மூன்று குப்த மன்னர்கள். குப்த ஆவணங்களில் முதல் இருவரும் மகாராஜக்கள் என்றும் மூன்றாவதாக மன்னரான சந்திரகுப்தர் மட்டும் மகாராஜாதிராஜா என்றும் குறிப்பிட்டுள்ளது. ஸ்ரீகுப்தர் குப்த வம்சத்தைத் தோற்றுவித்தவர். இவரது மகன் கடோத்கஜர் மகதத்தைக் கைப்பற்றியதாக கூறப்படுகிறது. முதல் மூன்று குப்த மன்னர்களில் சந்திரகுப்தரே மன்னராகக் காட்சியளிக்கிறார்.

## சந்திரகுப்தர் கி.பி. 320- கி.பி. 330

கடோத்கஜரின் வாரிசு மகனான மகாராஜாதிராஜா முதலாம் சந்திரகுப்தர் குப்த மன்னராவார். இவர் மதியூகி. திருமண அரசதந்திரத்தைக் கையாண்டு தன்னையும், தன் அரசையும் பலப்படுத்திக்கொண்டார். இவர் பீகாருக்கு வடக்கேயுள்ள புத்தர்கால லிச்சாவி அரசகுலத்தோடு மண உறவு வைத்துகொண்டார். லிச்சாவி அரசகுமாரி குமாரதேவியைத் திருமணம் செய்து கொண்டதன் மூலம் குப்த-லிச்சாவி வம்சங்களை ஒன்று சேர்த்தார். இதன்மூலம் குப்தர்களின் பூர்வீகம் லிச்சாவி வம்சத்தோடு தொடர்புடையது என்று ஊகிக்க முடிகின்றது.

## சமுத்திர குப்தர் கி.பி. 330- கி.பி 380

சந்திரகுப்தருக்கும் லிச்சாவி இளவரசிக்கும் பிறந்த வாரிசு மகன் சழத்திரகுப்தரைப் பற்றி அறிந்துகொள்வதற்கான வரலாற்றுச் சான்று அலகாபாத் கல்தூண் கல்வெட்டு ஆகும். இக்கல்வெட்டு சமத்திரகுப்தரின் தலைமைத் தளபதி ஹரிசேனரால் பொறிக்கப்பட்டது. இந்த கல்வெட்டு 11 வரிகளில் ஒரே வாக்கியத்தில் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல,

இக்கல்வெட்டு அசோகர் தூண் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இது நகரி வரிவடிவத்தில் உள்ளது. அலகாபாத்தின் கல்வெட்டில் சமுத்திரகுப்தரின் கால நிகழ்வுகளும் அவரது சாதனைகளும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. குப்த பேரரசின் உண்மையான தோற்றத்திற்கான ஒரு ஆவணம் இக்கல்வெட்டேயாகும். சமுத்திரகுப்தர் ஒரு பல்கலை வித்தகர். ஆவர் குப்த வம்சத்தின் ஒப்பற்ற மாவீரன் ஒரு மாபெரும் பேரரசைப் படைத்தவர். ஏகாதிபத்தியவாதி. அரசியல் விவேகி, திறமையான ஆட்சியாளர். ஆளுமை ஆற்றல் பெற்றவர். அவருக்கு அரம் போன்ற கூரிய அறிவு இருந்தது. பண்பாளர் பெற்ற செல்வம் இருந்தது. அறச்செயல் செய்யும் மனம் இருந்தது. புலமையோடு கூடிய இசை ஞானம் இருந்தது. கவிதை புனையக்கூடிய பண்பட்ட இதயம் இருந்தது. அவரது பட்டபெயர் கவியரசர் அலகாபாத் தூண் கல்வெட்டில் சமத்திகுப்தர் ஒரு கவிஞர் என்று மூன்று இடங்களில் குறிப்பிடதக்கது.

சமுத்திரகுப்தர் ஒரு வரலாற்று மாமன்னர், மாமேதை. ஆவர் நாற்பதாண்டு காலத்தில் இந்திய வரலாற்றில் நிரந்தர இடத்தைப் பெறும் அளவுக்கு சாதனைகள் செய்தார். தலைநகர் பாடலிபுத்திரத்திலிருந்து ஆட்சி செய்து மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார். அவரது ஆதிக்கக்கரம் வடமேற்கு இநதியா, வங்காளம், அஸ்ஸாம், நேப்பாளம், தென்னிந்தியாவில் காஞ்சி வரை நீண்டது. அவர் சேர்த்த செல்வத்தை இலக்கியம், கலைகள், அறிவியல், கலாச்சாரம் ஆகியவற்றுக்காகச் செலவிட்டார். நாணயங்களில் வீணையோடு காணப்படும் சமத்திரகுப்தர் இந்தியாவையே வீணையாகக் கருதி இன்னிசை எழுப்பினார். அவரது அகில இந்தியப் பார்வை வியப்புக்குரியது. போர்களுக்கிடையே அமைதியைக் கண்ட அற்புத கவிஞர் சமுத்திரகுப்தர். போரை நேசித்தார். தர்மத்தைப் போற்றினாார்.

### இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்தர், கி.பி 380- கி.பி. 415

சமுத்திரகுப்தருக்குப்பின் அவரது மகன் இரண்டாம் சந்திரகுப்தர் என்ற விக்கிரமாதித்தர் அரியணையேறினார். விக்கிரமாதித்தர் என்றால் வீரத்தின் சூரியன் என்று பொருள். இவரும் திருமண உறவுகள் மூலம் பேரரசை விரிவுபடுத்திப் பலப்படுத்தினார். இவர் குந்தனா பகுதியை ஆண்டுவந்த மன்னனின் இளவரசியை மணந்தார். அதே போன்று நாகர்குல இளவரசி குபேரநாகாவையும் மணந்து கொண்டார். இவருக்கும் நாகர்குல அரசிக்கும் பிறந்த பிரபாவதியை தக்காணத்தை ஆட்சி செய்த இரண்டாவது ருத்ரசேனருக்கு மணமுடித்து வைத்தார். அதேபோன்று அரவது மகன் முதலாம் குமாரகுப்தருக்கு கர்நாடகப் பகுதியை ஆட்சி செய்த கடம்பர் மன்னன் மகளை மணம் செய்து வைத்தார். இத்தகைய அரசியல், ஆட்சித்

திருமணங்கள் மூலம் மேற்கிந்தியாவையும், தக்காணத்தையும் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தார்.

இத்திருமண உறவுகளின் விளைவாக குப்தப் பேரரசு அரபிக் கடல் வரை விரிவடைந்தது. ரோமப் பேரரசுடன் வணிகத் தொடர்பு ஏற்பட்டது. உஜ்ஜியின் வர்த்தக முக்கியத்துவம் பல மடங்கு உயர்ந்தது. புரோச் முக்கியத் துறைமுகமாக திகழ்ந்தது. குப்தப் பேரரசு இமாலயத்திலிருந்து நர்மதா வரை விரிவடைந்தது. இரண்டாம் சந்திரகுப்தர் இவ்வெற்றிகளைக் கொண்டாடும் முகந்தான் அஸ்வமேத யாகம் செய்து விக்கிரமாதித்தன் என்ற புனைப்பெயரையும் சூட்டிக்கொண்டார். பாடலிப்புத்திரமே தலைநகராக இருந்த போதிலும் உஜ்ஜயினியே நடைமுறைத் தலைநகரமாகத் திகழ்ந்தது. இவரது ஆட்சிக்காலத்தில் அயோத்தியும் தலைநகருக்கொப்பாகச் சிறப்புற்றிருந்தது.

**சீனப் பயணி – பாகியான்**

சீனர்கள் அறிவார்வமிக்கவர்கள். அறிவு தேடி அலைபவர்கள். அவர்களது அறிவு வேட்கை அளப்பறியது. ஆவர்களது அறிவும், அறிவுத் தெளிவும் வியப்புக்குரியது. உலகில் அறிவில் உயர்ந்தோரை நட்பாக்கிக் கொள்வதில் சிறந்தவர்கள். அவர்கள் அறிவு தேடிகள். பாகியான் யுவான் சுவாங், இட்சிங் ஆகிய மூவரும் சீனாவிலிருந்து நீண்ட பயணம் மேற்கொண்டு அறிவு தேடி இந்தியாவுக்கு வந்த யாத்ரிகர்கள், பயணிகள், இவர்கள் புத்தரைப் பற்றியும், புத்தரது போதனைகள் பற்றியும் ஆராய்சி செய்வதற்காக இந்தியாவுக்கு வந்தார்கள். இவர்களுள் பாகியான் இரண்டாம் சந்திரகுப்தரின் சமகாலத்தவர்.

**பாகியானின் 15 ஆண்டுகள்**

பாகியான் இரண்டாம் சந்திரகுப்தர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு வந்தார். இவர் தன் வாழ்நாளில் மொத்தம் 15 ஆண்டுகள் (கி.பி 399- கி.பி 414) அறிவுப் பயணத்தில் செலவிட்டார். அவர் ஆபத்துக்களுக்கிடையே மத்திய சீனாவிலிருந்து 6 ஆண்டுகள் பயணம் செய்து இந்தியாவுக்கு வந்தார். அடுத்த 6 ஆண்டுகள் இந்தியாவில் செலவிட்டார். பாகியான் இந்தியாவில கனோஜ், அயோத்தியா, ஸ்ரவாஸ்தி, கபிலவஸ்து, குசிநகரம், வைசாலி ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டு பாடலிபுத்திரம் திரும்பினார். கங்கைச் சமவெளியைப் பற்றியும், பேரரசின் நிர்வாகத்தைப் பற்றியும் விவரிக்கிறார். கங்கைச் சமவெளியைப் பிராமணர்களின் மையப் பகுதி என்று கூறுகிறார். அசோகரது கற்கட்டிடங்களையும் மகதத்தில் செயல்பட மருத்துவமனைகள் பற்றியும் விவரிக்கிறார். பின்னர் ராஜகிரகம், பௌத்தகயா, பெனாரஸ், தக்காணம் சென்றுவிட்டு பாடலிபுத்திரத்துக்குத்

திரும்பிவந்து, பிரதிகள் எடுத்துக்கொண்டார். பின்னர் இலங்கை சென்று பௌத்த சட்டத் தொகுப்புகளைப் பிரதி எடுத்துக் கொண்டு, புத்தர் சம்மந்தமான உருவங்களையும், ஓவியங்களையும் சேகரித்துக் கொண்டார். பாகியான் ஜாவாக்கும் சென்றுவிட்டு 3 ஆண்டுகள் பயணம் செய்து தாய்நாடு திரும்பினார்.

**பாகியான் பயணக் குறிப்புகள்**

பாகியான் அரவது பயணக் குறிப்புகளில் அவர் சென்ற இடங்களிலெல்லாம் பாதுகாப்போடு இருந்தார். திருட்டோ, துன்புறுத்தலோ இல்லை. இந்தியாவில் புத்தமதம் தழைத்தோங்கியுள்ளது. மக்களின் வளமும் செல்வமும், நற்குணமும், மகிழ்ச்சியும், சமுதாய சமய சுதந்திரமும் வியப்பை அளிக்கிறது. பெரிய நகரங்களில் காணப்படும் மக்கள் தொகை, இலவச மருத்துவமனைகள், அறக்கட்டளை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களில் காணப்படும் மாணவர்கள், மடங்கள், ஆடம்பர அரண்மனைகள் ஆகியவை அதிசயிக்கத்தக்கவை. மக்கள் தங்கள் குப்பங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டியதில்லை. பெருங்குற்றவாளிகள் கூட கடுமையாகத் தண்டிக்கப்படுவதில்லை. மக்கள் ஒரு இடத்திலிருந்து பிற இடங்களுக்கு சுதந்திரமாகச் சென்று வருகின்றனர். வெங்காயத்தையும் பூண்டையும் விரும்பி உண்கின்றனர். விலங்குகளையோ பறவைகளையோ கொல்வதில்லை. பன்றிகளையோ, கோழிகளையோ வளர்ப்பதில்லை. வீட்டு விலங்குகளை விற்பதில்லை. சந்தைகளில் கசாப்புக் கடைகளோ, மதுபானக்கடைகளோ காணப்படவில்லை. என்றெல்லாம் ஆர்வத்தோடும் அதிசயத்தோடும் எழுதிக் கொண்டு செல்கிறார்.

**பாகியானின் நோக்கம்**

பாகியானின் பயன்குறிப்புகளில் பல அதிசயங்கள், பேய்பிசாசுகள், வினோதமான தகவல்கள் உள்ளன. சில அநீதப்படுத்தி கூறப்பட்டுள்ளன. சில நம்பமுடியாதவை. அவருக்கு இந்திய அரசியலிலோ, நிர்வாகத்திலோ அக்கறையில்லை. அவர் இந்தியாவுக்கு வந்ததின் நோக்கம் புத்த மதத்தைப் பற்றி தெரிந்து கொள்ளவும், புத்தர் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காகவும் தான். அந்த நோக்கம் நன்கு நிறைவேறியது. அவர் இந்தியாவில் புத்தமதத்தின் நிலை பற்றி கூறியுள்ளவை வரலாற்றுச் சிறப்புமிக்கவை. குறிப்பாக கபிலவஸ்து, காசிநகரம் ஆகிய இடங்களிலிருந்த பௌத்தப் புனிதமடங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தன என்று குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று கங்கைச் சமவெளி பிராமணர்களின் மையப்பகுதியாக இருந்தது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. குப்தர் காலத்தில் பிராமணர்கள் செல்வாக்கு பெற்றிருந்ததைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது. வடமேற்கு

இந்தியாவிலும் அதற்கப்பாலும் புத்தமதம் சிறப்புற்றிருந்தாலும் பிற இடங்களில் பிராமண சமயத்தின் மீட்சி குறிப்பிடத்தக்கதாயிருந்தது.

### முதலாம் குமாரகுப்தர், கி.பி. 415- கி.பி. 455

இரண்டாம் சந்திரகுப்தரைத் தொடர்ந்து அவரது மகன் குமாரகுப்தர் பேரரசனார். இவர் இவரது மாண்புமிகு முன்னோர்கள் - முதலாம் சந்திர குப்தர், சந்திரகுப்தர், ராம குப்தர், இரண்டாம் சந்திரகுப்தர் போட்டு கொடுத்த பாதையில் விரைவாகவும் விவேகத்துடனும் பயணித்தார். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குப்தப் பேரரசில் தடையற்ற அமைதியும் வளமும் நிலவின. முன்னோர் வழி சென்ற குமார குப்தர் பேரரசைச் சிந்தாமல் சிதறாமல் பாதுகாத்ததோடுமட்டுமன்றி, விரிவுபடுத்தி அதன் பெயரையும், புகழையும் புதிய உச்சத்துக்குக் கொண்டு சென்றார். அவர் மகேந்திராதித்யா என்ற பெயரைப் பெருமையுடன் சூட்டிக்கொண்டார். நாணயங்களை நிறைய வெளியிட்டார். இந்த நாணயங்கள் குமாரகுப்தர் பேரரசை உறுதியோடும் விவேகத்தோடும் பாதுகாத்துப் பராமரித்தார் என்பதற்குச் சாட்சியம் கூறுகின்றன. இவர் அஸ்வமேத யாகம் செய்தார்.

### வெளிநாட்டு படையெடுப்புகள்

குமாரகுப்தரின் ஆட்சியின் இறுதிக்காலத்தில் வலிமையும் வளமுமிக்க புஷ்யமித்திரர்கள் என்ற நர்மதாப் பகுதி மக்கள் மகதத்தின்மீது படையெடுத்தனர். இவர்களது படையெடுப்பைக் குமாரகுப்தரின் மகன் இளவரசர் ஸ்கந்தகுப்தர் தோற்கடித்தார். குப்தபேரரசு பழுதின்றிப் பாதுகாக்கப்பட்டது. எனினும் குமாரகுப்தரின் படை பேரரசை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப் போதுமானதாக இருந்ததேயன்றி உறவினருக்கு உதவும் அளவுக்குப் பலம் பெற்றதாகயில்லை. குமாரகுப்தரின் தூரத்து உறவினரான வாகடக மன்னர் நரேந்திர சேனர் குப்தர் பேரரசின் உதவியை நாடியபோது அவருக்கு உதவமுடியவில்லை. அதேபோன்று வாகடக வம்சத்தின் கடைசி மன்னரான அரிசேனர் வெளியார் படையெடுப்புகளால் பலமிழந்து கொண்டிருந்த குப்தர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு தக்காணத்தில் தனது பேரரசை பலப்படுத்திக் கொண்டார். பொதுவாக குமாரகுப்தரின் ஆட்சிக்காலத்தில் அமைதி நிலவியது எனலாம்.

### ஸ்கந்தகுப்தர், கி.பி 455-கி.பி 467

குமாரகுப்தரின் வாரிசு மகன் ஸ்கந்தகுப்தர். இவர் அரியணை ஏறியபேது புஷ்யமித்திரர்களைப் புறங்கண்டு ஸ்கந்தகுப்தரை வாழ்த்த குமாரகுப்தர் உயிரோடில்லை. குமாரகுப்தரின் நேரடி வாரிசான ஸ்கந்தகுப்தர் தனது ஆட்சி காலத்தில் இரட்டைச் சவால்களை சந்திக்க வேண்டியதாயிற்று.

1)புஷ்யமித்திரர்களின் தொடர்த் தாக்குதல்கள். 2)அதைவிட அபாயகரமான ஹுணர்களின் மூர்க்கத் தாக்குதல். பாராம்பரிய வீரமிக்க ஸ்கந்தகுப்தர் இருமுனைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்பட்டது. ஸ்கந்தகுப்தர் இவ்விரட்டை வெற்றிகளின் நினைவாக பௌாரசுக்கருகே பிட்டாரி என்ற இடத்தில் வெற்றித் தூண் எழுப்பினார். இத்தூணில் ஸ்கந்தகுப்தர் புஷ்யமித்திரர்களையும், ஹுணர்களையும் புறங்கண்ட தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்போர்களின் விளைவாக குப்தப் பேரரசின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. இப்பாதிப்பு அவர் வெளியிட்ட தரக்குறைவான நாணயங்களில் வெளிப்பட்டது. இது குப்தப் பேரரசு சரிவுப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்ததற்கான அறிகுறியாகும். இப்பொருளாதாரப் பின்னடைவின்போதும் அவர் உடைபட்டு, பழுதுபட்ட புகழ்மிக்க சுதர்சனா ஏரிக்குக் கரைகள் அமைத்து, பலப்படுத்த தவறவில்லை. இதன் மூலம் ஸ்கந்தகுப்தருக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க சுதர்சனா ஏரியின் மீதும் இருந்த அக்கறை வெளிப்படுகிறது. அதுமட்டுமல்ல அவர் தலைநகரைப் பேரரசின் மையப் பகுதியான அயோத்திக்கு மாற்றினார். அங்கிருந்துகொண்டு பேரரசைத் திறமையாக நிர்வகித்தார். ஸ்கந்த குப்தர் குப்தர் குலத்தின் கடைசி மாமன்னராவார்.

## குப்தர்களின் தன்மை

மகதத்தை மையமாகக் கொண்டிருந்த குப்தப் பேரரசை ஆற்றல்மிகு அரசர்கள் தொடர்ந்து திறமையாக ஆட்சி செய்தனர். ஒரு பேரரசைத் தொய்வில்லாமல் ஐந்து தலைமுறையினர் தொடர்ந்து ஆட்சி செய்தது வரலாற்று விந்தையாகும். இது வம்ச ஆட்சிக்குக் கிடைத்த அரிய அங்கீகாரமாகும். இதற்கு இணையாக வரலாற்று உதாரணம் எதுவுமில்லை! ஸ்கந்தகுப்தர் இப்பாரம்பரியப் பெருமையைப் பழுதின்றிப் பாதுகாத்தார். பிற குப்த மன்னர்களைப் போன்றே இவரும் தனித்தன்மையுடன் திகழ்ந்தார். புதுவகை நாணயத்தை அறிமுகப்படுத்தினார். சந்திரகுப்த மௌரியரால் கட்டப்பட்ட சுதர்சனா ஏரியைக் காப்பாற்றியது ஸ்கந்த குப்தரின் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும். இவர் விஷ்ணு பக்தராக இருந்தபோதும் மதக்காழ்ப்புணர்வு இவரது மனதை மாசுபடுத்தவில்லை. இவரும் பாரம்பரிய சமயப் பொறையைப் பின்பற்றினார். சர்வ சமயப் பொதுநோக்கு குப்தப் பேரரசர்களின் வம்ச மனப்போக்காகும். குமாரகுப்தரும், ஸ்கந்தகுப்தரும் குப்தப் பேரரசின் சரிவுக்கும் அழிவுக்கும் காரணம் என்று கருதப்படுகின்றனர். இவர்கள் செயல்பட்ட சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு பார்த்தோமானால் இவ்விருவரும் குப்தப் பேரரசின் பாதுகாவலர்கள் என்பது புலனாகும். குமாரகுப்தரும், ஸ்கந்த குப்தரும் "பேரரசு அமைப்பைக் குலைப்பதற்கு ஒருவிதத் தவறும் செய்யாமல் இருந்தமையே அவர்களுடைய பெருமைக்குக் காரணம்". குறிப்பாக ஸ்கந்தகுப்தர் வெல்வதற்கரிய ஹுணர்களை எதிர்கொண்டு, விரட்டியடித்து, பேரரசின் பகுதிகளை மீட்டு, அவற்றைப் படைக்காப்பாளர்களிடம் ஒப்படைத்தார். "அரச பதவியளிக்கும் அதிருஷ்ட தேவதை, பிற மன்னர்களை விடுத்து. இவனை

தேர்ந்தெடுத்தானெனக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது". எனினும், பொருளாதார நெருக்கடியும், சார்பரசர்களின் கிளர்ச்சிகளும் குப்தப் பேரரசைப் பலமிழக்கச் செய்தன.'

## *ஹூணர்களின் தாக்குதல்*

ஐம்பெரும் குப்தப் பேரரசர்களுக்குப்பின் முதலாம் சந்திரகுப்தர், சமுத்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர், குமாரகுப்தர், ஸ்கந்தகுப்தர் ஐஞ்சிறுங் குப்த வாரிசு மன்னர்கள் புரு குப்தர், நரசிம்ம குப்தர், இரண்டாம் குமாரகுப்தர், புத்தகுப்தர், பானுகுப்தர் ஆகியோர் ஆட்சி செய்தனர். முதல் ஐவரும் வரலாற்றை உருவாக்கியவர்கள். கடைசி ஐவரும் வரலாற்றால் உருவாக்கப்பட்டவர்கள். வாரிசுகள் என்ற முறையில் அரியாசனத்தை அலங்கரித்தவர்கள். இவர்களிடம், குப்தப் பேரரசைக் கட்டிக்காக்கும் திறமையோ, காப்பாற்றும் ஆற்றலோ இல்லை. ஆரோக்கியமற்ற உடம்பை நோய்க்கிருமிகள் பற்றிக் கொள்வதைப் போன்று பலமிழந்த பேரரசை ஹூணர்கள் என்ற காட்டுக் கூட்டத்தினர் தாக்கி வீழ்த்தினர். குப்தப் பேரரசு வரலாற்றிலிருந்து விடைபெற்றுக் கொண்டது!

## குப்தப் பேரரசின் *வீழ்ச்சி*

குப்தப் பேரரசின் பரப்பளவு பெரிது. அப்பேரரசு வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே நர்மதையாறு வரை விரிவடைந்திருந்தது. மேற்கே குஜராத்தும், கிழக்கே வங்காளமும் அப்பேரரசின் பகுதிகளாகும். குப்தர்காலக் கடைசியில் இப்பேரரசு பிளவுபட்டு கத்தியவார், கனோஜ், பெங்கால் ஆகிய தனியரசுகளாக சிதறுண்டு போயிற்று. குப்தப் பேரரசின் சரிவுக்கும் அழிவுக்கும் பல காரணங்கள் உண்டு:

## *பேரரசின் அழிவிற்கான காரணங்கள்*

**திறமையற்ற வாரிசுகள்**.

குப்தப் பேரரசைத் தோற்றுவித்தவர்கள் ஆக்கத்திறனும் ஆதிக்கத்திறனுமிக்கவர்கள். பின்னர் வந்த வாரிசுகள் இத்திறமைகள் எதுவுமின்றி வாரிசுரிமைப் போட்டிகளிலும் போராட்டங்களிலும் குறியாக இருந்தனர். இப்போராட்டம் குமார குப்தர் ஆட்சிக் காலத்தில் துவங்கி அவரது மகன் ஸ்கந்தகுப்தர் காலத்தில் தீவிரமடைந்ததாகக் கூறப்படுகிறது. அதுமட்டுமல்ல, இத்தொலைநோக்கில்லா வாரிசுகளால் வாகடகர்களுடனான மணஉறவுத் தொடர்பை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக்கொள்ளத் தெரியவில்லை. எனவே இவர்களால் அகல்விரிவான குப்தப் பேரரசைக் கட்டிக்காக்க முடியவில்லை.

**வாரிசுரிமை**.

வாரிசுரிமைப் போராட்டத்துக்கு மூலகாரணம் முடியாட்சியில் குலத்துரிமை (Primogeniture) பற்றிய தெளிவின்மையாகும். முடிமன்னர்கள் திறமையும், தொலைநோக்கும், வலிமையும் பெற்றிருக்கும்போது முடியாட்சி மேன்மையுடையதாகத் திகழும். வாரிசுகள் ஆற்றலற்றவர்களாக இருந்தால் பேரரசு பலவீனமடைந்து சரிந்து சிதறிப் போகின்றது!

அதுமட்டுமல்ல. மன்னனுக்குப் பல அரசிகளும், காதல்கிழத்தியரும், காமக்கிழத்தியரும் இருக்கும்போது அரச குடும்பம் கரடித் தோட்டமாகிவிடுகிறது! சதிகள், சூழ்ச்சிகள், ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகள். இந்நிலையில் குலத்துரிமை கடைமுறையுரிமை அல்லது கடைசி மகன் மரபுரிமை பெறும் முறையாகத் தரம் தாழ்ந்து விடுகிறது.

**சார்பரசுகள்.**

பல நிலப் பகுதிகளின் தொகுப்பே போரசு. *திறமையான* மன்னர்களின் கீழ் இப்பகுதிகளின் இணைப்பு முழுமையைவிடப் *பெரியதாக* இருக்கும். திறமையற்ற அரசர்களின்கீழ் சார்பரசுகள் *சுதந்திர* அரசுகளாகச் செயல்படுவர். வழக்கமாக அரசகுடும்பத்தைச் சேர்ந்த*வர்கள்* மாகாண ஆளுநர்களாக இருப்பார்கள். இவர்களில் சிலர் வாரி*சுரிமை* கோருபவர்களாகவும் இருப்பர். திறமையற்ற மன்னர் இறந்தவுடன் *இவர்கள்* வாரிசுரிமைப் போராட்டத்தில் ஈடுபடுவர் அல்லது வாய்ப்பற்ற*வர்களாவர்.* சுதந்திரமான அரசுகளாகப் பிரகடனப்படுத்திக் கொள்வர். *இவ்வாறு* பிரிந்தவைதான் கத்தியவார், மால்வா, சுனோஜ், வங்காள அரசுகளாகும். *4.* **பொருளாதார பலவீனம்**. வலிமைமிக்க ராணுவத்தில் மட்டுமே பேரரசை உருவாக்கவும், விரிவுபடுத்தவும், பாதுகாக்கவும் முடியும். ராணுவ பலம் பேரரசின் பொருளாதார பலத்தைப் பொறுத்துள்ளது. முதல் மூன்று குப்தப் பேரரசர்கள் பொருளாதார பலத்தையும் ராணுவ பலத்தையும் சமநிலையில் வைத்திருந்தனர். ஆனால் குமாரகுப்தராலும், அவரது வாரிசு மகன் ஸ்கந்த குப்தராலும் இச்சமநிலையை நீட்டிக்க முடியவில்லை. சந்திரகுப்தரும் சமுத்திரகுப்தரும் தங்க நாணயங்களை வெளியிட்டனர். ஆனால் குமாரகுப்தராலும், ஸ்கந்த குப்தராலும் செப்பு நாணயங்களையே வெளியிட முடிந்ததால் பொருளாதாரம் பலவீனமடைந்ததால் வலிமைமிக்க ராணுவத்தைப் பராமரிக்க முடியவில்லை. அதேபோன்று பேரரசின் எல்லைகளையும், குறிப்பாக வட மேற்கு எல்லையை பாதுகாக்க இயலவில்லை.

**புத்த மதச் செல்வாக்கு**

துவக்ககால குப்தப் பிராமண சமய ஆதரவாளர்களாக இருந்தனர். ஆனால் பிற்கால குப்த மன்னர்கள் புத்தமதப் புரவலர்களாக இருந்தனர். எனவே இவர்களது அமைதிக் கொள்கையின் தாக்கத்தால் வெளிநாட்டவரின் படையெடுப்புகளை எதிர்கொள்ளும் வல்லமை இல்லாமல் போய்விட்டது. பாகியானின் பயணக் குறிப்புகளில் இக்குறைபாட்டைச் சுட்டிக்காட்டியுள்ளார். இக்காரணம் எந்த அளவுக்கு உண்மையானது என்பது சர்ச்சைக்குரியது. ஏனெனில் குமார குப்தரும், ஸ்கந்த குப்தரும் படையெடுப்புகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு முறியடித்துள்ளனர்.

**ஹூணர் படையெடுப்பு.**

குமாரகுப்தரின் ஆட்சிக் காலத்தில் புஷ்யமித்திரர்களது படையெடுப்பால் பேரரசுக்குப் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. ஸ்கந்த குப்தர் காலத்தில் ஹுணர்களின் கடுந்தாக்குதல் பேரரசை அச்சுறுத்தியது. ஸ்கந்த குப்தர் அந்த அச்சுறுத்தலை வெற்றிகரமாக

எதிர்கொண்டாலும் அவரது வாரிசுகளால் ஹுணர்களின் படையெடுப்பு வெள்ளத்தைத் தடைபோட்டு நிறுத்த முடியவில்லை. ஹூணர் தலைவன் தோரமானர் காபூல் வழியாக இந்தியாவுக்கு வந்து, காந்தாரத்தை வெற்றிகொண்டு, குப்தர் படையைத் தோற்கடித்து, பஞ்சாப், ராஜபுதனம், சிந்து மால்வா பகுதிகளைக் கைப்பற்றி, குப்த வம்சத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

**ஹுணர்கள்**

ஹுணர்கள் கையாள்வதற்குக் கடினமான மத்திய ஆசிய நாடோடிகள் என்ற சீனப் பிரிவினராகக் கருதப்படும் *வீலேச்சர்கள்* ஒரு பகுதியினர் ரோமப் *பேரரசு வீழ்வதற்கு* காரணமாயிருந்தனர். மற்றொரு பிரிவினர் நான்காம் *நூற்றாண்டின் இறுதியில்* பாக்டீரியாவைக் கைப்பற்றி, இந்துகுஷ் மலையைத் *தாண்டி* காந்தாரத்தைக் கையகப்படுத்திக்கொண்டு, இந்தியாவில் குடியேறி, *குப்த பேரரசை முடிவுக்குக்* கொண்டு வந்தனர். ஸ்கந்த குப்தருக்குப்பின் *குப்த பேரரசு பலமிழந்துபோய்,* சிதறுண்டு, குழப்பத்தில் ஆழ்ந்ததால் குப்தரை *வென்று ஹுணர்* கொடியை ஏற்றுவது ஹூணமாவீரன் தோரமானருக்கு எளிதாயிற்று காஷ்மீரத்தையும், பஞ்சாபையும் கைப்பற்றியபின் தோரமானர் *குவாலி*யருக்கருகே குப்தப் படையைத் தோற்கடித்தார்.

தோரமானர் என்ற ஹுணப் புலிக்குப் பிறந்த மிகிரகுலர் (Mihirakuta) அரிப்பகுபத பாலாதித்யா என்ற குப்த வம்சத்தைச் சேர்ந்த மன்னரைத் *தோற்*கடித்து கப்பம் கட்டும் நிலைக்குக் கொண்டு வந்தார். யுவான் சுவாங் (Hiuen Tsang) என்ற சீன யாத்ரீகர் அவரது பயணக் குறிப்புகளில் மிகிரகுலர் மகதத்தின்மீது படையெடுத்தது, நரசிம்மகுப்தரைத் தோற்கடித்தது. பின்னர் *அந்த* குப்த மன்னரால் தோற்கடிக்கப்பட்டது, மால்வா மன்னர் யசோதர்மரிடம் *புறமுதுகிட்டது*, இவற்றின் விளைவாக ஹுண மன்னன் மிகிரகுலரின் பேராசு காஷ்மீரம் - காந்தாரம் பிற சில பகுதிகளாக சுருங்கியது பற்றி விரிவாகக் கூறியுள்ளார். சுருங்கக்கூறின் தொடர்ந்து ஹுணர் படையெடுப்புகளால் குப்தப் போசு இந்திய வரலாற்றிலிருந்து மறைந்தது. குப்தப் பேரரசு வரலாற்றிலிருந்து மறைந்தாலும் அதன் ஆக்கபூர்வமான பங்களிப்புகள் வரலாற்றுப் பக்கங்களில் சிறப்பின்றி வாழ்கின்றன.

**குபதர்கால ஆட்சி*முறை***

**மைய அரசாங்கம்**

பண்டைக்கால வழக்கப்படி குப்தர் காலத்திலும் முடியாட்சி முறையே பின்பற்றப்பட்டது. மன்னனே மத்திய அரசாங்கத்தின் மையப் புள்ளியாக இருந்தார். அவரைச் சுற்றியே மைய அரசாங்கம் சுழன்றது. கல்வெட்டுகள் மன்னனை மகாராஜாதிராஜா, சாம்ரட், சக்ரவர்த்தி, பரமதைவதா, பரமபட்டாரகா, லோகதர்ம தேவா, தண்டவரனேந்திரதகா என்றெல்லாம் வர்ணிக்கின்றன. அதாவது மன்னன் மண்ணுலகை ஆட்சிசெய்பவன் தெய்வத்

திருமகன் வருணன், குபேரன், இந்திரன், யமன் ஆகியோருக்கு இணையானவன்! சுருங்கக்கூறின் மன்னன் தெய்வத்தன்மை வாய்ந்தவன்.

**யுவராஜா**

முடியாட்சி மரபுரிமை சார்ந்திருந்தது. மன்னரின் மகன் மன்னன்! மன்னனுக்கு அடுத்த நிலையில் இருந்தது யுவராஜா. மன்னனின் மகன்தான் ஆட்சி உரிமை பெற்றிருந்தான்! மன்னன் தன் வாரிசைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தார். வழக்கமாக மூத்த மகனை வாரிசாக்குவதே வழக்கத்தில் இருந்தது. சமுத்திரகுப்தரும் இரண்டாவது சந்திரகுப்தரும் அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள்தான் யுவ *ராஜா* துணையாக சிவில் மற்றும் ராணுவ அதிகாரிகள் இருந்தனர். அவர் அனுமதியோடு உத்தரவுகள் பிறப்பித்தார். அந்த ஆணைகளை *நிறைவேற* குமாரமாத்தியர்கள் என்ற அதிகாரிகள் இருந்தனர்.

**மந்திரி *சபை***

மந்திரி பரிஷத் என்று அழைக்கப்பட்ட மந்திரி மண்டலம் மன்னருக்கு ஆலோசனை வழங்கியது. இந்த அவையில் இளவரசர்கள். மன்னரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானோர் இடம் பெற்றிருந்தனர். கல்வெட்டில் சாந்தி விக்ரஹிதா, குமாரமாத்யா, மகாதண்டநாயகர் ஆகிய சொற்கள் இடம்பெற்றுள்ளன. இச்சொற்கள் முறையே போர்-அமைதி அமைச்சர், இளைய அமைச்சர், தலைமைத் தளபதி ஆகியோரைக் குறிக்கின்றன. இவர்கள் அமைச்சரவையில் சிறப்பிடம் பெற்றிருந்தனர். இவர்களது பதவி மரபுரிமை பெற்றிருந்தன. ஒரே அமைச்சரிடம் சிவில் மற்றும் ராணுவ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அமைச்சர்கள் ஆலோசனைகளை ஏற்பதும் ஏற்க மறுப்பதும் மன்னனின் விருப்புரிமையாகும்.

**அரசரின் அதிகாரங்கள்**

குப்தப் பேரரசரின் அதிகாரங்களுக்கு அளவில்லை! அவரே சிவில் ராணுவ, நீதி அதிகாரங்களின் ஊற்றாகக் கருதப்பட்டார். அவர் ஆளுநர்கள், உயர் அதிகாரிகள், ராணுவ தளபதிகள் ஆகியோரை நியமித்தார். நிலமனைத்தும் மன்னனின் உடைமை. அதை அவர் யாருக்கு வேண்டுமாயினும் எப்படி வேண்டுமாயினும் வழங்கலாம். வரிகளை விதிக்கவோ, அதிகரிக்கவோ, தள்ளுபடி செய்யவோ, நிறுத்திவைக்கவோ அதிகாரம் பெற்றிருந்தார்.

மன்னன் எதேச்சதிகாரியாக செயல்படவில்லை. அவர் அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்தார். அரச தர்மத்துக்குக் கட்டுப்பட்டிருந்தார். திறமைமிக்க அதிகாரிகள் அவருக்கு உறுதுணையாக இருந்தனர். குமாரமாத்தியாக்கள் தற்கால மாவட்ட ஆட்சியருக்கு ஒப்பானவர்கள். மகாசேனாபதி, மகாபாலா திகிரிதா (தலைமை அதிகாரி) மகாபிலிபதி (யானைப்படைத் தலைவர்), பதவபதி (குதிரைப்படைத் தலைவர்), மகாபிரதிகாரா (அரண்மனைக் காவல்படைத் தலைவர்), சாந்திவிக்ரஹிதா (போர், அமைதி,

வெளியுறவு அதிகாரி) அமாத்தியர்கள் போன்ற அதிகார வர்க்கமே குப்தர் ஆட்சியின் எஃகுச் சட்டமாகத் திகழந்தது. இந்த அதிகாரவர்க்க வட்டத்துக்குள் சிவில், ராணுவ, காவல்துறை, வருவாய்துறை, நீதித்துறை அதிகாரிகள் இடம் பெற்றிருந்தனர். சுருங்கக்கூறின் குப்தர்கால மைய அரசு, அரசு தர்மத்தின் அடிப்படையில் அமைந்த அதிகாரவர்க்க ராணுவக் கட்டுப்பாட்டு ஆட்சியாகும்.

### மாகாண நிர்வாகம்

குப்தப் பேரரசு நிர்வாக வசதிக்காக ராஜ்யங்கள் ராஷ்டிரங்கள், தேசங்கள், மண்டலங்கள், சபாளிகள் என்ற பெயர்களில் பிரிக்கப்பட்டது. மாகாண அரசாங்க அமைப்பில் மாற்றம் அதிகமில்லை. மரபுவழி வந்த மாகாண அரசாங்கமே நடைபெற்றது. அரச குடும்பத்தைச் சேர்ந்தோர் மாகாண ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் மாகாணத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி வெளியார் ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாத்தனர். மாநில நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வதற்காக உபாசிகர்கள் புத்திகள் போசிகாக்கள் கோப்தாக்கள் ராஜஸ்தானியாக்கள், வியைஸ்திதி ஸ்தாபாக்கள், *ஆகியோர் அடங்கிய பட்டாளமே இருந்தது.*

### நீதி நிர்வாகம்

ஒரு ஆட்சியின் உண்மைத்தன்மை அதன் நீதி நிர்வாகத்தின் மூலம் வெளிப்படுகிறது. குப்தர் கால உச்ச நீதிமன்றம் தர்மஸ்தானம் என்று அழைக்கப்பட்டது. இத்தலைமை நீதிமன்றம் குப்தப் பேரரசரின் தலைமையில் தலைநகரில் செயல்பட்டது. இம்மன்ற நீதிபதிகள் தர்மாதிகாரர்கள் என்று அழைக்கப்பட்டனர். நீதிமன்ற ஆவணக்காப்பாளர்கள் மகாக்ஷபதாவிகர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு உதவி செய்ய அதிகாரிகளும் அலுவலர்களும் இருந்தனர்.

பாகியான் தனது பயணக் குறிப்பில் குப்தர்களின் ஆட்சிக்காலத்தில் குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். குற்றம் எவ்வளவு கொடுமையாக இருந்தாலும் மரண தண்டனை கொடுக்கப்படுவதில்லை என்று கூறுகிறார். குற்றங்களுக்குத் தக்கவாறு அபராதங்கள் மட்டுமே விதிக்கப்பட்டது என்று பதிவு செய்துள்ளார். காளிதாசரின் கூற்றுப்படி திருடன் பிடிபட்டால் அவன் ரக்ஷினாக்கள் என்ற காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் திருடர்கள் நகர நுழைவுவாய்க்கருகில் காவலில் வைக்கப்பட்டனர் என்றும் தெரிகிறது. விசாகதத்தரின் முத்திர ராட்சசத்தில் குற்றவாளிகள் வீதிகளில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு தண்டிக்கப்பட்டனர் குற்றவாளிகளின் கண் களையப்பட்டன அல்லது யானைக்காலில் இடறச் செய்தனர். ஸ்கந்த ஜுனகக் கல்வெட்டு நெருப்பு, நீர், நஞ்சு சித்ரவதைகள் ப்றறிக் குறிப்பிடுகிறது. குப்தர் கால நீதிமுறை அரசாங்கத் தலையீடின்றி நடத்தப்பட மனிதாபிமானத்தோடு கூடிய. உதாரகுண நீதியின் அடிப்படையில் அமைந்ததாகும். குப்தர் காலத்தில் தர்மசாத்திரங்களின்

அடிப்படையில் வழங்கப்பட்டது. நீதி வழங்கும் முறையில் கடுஞ்சோதனைகளைக் கையாளும் முறையும் வழக்கத்திலிருந்தது.

### விவசாயம்

குப்தர்கால வளத்துக்கும் வனப்புக்கும் பொருளே ஆதாமாக இருந்தது. பொருளாதாரத்தின் அடிப்படை விவசாயம். விவசாயம் பொருளாதாரத்தின் இன்றியமையாமையை மௌரியர்களைப் போன்றே குப்தர்களும் நன்கறிந்திருந்தனர். கொள்கை அளவில் நிலம் அனைத்தும் அரசருக்கு சொந்தம். நடைமுறையில் அரச மற்றும் அரசாங்க போக எஞ்சியவை தனியார்வசம் இருந்தது. நிலத்தை உழுதோ நிலச்சொந்தக்காரர்களாக இருந்தனர்.

### தொழில்

காலத்தில் விவசாயம் வளர்ந்ததைப் போன்று தொழில்களும் சிறப்புற்றிருந்தன. தொழிலுக்குத் தேவை கனிம வளங்கள். மகதம் பொன் விளையும் பூமி. கனிம வளங்களின் கருவறை. மௌரிய மன்னர்கள் கனிம வளங்களை மூலப் பொருட்களாக கொண்டு தொழில்களைப் பெருக்கினர். நகரங்களின் வளர்ச்சி தொழில்களை வெகுவாக ஊக்குவித்தன. குப்தர்கள் மௌரியர் விதைத்த பல்வேறு தொழில் விதைகளின விதைகளின் விளைச்சலை அறுவடை செய்தனர். குப்தப் பேரரசில் கிடைத்த தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு, பித்தளை, ஈயம், தகரம் போன்ற கனிமங்களை அகழ்ந்தெடுத்து அவற்றை பல்வேறு தொழில்களில் முதலீடு செய்தனர். இரும்பைக்கொண்டு விவசாயத்துக்கு வேண்டிய கலப்பை போன்ற கருவிகளை செய்தனர். குப்தர் காலத்தில் ஐந்து விதமான கலப்பைகள் இருந்ததாகத் தெரிகிறது. இரும்பு உருக்குத் தொழில் வளர்ச்சியடைந்தது. அதேபோன்று தங்கம், வெள்ளி ஆகியவற்றைக்கொண்டு ஆடம்பர அணிகலன்கள் செய்யப்பட்டன.

### நாணய மாற்றுமுறை

குப்தர் காலத்தில் நாணயங்கள் வாங்கல் விற்பனை ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டன. வர்த்தகப் பரிமாற்றங்களுக்கு தங்க, வெள்ளி, செம்பு நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. முதலாம் சந்திரகுப்தர்தான் முதன் முதலில் சந்திரகுப்தர் – குமாரதேவிபாணி தங்க நாணயங்களை வெளியிட்டார். பெரிய அளவிலான வர்த்தகப் பரிமாற்றங்களுக்குத் தங்க நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன. சிறு வியாபாரம் பண்டமாற்று முறையில் நடைபெற்றது. தங்க நாணயப் புழக்கம் பொருளாதார வளத்தின் அடையாளமாகும். தங்க வெள்ளி நாணயங்களுக்கான மாற்று விகிதம் (Exchange Rate) தெளிவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. குப்தர்காலப் பிற்பகுதியில் தங்க வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாக செப்பு நாணயங்கள் வெளியிடப்பட்டன! இவை குப்தர்காலச் சரிவின் அறிகுறியாகும்.

**சமுதாயமுறை**

சாதிமுறை குறிப்பாகப் பிறப்பின் அடிப்படையிலான நான்கடுக்கு சாதிப்படிமுறை அமைப்பு, இந்தியாவின் சாபக்கேடாகும். சாதியும், சமயமும் இயல்பிலேயே பிரிவினை சக்திகளாகும். சாதிமுறையின் தவிர்க்க வியலா விளைவே சமத்துவமற்ற சமுதாய அமைப்பாகும். சாதிமுறையின் நச்சுத்தன்மையை நன்கறிந்த புத்தரும், மகாவீரரும் சாதி ஒழிப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கல்வியின் மூலம் சாதிமுறையை அழித்துவிடமுடியும் என்று நம்பி அவர்கள் பௌத்த சமண சங்கங்களின் கதவுகளை சாதி வேறுபாடின்றி அனைவருக்கும் திறந்து விட்டனர். அதன்பின் நந்தர்கள் மற்றும் மௌரியர் காலங்களில் சாதிமுறையும் அதன் ஆணிவேரான பிரிமண சமயமும் தலைதூக்க முடியாமல் இருந்தன. புறந்தள்ளப்பட்ட இவ்விரு பிரிவினை சக்திகளும் குப்தர் காலத்தில் புதுவீரியத்துடன் வெளிப்பட்டன. சாதிமுறையும், பிராமண சமயமும் மறுபிறப்பு பெற்றன!

**பிராமணர்கள்**

குப்தர் காலத்தில் பிராமண இயக்கம் புத்துயிர் பெற்றது. வர்ண தயார் படி சாதி அமைப்பைக் கொண்ட சமுதாயப் பகுப்புமுறை புதுவக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டது! பிராமணர்கள் மீண்டும் சமுதாயக் கூர்முனைக் கோபுரத்தின் உச்சிக்குச் சென்றனர். சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் முன்னரிமை பெற்றனர்.

**சத்திரியர், வைசியர், சூத்திரர்**

படிமுறை சாதி அமைப்பின் இரண்டாம் நிலையிலிருந்த சத்திரியர்களும், மூன்றாம் நிலையிலிருந்த வைசியர்களும், நான்காம் நிலையிலிருந்த சூத்திரர்களும் கால மாற்றங்களுக்கேற்ப மாறினர். பிராமணர்கள் விவசாயம், வர்த்தகம், அரசியல் பதவிகள் போன்ற துறைகளில் சேர்ந்ததைப் போன்று சத்திரியர்களும் வர்த்தகம், தச்சுத் தொழில், வியாபாரம், நெசவு போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். அதேபோன்று சூத்திரர்களும், ராணுவம், விவசாயம், வியாபாரம், கைவினைப்பொருள் தயாரிப்பு போன்ற தொழில்களைச் செய்தனர். சூத்திரர்களும், பிராமணர்களும் அரசர்களாகவும் இருந்துள்ளனர்! இருப்பினும் பிராமணர்-சத்திரியர்-வைசியர்-சூத்திரர் என்ற சாதிப் பாகுபாடு நீடித்தது இப்பாகுபாடு வடநாட்டில் நிலைபெற்றது. தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், இந்த வர்ணசாதிமுறை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

**சண்டாளர்கள்**

குப்தர்கால சாதி அமைப்பு முறையில் மற்றொரு மாபெரும் மாற்றம் நிகழ்ந்தது. அதாவது நான்கு சாதிகளுக்கப்பால் ஐந்தாவது சாதி ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இவர்கள் நான்கு கட்ட சாதி சதுரங்க அமைப்புக்கு வெளியே தள்ளப்பட்டனர். அவர்கள் தீண்டத்தகுதியற்றோராகக் கருதப்பட்டனா. அவர்களுக்கு சண்டாளர்கள் என்று பெயர் சூட்டப்பட்டது. பிணங்களைப் புதைத்தோர்/எரித்தோர், மனித மலத்தைச் சுமந்தோர்.

விலங்குகளை அப்புறப்படுத்தி அவற்றின் தோலைப் பயன்படுத்தியோர், அழுக்குத் துணிகளைத் துவைத்தோர், மரண தண்டனையை நிறைவேற்றியோர் போன்றோர் கறைபட்டவர்களாக, களங்கப்பட்டவர்களாக, தூய்மை கெட்டவர்களாகக் கருதப்பட்டு தீண்டத்தகாதவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு. சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர்!

## குடும்பம், பெண்கள்

குப்தர் காலத்தில் குடும்பம் சமுதாயத்தின் அடித்தள அமைப்பாக இருந்தது. கூட்டுக் குடும்பமே பொதுவான குடும்ப முறையாக இருந்தது. கணவனே அக்குடும்பத்தின் தலைவன். பெண்கள் பூப்படைவதற்கு முன்பே திருமணம் செய்து வைக்கப்பட வேண்டும் என்பதை நாரத, யஜ்னவால்கிய புராணங்கள் வலியுறுத்தின. குழந்தைத் திருமணம் வழக்கத்தில் இருந்தது. ஒரு சாதி, ஒரே கோத்திரத் திருமணம் நடைமுறையில் நீடித்தது. பெண் பொருளாகக் கருதப்பட்டாள்! கந்தர்வத் திருமணம் இலக்கியத் திருமணம்; நடைமுறை சாத்தியமற்றது. ஒருவன்-ஒருத்தி என்ற ஒற்றைத் திருமணம் சிறப்பித்துக்கூறப்பட்டாலும் பலதார மணத்தையே அரசர்களும், செல்வந்தரும் விரும்பி ஏற்றனர். கணவனுக்கும் குடும்பத்துக்கும் முழு நேரமும் உழைக்கும் பெண்ணே உயர்ந்த மனைவியாகக் கருதப்பட்டாள். முழு நிறைவான மனைவி என்பவள் கணவனைக் கவனித்துக் கொண்டு, மாமனார் மாமியாருக்கு சேவகம் செய்து. கணவனின் நண்பர்களை சிறப்பித்து, *பணியாளர்களிடம் அன்பாக* நடந்துகொண்டு, உண்ணாநோன்பிருந்து சமயச் *சடங்குகளைச் சரியாகச்* செய்ய வேண்டும் என்று வரையறுத்துள்ளார் *காளிதாசர். மனைவியைப்* புறக்கணித்த கணவன் மனம் வருந்திப் *பிராயச்சித்தம் செய்தால்* போதும்! விதவைகள் தனிமைப்படுத்தப்பட்டனர் *அல்லது உடன்கட்டையேறினர்.* அரசர்குலப் பெண்டிருக்கும், செல்வந்தர்குலப் பெண்டிருக்கும் சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தன. *அவர்கள் விதிவிலக்கு. பொதுவாக* பெண்கள் புராணங்களிலும், காப்பியங்களிலும், *கவின்கலைகளிலும்* பெருமைப்படுத்தப்பட்டு குடும்ப வாழ்க்கையிலும் பொது *வாழ்க்கையிலும்* சிறுமைப்படுத்தப்பட்டனர். குப்தர்கால சமுதாயமும் ஆணாதிக்க *சமுதாயமாகவே* இருந்தது. கூட்டுக்குடும்பத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பு இருந்தபோதிலும் அவர்களது கீழ்ப்பணிதல் முறைப்படுத்தப் *பட்டிருந்தது.* சில சந்தர்ப்பங்களில் அவசியமானால் கணவன் மனைவியை *அடிக்கலாம்* என்று கூறுகிறது.

## வாழ்க்கை *முறை*

குப்தர் காலத்தில் மக்களின் வாழ்க்கை *முறை* எவ்வாறு இருந்தது *என்பதை* வாத்சயாயனர் நகர மக்களின் வாழ்க்கைநிலை பற்றி விரிவாகக் கூறியுள்ளார். நகர மாந்தர் வசதியான வீடுகளில் வளமோடு வாழ்ந்தனர். பல வீடுகளைச் சுற்றி இன்பத் தோட்டம் இருந்தது. செல்வந்தர் அதிகாலை எழுந்து, குளித்து நறுமண ஆடை அணிந்து அலுவல்கள் பார்த்தனர். குளிப்பதற்கு சவக்காரம் *சோப்பை* உபயோகித்தனர்! நான்கு நாட்களுக்கொருமுறை சவரம் செய்து கொண்டனர். அவர்களது உணவில் சாதம்,

கோதுமை, பார்லி, காய்கறிகள், நெய், இனிப்பு சேர்த்துக் கொண்டனர். பெரும்பான்மையோர் இறைச்சி உண்டனர். நீர், பழச்சாறு, பால், மதுபானங்கள் அருந்தினர். சமுதாய கேளிக்கைக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன. பண்டிகைகள் கொண்டாடப்பெற்றன. அரச குடும்பத்தினர் மற்றும் நகர மாந்தரின் வாழ்க்கைத் தரம் மிகவும் உயர்வாக இருந்தது. இவர்களிடையே சிற்பக்கலை, கவிதை, ஓவியம் சிறப்புற்றிருந்தன. இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வீணை வாசிப்பு செல்வாக்கு பெற்றிருந்தது. மேடை நாடகங்கள் பிரபலமாயிருந்தன. சூதாட்டம், மல்யுத்தம், விலங்குப்போர், பறவைச்சண்டை, விளையாட்டுகள் மக்கள் கண்டு களித்தனர். விலைமாதர்கள் நகர வாழ்க்கைக்கு வண்ணம் சேர்த்தனர். பணக்காரப் பெண்கள் விலைமதிப்புமிக்க தங்க, வைர நகைகள் அணிந்தனர். நகர மக்களுக்கு கிராம மக்களுக்குமிடையேயான இடைவெளி அதிகம் இருந்தது அவர்களது கொண்டாட்டங்களுக்கும் கேளிக்கைகள் பாரம்பரியமானவை.

**சமயநிலை**

குப்தர் கால மக்களின் சமய வாழ்க்கையின் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது குப்தர் கால கல்வெட்டுகளும் நாணயங்களும் இலக்கியங்களும் புராணங்களும் பாகியானின் பயணக் குறிப்புகளும் இந்த மாற்றத்துக்கு சாட்சிகளாக உள்ளன. அசோசகருக்குப்பின் தலைமறைவாயிருந்த வேத சடங்குகளுடன் கூடிய பிராமண இரு கிளைகளாகத் தழைத்தன சைவ சமயம் பிராமண சமயத்தின் மறுபிறப்பு எனலாம் பாகியான் கங்கைச் சமவெளி மறுபிறப்பெடுத்தது அங்கிருந்து தான் அச்சமயம் இந்தியாவின் பகுதிகளுக்கு அதன் கிளைகளைப் பரப்பியது குப்த மன்னர்கள் சமயம் பொறையைக் கடைபித்தாலும் பொதுவாக வைணவம் தழுவிய பிராமண சமயத்தவராகவே இருந்தனர் குப்தர்கள் பிராமணர்களைப் பின்பற்றி சமுதாய அங்கீகாரத்தையும் அந்தஸ்தையும் பெற்றனர்

**சைவ வைணவ சமயங்கள்**

சிவனை மையப்படுத்திய சைவ சமயமும் விஷ்ணுவை மையமாக கொண்ட வைணவ சமயமும் பிராமண சமய நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை குப்தர் காலத்தில் இவ்விரு சமயங்கயளிலும் பக்தியையும் விக்ரக வழிப்பாட்டையும் வலியுறுத்திய வைணவமே மேலோங்கி நின்றது இரண்டாம் சந்திர குப்தர் வெளியிட்ட தங்க நாணயங்களின் ஒரு பக்கத்தில் விஷ்ணுவின் உருவம் இடம் பெற்றுள்ளது குப்த மன்னர்களின் நாணயங்கள் பலவற்றில் விஷ்ணுவின் வாகனமான கருட உருவம் இடம் பெற்றுள்ளது விஷ்ணுவின் மனைவி ஸ்ரீலெட்சுமி ஸ்கநந்தகுப்தர் காலத்தில் நாணயங்களின் பெரும்பான்மையானவற்றில் மனைவி பார்வதி இடம் பெற்றுள்ளது எனினும் சிவன் வேதகால ரூத்ரனுடன் தொடர்புபடுத்தப்பட்டு லிங்க வழிபாடு செல்வாக்கு பெறத் துவங்கியது

வாசுதேவரையும் நாராயணனையும் கிருஷ்ண்னையும் உள்ளடக்கிய வைணவம் குப்தர் காலப் பொதுச் சமயமாக காட்சியளித்தது பிராமண சமயம் இந்து சமயம் என்ற பெயர் பெற்று பிரபலமடைந்தது

**பக்தி மார்க்கம்**

வைஷ்ணவத்தின் மையப்புள்ளியாகக் கருதப்பட்ட பக்தி மார்க்க கோட்பாடு பாகவத பக்தியின் மூலம் குப்தர் காலத்தில் பிரபலமடைந்தது பக்தி மூலம் கடவுளை அடையலாம் என்ற நம்பிக்கை மக்களிடையே வளரலாயிற்று இப்பக்திமார்க்கத்தில் காணப்படும் கடவுளின் அவதாரங்கள் மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டன வாயு புராணத்தில் விஷ்ணு 10 அவதாரங்கள் விவரிக்கப்பட்டுள்ன பகவத்கீதை குப்தர் காலத்திலிருந்து மகத்தன செல்வாக்கு பெற்றது இந்த அவதாரஙகளுக்காக கண்ணன் வராகதேவன் சிவன் துர்க்கை ஆதிகேடான பார்வதி கணபதி ஆகியோருக்கும் கோயில்கள் கட்டப்பட்டன வழிபாடு மீட்சி பெற்றது கருங்கங்ககூறின் குப்தர் காலத்தில் புத்த சமண மடங்களுக்கு பதில் இந்து கோயில்கள் கட்டப்பட்டமையால் சமயம் சார்ந்த சடங்குகளும் நோன்புகளும் திருவிழாக்களும் பல்கிப் பெருகின புத்துயிர் பெற்றன புனிதப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன ஆழ்வார்களும் புற்றீசல்கள் போன்று தோன்றி மக்களிடையே பிரச்சாரம் செய்தனர் இவர்களது தெய்வீகப்பாடல்கள் மூலம் இந்தியாவில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது குப்தர் காலம் இந்து சமயத்தின் பொற்காலம் என்று வர்ணிக்கப்படுகிறது

**புத்த சமயம்**

அசோகருக்குப்பின் இந்தியாவில் புத்த சயமம் இறங்கு முகத்தில் இருந்தது புத்த சமயம் ஹுனாயானம் மகாயானம் என்று அழைக்கப்படுகிறது தன்னைத்தானே பலவீனப்படுத்திக் கொண்டது குப்தர் காலத்தில் அரசர்களது ஆதரவோடு புத்தசமயம் பிராமண சமயத்தால் புறம் தள்ள முடியாமல் போயிற்று சமயம் கங்கை சமவெளியில் புத்துயிர் பெற்றபோது புத்த சமயம் வடமேற்கு இந்தியாவிலும் மத்திய ஆசியாவிலும் விரியமும் வளமும் குறையாமல் இருந்தது குப்தர் காலத்தில் ஹீனாயானிகளும் மகானியகளும் நல்லிணக்கத்தோடு செயல்பட்டனர் மகாயனிகள் பிராமண சமயச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் சிலை வழிபாட்டையும் பழக்க வழக்கங்களையும் தன் வயப்படுத்தி கொண்டமையால் இரு சமயங்களுக்கிடையேயான இடைவெளி கணிசமாகக் குறைந்தது மகாயனிகள் புத்தரை மட்டும் கடவுளாக்கி சிலை வழிபாடு செய்தனர் பிரமாண சமயத்தார் பல கடவுள்களைத் தங்கள் விருப்பம் போல் வழிபட்டனர்

குப்தர் காலத்தில் அசங்கர வாசுபந்து குமாரஜீவா பர்மார்த்தா திக்னகா போன்ற பெத்தப் பிரச்சாரகர்களும் தத்துவ ஞானிகளும் புகழ்பெற்றிருந்தனர் பஞ்சாப் காஷ்மீரம் ஆப்கானிஸ்தானம் ஆகியவை முக்கிய பௌத்தக் கேந்திரங்களாக காட்சியளித்தன சாரநாத் பகர்பூர் அஜந்தா ஆகிய இடங்கள் பௌத்தக் கலைக் கோட்டங்களாகத் திகழ்ந்தன பௌத்த கயாவில் சீனப் பயணிகளுக்கென ஒரு மடம் கட்டப்பட்டது மேற்கு மராத்திய மாநிலத்தில் பல வர்த்தகர்களும் வர்த்தகக் குழுக்களும் பௌத்த மடங்கள் கட்டப்படுவதற்குப் போதிய பொருளுதவி செய்தனர் அஜந்தா எல்லோரா பௌத்தக் கலை குகைகள் உலகப் புகழ் பெற்றன அயோத்தியில் பல பௌத்த மடங்களும் தூபிகளும் காணப்பட்டன தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் பௌத்த மையமாகத் திகழ்ந்தது. குப்தப் பேரரசர்கள் பௌத்த மதத்தின் புரவலர்களாக இருந்த போதிலும் பிராமண சமயத்தின் மின்னல்வேக வளர்ச்சியால் பௌத்த சமயம் தளர்ச்சியுற்றது குப்தர் காலத்துக்கு முன்பே பௌத்த சமயத்தின் செல்வாக்கு சரியத் தொடங்கியது இச்சரிவின் அறிகுறிகளை சீனப் பயணி பாகியான் சரியத் தொடங்கியது இச்சரிவின் அறிகுறிகளை சீனப் பயணி பாகியான் பதிவு செய்யத் தவறவில்லை கபிலவஸ்து குசிநகரம் கயா **பாடலிபுத்திரம்**

**சமண சமயம்**

குப்தர் காலத்தில் பிராமண சமயம் புத்த சமயம் சமண சமயம் ஆகியவற்றுக்கிடையே கடுமையான போட்டியிருந்தது இம்முனைப்போட்டியில் சமண சமயத்துக்குப் பின்னடைவு ஏற்பட்ட போதிலும் அது பிராமண சமயத்தை விரோதித்துக் கொள்ளாமையால் பெருஞ்சரிவிலிருந்து தப்பியது மேலும் அதன் ஆரவாரமற்ற நடவடிக்கைகளும் சமயப் பேராசையின்மையும் அதை அழிவிலின்றும் காப்பாற்றின

சமண சமயம் கிழக்கு இந்தியாவில் கிழக்கு வங்காளம் மதுரா வல்லபி புனவர்த்தனா மத்திய இந்தியாவில் உதயகிரி தென்னிந்தியாவில் காஞ்சி மைசூர் ஆகிய பகுதிகளில் சமணம் தழைத்திருந்தது தமிழ்நாட்டில் பல்லவர்களும் பாண்டியர்களும் சமணத்துக்கு ஆதரவாக இருந்தனர் கி.பி 454 ஆம் ஆண்டு வல்லபியில் கூடிய சமண சங்கக் கூட்டத்தில் கவதம் பரர்களின் சமணக் கட்டளைக் கோட்பாடு முறைப்படுத்தப்பட்டு பல பிரதிகள் எடுக்கப்பட்டன சமண சமயம் மேற்கிந்தியாவில் முனைப்புடன் செயல்பட்டது சமண சமயம் இரண்டுப்பட்ட போதிலும் தென்னிந்தியாவில் ஏழாம் நூற்றாண்டு வரை செல்வாக்குடன் இருந்தது

**கிறித்துவ சமயம்**

கிறித்துவ சமயம் குப்தர்காலத்துக்கு முன்பே இந்தியாவில் அறிமுகமாகிவிட்டது பஹ்வலர்கள் என்ற இந்தோ பார்த்தியர்கள் ஆப்கானிஸ்தானத்திலும் தட்சசீலத்திலும் நிலைகொண்டிருந்தபோது கோண்டோபெர்னஸ் புனித தாமசால் கிறித்துவ சமயத்துக்கு வாய்ப்பேயில்லை எனினும் தென்னிந்தியாவில் மேற்கு கடற்கரைப் பகுதியில் புனித தாமஸ் ஏழு இடங்களில் தேவலாயங்களைக் கட்டிய பின் சோழ மண்டலக் கடற்கரைப் பகுதிக்கு சென்று கிறிஸ்தவப் பிரச்சாரம் செய்து சென்னை மைலாப்பூரில் வீரமரணமடைந்தார் கிறிஸ்துவ சமயம் மலபார் பகுதியில் செல்வாக்கு பெற்றிருந்தது.

**கல்வி**

குப்தர் காலப் பன்முகக் கலாச்சாரம் கல்வி மொழி இலக்கியம் கலைகள் ஆகியவற்றின் மூலம் வெளிப்பட்டது வேத காலத்திலும் அதற்குப் கல்வி பிரமாணர்களின் ஏகபோக உரிமையாக இருந்தது வேத பிராமணக் குழந்தைகளுக்கு மட்டும் கற்பிக்கப்பட்டது புத்தரும் மக்கள் மொழியில் பிரச்சாரம் செய்து சங்கங்களின் மூலம் சாதிசமய வேறுபாடின்றி அனைவருக்கும் திறந்துவிட்டனர் கல்வி அனைவருக்கும் தாய் மொழியில் கற்பிக்கப்பட்டது கல்விப் பாரம்பரியம் குப்தர் காலத்திலும் தொடர்ந்தது பாடலிபுத்திரம் வல்லபி பத்மாவதி போன்றவை பௌத்தக் கல்விக் செயல்பட்டன காஞ்சி நாளந்தா தட்சசீலப் பிராமணர்கள் மட்டும் கட்டிகா என்றழைக்கப்பட்ட இடங்களில் பிரமாணப் பிள்ளைகளுக்கும் மட்டும் குருலக்கல்வி அளித்து பிற சாதியினருக்குக் கற்பிக்கும் எண்ணம் பிராமணர்களுக்கு கருதப்பட்டது எனவே குப்தர் கால கல்விச் சிறப்புக்கு முழுக் காரணம் சமணர்களுமோயவர்

குப்தர் காலத்தில் பாலி பிராகிருத மற்றும் வட்டார மொழிகளுக்கு பதில் சமஸ்கிருதம் மீண்டும் புத்துயிர் பெற்றது சமஸ்கிருதம் தேவமொழியாகக் கருதப்பட்டது வேதங்களும் புராணங்களும் சமய நூல்களும் இலக்கியமும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டன கல்வெட்டுகள் செம்மொழி சமஸ்கிருததத்தில் இலக்கண சுத்தமாகப் பொறிக்கப்பட்டன வரலாற்றுப் புகழ்பெற்ற கிர்நார்க் கல்வெட்டு சமஸ்கிருதம் அரசாங்க மொழியாயிற்று ஆவணங்கள் அம்மொழியிலேயே எழுதப்பட்டன குப்தர் காலத்தில் சமஸ்கிருதத்தின் ஆதிக்கம் உச்சக்கட்டத்தை எட்டியது

**இலக்கியம் வளர்ச்சி**

குப்தர் காலம் இலக்கிய எழுச்சிக் காலமாகும் இக்காலம் இல்க்கியப் பூங்காவாகக் காட்சியளித்தது சிந்தனை நந்தவனமாகக் கருதப்பட்டது

சிந்தனை சிறக்க வேண்டுமாயின் அமைதியும் ஆதரவும் அரவணைப்பும் அவசியம் குப்தர் காலத்தில் பேரரசு நன்கு பாதுகாக்கப்பட்டதால் அமைதி நிலவியது செல்வச் செழிப்பிருந்தது குப்தப் பேரரசர்கள் படைப்பாளிகளின் பாதுகாவலர்களாகவும் புரவலர்களாகவும் இருந்தனர் இவர்களது ஆட்சி காலத்தில் ஒன்றுமில்லாத அளவுக்கு அறிவு முன்னேற்றம் ஏற்பட்டது குப்தர் காலத்துக்கு முன்பே வர்த்தக வளம் இலக்கியப் படைப்பு கலைகளின் வளர்ச்சி ஆகியவற்றுக்கான அடித்தளம் அமைக்கப்பட்டிருந்தது இந்தியாவில் குடியேறிய வெளிநாட்டவர்கள் கூட இந்தியக் கலாச்சாரத்தில் தங்களை இணைத்துக் கொண்டு சமஸ்கிருத மொழி இலக்கியம் கலைகளை ஊக்குவித்தனர்

**காளிதாசரின் படைப்புகள்**

காளிதாசர் குப்தர் கால இலக்கியத்தின ˙முடிமணியாக ஒளிவிட்டுப் பிராகசித்தார் இவர் கற்றவர் வேதாந்தத்தைப் பழுதறப் பயின்றவர் பண்பட்ட படைப்பாளர் சிறந்த சிவபக்தர் எட்டு இலக்கிய நவராத்தினங்களில் ஒருவராகக் கருதப்பட்டவர் உஜ்ஜயினியொடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் காளிதாசர் பெருமைக்குரிய புலவர் பாராட்டுக்குரிய நாடக ஆசிரியர். காளிதாசரின் இலக்கியப் படைப்புகளை மூன்று வகையாகப்பிரிக்கலாம் நாடகங்கள் சாகுந்தலம் மாளவிகாக் நிமித்திரம் விக்கிரம ஊர்வசி ஆகியவை, காளிதாசரின் ஈடுயிணையற்ற நாடகங்களாகும் இந்நாடகங்கள் இலக்கிய நயத்துக்கும் கருதத்தாழத்துக்கும் உவமைக்களுக்கும் உருவகங்களுக்கும் பெயர் பெற்றவை காப்பியங்கள் ரகுவம்சமும் குமார சம்பவமும் காளிதாசரின் காப்பியங்களாகும் ரகுசவம்சம் சூரிய வம்சத்து மன்னர்களைப் பற்றி விவரிக்கின்றது வரலாற்று சிறப்புமிக்கது குமார சம்பவம் குமரக் கடவுளைப் பற்றியது இசைக் கவிதைகள் மேக தூதமும், ருதும்ஹாரமும் காளிதாசரின் எழிலொழுகும் இசைக் கவிதைகளாகும் வனப்பையும் பூமியின் அழகையும் வியந்து புகழ்ந்து வர்ணிக்கிறார். காளிதாசர் வேறு பல நூல்களையும் படைத்ததாகக் கூறப்படுகிறது. காளிதாசர் குப்தர் காலத்தில் மாபெரும் புலவர் நாடக ஆசிரியர், வர்ணனையாளர் என்பதில் ஐயமில்லை காளிதாசரின் இலக்கியப் படைப்புகள் இந்திய இலக்கியப் படைப்பாளிகளுக்கு முன்மாதிரிகளாகத் திகழ்ந்தன.

**விசாகதத்தரின் படைப்புகள்**

காளிதாசருக்கு அடுத்தபடியாக சிறந்த நாடக ஆசிரியராகக் கருதப்படுபவர் விசாகதத்தர் ஆவார் இவர் எழுதிய நாடகங்கள் இரண்டு முத்திர ராட்டசசம் தேவி சமுத்திரகுப்தம் முத்திர ராட்சசம் என்றால் அமைச்சரின் முத்திரை மோதிரம் என்று பொருள் இது ஒரு முழு நீள

அரசியல் நாடகமாகும் இந்நாடகத்தின் கதாநாயகன் கௌடில்ய சாணக்கியர் கதாநாயகி இல்லை காதலைவிட மன்னனுக்கு விசுவாசமாக இருப்பதே மேல் என்ற கருத்தை வலியுறுத்துவதற்காக எழுதப்பட்ட நாடகம் இதுவாகும் இந்த நாடகத்தில் கௌடில்யரும் ராட்சசனும் பிரதான பாத்திரங்கள் நாடகத்தின் துவக்கத்தில் ராட்சசன் கௌடில்யரை விரோதியாக துர் ஆத்மாவாகப் பார்க்கிறார் நாடக முடிவில் கௌடில்யரின் ஆட்சிக் கலையைக் கண்டு வியந்து அவரை நண்பராக மகாத்மாவாகப் போற்றுகிறார்.

**சூத்திரகரின் படைப்புகள்**

சூத்திரகர் மிருச்ச கடிகம் என்ற நாடகத்தை எழுதினர் இது முழுநீள நகைச்சுவை நாடகம் இந்நாடகத்தின் கதாநாயகன் ஒரு பணக்கார பிராமணன் கதாநாயகத்தின் பெயர் சாருதத்தர் சாருதத்தர் வசந்தசேனை என்ற நடனநங்கையைக் காதலிக்கிறார் வசந்தசேனையும் அவரைக் காதலிக்கிறாள் கதாயநாயகன் தயாள உள்ளம் படைத்தவன் பிறருக்கு உதவி செய்தே ஏழையாகிவிடுகிறான் வறுமையின் ஓரத்துக்கே சென்றுவிட்ட பின்னரும் வசந்தசேனை சாருதத்தரைக் காதலிக்கிறாள் அவளுடையது கலப்படமற்ற காதல் இந்த நாடகம் இந்திய நாடகங்களுள் சிறந்ததாகக் கருதப்படுகிறது ஒரு நல்ல நாடகத்துக்குரிய விருவிருப்பு உயிரோட்டம் நடிப்பு நடிகர்களுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் அனைத்தும் இதில் உள்ளன ஆழமான கருத்துகள் நகைச்சுவையோடு கூறப்பட்டுள்ளன இந்த நாடகத்திலிருந்து அக்கால சமுதாய வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள் முடிகிறது

**பிற படைப்புகள்**

பாரவி தண்டின் கருத்து ஆகியோர் பிற பிரபல இலக்கியகர்த்தாக்களாவர் பாரவி எழுதிய கிராத்தார்ஜீனியம் மகாவியமாகக் கருதப்படுகிறது இந்நூலில் சிவனுக்கும் அர்ஜீனனுக்குமிடையே நடைபெற்ற போராட்டம் விவரிக்கப்பட்டுள்ளது இதில் காணப்படும் இயற்கையைப் பற்றிய வர்ணனை காளிதாசருக்கு இணையானதாகக் கருதப்படுகிறது இந்நூல் வார்த்தை விளையாட்டுக்குப் புகழ் பெற்றது

தண்டினின் காவிய தரிசனம் கவிதை வடிவங்களைப் பற்றியது இவரது மற்றொரு நூலான தசகுமார சரித்திரம் அலங்கார உரைநடையில் 10 அரசகுமாரர்களின் வீரதீரபராக்கிரமச் செயல்களைப் பற்றி விவரிக்கிறது இது ஒரு காதல் புதினம் இந்நூலில் கிளுகிளுப்பபூட்டும் அரசவை அணங்கங்கள் சூதாடிகள் திருடர்கள் நாடோடிகள் போக்கிரிகள் கயவர்கள்

ஆகியோர் வலம் வருகின்றனர் இந்நூல் அக்கால சமுதாய நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது

**அமரசிம்மர்**

அமரசிம்மர் ஒரு இலக்கண மேதை அபரிமிதமான அறிவுபடைத்தவர் சொல்வித்தகர் இவர் எழுதிய அமரகோசம் என்ற நாமலிங்கனுசாசனம் ஒரு சொல்லகராதி யாகும் இந்நூலில் சொற்களுக்கிடையேயான தொடர்பு நுணுக்கமாக ஆராயப்பட்டுள்ளது மூன்று அத்தியாயங்களாக எழுதப்பட்டுள்ள இந்த இலக்கண நூலில் தனி மற்றும் பொதுப் பெயர்களுக்கான ஒரு பொருள் பல சொற்கள் அகர வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளது பொருள் வேறுபட்டு ஒலி வடிவம் ஒத்த சொற்கள் ஒரு அத்தியாயத்திலும் உருமாற்றச் சொற்கள் மற்றொரு அத்தியாயத்திலும் கொடுக்கப்படுள்ளன சுருக்கமே இந்நூலின் சிறப்பாகும் இந்நூலாசியரியர் அமரசிம்மர் ஒரு பௌத்தர் அகும்.

**பஞ்சதந்திரக் கதைகள்**

மக்களின் குறிப்பாகக் குழந்தைகளின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட உலகப் பிரசித்தி பெற்ற பஞ்சதந்திரக் கதைகள் குப்தர் காலத்தில் எழுதப்பட்டவை இளவரசர்களுக்கு அரசியல் கற்பிப்பதற்காக எழுதப்பட்ட இக்கதைகள் அனைவரையும் காந்தக் கற்கள் போன்று கவரவல்லவை உலகக் கட்டுக்கதை இலக்கியத்தில் நிரந்தர இடத்தைப் பிடித்துள்ள பஞ்சதந்திரக் கதைகள் இத்துறை எழுத்தாளர்களுக்கு இன்றைக்கும் முன்னோடிகளாகத் திகழ்கின்றன இந்தியாவிலிருந்து மேலை நாடுகளுக்கும் சென்று வாசகர்களின் மனங்களில் குடியேறிய இக்கதைகள் பைபிகளுக்கு அடுத்தபடியாக பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது முகமதிய கலாச்சாராத்தில் அராபிய மொழிகளில் பெயர்க்கப்பட்டன

**புராணங்கள்**

புராணங்கள் *18 :* கிளைப் புராணங்கள் பல இவற்றுள் பாகவத விஷ்ணு வாயு மத்சய மார்க்கண்டேய புராணங்கள் மிகுந்த மக்கள் செல்வாக்கு பெற்றவை இவை மக்களுக்கு சமயக் கல்வி அளிப்பதற்கும் கடவுள் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன இப்புராணங்கள் குறிப்பாக பிரம்மா விஷ்ணு சிவன் ஆகிய கடவுள்களின் அருமை புராணத்தில் கிருஷ்ணன் விஷ்ணுவின் அவதாரமாக சித்தரிக்கப்பட்டு கிருஷ்ண பக்தி வலியுறுத்தப்படுகிறது தத்துவத்தை நிலையில் விஷணு புராணத்தை கட்டளைக் கோட்பாடு நிலைக்கு உயர்த்தினர் ராமானுஜர் வாயு மற்றும் மத்சய புராணங்கள் சிவபெருமான் புகழ் பாடுபவை பிரம்மா உயர்த்திப் பேசப்படுகின்றனர்

மூட நம்பிக்கைகளும் வரம்பு கடந்த வர்சனைகளுமிக்க புராணங்கள் அறிவுத் தெளிவுக்கும் முறையான மதிப்பீட்டுக்கும் என்றைக்குமே துணையாக இருக்காது குப்தர் காலத்தில் செம்மொழி சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட புராணங்கள் கடந்த காலத்தைப் பற்றிய பிராமண விளக்கமாகும் புராணங்களின் சாரம் என்ன மனிதகுலத்துக்கென்று இறுதி நோக்கம் என்று எதுவுமில்லை எனவே முன்னேற்றம் என்பது மாயை செய்ததையே செய்வதே மனித வாழ்க்கை இது வரலாறு மீண்டும் நிகழ்வது என்ற தோல்வி மனப்பான்மை கோட்பாட்டுக்கு ஒப்பானது முன்னேற்றக் கோட்பாட்டுக்கு எதிரானது வரலாற்று வரைவியலுக்கு எதிர்மறையானது

**இந்தியத் தத்துவம்**

இந்தியத் தத்துவம் மூவகைப்படும் பிராமணத் தத்துவம் பௌத்த தத்துவம் சமணத் தத்துவம் பிராமண தத்துவம் இருவகைப்படும் நாத்திக தத்துவம் ஆத்திக தத்துவம் நாத்திக தத்துவதைத் பின்பற்றியோர் சார்வாகர்கள் என்று அழைக்கப்பட்டனர் இவர்கள் உலகில் காணப்படுவையெல்லாம் இயற்கையின் கொடைகள் புலன்களால் உணரப்படுவதே உண்மை ஆத்மா ஆத்மன் என்பதெல்லாம் மாயத்தோற்றம் மூடநம்பிக்கை என்றெல்லாம் பிரச்சாரம் செய்தனர் இவர்களது புரட்சிகரமான நாத்திக தத்துவம் மக்களின் மீதிருந்த பிராமணர்களின் பிடியைத் தளர்த்தியது.

**6- வகை தத்துவங்கள்**

பிராமண ஆத்திக தத்துவம் ஆறு வகைப்படும் நியாயா தத்துவம் காரணக்காரிய விளக்கங்கள் மூலம் உண்மையை அறியலாம். வைசேஷிகா தத்துவம் இத்தத்துவப்படி உலகம் அணுக்களாலும் சூனியத்தாலும் உருவாக்கப்பட்டுள்ளது. அணுக்கள் கண்ணுக்குப் புலனாகாத ஆற்றலால் இயக்கப்படுகின்றன. 3)சாங்கியா தத்தவம். கபிலரின் இத்தத்துவத்தின்படி 25 மெய்மைகள் உள்ளன. இவற்றுக்கிடையேயான தொடர்பை விவரித்துள்ளார் கபிலர். யோகா தத்துவம். யோகா என்பது ஆத்மா பரமாத்மாவுடன் பிளைப்பது. இதையடைய எட்டு வழிகள் உள்ளன: 1) யமா 2 நியமர் 3) ஆசனம்: 4) பிராணாயாமம் 5 பிரத்தியகாரம்: 6) தானா 7) தியானம் 8) சமாதி.1 5) பூர்வ மீமாம்சா, அறிவினால் பொருண்மைராராத பிரச்னைகளை தீர்க்க முடியாது. மரபுவழிச் சடங்குகளால் தீர்வு காணமுடியும் 6) வேதாந்தம்இ பிரம்மன் என்ற கடவுளை ஆத்மன் அமைவதே வேதாந்த வழியாகும். இத்தத்துவம் உபநிடதங்களின் சாரமாகும். ஆதிசங்கரர் இத்தத்துவத்தின் முன்னோடி.

## குப்தர் கால இலக்கியங்கள்

குப்தர் காலத்தில் மீமாம்சிகா சபாரா எழுதிய பாஷ்யம் மிகவும் புகழ்பெற்றது. இது ஜெய்மினியின் பூர்வமீமாம்சா சூத்திரங்களின் விளக்க உரையாகும். சாங்கிய சூத்திரங்களும், சாங்கிய காரிகாவும் தத்துவத்தின் இருவேறு விளக்கங்களாகும். ஈஸ்வர கிருஷ்ணர் எழுதிய சாங்கிய காரிகா தத்துவ இலக்கியத்தின் முத்து என்று கருதப்படுகிறது. இதேபோன்று வாத்சயாயனரின் நியாய பாஷ்யமும் அதற்கு உத்தோதகாரர் எழுதிய விளக்க உரையும் குறிப்பிடத்தக்கவை. வியாசரின் யோக பாஷ்யம் இந்திய தத்துவ வரலாற்றின் முக்கிய மைல்கல்லாகும்.

## பௌத்த தத்துவம்

குப்தர் காலத்தில் பிராமணத் தத்துவத்தைப் போன்றே பௌத்த தத்துவ நூல்களும் எழுதப்பட்டன. இவை பாலி மொழியிலோ அல்லது சமஸ்கிருத மொழியிலோ எழுதப்பட்டன. எடுத்துக்காட்டாக மகாநாமரின் இலங்கை வரலாறான மகாவம்சம் பாலிமொழியில் எழுதப்பட்டது. பின்னர் வந்த புத்தகோஷரும் பாலி மொழியிலேயே எழுதினர். புத்தகோஷர் நிர்வாண நெறி மார்க்கம் என்ற நூலும், அவர் திரிபிதகாவுக்கு எழுதிய விளக்க உரையும் பௌத்த தத்துவத்துக்கு அளித்த கொடைகளாகும்.

அசங்கா என்பவர் புத்த தத்துவத்தின் யோகசரா விளக்கத்தைக் கொடுத்தார். சமுத்திரகுப்தரால் ஆதரிக்கப்பட்ட வாசுபந்து அசங்காவின் இளைய சகோதரர். இவரது அமிதர்மகோசா உளவியல், ஒழுக்கவியல், முக்தியியல், கருப்பொருள்சாரா தத்துவம் பற்றியது. இவர் மகாயான சூத்திரங்களுக்கு எழுதிய விளக்க உரை மகாயான பௌத்த தத்துவத்துக்குப் பெரும்புகழ் தேடித்தந்தது. இவரது சீடர் திங்நாகர் தர்க்கவாதத் தத்துவத்தின் தலைசிறந்த மேதை. இவர் சமஸ்கிருதத்தில் எழுதியதாகக் கூறப்படும் தர்மகிருதி என்ற நாடகம் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றது. குப்தர்கால பௌத்த தத்துவ வளர்ச்சி வரலாற்றுச் சிறப்புடையது.

## சமணத் தத்துவம்

குப்தர் காலத்தில் பிராமண மற்றும் பௌத்த தத்துவ நூல்கள் எழுதப்பட்டதைப் போன்று சமண தத்துவப் படைப்புகள் அதிகமில்லை. சித்தசேனர் என்பவர் பிரபல சமண தத்துவர். இவர் நியாயவத்தா என்ற நியாய தத்துவம் பற்றி எழுதிய நூல் குறிப்பிடத்தக்கது. இதே போன்று உமாஸ்பதி, சித்தசேனர் ஆகியோர் முறையே எழுதிய காம சூத்திர தத்துவார்த்தமும், நியாய வாகடமும் சிறந்த சமணதத்துவப் படைப்புகளாகும். இவையன்றி சமண சங்க மாநாடுகளின் முடிவுகள் தொகுத்து வெளியிடப்பட்டன.

### *அறிவியல் வளர்ச்சி மற்றும் சாதனையாளர்கள்*

குப்தர்கால அறிவியல் வளர்ச்சி அசாதாரணமானது வியப்புக்குரியது. மருத்துவம், கணிதம், வானவியல் துறைகளில் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக விரித்த

வாகபட்டரின் அஷ்டங்க சம்கிரகம் எட்டு வகை *மருத்துவ* முறைகளை விவரிக்கிறது. கணித மேதை ஆர்யபட்டரின் ஆர்ய *சித்தாந்தம* கணித மற்றும் வானவியலின் அரிய சாதனையாகும். இவரது *பூமியின* சுழற்சி மற்றும் சூரிய சந்திர கிரகணங்களைப் பற்றிய விளக்கம் *அறிவியல்* பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை. இதேபோன்று வராகமிகிரரின் பஞ்ச சித்தாந்தகம் ஐந்து வானவியல் முறைகளை விளக்குகின்றது. இவர் எழுதிய பிரிகத் சம்கிதம் வானவியல், சோதிடம், *புவியியல்*, தட்பவெட்பம், பெண்கள். திருமணம், அந்தப்புறம், சகுணங்கள் ஆசியவை பற்றிய கலைக்களஞ்சியமாகும். பெண் வெறுப்பாளர்களுக்கு எதிராக பெண்ணுரிமையை ஆதரித்து குரல் கொடுத்த பெண்ணியவாதி வராகமிகிரர் என்பது குறிப்பிடத்தக்கது. குப்தர் காலத்தில் ஜாதகம் கணிக்கும் முறை பிரபலமாக இருந்தது.

### ஆர்யபட்டர்

குப்தர் காலத்தில் கணிதமும் வானவியலும் வியத்தகு வளர்ச்சியடைந்தது. ஆர்யபட்டர் இந்தியாவின் முதல் கணித வானவியல் விற்பன்னர். இவரது இருபெரும் புகழ்மிக்க நூல்கள்: 1) ஆரியபாட்டியா (Aryabhatiya) 2) ஆர்யசித்தாந்தம். இவை இந்திய செவ்வியல் கணிதத்துக்கும், வானவியலுக்கும் அடிப்படை. ஆர்யபட்டர் இந்திய பாரம்பரிய அறிவியல் சிந்தனையிலிருந்து மாறுபட்டு 1) சந்திர, சூரிய கிரகணங்களுக்கு அறிவியல்பூர்வமான விளக்கமளித்தார் 2) சூரியன் பூமியை சுற்றி வருகிறது என்ற கூற்றை மறுத்து பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றது என்றும், அது செங்குத்தாக இல்லாமல் ஒரு அமையப்புள்ளியின் அச்சில் சாய்வாக உள்ளதாகவும் கண்டறிந்து கூறினார் 3) கோள்களின் பெயர்ச்சி மற்றும் அதன் விளைவுகள் பற்றி விவரித்தார் 4) ஈர்ப்பு விசையால்தான் பூமி சுற்றும்போது அதன் பாகங்கள் சிதறிப்போகாமல் இருப்பதற்கான காரணம் என்பதைக் கூறினார் 5) ஒன்று முதல் ஒன்பது வரையிலுள்ள எண்களோடு பூஜ்யங்களைச் சேர்ப்பதால் அவ்வெண்களின் மதிப்புகள் மாறுபடும் என்பதை விளக்கினார் 6) வர்க்கமூலம், எண்ணடுக்கு, எண்கணிதம், திரிகோணமிதி ஆகியவற்றையும் கண்டுபிடித்தார்.

### பிரம்மகுப்தா

ஆர்யபட்டருக்குப் பின் வந்த பிரம்மகுப்தர் முன்னவர் பாரம்பரிய வானவியலை நிராகரித்தமைக்காகக் குறை கூறினார். எனினும் இவர் ஆர்யபட்டரின் அறிவியல் முறைகளைப் பின்பற்றினார்! அவரது புவிஈர்ப்பு விசைக் கோட்பாட்டை உறுதி செய்தார்.

## *குப்தர் கால கலை வளர்ச்சி*

### கட்டடக் கலை

குப்தர்கால கட்டடங்கள் இரு வகைப்படும்: 1) இந்து கோயில்கள் 2) பௌத்தக் கோயில்கள். திருமாலுக்கும் சிவனுக்கும் கட்டப்பட்ட கோயில்கள் புகழ்பெற்றவை.

ஜபல்பூரில் உள்ள திருமால் கோயில் பூமராவில் காணப்படும் சிவன் கோயில், நச்சனிகுதாவில் உள்ள பார்வதி கோயில் கட்டடக் கலைத்தகு சிறந்த உதாரணங்களாகும். இவை கற்கோயில்கள். இதேபோன்று பௌத்தக் கோயில்களும் தூபிகளும் கட்டடக் கலையின் மற்றொரு வெளிப்பாடாகும். உதாரணமாக, சாஞ்சி, புத்தகயை ஆகிய இடங்களில் உள்ள புத்தக் கோயில்களும், ராஜகிரகம், சாரநாத் ஆகிய இடங்களில் காணப்படும் தூபிகளும் தனித்தன்மை வாய்ந்த கட்டடக் கலைப் படைப்புகளாகும். இதேபோன்று, மொகல்ராஜபுரம், உத்தவல்லி, அக்கண்ணமதுனம், உதயகிரி ஆகிய இடங்களில் உள்ள குகைக்கோயில்கள் புத்த கட்டடக் கலையின் புதிய வெளிப்பாடுகளாகும்.

**சிற்பக்கலை**

குப்தர்கால சிற்பக்கலையின் சிகரமாகத் திகழ்வது பௌத்த சிற்பக்கலையேயாகும். புத்தரின் சிலைகள், குறிப்பாக சாரநாத்தில் அமர்ந்த வண்ணமுள்ள புத்தர் சிலையும், சுல்தான்கஞ்சிலுள்ள புத்தரின் செப்புச் சிலையும் பௌத்த சிற்பக்கலையின் எடுத்துக்காட்டுகளாகும். இதேபோன்று டெல்லியிலுள்ள தேனிரும்பால் தனிச்சிறப்புக்கான உருவாக்கப்பட்ட *23* அடி *8* அங்குலமுள்ள *6* டன் எடையுள்ள இரும்புத்தூண் உலோக உருக்குக்கலை அதிசயமாகும். உலகின் எந்த உருக்காலையிலும் இத்தகைய தூணை வடிவமைக்க முடியாது. இதேபோன்று ஸ்கந்த குப்தர் பித்தாரியில் எழுப்பிய ஒற்றைத் தூணும், பிற தூண்களும் பிரசித்தி பெற்றவை. புத்தருக்கு அடுத்தபடியாக சிவபெருமானின் சிற்பங்களும், திருமாலின் பத்து அவதாரங்களை உருவகப்படுத்திய சிலைகளும் சிற்பக்கலைப் படைப்புகளாகும். பொதுவாக, குப்தர்கால சிற்பக்கலை எளிமைக்கும், அழகுக்கும், மலர்ச்சிக்கும், பெருந்தன்மைக்கும், அடக்கத்துக்கும், அலங்காரமின்மைக்கும், உடற்கவர்ச்சியின்மைக்கும் பெயர் பெற்றவை.

**ஓவியக்கலை**

குப்தர்கால ஓவியக்கலை மூவகைப்படும்: *1)* குவாலியரிலுள்ள பாக் (Bagh) குகைகள் *2)* அஜந்தா (Ajanta) குகை ஓவியங்கள் *3)* இலங்கையில் காணப்படும் சிகிரியா (Sigiria) ஓவியங்கள். இவற்றுள் அஜந்தா ஓவியங்களே உலகத்தரமிக்கவை வியந்து பாராட்டக் கூடியவை. இக்குகை ஓவியங்கள் உயிரூட்டமுள்ளவை கண்ணையும் கருத்தையும் கவரக்கூடியவை. எடுத்துக்காட்டாக இறக்கும் இளவரசியை சித்தரிக்கும் ஓவியம் காண்போர் நெஞ்சை நெகிழ்விக்கக் கூடியது. பிற குகைகளில் காணப்படும் சுவரோவியங்கள் (Frescoes) ஜதகக் கதைகளில் காணப்படும் புத்தரின் செயல்கள் பற்றிய ஓவியங்களாகும். சுருக்கமாகக் கூறுவதாயின் பாக் குகை ஓவியங்கள், அஜந்தா குகை ஓவியங்கள், சிகிரியா ஓவியத்தில் காணப்படும் புத்தர் கோயிலுக்கு மலரோடு செல்லும் மங்கையரைப் பற்றிய சுவரோவியம் ஓவியக்கலையின் சிகரங்களாகும். இந்த ஓவியங்களில் காணப்படும் ஆண்கள், பெண்கள், விலங்குகள், தாவரங்கள் போன்றவை அவர்களின்/அவைகளின் உணர்வுகளைப் பார்ப்போருடன் பகிர்ந்து கொள்கின்றனர்/பகிர்ந்து கொள்கின்றன. இந்த ஓவியங்கள் இந்திய ஓவியக்கலையின் மிகச் சிறந்த சாதனையாகும். இவை வியந்து பாராட்டக்கூடியது

மட்டுமல்லாது மரியாதையோடு அனுபவிக்க வேண்டியவையாகும். குறிப்பாக குப்தர்காலத்து அஜந்தா ஓவியங்கள் ஆசியாவுக்கே பொதுவான ஆன்மீக உணர்வின் வெளிப்பாடாகும்.

### நாணயக் கலை

குப்தப் பேரரசர்கள் வெளியிட்ட நாணயங்களும் வடிவங்களாகவே காட்சியளிக்கின்றன. முதலாம் சந்திர குப்தர் மற்றும் அவரது அரசி குமார தேவியின் நாணயங்கள் அவர்களது திருமணத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள உதவுகின்றன. இந்நாணயங்களின் ஒரு பக்கத்தில் அரசன் அரசிக்கு மணமோதிரம் கொடுப்பதும்; மறுபக்கத்தில் துர்க்காதேவியின் உருவமும் கலை நயத்தோடு பொறிக்கப்பட்டுள்ளன. சமுத்திரகுப்தர் வெளியிட்ட எட்டு வகையான தங்க நாணயங்கள். அப்பேரரசரின் மணஉறவு, வீரம், வெற்றி, செல்வச் செழிப்பு, இசைக்கலைத்திறன். செங்கோண்மை, செயலாற்றல் போன்ற பல பரிமாணங்களைப் பற்றிப் புரிந்துகொள்ள உதவுகின்றன. அதுமட்டுமல்ல. தங்க நாணயங்கள் அவர் காலத்துப் பொருளாதார வளம், உலோகத் தூய்மை, உருக்குக்கலைநுட்பம், பொறிக்கப்பட்ட உருவங்களின் கலை வண்ணம், எழுத்துக்கலைச் சிறப்பு போன்றவை பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

ராமகுப்தர், இரண்டாவது சந்திரகுப்தர், ஸ்கந்த குப்தர் ஆகியோர் வெளியிட்ட நாணயங்களும் அம்மன்னர்களின் வீரத்தையும் விவேகத்தையும் "வெளிப்படுத்துபவையாக உள்ளன. இந்நாணயங்களின்மூலம் இம்மன்னர்களின் காலத்துப் பேரரசின் பரப்பு, சமயச் சார்பு, பொருளாதார நிலை, பொது வாழ்க்கையின் பல பக்கங்கள் போன்ற தகவல்கள் கிடைக்கின்றன. குப்தர்கால நாணயங்கள் அவர்களுக்குப்பின் வந்த பிற பேரரசர்களும் முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றினர். யாவற்றுக்கும் மேலாக குப்தர்கால நாணயங்கள் வரலாற்று ஆய்வாளர்களுக்குக் கிடைக்ககூடிய அரிய சமகாலச் சான்றுகளாகும்.

### நான்கு யுகங்கள்

வேதகால ஆரியர் மனித வாழ்வை நான்கு யுகங்களாகப் பிரித்தனர்: 1) கலியுகம்; 2) துவபரயுகம்; 3) திரேதாயுகம்; 4) சத்யயுகம். இந்த யுகங்களை முறையே இரும்பு, வெண்கல, வெள்ளி, பொற்காலங்களோடு ஒப்பிடலாம். இதேபோன்று ரோம் நாட்டு மக்களும் பிற நாட்டினரும் கடந்த காலத்தைப் பொற்காலமாக உயர்த்திக் காட்டுவது மரபாகிவிட்டது. எனவே தற்கால பிரச்னைகளுக்குக் கடந்தகால பொற்காலத்தில் தீர்வு உள்ளது என்று கூறுவதும் வழக்கமாகிவிட்டது!

### குப்தர்காலம் பொற்காலம்

குப்தர்காலத்தைப் பொற்காலம் என்று போற்றுவதற்குக் காரணம் என்ன? இதற்குப் பல காரணங்கள் உள்ளன: 1) அறிவு மற்றும் கலை சார்ந்த வளர்ச்சி அதன் உச்ச நிலையை எட்டியது. 2) பேரரசின் பொருளாதார வளம் இந்த வளர்ச்சிக்கான முன்தேவைகளைப் பூர்த்தி

செய்து ஆக்கபூர்வமான பின்புலத்தைக் கொடுத்தது. 3) சமுத்திரகுப்தர், இரண்டாவது சந்திரகுப்தர் போன்ற குப்த மன்னர்கள் ஆழ்ந்த புலமையும், அறிவாற்றலும், கலையுணர்ச்சியும் மிக்கவர்களாக இருந்து படைப்பாளிகளுக்குப் புரவலர்களாக இருந்தனர். இலக்கிய, மொழி, கலை, அறிவியல் புதுமைகளை ஊக்குவித்தனர். 4) அனைத்துத் துறைகளிலும் சமஸ்கிருதம் பயன்படுத்தப்பட்டதாலும், அம்மொழிக்கு அரசாங்கம் சமமாக ஆதரவளித்ததாலும் அம்மொழி செம்மொழியாயிற்று. அந்த மொழியிலேயே இலக்கியங்களும் படைக்கப்பட்டன. சமஸ்கிருதம் அரசாங்க மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் நிலைப்பெற்றது. 5) பிராமண மதம் இந்து மதமாகி, மக்கள் மதமாக விரிவடைந்தது. இந்து மதம் தனிப்பெரும் மதமாக உருப்பெற்றது. 6) குப்தப் பேரரசர்களின் சமயப் பொறைக் கொள்கையாலும், புத்தமத ஆதரவாலும் பௌத்தச் கட்டடங்களும், சிற்பங்களும், ஓவியங்களும் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டன. எனவே இத்தகைய வளமும் வனப்புமிக்கப் பன்முக பலபரிமாண வளர்ச்சியை மையப்படுத்தி, மேம்படுத்திக் காட்டுவதற்காகக் குப்தர் காலம் பொற்காலம் என்று புகழப்படுகிறது.

அறிவாற்றலாலும், ஆளுமைத் திறத்தாலும், ராணுவ வலிமையாலும், ஆட்சிச் சிறப்பாலும் குப்தப் பேரரசர்கள் அமைதியை நிலைநாட்டி, வளங்களை செவ்வனே பயன்படுத்தி, சாதனை படைத்த முன்னோர்களை முன்மாதிரிகளாகக் கொண்டு, படைப்பாளிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும், கொடுத்து, இந்தியாவின் பெரும்பகுதியை ஆட்சி செய்து இந்தியப் பொது உணர்வை உருவாக்கினர். எனவே குப்தர்கள் பொற்காலத்தைத் தோற்றுவித்தனர் அல்லது குப்தர் காலத்தில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு இருந்தனர் என்று கூறுவது பொருந்தாக்கூற்றாகும். எனினும், குப்தர் காலத்தில் அறிவு, மொழி, இலக்கியம், கவின்கலைகள், அறிவியல் ஆகிய துறைகளில் அபரிமிதமான அதிசயிக்கத்தக்க சாதனைகள் நிகழ்ந்தன என்பதில் ஐயமில்லை. எனவே குப்தர் காலத்தை எழுச்சிக் காலம் என்பதே பொருத்தமாகும். ஏனெனில் பொற்காலம் கற்பனைக்காலமா (Utopia)கும், குப்தர் காலத்தைச் செவ்வியல்காலம் (Classical Age) என்றும் குறிப்பிடலாம். 48 குப்தர் காலம் இந்து மதத்தின் பொற்காலம் என்பதில் ஐயமில்லை

## ஹர்ஷர் காலம், (கி.பி. 300 - கி.பி. 600) *வர்த்தன மன்னர்கள்*

குப்தர் காலத்துக்குப் பிறகு ஹர்ஷர் காலம்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க காட்சியளிக்கிறது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குப்தர் பேரரசு வீழ்ந்தபின் வட இந்தியா மீண்டும் அரசியல் கொந்தளிப்புக்குள்ளாயிற்று ! பேரரசு பலமிழக்கும் போதெல்லாம் பிராந்திய அரசுகள் பலம் பெறுகின்றன. குப்தப் பேரரசின் அழிவிலிருந்து பல பிராந்திய அரசுகள் எழுச்சி பெற்றன. அதன் விளைவாக வட இந்தியாவின் அரசியல் நிலைத்தன்மை ஆட்டம் கண்டது; நடுவண் நிர்வாகம் நிலை குலைந்தது; அரசியல் ஒற்றுமையின்மை தலை தூக்கியது; ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்கின்ற உட்புறப் போராட்டாங்கள் குழப்பத்தில் முடிந்தன. இக்குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, மீண்டும் ஒழுங்கை ஏற்படுத்தி, வலிமைமிக்க மத்திய மேலாண்மையை ஹர்ஷர் நிலைநாட்டினார்.

## வரலாற்றுச் சான்றுகள்

ஹர்ஷவர்த்தனரைப் பற்றி அறிந்து கொள்வதற்கான இலக்கிய, கல்வெட்டு, நாணய மற்றும் புறச்சான்றுகள் உள்ளன. எனினும் இலக்கியச் சான்றுகளே பிரதானச் சான்றுகளாகப் பயன்படுகின்றன. ஏனெனில் கல்வெட்டுச் சான்றுகள் குறைவு: அவற்றின் வரலாற்றுப் பங்களிப்பு மிகக் குறைவு. ஹர்ஷரின் நாணயங்கள் சர்ச்சைக்குரியவை. திபெத்தி சீனப் புறச்சான்றுகள் ஊர்ஷரின் ஆட்சிக்கால இறுதியைப் பற்றித் தெரிந்து கொள்ள ஓரளவு உதவுகின்றன. இலக்கியச் சான்றுகளில் அடிப்படை வரலாற்றுச் சிறப்புமிக்கவை மூன்று: பாணர்ரின் ஹர்ஷசரிதம்; 2 யுவான் சுவாங்கிள் பயணக் குறிப்புகள்; 3) ஹர்ஷரின் நாடகங்கள்.

## பாணரின் ஹர்ஷ சரிதம்

பாணர் என்ற பாணபட்டர் பார்கவா பிராமண குடும்பத்தில் பிறந்தவர். இளமையில் அனாதையானவர்! கூரிய மதியிருந்தும் கூடா நட்பால் கெட்டுப்போனார். பாணின் அறிவாற்றலை அறிந்த ஹர்ஷர் அவரை அரசவையில் எழுதிய சேர்த்து ஆதரித்தார். பாணர் சமஸ்கிருதத்தில் எழுதிய காதம்பரி என்ற காதல் புதினம் இவருக்குப் புகழைப் பெற்றுத்தந்தது. எனினும், இவர்" ஹர்ஷசரிதம் என்ற படுகிறடைதாளுயம் வரலாற்றாளர்களுக்குத் தகவல் பெட்டகமாகப் பயன்படுகிறது. அதற்குக் காரணம் பாணர் ஹர்ஷரின்கீழ்ப் பணியாற்றியவர். தனது புரவலரைப் பற்றி நன்கறிந்தவர். ஹர்ஷரைப் போன்றே பாணரும் இலக்கிய உணர்வுடையவர். அதுமட்டுமல்ல. பாணர் அரசரவையில் இடம் பெற்றிருந்தமையால் நாட்டு நடப்புகளைக் கூர்ந்து கவனித்து எழுதக்கூடிய வசதியும் வாய்ப்பும் அவருக்கு இருந்தன. ஹர்ஷர்கால வாழ்வியல், பலதரப்பட்ட இடங்கள், அரசியல் நிகழ்வுகள், மன்னரைப் பற்றிய தகவல்கள் சமகாலச் சிறப்புடையவை. பாணர் பயன்படுத்தும் சிலேடைகளில் கூட வரலாற்றுத் தகவலைக் காண முடியும்!1 பாணரின் ஹர்ஷசரிதம் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட முதல் வாழ்க்கை வரலாறாகும்.

## ஹர்ஷரின் வாழ்க்கை வரலாறு

பாணர் எழுதிய ஹர்ஷரின் வாழ்க்கை வரலாறு 8 அத்தியாயங்களைக் கொண்ட முற்றுப்பெறாத படைப்பாகும். கிடைக்கும் பகுதிகளில் ஹர்ஷரைப் பற்றிக் காணப்படும் வரலாற்றுத் தகவல்கள்: 1) பாணரின் குடும்பப் பின்னணி; 2) அவர் ஹர்ஷரிடம் அறிமுகப்படுத்தப்பட்டது; 3) தனேச்சுவரத்தைப் பற்றிய விவரிப்பு: 4) ஹர்ஷரின் பூர்வீகம்; 5) ஹர்ஷரின் தாய் யசோமதி கணவர் இறந்தபின் தற்கொலை செய்து கொண்டது; 6) தந்தை இறந்தபின் ஹர்ஷர் மன்னரானது மற்றும் அவரது சகோதரி ராஜ்யஸ்ரீ மாளவ மன்னரால் சிறைபிடிக்கப்பட்டது; 7) சிறையிலிருந்து தப்பிச் சென்ற சகோதரியைத் தேடி ஹர்ஷர் படையெடுத்துச் சென்றது; 8) பல்வேறு சமயத்தவர் விந்தியப் பகுதியில் இணக்கமாக வாழ்ந்தது. ஹர்ஷரின் வாழ்க்கையின் இறுதிப்பகுதியைப் பற்றி பாணர் எழுதாமையால் மன்னரின் வாழ்க்கை வரலாறு முற்றுப் பெறாது.

பாணரின் படைப்பு ஹர்ஷரின் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளை வரிசைப்படுத்தி, முறைப்படுத்தி வரையப்பட்டுள்ளது. இவையாவும் வரலாற்று நிகழ்வுகளாகும். பாணர் இந்நிகழ்வுகளை இலக்கிய நயத்தோடு விவரித்துள்ளார். இந்நூல் கவிதை நடையில் எழுதப்பட்ட காதல்கதைபோல் உள்ளது. மிகைப்படுத்தப்பட்ட விளக்கம்போல் தோன்றினாலும் நிகழ்வுகள் உண்மையானவை. சமஸ்கிருதமொழியில் எழுதப்பட்டுள்ள ஹர்ஷசரிதம் சீனப் பயணி யுவான் கவாங்கின் குறிப்புகளோடு ஒத்துப் போகின்றன.

ஹர்ஷரின் எழுச்சி பற்றிய பாரின் படைப்பில் விளக்கத்தைவிட வர்ணனை அதிகமிருப்பினும் இது சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள முதல் வாழ்க்கை வரலாறாகும். நிகழ்வுகளைப் இந்நால் சமகால எழுத்தான அன்றைய அரசியல் எழுதப்பட்ட வரலாற்றுப் பதினமாகும்ஹர்ஷசரிதம் தன்னை பாதுபற்றி பாணர் எழுதிய வண்ணமிகு வாழ்க்கை வரலாறாகும். 5 ஆதரித்த பொது நலன் பற்றிய கருத்துக்களும் கொள்கைகளும் கால மாற்றங்களுக்கேற்ப மாறக்கூடியவை. மோரியரும், குப்தர்களும் அளைவாது நலன் பற்றிய தெளிவான கொள்கையைக் கொண்டிருந்தனர். இக்கொள்கையை மனதில்கொண்டே பாணர் அவரது காதம்பரியில் பொருளை வழிபடுவதையும், உலக வெற்றியைப் போற்றுவதையும் விட்டு மக்களின் பொதுநலனைப் பேண வேண்டுமென வற்றுத்துகிறார். பாணபட்டரின் ஹர்ஷசரிதம் மோரியர் காலத்துக்குப்பின் வந்த வர்த்தனர் காலத்தைப் பற்றி அறிந்துகொள்ளப் பயன்படுகிறது.

**வர்த்தன மன்னர்கள்**

**புஷ்யபூதி**

தனேசுவரம் புராணப் புகழ்பெற்ற நகரமாகும். 11 கி.பி. ஆறாம் நூற்றாண்டில் குப்தர்களின் ஆட்சிக்குப் பிறகு இந்நகரம் எழுச்சி பெற்றது. ஆற்றல்மிக்க அரசாக வளர்ச்சியுற்றது. இந்த எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் முதல் காரணமாக இருந்தவர் புஷ்யபூதி. இவர் குப்தப் பேரரசைச் சார்ந்திருந்த அரச குலத்தைச் சேர்வந்தவர் என்று கருதப்படுகிறார். இவரைச் சிவபக்தர் என்று குறிப்பிட்டுள்ளார் பாணர். புஷ்யபூதி தனேசுவரத் தனியரசு அமைவதற்கான அடித்தளத்தை அமைத்தார். தனேசுவரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார்.

**பிரபாகரவர்த்தனர், கி.பி. 583 - கி.பி.605**

புஷ்யபூதிக்குப்பின் முறையே நரவர்த்தனர், ராஜ்யவர்த்தனர், ஆதித்யவர்த்தனர், பிரபாகரவர்த்தனர் ஆகியோர் அரசர்களாயினர் என்று கூறப்படுகின்றது. இவர்களில் முதல் மூன்று மன்னர்களும் தனேசுவரத்திலிருந்து ஆட்சி செய்த மகாராஜாக்கள். இவர்களைத் தொடர்ந்து மன்னரான பிரபாகரவர்த்தனர் தனேசுர அரசைப் பேரரசாக விரிவுபடுத்தினார். மகாராஜாதிராஜர் என்ற பட்டப்பெயரைப் புனைந்து கொண்டார். இவரது தாய்

மகாசேனகுப்தா; மனைவி அரசி யசோமதி. பிரபாகர வர்த்தனர் தனது 12 ஆண்டுகால ஆட்சியில் பேரரசை விரிவுபடுத்திப் பெரும் புகழ் பெற்றார். இவர் ஹுணர்களுக்குச் சிங்கம், குஜராத் மன்னரின் தூக்கத்தைக் கலைத்தவர்; சிந்துதேச அரசருக்குத் தொற்றுநோய்; மாளவ மரத்தை வெட்டிச் சாய்த்த கோடாரி என்று பாணர் புகழ்பாடியுள்ளார்! பிரபாகர வர்த்தனரின் பேரரசு வடமேற்கே சிந்து, காந்தாரம் வரையிலும், தெற்கே மாளவம், குஜராத் வரையிலும் விரிவடைந்திருந்தது. இம்மன்னர் மாளவ மன்னன் யசோதர்மரின் மகள் யசோமதியை மணந்துகொண்டதன் மூலம் இரு நாட்டுறவைப் பலப்படுத்தினார். தனது வீரத்தாலும் விவேகத்தாலும் பிரபாகரவத்தனர் வர்த்தனர் வம்சத்தின் புஷ்யபூதி குலத்தின் மாமன்னராக, மாமனிதராகத் திகழ்ந்தார்.

## ஹர்ஷவர்த்தனர், கி.பி. 606- கி.பி. 647

*பிரபாகவர்த்தனரக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள்:* 1) ராஜ்யவர்த்தனர்; 2) ஹர்ஷவர்த்தனர்; 3) ராஜ்யஸ்ரீ. இம்மூவருக்கிடையேயான அரசுரிமை உறவுகளும், அரசியல் நிகழ்வுகளும் வர்த்தனப் பேரரசின் நோர்சையும், போக்கையும் நிர்ணயித்தன. முதலிருவரும் பட்டத்து இளவரசர்கள். ராஜ்ஸ்ரீ மௌசாரி மன்னன் அவந்தி மன்னனின் மகன் கிரசுவர்மனுக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டாள். பிரபாகரவர்த்தனர் முதுமையில் காலமானார். கணவரின் இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாத அரசி யசோமதி உடன்கட்டையேறி உயிர்துறந்தார் ! *பிரபாகரவர்த்தனர் இறந்தபின் அவரது மூத்த மகன் ராஜ்யவர்த்தனர்* அரசு கட்டிலேறினார். தந்தை இறந்துவிட்டார். தாய் தற்கொலை செய்து வேண்டியதாயிற்று. மாளவ மன்னன் வங்காள மன்னன் சசாங்கனுடன் கூட்டுசேர்ந்து கன்னோசியின்மீது படையெடுத்துச் சென்று மௌசோரி மன்னன் கரகவர்மனைக் கொலை செய்துவிட்டனர். ராஜ்யூரீ விதவையானாள் ! மைத்துனர் கொலையுண்ட செய்தியறிந்த ராஜ்யவர்த்தனர் மாளவ மன்னரைத் தண்டிப்பதற்காகப் படையெடுத்துச் சென்றார். சசாங்கன் சூழ்ச்சி செய்து ராஜ்யவர்த்தரைக் கொலை செய்துவிட்டார்! மூத்த சகோதரர் அகால மரணமடைந்ததால் ஹர்ஷர் அரசுப் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. அப்போது அவருக்கு வயது 16.

## *ஹர்ஷரின் பிரச்சனைகள்*

தானேசுவர மன்னரான ஹர்ஷர் இரண்டு பெரும்பிரச்னைகளை எதிர்கொண்டார்: 1) விதவையான சகோதரி ராஜ்யஸ்ரீயை மீட்டல்; 2 சகோதரியை விதவையாக்கியவர்களைத் தண்டித்தல். விரோதிகளைத் தண்டித்து சகோதரியை மீட்பதற்காகப் படையெடுத்துச் சென்ற ஹர்ஷருக்கு அதிர்ச்சி காத்திருந்தது! விதவைத் தங்கை சிறையிலடைக்கப் பட்டிருந்ததாகவும், சிறையிலிருந்து தப்பிய ராஜ்யஸ்ரீ விந்திய மலைக் காட்டுக்குத் தப்பிச் சென்று விட்டதாகவும் அறிந்த ஹர்ஷர் விந்தியக் காட்டுக்குச் சென்றார். அங்கு அவர் தீக்குளிக்கத் தயாராயிருந்த தங்கையைக் காப்பாற்றினார்! தங்கை பௌத்தத் துறவியானார்!! தங்கையைக் காப்பாற்றிய ஹர்ஷர் கன்னோசிக்கு வந்தபோது அந்த அரசு வாரிசின்றிக் குழப்பத்தில் இருந்தது. மாண்ட மைத்துனர் கிரகவர்மருக்கு வாரிசின்மையால் ஹர்ஷரே

வாரிசாகிக் கண்னோசியை தானேகரத்துடன் இணைத்துவிட்டார். இந்த இருநாடுகளின் இணைப்பு ஹர்ஷரின் கரத்தை வலுப்படுத்தியது. அவரது அரசின் எல்லை விரிவடைந்தது. தன்னையும், தன் அரசையும் வலுப்படுத்துவதற்காக ராணுவத்தைப் பலப்படுத்தினார்.

## ஹர்ஷரின் படையெடுப்புகள்

### வங்காளத்தை வெற்றிகொள்ளல்

தன் மைத்துனர் மற்றும் சகோதரரின் கொலைக்குக் காரணமான சசாங்கனைத் தண்டிக்கத் தீர்மானித்தார் ஹர்ஷர். அஸ்ஸாம் அரசர் பாஸ்கரவர்மரோடு ராணுவக் கூட்டு சேர்ந்தார். வங்காளம் தாக்கப்பட்டது. சசாங்கன் தோற்கடிக்கப்பட்டார். தோல்வியைத் தழுவிய சசாங்கன் கௌடா வைவிட்டு வெளியேறி தலைமறைவானார். பின்னர் சசாங்கன் இறந்தவுடன் ஹர்ஷர் ஓரிசாவையும், மேற்கு வங்காளத்தையும்; பாஸ்கரவர்மர் கிழக்கு வங்காளத்தையும் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர்!

### மாளவத்தைக் கைப்பற்றல்

வங்காளத்தை வெற்றிகொண்ட ஹர்ஷர் அடுத்த விரோத நாடான மாளவத்தைத் தண்டிக்க முடிசெய்தார். சார்பு அரசர்களின் ஆதரவோடு மாளவு நாட்டின் மீது படைபெடுத்தார். மாளவ மன்னன் தேவகுப்தர் தோற்கடிக்கப்பட்டார். மாளவத்தின் வடக்குப் பகுதி வர்த்தளப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. அஸ்லாமின் அரசன் பாஸ்கரவர்மர் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டார்.

### வல்லபியை வெற்றி கொள்ளல்

வல்லபி மேற்கிந்தியாவில் பலமிக்க நாடாக இருந்தது. இரண்டாவது துருவசேனர் அந்நாட்டு மன்னராக இருந்தார். அந்நாட்டை வெற்றி கொண்டு வடமேற்கில் தனது ஆட்சியை விரிவுபடுத்த விரும்பிய ஹர்ஷர் வல்லயிமீது படையெடுத்துச் சென்று இரண்டாவது துருவசேனனாத் தோற்கடித்து, வல்லபியையும் அதன் சார்பு நாடுகளான சூரத்தையும், அனந்தபூரையும் தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டார் ஹர்ஷர். அதன்பின் தனது மேலாண்மையை ஏற்றுக்கொண்ட துருவசேனரிடம் வல்லபியைத் திருப்பிக்கொடுத்து, தனது மகளையும் அவருக்குத் திருமணம் செய்து வைத்து, இரு நாடுகளின் உறவை உறுதி” செய்தார். அதிலிருந்து இரு நாடுகளும் நிரந்தரக் கூட்டாளிகளாயின!

### சிந்து  மீது படையெடுப்பு

சிந்து செல்வச் செழிப்பான நாடு. பிராபாகரவர்த்தனர் காலத்திலிருந்து சிந்துவுக்கும் தானேசுவரத்துக்குமிடையே இணக்கமான தொடர்பில்லாமலிருந்தது. எனவே செல்வத்திலும் செல்வாக்கிலும் சிறந்திருந்த சிந்துவின்மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டை வெற்றி கொண்டார் ஹர்ஷர். நேப்பாளமும் கைப்பற்றப்பட்டது. இத்துடன் ஹர்ஷர் பேரரசு வடக்கே இமயமலை முதல் தெற்கே நர்மதைவரை விரிவடைந்திருந்தது.

**புலிகேசியுடன் போர்**

வடஇந்தியாவில் வெற்றிக்கொடி நாட்டிய ஹர்ஷர் தென்னிந்தியாவையும் தன் ஆட்சிக் கொடையின் கீழ்க் கொண்டு வரத் தீர்மானித்தார்! வடஇந்தியாவில் ஹர்ஷர் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டியதைப் போன்று தென்இந்தியாவில் பாதாமியைத் தலைநகராகக் கொண்டு சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த இரண்டாம் புலிகேசி தன் பேரரசைப் பலப்படுத்திக் கொண்டிருந்தார். புலிகேசியின் படைபலத்தையும், ஹர்ஷரின் பேரரசு பலத்தையும் நன்கறிந்த லாதர்கள், மாலவர்கள், கூர்ஜரர்கள் புலிகேசியின் பக்கம் சேர்ந்தனர். புலிகேசியும் தனது பேரரசின் எல்லையை மாகி ஆறு வரை விரிவுபடுத்தியிருந்தார்.

தக்காணத்தின்மீது படையெடுத்த ஹர்ஷரை இரண்டாவது புலிகேசி தீரத்துடன் எதிர்கொண்டு, போரிட்டு, நர்மதை ஆற்றங்கரையில் தோற்கடித்தார். வடஇந்தியாவில் தோல்வி கண்டறியாத ஹர்ஷர் தென் இந்தியாவில் தோல்வியடைந்தார்! இத்தோல்வி ஹர்ஷரின் பெயருக்கும் புகழுக்கும் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியது. ஹர்ஷரின் அரசியல் சதுரங்க ஆட்டத்தில் தப்பிச்செல்ல முடியாத நிலைக்கு ஆட்படுத்தப்பட்டார். ஹர்ஷரின் வெற்றிப் பயணத்தில் ஏற்பட்ட ஒரே தடை இத்தோல்விதான் ஹர்ஷாது போர் இரண்டாம் புலிகேசியிடம் அவர் கண்ட தோல்வியால் *மாசுற்றது. ஹர்ஷர்* இத்தோல்வியை முட்டு நிலையாகக் கருதிய போதிலும் இரண்டாம் புலிகேசி இதைக் கொண்டாடினர்.

## *ஹர்ஷரின் இறுதி நாட்கள்*

பேரரசர் ஹர்ஷர் தோல்விகண்டு துவண்டுவிடவில்லை. அவர் தொடர்ந்து போர் நடவடிக்கைகளிலும் சமய நற்பணிகளிலும் ஈடுபட்டிருந்தார். கொலை முயற்சி அவர் சீனாவுக்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பினார். மேற்குக் கடற்கரையின் அமைந்திருந்த கஞ்சத்தைக் கையகப்படுத்தினார் சீனப் பயணி யுவாங் சுவாங்கைச் சிறப்பித்தார். ஹர்ஷர் மீதான முறியடிக்கப்பட்டது ! சீனாவிலிருந்து அனுப்பப்பட்ட தூதுக்குழுவை வரவேற்பதற்கு முன்பே ஹர்ஷர் அமரரானார் (கி.பி. 647).

சீலாத்தியன் என்று யுவாங் சுவாங்கால் அழைக்கப்பட்ட ஹர்ஷர் இறந்தபின் அவரது வாரிசுகளான யசோவர்மன், இந்திரராஜா ஆகியோரால் பிடித்த ஆசியக் காட்டுக் கூட்டத்தினர் ஹர்ஷர் பேரரசைக் குறி வைத்துத் தாக்கினார். பேரரசு குழப்பத்தில் ஆழ்ந்தது. இறுதியில் ஹர்ஷரது பேராக பிரதிகாரர் கைக்கு மாறியது.

**பேரரசின் பரப்பெல்லை**

ஹர்ஷர் இறந்தபோது அவரது பேரரசின் பரப்பெல்லை பற்றித் துல்லியமாக வரையறுப்பது எளிதல்ல. எனினும் அப்பேரரசு பிரம்மபுத்திராவிலிருந்து கத்தியவார் வரை மேற்கிலும், கிழக்கே ஒரிசா வரையிலும் பரவியிருந்தது என்பதில் ஐயமில்லை. பஞ்சாபின் ஒரு பகுதியும், நேப்பாளமும் இப்பேராரசின் பகுதிகளாக இருந்தன. இருப்பினும் ராஜபுதனம், சிந்து, பஞ்சாபின் பெரும்பகுதி பேரரசுக்கு வெளியே இருந்தன. எனவே வடஇந்தியா

முழுவதும் ஹர்ஷர் பேரரசுக்குட்பட்டிருந்தது என்று கூறுவதற்கில்லை. ஆனால் ஹர்ஷரது பேரரசின் பரப்பெல்லை குப்தப் பேரரசை விட *பெரிதாயிருந்தது.*

## ஹர்ஷரும் புத்தமதமும்

வர்த்தன வம்சம் புத்தமதச் சார்புடைய வம்சமல்ல. இவ்வம்ச மன்னர்கள் சமய சமத்துவத்தை மதித்தவர்கள். சமயப் பொறையைக் கடைபிடித்தவர்கள். இவர்களது கொள்கை சர்வ சமய சகிப்புத்தன்மையாகும். வர்த்தன வம்சத்தைத் தோற்றுவித்த புஷ்யபூதி சிவனை வழிபட்டவர். ஆதித்யவர்தனரும் அவரது மகன் பிரபாகரவர்த்தனரும் சூரிய வழிபாட்டாளர்கள். ராஜ்யவர்த்தனரும் அவரது தங்கை ராஜ்யஸ்ரீயும் புத்தமதத்தவர். ஹர்ஷர் சூரிய வழிபாட்டாளராயிருந்து பின்னர் புத்த மதத்துக்கு மாறியவர். ஹர்ஷர் தனது புத்த சமய வாழ்க்கையை ஹீனயான மதத்தில் துவங்கி மாகாயான மதத்தவரானார்.

சமயக் கொள்கை மறமும் அறமும் தானேச்சுவர பேரரசர் ஹர்ஷர் பின்பற்றிய இரண்டு மார்க்கங்களாகும். பேரரசர் என்ற முறையில் ஆக்கிரமிப்பு அவரது கடமையாக இருந்தது. மக்களுக்கு வேந்தர் என்ற வகையில் தர்மம் அவரது பொறுப்பாக அமைந்தது. ஹர்ஷர் முறை கெடாமல் ஆட்சி செய்த அரசர். சமயச் சமநெறியே அவரது சமயக் கொள்கையின் மையமாக இருந்தது. வேலைவிட செங்கோலே கண்ணைபோல் காத்தார். இவர் மதம் மாறினாரேயன்றி மக்களை இவர் சார்ந்து மதத்துக்கு மாற்றவில்லை | மதத்தை *நீதி* கெடாதவாறு ஆட்சி செய்யும் அன்பு ஆயுதமாக, தொண்டு செய்வதற்கான வாய்ப்பாகக் கருதினார். அதனால்தான் ஹர்ஷரால் தன்னையும் காத்துக் கொண்டு குடிமக்களைப் பிறர் வருத்தாமல் காக்க முடிந்தது. கருங்கக்கூறின் ஹர்ஷரின் மதக்கொள்கை செங்கோன்மையின் வெளிப்பாடாகும்.

### சமயத் தொண்டு

ஹர்ஷர் புத்த மதத்துக்கு மாறியதற்கான காரணம் புத்தர் காட்டிய மார்க்கத்தில் பயணிக்க வேண்டும் என்பதற்காகத்தான். புத்தரது மார்க்கம் சமய, சாதி வேறுபாடின்றி மக்களை சமமாக நடத்துவது; மக்களை மக்களாக மதிப்பது; மனித நடத்தைக்கு மரியாதை கொடுப்பது; ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதுவது; மேலோர் கீழோர் என்று வேறுபாடு காட்டாதிருப்பது; துன்பத்தை ஒழித்து இன்பத்தைப் பெருக்குவது; அனைவருக்கும் கல்வி அளித்து சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவது போன்ற அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளை வலியுறுத்தியது. இந்நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

## கன்னோசி மாநாடு, கி.பி. 643

இந்தியாவில் பயணம் மேற்கொண்டிருந்த சீனப் பயணி யுவான் சுவாங்கைப் பாராட்டுவதற்காகவும், சமயக் கொள்கைகளை விவாதிப்பதற்காகவும் ஹர்ஷர் கன்னோசியில் ஒரு மாபெரும் மாநாட்டைக் கூட்டினார். கஞ்சம் பயணத்தை

முடித்துக்கொண்டு திரும்பிய யுவான் சுவாங்கை பேரரசர் ஹர்ஷர் வங்காளத்தில் சந்தித்தார் (கி.பி. 643). அவர் கூட்டவிருந்த மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பிக்க அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை அன்புடன் ஏற்றுக் கொண்டார் சீனப்பயணி.

கன்னோசி மாநாடு யுவான் சுவாங் தலைமையில் நடைபெற்றது. அது ஒரு சர்வ சமய மாநாடு. அம்மாநாட்டில் அனைத்துப் பிரதான சமயத் தலைவர்களும் கலந்துகொண்டனர். கன்னோசி மாநாட்டில் 20 அரசர்கள்: 1000 நாளந்தா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்; 3000 ஹினாயான, மகாயான பௌத்தத் தறவிகள்; 3000 பிராமண சமய வல்லுநர்கள் பங்கேற்றனர். பிரமாண்டமான ஊர்வலத்தோடு மாநாடு துவங்கியது. கன்னோசி மாநாட்டுக்குத் தலைமை தாங்கி வெற்றிகரமாக நடத்திக் கொடுத்த சீன அறிவுப் பயணி யுவான் சுவாங்கை கவுரவித்து சிறப்பித்தார் பேரரசர் ஹர்ஷர். வெளிநாட்டு விருந்தினருக்கு விலைமதிப்பற்ற வெகுமதிகள் வழங்கப்பட்டன. ஆனால் யுவான் சுவாங் அவற்றைப் பெற்றுக் கொள்ள மரியாதையுடன் மறுத்துவிட்டார்! அடக்கத்தை அணியாகவும், உறுதியை கொண்டு வாழ்ந்தவர் யுவான் சுவாங். மாநாட்டு ஊன்றுகோலாகவும் கான்றுகோலாகவும் மீதிக எண்த்தப்பாழ்ந்தவர் யுவான் சுவாங் முடிவில் *சீனப் பயணி யானைமீது அமர்த்தப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்*

### அலகாபாத் பேரவை, கி.பி. 643

ஹர்ஷர் ஐந்தாண்டுகளுக்கொருமுறை சர்வ சமயப் பேரவையைக் கூட்டி அனைத்துச் சமயங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பரிசுப் பொருட்கள் வழங்குவது வழக்கம். பேரரசர் கூட்டிய ஆறாவது பேரவைக் கூட்டத்துக்கு வருமாறு சீனப் பயணி யுவான் சுவாங்கை அழைத்தார். பேரரசரின் அழைப்பை ஏற்று பயணியும் அப்பேரவையில் பங்கேற்றார். இப்பேரவை அலகாபாத்தில் (பிரயாக்) கூட்டப்பட்டது. கங்கையும் யமுனையும் சங்கமித்த பிரயாகையில் கூட்டப்பட்ட இப்பேரவையில் 18 நாட்டு அரசர்களும், அனைத்துச் சமயங்களையும் சேர்ந்த 5,00,000 பேர் பங்கேற்றனர்!

சமய அலகாபாத் பேரவை 75 நாட்கள் நடைபெற்றது. அனைத்து கடவுள்களுக்கும் வழிபாடுகள் நடத்தப்பட்டன. அச்சமயங்களுக்குரிய, பின்பற்றப்பட்டன. பேரரசர் ஹர்ஷர் பேரவையில் கலந்துகொண்டோர் சமணர்கள் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. ஹர்ஷர் தன்னிடம் இருந்தவற்றையெல்லாம் தானமாகக் கொடுத்துவிட்டார்! பௌத்தத் துறவியான தன் தங்கை ராஜ்யஸ்ரீயிடமிருந்து ஒரு காவி அணிந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. பேரரசர் ஹர்ஷர் முற்றும் துறந்த துறவியானார்!~ இப்பேரவையில் கலந்து கொண்ட யுவான் சுவாங் தான் சேகரித்த ஆவணங்களையே பரிசுப் பொருட்களாகக் கருதித்தாய்நாடு திரும்பினார்.

**ஹர்ஷர் கால வாழ்வியல்**

## *ஆட்சிமுறை*

ஹர்ஷர் பொதுவாக குப்தர்கால ஆட்சிமுறையைப் பின்பற்றினாலும், போரசை நிர்வகிப்பதைவிட அதன் ஆளுகைக்குச் சிறப்பிடம் கொடுத்தார். மைய அரசின் கட்டுப்பாட்டோடு மாகாணங்களும், கிராமங்களும் சுயேச்சையாக செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. அதிகாரக் குவியல் *முறையைவிட அதிகாரப் பரவல்முறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.* மன்னனுக்கு ஆலோசனை கூற அமைச்சரவை இருந்தது. அவர்கள் குறிப்பாக வாரிசுகளை உறுதி செய்வதிலும், வெளிநாட்டு விவகாரங்களிலும் அதிக அக்கறை காட்டினார்.

ஹர்ஷாது ஆளுகைச் சிறப்பு அவரது மேற்பார்வை சுற்றுப் பயணமாகும். அவர் நிர்வாக நேர்மையிலும், நிர்வாகிகளின் *நடத்தையிலும்* குறியாக இருந்தாள் அவரது சுற்றுப் பயணத்தின் போது தங்குவதற்காகத் தற்காலிக விடுதிகள் கட்டப்பட்டன. இவ்விடுதிகளில் தங்கி நிர்வாகத்தை மேற்பார்வையிட்டார். அமாக சோர்வில்லா சுற்றுப் பயணம் நேர்மையான நிர்வாகத்துக்கு உத்திரவாதமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் அவருக்குக் குறைந்த காலமாகவே இருந்தது. ஹர்ஷரின் நிர்வாக விழிப்புணர்வு நிர்வாகிகளிடையே நாணயமான உழைப்பை ஊக்குவித்தது. மக்கள் திருடர் பயமின்றிப் பாதுகாப்போடு வாழ்ந்தனர். பயணிகள் அச்சமின்றிப் பயணம் செய்தனர். பொறுப்பான மேற்பார்வை ஹர்ஷரின் ஆளுகைச் சிறப்பாகும்.

**நீதி நிர்வாகம்**

கருணையும் கண்டிப்பும் ஆட்சி நாணயத்தின் இரு பக்கங்களாகும். நல்லவர்களைப் பாதுகாப்பதும் குற்றவாளிகளைக் களைவதும் மன்னனின் கடமைகளாகும். ஹர்ஷர் மக்களிடம் அன்பாக இருந்ததைப் போன்று குற்றவாளிகளிடம் கடுமையாக இருந்தார். குற்றம் நேர்வதற்கு முன்னமே வராமல் காப்பதில் குறியாக இருந்தார் ஹர்ஷர். அதையும் மீறிக் குற்றம் புரிந்தோர் இரக்கமின்றித் தண்டிக்கப்பட்டனர். யுவான் சுவாங் குற்றங்களை உறுதி செய்ய நான்கு முறைகள் பின்பற்றப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்: 1) நீர்முறை; 2) நெருப்பு முறை; 3) சுமை முறை; 4) நஞ்சு முறை. மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் அமைந்த இக்கடுமையான முறைகள் அக்காலத்தில் பின்பற்றப்பட்டன. இப்பிற்போக்கு தண்டனை முறைகள் குற்றவாளிகளுக்குக் கருணை காட்டக்கூடாது என்பதை வலியுறுத்துவதாக உள்ளன.

சதிகாரர்களுக்கும், சமுதாய ஒழுங்கைக் கெடுப்பவர்களுக்கும், நன்றி கொன்றவர்களுக்கும், நடத்தை கெட்டவர்களுக்கும் உடல் உறுப்புகளை வெட்டல்; மரண தண்டனை கொடுத்தல்; நாடுகடத்தல்; அபராதம் விதித்தல் போன்ற தண்டனைகள் கொடுக்கப்பட்டன. தண்டனைகள் கடுமையாகவும், கொடூரமாகவும் இருந்தமையால்

குற்றவாளிகள் குறைவாக இருந்தனர்; குற்றங்கள் அரிதாக இருந்தன எனக் குறிப்பிட்டுள்ளார் யுவான் சுவாங்.

### ஆவணக் காப்பகம்

ஹர்ஷர் அரசாங்க ஆவணங்களின் அருமையை நன்கறிந்தவர். ஆவணங்கள் மனித நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் வரலாற்று மூலங்கள். வரலாற்று வரைவியலுக்குப் பயன்படும் அடையாளங்கள், ஆதாரங்கள். ஹர்ஷர் ஆவணங்களைக் காப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றி யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக ஹர்ஷர் பொது ஆவணங்கள் மீது காட்டிய ஆர்வத்தையும் அக்கறைமையும் பதிவு செய்துள்ளார். ஆவணங்களைச் சேகரிப்பதற்கும். அவற்றைப் பத்திரப்படுத்திக் காப்பதற்கும் ஆவணக்காப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். அதிகாரபூர்வமான. ஆவணங்களும், கால அட்டவணைகளும் நீலோபிது என்று அழைக்கப்பட்டன. இக்கருநீல ஆவணங்களில் நல்ல, கெட்ட நிகழ்வுகள், இயற்கைப் பேரிடர்கள் போன்றவை விரிவாக குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளன. ஆவணக் காப்பகத்துக்கு ஹர்ஷர் கொடுத்த முக்கியத்துவம் அதிசயிக்கத்தக்கது.

### பொருளாதார நிலை

யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து ஹர்ஷர் காலப் பொருளாதார நிலை பற்றிப் புரிந்து கொள்ள முடிகின்றது. சீனப் பயணி சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் மகிழ்ச்சியோடு காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். நகரங்களும் கிராமங்களும் கூட உட்புறச் சுவர்களால் அமைக்கப்பட்டிருந்தன. வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் கடைகள் இருந்தன. மண் வளமோடு இருந்தமையால் விவசாயம் செழிப்பாக இருந்தது. கோதுமை மக்களின் முக்கிய உணவுப் பொருளாக இருந்தது. நன்குலர்ந்த தானியங்கள், நெய், வெண்ணெய், பால், சர்க்கரை அன்றாட உணவில் இடம்பெற்றன. மீன், மான்கறி, இறைச்சி விழாக்காலங்களில் பயன்படுத்தப்பட்டன. மாட்டு இறைச்சி தடை செய்யப்பட்டது.

### தொழில்கள்

தொழில்களை முறைப்படுத்துவதற்காகத் தொழில் குழுக்கள் இருந்ததாகப் பாணரும், யுவான்சுவாங்கும் குறிப்பிட்டுள்ளனர். அரண்மனை வாழ்க்கை அக்கால கலைகள் மற்றும் கைவினைப் பொருட்களின் வளர்ச்சியை பிரதிபலிப்பதாக இருந்தது. அடுக்குமாடிக் கட்டடங்கள் இருந்தன. அவற்றில் பல வகையான வீட்டுக்குத் தேவையான பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. தங்கம், வெள்ளி நாணயங்கள், சோழிகள், சிறுமுத்துகள் ஆகியவை பொருட்களை வாங்க விற்க பயன்படுத்தப்பட்டன. தனேசுவரம், மதுரா, கனோசம், அலகாபாத், அயோத்தி, பனாரஸ், தாம்லிக் போன்ற நகரங்கள் விரிவுபடுத்தப்பட்டு வளமோடு காட்சியளித்தன. உள்நாட்டு வர்த்தகத்தைப் போன்றே வெளிநாட்டு வாணிபமும்

சிறப்புற்றிருந்தது. குறிப்பாகத் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு ஆரோக்கியமாக இருந்தது. இந்தியக் கலாச்சாரம் கடல் சார்ந்து பரவியது.

### சமுதாய நிலை

பாணரும், யுவான்சுவாங்கும் ஹர்ஷர் காலத்து சமுதாய நிலை பற்றிப் பல தகவல்களைத் தந்துள்ளனர். நான்கடுக்குச் சாதிமுறை வழக்கத்தில் இருந்தது. பிராமணர்கள் சமயச் சடங்குகளை மட்டும் செய்தனர். சத்திரியர் ஆட்சித் துறையில் பங்கேற்றனர். வைசியர்கள் வியாபாரிகளாகவும், வர்த்தகர்களாகவும் இருந்தனர். சூத்திரர் உடலுழைப்பு சார்ந்த வேலைகளைச் செய்தனர். இறைச்சிக் கடைக்காரர்கள், தோட்டிகள், தெருப்பெருக்குவோர், மீன்பிடிப்போர், கழைக்கூத்தாடிகள், தூக்கிலிடுவோர் ஆகியோர் ஊருக்கு வெளியே வசித்தனர்.

பொதுவாக நான்கு சாதியினரிடையேயான சமுதாயத் தொடர்பு வழங்கப்பட்டது. விதவை மறுமணமும், தந்தைவழி தாய்வழி நெருங்கிய உறவினர் திருமணமும் தடை செய்யப்பட்டன. விதவைகள் மொட்டையடிக்கப்பட்டனர்! உடன்கட்டையேறல் வழக்கத்தில் இருந்தது. மக்கள் தையல்கலையை எம்பா அறிந்திருக்கவில்லை! செருப்பணிவது ஆபூர்வமாகக் காணப்பட்டது குறிப்பிட்டுள்ளார் யுவான் சுவாங். அரச குடும்பத்தினரும், செல்வந்தரும் ஆரும், உடையணிந்தனர்; ஆபரணங்களை சூட்டிக் கொண்டனர். பிராமணர்களும் சத்திரியரும் எளிய, *வாழ்க்கை வாழ்ந்தனர்*. பொதுவாக மக்கள், ஒழுக்கமுடையவர்களாகவும், நாணயமிக்கவர்களாகவும் இருந்தனர். வயோதிகளும் தீராத நோயுற்றோரும் கங்கையில் மூழ்கடிக்கப்பட்டனர்! இறந்தோரை அடக்கம் செய்ப மூன்று முறைகள் கையாளப்பட்டன: எரித்தல், ஆற்றில் விடுதல்; காட்டில், விடுதல்.

### சமயங்களின் நிலை

### பௌத்த சமயம்

ஹர்ஷர் காலத்தில் பௌத்த மதம் தனிச் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தது: அரசாங்கத்தின் ஆதரவு இருந்தமையால் அச்சமயம் சிறப்பிடம் பெற்றது. பௌத்த சமயம் இரு கிளைகளாகச் செயல்பட்டது. ஹீனாயானத்தைவிட மகாயானம் அதிக முக்கியத்துவமடைந்தது. ஹர்ஷரும், யுவான் சுவாங்கும் மகாயான பௌத்தர்கள்! பௌத்த மதத்தில் 18 பிரிவுகள் இருந்ததாகவும் அவைகளின் நடவடிக்கைகள் வேறுபட்டிருந்ததாகவும், ஒன்று மற்றொன்றைவிடச் சிறந்தது என்று கூறிக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார் சீனப் பயணி! பேரரசில் பௌத்தமதம் பரவ ஹர்ஷர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

**சமண சமயம்**

ஹர்ஷர் காலத்தில் சமண சமயம் சுதந்திரமாக இயங்கியது. வைசாலி சமண சமயத்தின் குவிமையமாக இருந்தது. சமண திகம்பரர்கள் ஏராளமானோர். அவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்தனர். பௌத்த மதத்தைப் போன்றே சமண சமயமும் இரு பெரும் பிரிவுகளாக செயல்பட்டது. சமண சமயம் சுதந்திரமாகச் செயல்பட்டாலும் அதன் செல்வாக்கு சரிந்து கொண்டிருந்தது.

**பிராமண சமயம்**

பௌத்த சமயமும், பிராமண சமயமும் அடிப்படையிலேயே மாறுபட்டவை; வேறுபட்டவை. பிராமண சமயம் பௌத்த சமயத்தைத் தன் முதல் விரோதியாகக் கருதியது. பிராமணத் தலைவர்கள் ஹர்ஷரின் ஆட்சிக்கு எதிராகச் செயல்பட்டார்கள். எனினும் ஹர்ஷர் அச்சமயத்தின்மீது காழ்ப்பு கொள்ளவில்லை! சமய சமத்துவத்தின்மீது நம்பிக்கை வைத்திருந்த ஹர்ஷர் பிராமண சமயத்துக்கும் சம மரியாதை கொடுத்தார். பிரயாகையும், பனாரசும் பிராமண சமயக் கோட்டைகளாக இருந்தன. பிராமணர்கள் சிவன், விஷ்ணு, பசுக்களை வழிபட்டனர். பசு புனித விலங்காகப் போற்றப்பட்டது. குருட்டு யோகத்துக்காக பல சடங்குகள் நடத்தப்பட்டன. நற்காலங்களில் நெய்யை ஊற்றி அக்னி (நெருப்பு) வழிபாடு செய்யப்பட்டது. பிராமண சமயத்தில் பல தத்துவங்கள் இருந்தன. இவை உபநிடதங்களின் அடிப்படையில் அமைந்தவை.

**ஹர்ஷரின் படைப்புகள்**

ஹர்ஷர் போர்வீரர் மட்டுமல்லாது பெரும் புலவராகவும், புலவர்களுக்குப் புரவலாகவும் இருந்தார். அவரது அவை புலவர் பேரவையாகக் காட்சியளித்தது. ஒரு இலக்கியப் பிரியனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான். இப்பேரவையின் தலைவராக இருந்தார் ஹர்ஷர். இப்பேரரசர் பிற புலவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். ஹர்ஷர் எழுதிய ரத்னாவளி, பிரியதர்சிகா, நாகரநீந்தம் ஆகியவை முப்பெரும் சமஸ்கிருத நாடகங்களாகும். இவற்றுள் என்ற நாடகம் தத்துவச் சிறப்புமிக்கது. இந்நாடகத்தில் கதாநாயகன் தன் உயிரையே கொடுக்க முன்வருபவன் ஒரு அரசைப் பெருவதற்காகக் கொலை செய்யமாட்டான் என்ற கருத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட நாடகம் நாகாநந்தம், பௌத்த மதத்தைப் பின்பற்றும் நாடுகளில் இந்த நாடகம் பெரும் புகழ் பெற்றது.

ஹர்ஷர் கைதேர்ந்த கையெழுத்துக் கலைஞர் இவரது -அழகான கையெழுத்தின் நகல் அவர் வெளியிட்ட செப்புப் பட்டயங்கள் சிலவற்றில் புலமைக்குச் சான்றுகளாக உள்ளன. இவையன்றி இவர் வேறு சில நூல்களையும், - இலக்கண நாலொன்றையும் எழுதியதாகக் கூறப்படுகிறது. அவற்றை அவர் இயற்றியிருந்தால் அவரது இலக்கியப் பெருமை மிகுந்து விடாது; இல்லையேல் அதுகுன்றிவிடாது.

**பாணர்**

ஹர்ஷரின் பேரவையைப் பல புலவர்கள் அலங்கரித்தனர். அவர்களுள் தலையாயவர் பாணர். இவர் ஹர்ஷசரிதத்தை எழுதியதோடு மட்டுமின்றி காதம்பரி என்ற காதல் காவியத்தையும் படைத்தார். இதில் காணப்படும் கவித்துவம், வர்ணனை, நாடக உத்தி இலக்கிய விமரிசர்களால் பெரிதும் பாராட்டபடுபவை. பாணர் பார்வதி பரிணயம், சண்டிசதகா ஆகிய நாடகங்களையும் இயற்றினார்.

**பிற புலவர்கள்**

பாணரின் மைத்துனர் மயூரா அஷ்டகா என்ற காமக் கவிதையை எழுதினார். இக்கவிதை இவருக்குக் காமசாத்திரத்தின் மீதிருந்த புலமையைப் புலப்படுத்துகிறது. இவர் இயற்றிய சூர்யசதகம் தனிச்சிறப்புடையது.29 ஹர்ஷர் பேரவையின் மற்றொரு புகழ்பெற்ற புலவர் மாதங்கதிவாசரர். பத்ருஹரி என்பவர் புலவர், தத்துவர், இலக்கண வல்லுனர். இவர் ஹர்ஷரின் சமகாலத்தவர். யாவற்றுக்கும் மேலாக ஹர்ஷர் அவைக்களப் புலவர்களைக் கவிதைகள் புனையச் செய்து, அவற்றைத் தொகுத்து ஜதகமாலை என்று பெயரிட்டார். இக்கவிதைகள் புத்தரின் முற்பிறவிகளைப் பற்றியவை.

***கல்வி பணிகள்***

ஹர்ஷர் கல்விக்கும், அறிவுசார்ந்த நடவடிக்கைகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார். அறிவு அழிவு வராமல் காக்கும் கருவி என்று கருதினார். கல்வி கற்றோர் மனதை ஒருமுகப்படுத்தி தீமையைப் போக்கி நன்மையில் நாட்டம் கொள்ளச் செய்யும் என்று நம்பினார். மெய்ப்பொருள் காண்பது அறிவு என்று எண்ணிய ஹர்ஷர் அறிவாலயங்களான பௌத்த மடாலயங்களை வெகுவாக ஊக்குவித்தார். அங்குதான் சாதி, மத வேறுபாடுகளின்றிக் கல்விக் கதவுகள் அனைவருக்கும் திறந்து விடப்பட்டன. இம்படாலயங்களில் பௌத்தர்கள், சமணர்கள், பிராமணர்கள் கபிலரைப் பின்பற்றிய சாங்கியர்கள், களடரைப். பின்பற்றிய வைசேஷிசர்கள், வேதாந்திகள், தர்க்கவாதிகள். தத்துவர்கள், பௌராணிகர்கள், இலக்கியவாதிகள், நாத்திகர்கள் ஆகியோர் கூடி உரையாடினர்; கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர்.

*யுவான் சுவாங் மக்களின் கல்வி நிலை பற்றித் தனது கருத்துக்களைப்* பதிவு செய்துள்ளார். கற்றோர் சரியாகப் பேசினர்; தெளிவாகப் பேசினர்; உச்சரிப்புப் பிழையின்றிப் பேசினர். மாணவர்களுக்கு ஏழு வயதிலிருந்து இலக்கணம், கருவிக் கலைகள், தர்க்கவியல், தத்துவம் ஆகியவை கற்பிக்கப்பட்டன. அரசாங்கம் இவர்களை மிகுந்த மரியாதையும் நடத்தியமையால் இவர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்பிருந்தது.

**நாளந்தா பல்கலைக்கழகம்**

நாளந்தா பல்கலைக்கழகம் பீகாரில் பாட்னாவுக்கு 88 கிலோ மீட்டர் தென்கிழக்கில் ராஜகிரகத்துக்கருகே அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் குப்தர் காலத்தில், குறிப்பாக முதலாம் குமார குப்தர் அல்லது இரண்டாம் குப்தரால், தோற்றுவிக்கப்பட்டது. மன்னர்கள் மதவேறுபாடின்றி இந்த பல்கலைக்கழகத்தை ஆதரித்துவந்தனர். நாளந்தா பல்கலைக்கழகம் ஹர்ஷர் ஆட்சிக்காலத்தில் உச்சகட்ட வளர்ச்சியடைந்தது. சீனா, திபெத், பர்சியா, கிரேக்கம் போன்ற நாடுகளிலிருந்து மாணவர்கள் வந்து இப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, கற்று, ஆராய்ச்சி செய்தனர்.

நாளந்தா பல்கலைக்கழகம் உலகின் தலைசிறந்த மாணவர்கள் தங்கிப் படிக்கும் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தது. பல்கலைக்கழக வளாகத்தில் எட்டு தனி கட்டடத் தொகுதிகளும், எட்டு வழிபாட்டுத் தலங்களும், தியான மண்டபங்களும், நூலகமும், வகுப்பறைகளும் இருந்தன. மூன்று வளாகங்களைக் கொண்ட நூலகத்தில் பல்லாயிரக்கணக்கான ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டன. இடையிடையே எழில்மிகு குளங்களும், பூங்காக்களும் காட்சியளித்தன. 10 நீச்சல் குளங்கள் இருந்தன. இப்பல்கலைக்கழகம் கட்டடக் கலையின் தலைசிறந்த படைப்பாகக் கருதப்பட்டது.

**பேராசிரியர்கள்**

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் துவக்கப்பட்ட நாளந்தா பல்கலைக்கழகத்தில் மேல்பட்டப்படிப்பும், ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டன. அறிவாழமும், கடமையே கண்ணாயிருந்தனர். பேராசிரியர்கள் அற்பணிப்புணர்வும், ஒழுக்க விருப்பமுடைய பேராசிரியர்கள் மாணவர்களுக்கு பண்டிதர்கள் என்றழைக்கப்பட்டனர். பல்கலைக்கழகத் தலைவரும் பண்டிதர் வழிகாட்டிகளாக இருந்தனர். என்றே அறியப்பட்டார்.

தீங்நாகா, ஸ்திரமதி, தர்மபாலர், சிலபத்திரர் போன்ற பெரும்பாழ் பெற்ற பேராசிரியர்கள் இப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றினர். இவர்களுள் தர்மபாலர் காஞ்சிபுரம் பௌத்த பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய தமிழர். புத்த தர்க்கவாத நிபுணர். உரையாடலில் வல்லவர். மகாயான பௌத்த தத்துவத்தில் துறைபோனவர். இவர் நாளந்த பல்கலைக்கழகத் தலைவராயிருந்தார். இவருக்குப் பின் தலைவரானவர் பிரம்மபுத்திராவைச் சேர்ந்த சாமதத்தர், இவரது காலத்தில்தான் யுவான் சுவாங் நாளந்தா பல்கலைக்கழகத்துக்கு வந்து, தங்கி, ஆராய்ச்சி செய்தார். பயணிக்குப் பண்டிதருக்குரிய மரியாதை கொடுக்கப்பட்டது. பேரரசர் ஹர்ஷர் இவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார். யுவான் சுவங்கும், மற்றொரு சீனப் பயணியான இட்சிங்கும் மாணவர்களுக்குக் கற்பித்தனர்.

**மாணவர்கள்**

"நாளந்தா பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் திறமையின் அடிப்படையில் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இத்தேர்வில் கலந்துகொண்ட நூறு மாணவர்களில்

என்றழைக்கப்பட்ட பல்வேறு துறைகளின் நிபுணர்களால் நடத்தப்பட்டது. வாய்முகத் தேர்வுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும், மாணவிகளும் விடுதிகளில் தங்கிப் படித்தனர். இவர்களுக்கான அனைத்து செலவுகளும் இலவசமாகக் கொடுக்கப்பட்டன. விடுதிக் கட்டுப்பாடுகள் மிகவும் கடுமையாக இருந்தன. மாணவர்கள் அனைவருக்கும் சீருடையும், தலையணியும் வழங்கப்பட்டன. பேராசிரியர்களும் விடுதிகளிலேயே தங்கினர். காலை, மதிய, இரவு உணவுப் பட்டியல் பின்பற்றப்பட்டது. விடுதி மாணவர்களிடையே ஒழுங்கும், ஒழுக்கமும், கட்டுப்பாடும், கண்ணியமும், கடமையும் நடைமுறைப்படுத்தப்பட்டன. மாணவர்கள், குறிப்பாக வெளிநாட்டிலிருந்து வந்தோர், மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட்டனர். ஹர்ஷர் காலத்தில் சீனா, ஜப்பான், கொரியா, திபெத், இந்தோனேஷியா, பர்ச்சியா, துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து மாணவர்கள் வந்து சேர்ந்தனர். இப்பல்கலைக்கழகத்துக்கான செலவுக்காக 200 கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டிருந்தன.

## ஆவணக் காப்பகம்

நாளந்தா பல்கலைக்கழகத்தின் மூளையாக இருந்தது அதன் நூலகம்தான். ஹர்ஷர் ஆட்சிக்காலத்தில் உலகியேலேய மிகப்பெரிய நூலகம் இதுதான். இந்நூலகம் வாய்மையின் கருவூலம் (Dharmaganja), உண்மையின் சிகரம் (Dharmagunj) என்று அழைக்கப்பட்டது. ஒன்பது அடுக்குகளைக் கொண்ட இந்த நூலகம் மூன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தது: 1) ரத்னசாகரம் (Sea of Jewels); 2) ரத்னோததி (Ocean of Jewels); 3) ரத்னரஞ்ஜகா (Delighter of Jewels). இந்நூலகத்தில் பல்லாயிரக்கணக்கான ஆவணங்கள் முறையாகப் பாதுகாக்கப்பட்டன; இவை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. இந்த நூலகம் ஆவணக் காப்பகமாக மட்டுமின்றி உயர்கல்வி ஆராய்ச்சி மையமாகவும் திகழ்ந்தது.

## பாடத்திட்டம்

நாளந்தா பல்கலைக்கழகத்தில் பின்பற்றப்பட்ட பாடத்திட்டம் அனைத்து மதத்தினருக்கும் பொதுவானது. இது சமபம் சார்ந்த, சமயம்சாராத பாடங்களை உள்ளடக்கியது. மகாயானம்; ஹீனயானம்; வேதங்கள்; தீர்க்கவியல்; இலக்கணம், யோகம்; மருத்துவம்; வானவியல்; தந்திரம், கலைகள், குறிப்பாக உருவச்சிலைக் கலை: தத்துவம்; நுண்பொருளியல் ஆகியவை பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தன.

## பயிற்றுமுறை

ஹர்ஷர் காலத்தில் நாளந்தா பல்கலைக்கழகத்தில் துவக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்கல்வி அளிக்கப்பட்டது. முதலிரண்டு நிலைகளிலும் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இடைநிலைக் கல்வி நிலையில் மாணவர்கள் ஆசிரியருடன் கூடியமர்ந்து கற்றனர். உயர்கல்வியை மாணவர்கள் விவாதங்கள் மூலம் கற்றுக் கொண்டனர். இவர்கள் ஆவணங்களைப் பிரதி எடுத்தனர். காலம் நீர்க்கடிகாரம் மூலம் கணிக்கப்பட்டது.

ஆவணங்களைப் பிரதிகள் உயர்கல்வி பெறவும், எடுக்கவும், ஆராய்ச்சி மேற்கொள்வதற்காகவும் எட்டு பொது அறைகளும், முன்னூறு அறைகளும் இருந்தன. யுவான் சுவாங் பயிற்றுமுறைகள் மற்றும் பாடபுத்தகங்கள் பற்றி விரிவாகக் கூறியுள்ளார்.

நாளந்தா பல்கலைக்கழகத்துக்கென தர்மசக்கரம் பதித்தத் தனி முத்திரை இருந்தது. நூலகம் மட்டுமின்றி வானிலை ஆய்வுக்கூடமும் சிறப்பிடம் பெற்றிருந்தது. சுருங்கக்கூறின், ஹர்ஷர் காலத்து நாளந்தா பல்கலைக்கழகம் சர்வதேச கல்விக் கேந்திரமாக இயங்கி வந்தது. நாளந்தா பல்கலைக்கழகம் இந்தியப் பண்பாட்டின் தரக்குறியீடாக இருந்ததோடு மட்டுமின்றி இதன் பேராசியர்கள் இந்தியப் பண்பாடு பிற நாடுகளுக்கும் பரவ பெரிதும் காரணமாக இருந்தனர். இப்பல்கலைக்கழகத்தால் வெளிநாட்டவரை மீலேச்சர்களாகக் கருதிய இந்திய அறிஞர்களின் தன்னல குறுகியக் கண்ணோட்டம் உலகப் பார்வையாக விரிவடைந்தது.

## *கலை வளர்ச்சி*

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் விளைவாக ஹர்ஷர் காலத்துக் கட்டடக் கலை பற்றி ஓரளவு அறிந்து கொள்ள முடிகின்றது. இந்த ஆராய்ச்சியின்போது செங்கற்களால் கட்டப்பட்ட ஆறு பெரிய கோயில்களும், பதினோறு மடாலயங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை முறையான வரைப்படத்திட்டத்தின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளன. இதற்கு நாளந்தா பல்கலைக்கழக வளாகக் கட்டடங்கள் எடுத்துக்காட்டாகும். எட்டடி உயர புத்தரின் செப்புச்சிலை சிற்பக்கலைக்குச் சிறந்த உதாரணமாகும்.

மத்திய இந்தியாவில் ராஜ்பூர் மாவட்டத்தில் சிர்பூர் என்ற இடத்தில் காணப்படும் லட்சுமணன் கற்கோயில் சிற்ப வளத்துக்கும், மென்மைக்கும் எடுத்துக்காட்டாகும். யாவற்றுக்கும் மேலாக நாளந்தா பல்கலைக்கழகக் கலை மேம்பாட்டுக்கு ஹர்ஷரின் பங்களிப்பு போற்றுதற்குரியது. ஒரு நூற்றாண்டுக் குழப்பத்துக்குப் பிறகு ஹர்ஷவர்த்தனர் வட இந்தியாவை வெற்றி கொண்டு, கன்னோசியைத் தலைநகராக்கி, நாற்பத்திரெண்டாண்டு காலம் ஆட்சி செய்து பேரரசுக்குப் பாதகாப்பையும், அமைதியையும் கொடுத்து, இலக்கியத்தையும் கலைகளையும் வளர்த்தார்.

## யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள்

யுவான் சுவாங் கன்பூசியவாதி ஒரு சீனக் கிராமத்தில் பிறந்த யுவான்சுவாங் (Hiuen Tsang, கி.பி. 602 - கி.பி. 664 இளவயதிலேயே படிப்பில் பேரார்வம் கொண்டிருந்தார். இவரது கொள்ளுத்தாத்தா அரசாங்கப் பணியில் இருந்தவர். இவரது தாத்தா அரசாங்கக் கல்விக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். இவரது தந்தை சீனாவின் தலைசிறந்த தத்துவமேதை கன்பூசியவாதி (Confucianist); மாவட்ட ஆட்சியராக இருந்தவர். யுவான் சுவாங் அவரது தந்தையிடமிருந்து கன்பியூசிய சித்தாந்தத்தையும், சீன செவ்விலக்கியத்தையும் பழுதறப் பயின்றார்.

## இந்தியாவிற்கு பயணம்

யுவான் சுவாங் அவரது தந்தை இறந்தபின் பௌத்தத் துறவியானார். ஐந்தாண்டுகள் பௌத்தத் தத்துவங்களை, குறிப்பாக மாகாயான பௌத்த தத்துவத்தைப் பயின்றார். சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பௌத்த நூல்களில் இருந்த முரண்பாடுகளைக் கண்ட யுவான் சுவாங் இந்நூல்கள் எழுதப்பட்ட மூலமொழியான சமஸ்கிருதத்தைக் கற்க இந்தியா சென்று அந்நூல்களை ஆய்வு செய்யத் தீர்மானித்தார். அவ்வாறே சமஸ்கிருதம் பயின்றார். இந்தியா செல்வதற்கான சீன அரசாங்க விதிமுறைகள் கடுமையாக இருந்தமையால் ரகசியமாக சீனாவைவிட்டு கி.பி. 629ல் வெளியேறினார்.

புத்தத் துறவிகளின் ஆதரவோடு சீனாவை விட்டு வெளியேறிய யுவான் சுவாங் வடமேற்கு வழியாகப் பயணம் செய்து, திருடர்களிடமிருந்து தப்பித்து சாமர்கண்டை (Samarkand) வந்தடைந்தார். யுவான் சுவாங்கின் அறிவாலும், ஆர்வத்தாலும் பெரிதும் கவரப்பட்ட சாமர்கண்டு மன்னரின் உதவியோடு தெற்கு நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்து அமுதார்யா (Amu Darya)வை வந்தடைந்தார். அங்கிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தத் துறவிகளோடு தங்கிய பின்னர் குந்தஸ் (Kundus) வந்தார். அங்கு தர்மசிம்மர் என்ற புத்தத் துறவியுடன் தொடர்பு ஏற்பட்டது. அவருடைய ஆலோசனையின்படி யுவான் சுவாங் மற்கு வழியாகப் பயணம் செய்து பால்க் தற்போதய ஆப்கானிஸ்தானம்) வந்தடைந்தார். *அங்கு அவர் பௌத்த சமய* சம்மந்தமான இடங்களை, குறிப்பாக நவவிகாரை (பௌத்த மடாலயம்)ப் பார்வையிட்டார். அவருக்கு முக்கிய பௌத்த ஆவணம் அங்கு அவர் பௌத்த சமய Maha Vibhasa) கிடைத்தது. அங்கிருந்து புறப்பட்ட யுவான் சுவாங் பாம்யானில் (Bamyan) பல பௌத்த மடாலயங்களையும், பாறையில் செதுக்கப்பட்ட பாம்பான் புத்த சிலைகளையும் பார்வையிட்டார்..

## சமய விவாதங்களில் பங்கேற்பு

**பின்னர் யுவான் சுவாங் குழுவினர் கிழக்குப் பக்கமாகப் பயணித்து காபூல் வந்தனர். அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட பௌத்த மடங்களும், 6000 துறவிகளும் இருந்தனர். இவ்விடமே பழைய காந்தாரமாகும். இங்கு யுவான் சுவாங் சமய விவாதங்களில் பங்கேற்றார். இங்குதான் அவர் முதன்முறையாக சமணர்களையும் இந்துக்களையும் சந்தித்தார். யுவான் சுவாங் காபூலிலிருந்து, புறப்பட்டு கைபர் கணவாய் வழியாக புருஷபுரத்தை (Peshawar) வந்தடைந்தார். அங்கிருந்து சீனப் பயணி அப்போது காஷ்மீரத்தின் சார்பு நாடாக இருந்த தட்சசீலத்துக்கு (Taxila) வந்தார்.**

### யுவாங் சுவாங் - நேப்பாளத்தில்

*இந்தியாவுக்கு வருமுன் யுவான் சுவாங் (கி.பி. 629) நேப்பாளம் செல்லத்* தவறவில்லை. யுவான் சுவாங் அங்கு பௌத்த மடாலயங்கள் புறக்கணிக்கப் பட்டிருப்பதைப் பார்த்தார். கபிலவஸ்து சென்று புத்தரின் பிறப்பிடமான ஐரம்பினியைப் பார்வையிட்ட

பின்னர் புத்தரின் இறப்பிடமான குசிநகரம் சென்றான். புத்தர் பிரச்சாரத்தைத் தொடங்கிய சாரநாத்துக்குச் சென்று அங்கிருந்த பௌத்தத் துறவிகளோடு கலந்துரையாடினார்.

***யுவாங் சுவாங் - நலந்தா பல்கலைகழகத்தில்***

பின்னர் யுவான் சுவாங் கிழக்குப் புறமாகப் பயணித்து வாரணாசி, வைசாலி, பாடலிபுத்திரம், புத்தகயா சென்றுவிட்டு நாலந்தா பல்கலைக் கழகத்துக்குச் சென்றார். இங்கு இரண்டாண்டுகள் தங்கி சமஸ்கிருதம், தர்க்கவாதம், இலக்கணம், பௌத்த மதம் பற்றிப் பயின்றார். அந்த காலகட்டத்தில்தான் யுவான் சுவாங்குக்கு மாகாயான தத்துவத்தின் தோற்றகர்த்தாக்களாகக் கருதப்படும் அசங்கா, வாசுபந்து, திக்னாகா, தர்மபாலர் ஆகியோரிடம் பயிலக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. தெற்கே பயணம் செய்த யுவான் சுவாங் ஆந்திரா சென்று அமராவதி, நாகார்ஜுனகோன்டாவில் புகழ்பெற்ற பௌத்த மடாலயங்களைப் பார்வையிட்டார். அமராவதியில் தங்கி அபிதம்மபிதகம் (Abhidammapitakam) பயின்றார். பின்னர் பல்லவர் தலைநகரமாகவும், பௌத்த சமயத்தின் குவிமையமாகவும் திகழ்ந்த காஞ்சிபுரம் சென்றார்.

***ஹர்ஹரை சந்தித்தல்***

தன் பயணத்தை முடித்துக்கொண்டு தலைநகர் திரும்பிய யுவான் சுவாங் பேரரசர் ஹர்ஷரை சந்தித்தார். சீனப் பயணியைப் பற்றி நன்கறிந்திருந்த ஹர்ஷர் அவரை அரசாங்கப் பணியில் அமர்த்திக் கொள்ள முன்வந்தார். அந்த வாய்ப்பை நன்றியோடும் மரியாதையோடும் மறுத்துவிட்ட யுவான் சுவாங் தாய்நாட்டுக்குத் திரும்பிச் சென்று (கி.பி. 645) புத்தர், புத்த சமயம், புத்த தத்துவம், புத்தர் சம்மந்தப்பட்ட ஆவணங்களை சீனமொழியில் மொழியாக்கம் செய்யும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டார். இந்தியாவைவிட்டுச் சென்ற (கி.பி. 644) அவர் இறக்கும்வரை அவருக்கு சீனப் பேரரசரிடமிருந்து வந்த வேலை வாய்ப்புகளையெல்லாம் பொருட்படுத்தாமல் மொழிபெயர்ப்புப் பணியிலேயே தன் வாழ்நாளைச் செலவிட்டார்.

யுவான் சுவாங் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பே பாகியானது இந்தியப் பயணத்தைப் பற்றி நன்கறிந்திருந்தார். அவரைவிட இவர் இந்தியாவின் மிகப்பெரும் பகுதியில் பிரயாணம் செய்தார். பாகியான் போலன்றி யுவான் சுவாங் சீனாவிலிருந்து நிலவழியாகவே வந்து அவ்வழியாகவே திரும்பினார். அதுமட்டுமல்ல. யுவான் சுவாங் ஹர்ஷப் பேரரசில் 8 ஆண்டுகள் தங்கியிருந்தார். இவருக்குக் கிடைத்த வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார். யுவான் சுவாங் கண்டவைஇ கேட்டவை அனைத்தையும் பதிவு செய்தார்! இவரது பயணக் குறிப்புகளிலிருந்து பேரரசர் ஹர்ஷர் மற்றும் அவனது நிலைகுறித்தும் பற்றி மட்டுமின்றி ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவின் நிர்வாகத்தைப் அறிந்து கொள்ள முடிகிறது. செவிவழிச் செய்திகளைப் பதிவுசெய்யும் போது யுவான் சுவாங் அவற்றின் நம்பகத்தன்மை பற்றிக் கவலைப்படவில்லை.

## இந்தியாவில் அரேபியர்கள்

இந்தியாவில் உள்ள அரேபியர்கள் நீண்ட காலமாக இந்திய துணைக் கண்டத்தில் குடியேறிய அரபு வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். பல ஆயிரம் ஆண்டுகளாக இந்தியாவிற்கும் அரபு உலகிற்கும் இடையே விரிவான வர்த்தக மற்றும் கலாச்சார தொடர்புகள் உள்ளன. இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதி, குறிப்பாக மலபார் மற்றும் கொங்கன் கடற்கரைகள் சுறுசுறுப்பான வர்த்தக மையங்களாக இருந்தன, அரேபிய வணிகர்கள் இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசியாவிற்குச் செல்லும் வழியில் அடிக்கடி வருகை தருகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு மேலாக, பல்வேறு அரேபிய நாடுகளில் இருந்து குடியேறியவர்கள் இந்திய துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் ராஜ்யங்களுக்கு வணிகர்கள், மிஷனரிகள் மற்றும் கலப்புத் திருமணங்கள் மூலம் குடியேறினர்.

## சமூகங்கள்

அரபு நாடுகளில் இருந்து ஆரம்பகால புலம்பெயர்ந்தோர் தென்மேற்கு இந்தியாவின் மலபார் கடலோரப் பகுதிக்கு வணிகர்களாக வந்துள்ளனர், இன்று கேரளா மாநிலத்தை உள்ளடக்கியது. [4] இந்த அரபு வணிகர்களில் பலர் உள்ளூர் பெண்களுடன் திருமணம் செய்து கொண்டனர். அரேபிய வணிகர்களின் இந்த கலப்பு-இன சந்ததியினரின் செறிவுகள் குறிப்பாக கேரளாவின் கோழிக்கோடு மற்றும் மலப்புரம் மாவட்டங்களில் காணப்படுகின்றன. பல நூற்றாண்டுகளாக தென்மேற்கு இந்தியாவின் ஆர்த்தடாக்ஸ் தேவாலயங்களுக்கும் மத்திய கிழக்கில் உள்ள கிறிஸ்தவ அரபு மரபுவழி தேவாலயங்களுக்கும் இடையே வரலாற்று மற்றும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன, குறிப்பாக இந்தியா மற்றும் சிரியாவில் உள்ள ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்களிடையே, அவர்கள் இன்றுவரை பராமரிக்கின்றனர். இந்த சமூகங்களைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் தங்கள் மூதாதையர்கள் அரேபியர்கள் என்று கூறினர் மற்றும் டிஎன்ஏ முடிவுகள் ஹாப்லாக் குழு G-M201 மற்றும் Haplogroup J-M304 ஆகியவை இந்த கூற்றை ஆதரிக்கின்றன.

அரேபியர்களின் வழித்தோன்றல்களும் குஜராத்தில் உள்ள வரியாவ் மற்றும் ராண்டர் கிராமங்களில் வாழ்கின்றனர். ஹைதராபாத்தில், சௌஷ் என்பது ஹத்ராமி வம்சாவளியைச் சேர்ந்த ஒரு அரபு சமூகம் ஆகும், அவர்களின் மூதாதையர்கள் ஹைதராபாத் நிஜாம் மூலம் ராணுவ வீரர்களாக நியமிக்கப்பட்டனர். [6] கடலோர கர்நாடகாவில், திப்பு சுல்தான் ஆட்சியின் போது, ஈராக்கில் இருந்து அசாதி குடும்பப் பெயரைக் கொண்ட பாரசீக மொழி பேசும் சன்னி முஸ்லிம்களின் குழு மங்களூருக்கு வந்தடைந்தது. அவர்கள் தங்கள் வம்சாவளியை பானு அசாத்திடமிருந்து கோருகிறார்கள். இந்த மக்கள் குடியேற்றங்கள் ஹைதராபாத் நிஜாம் மற்றும் மைசூர் திப்பு சுல்தான் ஆகிய இருவராலும் விரும்பப்பட்டிருக்கலாம், ஏனெனில் இருவரும் இந்த மக்களுடன் தங்கள் மூதாதையர் தொடர்பைக் கொண்டிருந்தனர். அஸஃப் ஜாஹி வம்சம் அசிர் மாகாணத்திலிருந்து அரபு வம்சாவளியையும், அரேபியாவில் உள்ள ஹிஜாஸ் மாகாணத்தின் பானி ஹாஷிமிலிருந்து திப்பு சுல்தானையும் உரிமை கொண்டாடியது. குரைஷி, அன்சாரி பழங்குடியினர் மற்றும் சஹாபாவின் பிற சந்ததியினர் போன்ற அத்னானி வம்சாவளியைக்

கொண்ட பல அரேபியர்கள் இளவரசர் அரசுகளால் பணியமர்த்தப்பட்டனர். குஜராத் மற்றும் கர்நாடகாவில் நடந்த போரின் போது அவர்கள் திறமையானவர்களாக காணப்பட்டதால் அவர்களது இராணுவத்தில். கேரளாவில், ஹத்ராமி வம்சாவளியைச் சேர்ந்த சையத் தங்கல்ஸ் 17 ஆம் நூற்றாண்டில் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதற்காக மிஷனரிகளாக குடியேறினர் .

நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள ஷியா சயீத்களும் உள்ளனர், அவர்கள் ஈராக்கின் வாசித் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், ஜைதிகளைப் போல சிலர் இந்த வம்சாவளியை தவறாகக் கூறுகின்றனர். [சான்று தேவை ] நாட்டின் சுன்னி சயீத் சூஃபி மிஷனரிகளிடமிருந்து அரபு வம்சாவளியைச் சேர்ந்தவர் என்று கூறுகின்றனர், இருப்பினும் இந்த கூற்றுகளும் சந்தேகத்திற்குரியவை. பெரும்பாலான சூஃபிகள் பெர்சியாவிலிருந்து குடிபெயர்ந்தனர். சுன்னி சயீத்கள் தங்கள் அரபு வம்சாவளியை இமாம் ஹசன் அல்லது இமாம் ஹுசைன் மூலம் கூறுகின்றனர் , இதில் அவர்களின் பெயர்கள் ஹசானி , ஹுசைனி , ஹஷ்மி , நக்வி என இருக்கலாம். மற்றும் புகாரி . சிலர் இருவரிடமிருந்தும் வம்சாவளியைக் கூறுகின்றனர் மற்றும் " நஜீப் அல்-தர்ஃபைன் " அல்லது "இருபுறமும் உன்னதமானவர்" என்று அழைக்கப்படுகிறார்கள். அப்துல்-காதர் கிலானி மற்றும் மொய்னுதீன் சிஷ்டி போன்ற பல சூஃபி துறவிகள் மற்றும் அவர்களது சந்ததியினர் தங்களை நஜீப் அல்-தர்ஃபைன் என்று கூறிக்கொண்டாலும் சிலர் இந்த வம்சாவளியை பொய்யாகக் கூறுகின்றனர். இந்திய ஷேக்குகளும் சூஃபிகள் அல்லது குடியேறியவர்களிடமிருந்து அரபு வம்சாவளியைக் கூறுகின்றனர். அவர்கள் குரைஷ் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் உமர் - ஃபாரூக்கி , அபுபக்கர் - சித்திக் , உஸ்மான் - உஸ்மானி மற்றும் அல்வி - அலவி ஆகியோரின் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள்., அல்வி அவான் அல்லது மிர், ரஷிதுன் கலிபாவை நிறுவியவர் . குரைஷ் பழங்குடியினருக்கு தங்கள் பரம்பரையைக் கண்டறியும் முக்கியமாக ஷேக்குகள் குறைஷிகள் . குரைஷ் பழங்குடியினரின் பரம்பரையை தெளிவற்ற முறையில் கண்டுபிடிக்கக்கூடிய பலர் தங்களை குறைஷிகள் என்று அழைக்கிறார்கள் . அன்சாரி என்ற பெயரைக் கொண்ட பலர் மதீனா முனவ்வராவின் அன்சார் பழங்குடியினர் மற்றும் அபு அய்யூப் அல்-அன்சாரி போன்ற இஸ்லாமிய தீர்க்கதரிசி முஹம்மதுவின் தோழர்கள் தங்கள் பரம்பரையை உரிமை கோருகின்றனர் . தற்போதைய இந்திய ஷேக்குகளில் பலர் காயஸ்த் மற்றும் ராஜ்புத் போன்ற இந்து சாதிகளிலிருந்து மதம் மாறியவர்கள் .

சையத் ஜலாலுதீன் சுர்க்-போஷ் புகாரி மற்றும் அவரது பேரன் சையத் ஜஹானியன் ஜஹாங்ஷ்ட் ஆகியோரின் வழித்தோன்றல்களும் உள்ளனர் , அவர்கள் இமாம் அலி அல்-ஹாதியின் (இமாம் நக்கி என அழைக்கப்படும்) வம்சாவளியைச் சேர்ந்த பன்னிரண்டு இமாம்களுக்கு அவர்களின் பரம்பரையைக் கண்டறிய முடியும். சூஃபி துறவி ஜலாலுதீன் சுர்க் போஷ் இஸ்லாத்தை பரப்புவதற்காக நவீன பஞ்சாபில் குடியேறினார்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், அரேபியர்கள் உருது மொழிக்காக அரபியை கைவிட்டனர் . ஒவ்வொரு குலமும் சம அந்தஸ்து உடையது, ஆனால் குரைஷிகள் முஹம்மது நபியின் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மையின் காரணமாக அவர்களுக்கு

மூத்தவர்களாக வழங்கப்படுகின்றனர் . [7] குஜராத்திகள் போன்ற பூர்வீக இந்திய இன மொழியியல் சமூகங்களுடன் கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் நிகழ்வுகள் எதுவும் இல்லாமல், சமூகம் கண்டிப்பாக உள்வாங்கப்பட்டதாகவே உள்ளது . [7]

## இந்தியர்களிடையே அரேபிய பரம்பரை

இந்தியாவில் உள்ள பல குழுக்கள் மத்திய கிழக்கு அரபு வம்சாவளியைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது . குறிப்பாக முஸ்லீம் குழுக்கள் மற்றும் மேற்கு இந்தியாவில் உள்ள பல்வேறு மக்கள் குறைந்தபட்சம் சில அரபு வம்சாவளியைக் கொண்டுள்ளனர். அரேபிய மற்றும் பிற மேற்கு ஆசிய பரம்பரைகள் இந்தியர்களில் மிகவும் பொதுவானவை என்று மரபணு பகுப்பாய்வுகள் காட்டுகின்றன.

## References


**Text Books:**

4. Hans Raj :"History of Ancient India", Surjeet Publications, the Kholapur road, Kamla Nagar, Delhi -7.
5. Kundra D.N-History of India- Navdeep Publications.-3623,Chauri Bazaar,Delhi
6. Khurana History of India from the Earlies Times to 1206 A.D

**Books for reference:**

2. Agraval. D.P. and ChakrabartsD.K -Essays in Indian Proto History

2. Atlekar A.S - State and Government in Ancient India.
3. Basham A.L - The Wonder that was India.
4. Beni Prasad - Theory of Government in Ancient India.